விவேகானந்தரும் பாஸ்கரசேதுபதியும்



செ.திவான்

நெல்லை புறநகர் மாவட்ட ம.தி.மு.க. செயலாளர்
திரு. தி.மு. இராசேந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்

திருமலாபுரம்

தெய்வத்திரு. **சு.முத்தையா** அவர்களின்

நினைவு வெளியீடு

விவேகானந்தரும் பாஸ்கரசேதுபதியும்

(ஆய்வு நூல்)

வரலாற்றுப் பேரறிஞர்*

செ.திவான் M.A.,M.Phil.,P.hd

* 26.12.2015 உலகத் தமிழ் கல்வி இயக்கம், தமிழூரில், தமிழறிஞர் ச.வே.சு. அய்யா வழங்கிய விருது

நூலாசிரியரின் 119வது நூல்

தலைப்பு	:	விவேகானந்தரும் பாஸ்கரசேதுபதியும்
பொருள்	:	வரலாறு
ஆசிரியர்	:	செ.திவான்,
பதிப்பு ஆண்டு	:	6.4.2019
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	160/-
அச்சிட்டோர்	:	சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி - 9443379005
வடிவமைப்பு	:	அப்துல் நசீர், நெல்லை - 9489115236
முகப்போவியம்	:	காசி கிராபிக்ஸ், நெல்லை
விலை	:	ரூ.160/-

மாநிலத் தமிழ்ச் சங்கப் பொருளாளர் மறைந்த
திரு. சுப்பிரமணியனார்,
கணித அறிஞர் திரு. மத்தியாசு
ஆகியோருக்கு காணிக்கை

ரெகான் சுலைமான் பதிப்பகம்
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி- 627002
போன்: 0462-2572665

உள்ளே.....

எண்ண அலைகள்	05
வேந்தர்பாஸ்கரசேதுபதி	07
வீரத்துறவி விவேகானந்தர்	11
வள்ளல் பாஸ்கரசேதுபதி	67
விவேகானந்தர் சிகாகோ செல்ல	86
விபுலானந்தரின் விவேகானந்தர்	152
விவேகானந்தரின் பொன்மொழிகள்	156

உண்மையை அறிந்து கொள்வீர்களாக

மெய்யானது வந்துவிட்டது. பொய்யானது மறைந்து விட்டது. நிச்சயமாகப் பொய்யானது மறைந்து போகக்கூடிய தாய் இருந்தது. சத்தியம் வந்தது. அசத்தியம் மறைந்தது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்.

– திரு குர்ஆன் 17:81

வாசியுங்கள்; அதிசயப்படுங்கள்

“உண்மையையும், நிகழ்வுகளையும் மறுப்பதை கண்டு நான் சீற்றமுறுகிறேன். உண்மை உள்ளபடியே மகத்தானது. வாசியுங்கள்; அதிசயப்படுங்கள்.

– எட்வர்டு கிப்பன், உலகப் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்.

Edward GiBBON, The Decline and Fall of the Roman Empire, Vol. V, Page 453, London 1911.

உண்மை உரைமின் – உபநிஷத்

உண்மையை அறிந்து கொள்வீர்களாக!

உண்மை உங்களை விடுதலையாக்கும்.

– விவிலியம், யோவான் 8:32

எண்ண அலைகள்

பொதுநெறிப் பெரியார்

“உலகெலாம் போற்றும் உன்னத உரையை சிகாகோவில் தந்தவர் வீரத்துறவி விவேகானந்தர். அவரை “பாருலகைக் குலுக்கிய பாரதத் துறவி, துறவிகளில் தனக்கு நிகர் தானேயான அரசியல் துறவி – பாரத மணித் திரு நாடே தான் என உருவகித்து வாழ்ந்த பரிபூரண தேசபக்தத்துறவி, “எம்மதமும் சம்மதம்” என்ற **பொது நெறிப் பெரியார்** – ஏழை எளிய மனித ராசிகளுக்காக காலம் முழுவதும் இதய இரத்தம் பெருக்கிய கருணைக்கடல் – தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசி – பெருநாவலர்களின் பெருநாவலர் துவராடையில் திரிந்த புரட்சிவேள் – பேச்சில் பார்வையில், நடையில் வீரதீரர் காட்டுத்தீ, கர்ஜிக்கும் சிங்கம், இருபதாம் நூற்றாண்டைக்காட்டி மறைந்தமாபெரும் மானுடன் இவர்தான். சுவாமி விவேகானந்தர்” என்று போற்றுவார் பொதுவுடமைப் பூங்காவில் பூத்த மலர் ப.ஜீவானந்தம்.*

ஸ்ரீ.ராமகிருஷ்ணதபோவனம் திருப்பராய்த்துறை, திருச்சி ஜில்லா 1962இல் வெளியிட்ட நூல். ஸ்ரீவிவேகானந்தர் ஜீவிதம் இயற்றியவர் ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர் 224 பக்கங்களை' கொண்ட நூல். அந்த நூலின் துவக்க காலப் பதிப்புகளில் பக்கம் 93, 94ல் வரும் வரிகள் இதோ.

“திருவாங்கூர் மலை நாட்டில் வனப்பைக்கண்டு சுவாமிகள் களிபேருவகையுற்றார். அங்கிருந்து மதுரை மார்க்கமாய் இராமநாதபுரம் போய் அந்நகர் இராஜா **பாஸ்கர சேதுபதிக்கு** அறிமுகம் ஆனார். பக்திமானாகிய பாஸ்கர சேதுபதி சுவாமிகளின் மகிமைகளை அதிவிரைவில் அறிந்துகொண்டார். **அவர் அவசியம் அமெரிக்கா** போகவேண்டு மென்றும், அதற்காகத் தம்மால் இயன்ற பணிவிடைகளையெல்லாம் தாம் செய்யத் தயாராய் இருப்பதாகவும், இராஜா பாஸ்கர சேதுபதி

*17.1.1963 தாமரை, ‘விவேகானந்தர்’ கட்டுரையில், விவேகானந்தர் குறித்து தனது எழுத்துகளில் 15க்கு மேற்பட்ட இடங்களில் போற்றிப் புகழ்ந்துரைத்துள்ளார். பார்க்க : ப.ஜீவானந்தம் ஆக்கங்கள், முழுத்திரட்டு, இரு பகுதிகள் பகுதி 1, பகுதி 2 தொகுப்பாசிரியர் வீஅரசு, 1750 பக்கங்கள் சென்னை, 2007 தொகுதி 1 பக்கம் 354. ப.ஜீவானந்தம் கால ஜனசக்தி தலையங்கங்கள் 1937 – 1963. இருபகுதிகள். தொகுப்பாசிரியர் வீ.அரசு டிசம்பர் 2007. 1721 பக்கங்கள் விவேகானந்தச் செழுஞ்சோதி 17.1.1963. பக்கம் 1689–1693.

பேருக்கத்துடனும், உற்சாகத்துடனும் பகர்ந்தார். அதே நூல் அதே ஆசிரியர் ஸ்ரீவிவேகானந்தர் சரிதம் என்று 1988 இல் சென்னை ராமகிருஷ்ண மடம் வெளியிட்டது. அதில் மேற்கண்டது அப்படியே உள்ளது.

அதே நூல் அதே ஆசிரியர், தலைப்பு மட்டும் மாற்றம். சுவாமி விவேகானந்தர் என்று 2017இல் வெளி வந்தது. பக்கங்கள் 106. (முந்தைய நூல் பக்கங்கள் 224) இதில் பக்கம் 52இல் கூறப்பட்டுள்ளதாவது. வழியில் மதுரை இராமநாதபுரம், இராமேசுவரம், புதுச்சேரி, முதன்மை இடங்களுக்குச் சுவாமிகள் (விவேகானந்தர்) சென்றிருந்தார். இராமநாதபுரத்தில் இராஜா பாஸ்கர சேதுபதியுடன் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. சுவாமிகள் அமெரிக்காவுக்குப் போக, வரும் வேண்டிய உதவிகள் புரிவதாகச் சொன்னார். முந்தைய நூலில் விவேகானந்தர் அவசியம் அமெரிக்க போகவேண்டும் என்று கூறியது இதில் மெல்லத் தவிர்க்கப்பட்டுள்ளது. இதுபோல தற்காலத்தில் விவேகானந்தர் அமெரிக்கப் பயணம் செல்ல அளசிங்கப் பெருமாள் அவர்களே உதவினார் என்ற கருத்து மெல்ல மெல்ல சொல்லப்பட்டு வருகிறது.

அளசிங்கப் பெருமாள் புகழைப் பாடட்டும் நமக்கு எந்தவித ஆட்சேபனை யில்லை. ஆனால் விவேகானந்தர் அமெரிக்கா செல்ல பல வழிகளில் உதவியவர் பாஸ்கர சேதுபதி அந்த வரலாற்று உண்மைகள் கால வெள்ளத்தில் மறைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் எழுந்த சிறு நூல் இது. விவேகானந்தரும் – பாஸ்கர சேதுபதியும் எந்த அளவு நட்பு கொண்டிருந்தார்கள் என்பதை விளக்கும் சிறு நூல் இது.இதனை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த சிவகாசி சிவசக்தி குமரேசன் அச்சகத்தாருக்கும் கணினி அமைப்புச் செய்த தம்பி நசீர், அட்டையை உருவாக்கிய காசி கிராபிக்ஸ் தம்பி முருகன், நெல்லை புறநகர் மதிமுக மாவட்ட செயலாளர் மாமா தி.மு. இராஜேந்திரன் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

ரெகான் சுலைமான் பதிப்பகம் **செ.திவான்**
6.4.2019, பாளையங்கோட்டை.

வேந்தர் பாஸ்கரசேதுபதி

அன்னைத் தமிழகம் வேளிர், மலையமான்கள், அதியமான்கள், தொண்டைமான்கள், முத்தரையர், இருக்குவேளிர், வானாதிராயர்கள் என பல சிற்றரசு மரபினர்களைக் கண்டுள்ளது.

போர் வழியோடு நில்லாது, ஆன்மீக நெறியிலும் நின்று புகழ்படைத்த மரபினர் சேதுபதி மரபினர்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களது ஆட்சியில் திழைத்த தமிழகம்.

பாண்டிய மன்னர்களது கிழக்கு எல்லையான வங்கக்கடற்கரைப்பகுதி பிற்காலத்தில் மறவர் சீமை அல்லது சேது நாடு என அழைக்கப்பட்டது.

வீர மறவர் இனமக்களது ஏழு பிரிவினர்களில் செம்பி நாட்டு மறவர் பிரிவைச் சேர்ந்தவர்கள் சேதுபதிகள். சோழப் பேரரசை நிறுவிய இராஜ ராஜசோழன் அவரது புதல்வர் இராஜேந்திர சோழன் – இவர்களது இலங்கை படையெடுப்பு அவர்களது படைத்தலைவர்களில் ஒருவரை இராமேஸ்வரம் பகுதிக்குப் பொறுப்பானவராக நியமித்தது – அவரது வழியினர் சேதுபதி இது ஒரு கருத்து.[1]

இராமேஸ்வரம் செல்லும் பயணிகளுக்குத் திருடர்களால் ஏற்படும் அபாயத்தை நீக்கிட வழி செய்து திருமலை நாயக்க மன்னர் தமது படைத்தலைவர், உடையாத்தேவர் என்பவரை நியமித்தார். அவரது வழியினரே சேதுபதிகள்.[2] இது மற்றொரு கருத்து. இதிகாச மரபுப்படி இராமனும் சீதையும் தங்களது தோஷம் நீங்கிட இராமேஸ்வரம் கடற்கரையில் லிங்கத்தை மண்ணால் அமைத்து வழிபாடு செய்தனர். அயோத்தி திரும்பும்போது அங்கு வாழ்ந்த மறவர் இனத்தலைவரை அதனைக் காத்திட நியமித்தார். அவரது வழி வந்தவர்களே சேதுபதிகள். இது ஒரு கருத்து.

1. Dr.Seshadri, Sethupathis of Ramnad, 1974, Unpublished Ph.D., Thesis.
2. கீழ்த்திசைச்சுவடி நூலகம், சென்னை, சேதுபதிகள் உண்டான விதம்.

சேதுபதி மன்னர்கள் பாண்டிய நாட்டின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் நிலைத்திருந்த தன்னரசு மன்னர்கள் என்பதில் மாற்றுக் கருத்து இருந்திட முடியாது. கிடைத்துள்ள வரலாற்று ஆவணங்களின்படி கி.பி. 15ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் முதல் சேதுபதிகள் ஆட்சி இருந்ததாக அறியலாம். [3]

இராமேஸ்வரம் தீவிற்கு எதிர்கரையில் யாழ்ப்பாணத்தில் அமைந்த நல்லூர் முருகன் கோயிலுக்கு ஆறுகால பூஜை செய்திட சேதுபதி மன்னர் சில வேத விற்பன்னர்களை அனுப்பி வைத்த செய்தியை 15வது நூற்றாண்டு இலக்கியமான முத்துராசக் கவிராசரது ‘கைலாய மலை’ நூல் தெரிவிக்கிறது.[4]

பாண்டிய நாட்டில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை சோழர்களது ஆட்சி நடைபெற்றது. அதன் பின்னர் கிபி. 1311 முதல் 1378 வரை டில்லி சுல்தான்கள் ஆண்டனர். அதன் பின்பு விஜய நகர ஆட்சி. அவர்களது மகா மண்டலேசுரர்களது நிர்வாகம்.

அப்போது ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை சோழ மன்னர்களது தானைத் தலைவர்களாக இருந்த செம்பி நாட்டு மறவர்கள் தம்மைத் தன்னாட்சி மன்னர்களாக அறிவித்து ஆட்சியாளர்களாக மாறினர். [5]

இராமேஸ்வரம் கல்வெட்டுக்களின் படி, கிபி 1487, 1500, 1524 ஆகிய ஆண்டுகளில் சேதுபதிகள் இராமேஸ்வரம் கோயிலுக்கு அறக்கொடைகள் வழங்கிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளது.

---

3. James Fergusson, History of India & The Great Eastern Architecture, 1910 - 1911.

4. முத்துராச கவிராசர், கைலாயமாலை, சே.வெ. ஜம்புலிங்கம் பிள்ளை (பதிப்பாசிரியர்), சென்னை. 1939, பாடல் கண்ணி 234, பக்கம் 17.)

4. டாக்டர் எஸ்.எம்.கமால், சேதுபதி மன்னர் வரலாறு, இராமநாதபுரம், 2003, பக். 16.

5. ப.ஆ. முத்துத் தாண்டவராய பிள்ளை, சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும், செந்தமிழ்ச் செல்வி தொகுதி XIV 1935 ஏப்ரல் இதழ்.

கி.பி. 1414 இல் இராமேஸ்வரம் கோயிலில் திருச்சுற்றையும் மேலக் கோபுரத்தையும் உடையார் சேதுபதி அமைத்தார் என்பதே மிகப் பழைய கல்வெட்டுக்கள் ஆகும்.

டாக்டர் பர்க்கஸ்

டாக்டர் பர்க்கஸ் என்பவர், இராமேஸ்வரம் கோயிலின் உட்பிரகாரங்களைக்கட்டியவரும்,திருநெல்வேலிப்பகுதியிலுள்ள நான்கு ஊர்களை அக்கோயிலுக்கு வழங்கியவரும் உடையான் சேதுபதி என்ற பெயர் கொண்ட சேதுபதி என்றும் (கிபி 1414 – 1415) சின்ன உடையான் சேதுபதி (1448 – 1490 என்ற இன்னுமொரு சேதுபதி கோயிலை விரிவுபடுத்தினார் என்றும்,

திருமலை சேதுபதி கோயிலின் (கி.பி. 1500 – 1501) இரண்டாவது பிரகாரத்தின் ஒரு பகுதியைக் கட்டினான் என்றும், அவனுக்கு இரகுநாதத் திருமலை சேதுபதி என்ற மகன் இருந்தான் என்றும் (கிபி 1539 – 1540) எழுதுகிறார். [6]

ஆதிரெகுநாத சேதுபதி

பெயருக்கேற்ப ஆதிரெகுநாத சேதுபதி
ஜெய துங்க ரகுநாத சேதுபதி
அதி வீரரெகுநாத சேதுபதி
வரகுணரகுநாத சேதுபதி
குலோத்துங்க சேதுபதி
சமரச கோலகல சேதுபதி
மார்த்தாண்ட பைரவ சேதுபதி
சுந்தர பாண்டிய சேதுபதி
காங்கேய ரெகுநாத சேதுபதி
விஜய முத்துராமலிங்க சேதுபதி

என்ற துவக்க கால சேதுபதிகள் பற்றி ரா. இராகவையங்கார் கூறுகிறார். [7]

---

6. Dr.Burgess, Archaeological survey of Southern India - Setupathis of Ramnad. VOl. II, 1884, Page 227.
7. செந்தமிழ், தொகுதி 2, சோபகிருது, தை இதழ், ரா.இராகவையங்கார், சேதுபதிகள் கட்டுரையில் T.Rajaramrow, Ramnad Maunal, Page 205 - 206.

வரலாற்றுச்சான்றுகள்

பேராசிரியர் S. திருவேங்கடாச்சாரி அவர்கள் The Setupathi's of Ramnad என்ற நூலிலும், ரா.இராகவையங்கர் செந்தமிழ் இதழில் எழுதிய கட்டுரையிலும், தொல் பொருள் ஆய்வுத்துறை வெளியிட்டுள்ள இராமலிங்க விலாசம் துணை மடலின்படியும், Robert Sewell எழுதிய Asketech of the dynasities of Southern India' நூலிலும், இராமநாதபுரம் சமஸ்தான திவான் ஜி.ராஜாராமராவ் எழுதிய நூலின் படியும், டாக்டர் ந.சுப்பிரமணியன் எழுதிய தமிழக வரலாறு நூலின் படியும் பாண்டித் துரைத்தேவர் பொருள் உதவியால் உருவான அபிதான சிந்தாமணியில் கண்டுள்ளபடியும், கே.ஆர்.வெங்கட்ராம அய்யர் எழுதிய A Manual of Pudukkottai State நூலிலும் சேதுபதிகளின் பெயர்களையும், காலத்தையும் அறிய முடியும். [8]

சடைக்கத்தேவர் கிபி 1605 – 1621 முதல் சேதுபதி என்பர் சீரஞ்சீவி. அவர்களைத் தொடர்ந்து கூத்தன் சேதுபதி (கிபி 1622 – 1635) இரண்டாம் சடைக்கத் தேவர். கி.பி. 1635 – 1645 ஆட்சி புரிந்தனர். [9]

அதனைத் தொடர்ந்து ஆட்சிபுரிந்த சேதுபதிகள் பட்டியல் இதோ;

திருமலை ரகுநாத சேதுபதி (கிபி 1645 – 1676)
கிழவன் ரகுநாத சேதுபதி (கிபி 1678 – 1710)
முத்துவைரவ சேதுபதி (கி.பி. 1710 – 1713)
முத்து விஜய ரகுநாத சேதுபதி (கி.பி. 1715 – 1725),
குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி (கி.பி. 1728 – 1735)
முத்துராமலிங்க சேதுபதி (1762 – 1795)
முத்துராமலிங்க சேதுபதி II (கி.பி. 1851 – 1873)
ராஜா பாஸ்கர சாமி சேதுபதி (கி.பி. 1858 – 1903)

நமது சிறு நூலுக்கு பாஸ்கர சேதுபதி காலம் வரை போதுமென்பதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

---

8. மீ.மனோகரன் கிழவன் சேதுபதி, தஞ்சாவூர் 2012. பக்கம் 166, 167.

9. சீரஞ்சிவி, சேதுபதிகள் வரலாறு, சென்னை. 1981, பக் 17, 20, 21.

வீரத்துறவி விவேகானந்தர்

12.01.1863 இல் கல்கத்தாவில் (கொல்கொத்தா) வங்காளிக் குடும்பத்தில் விசுவநாத்தத்தா என்ற வழக்கறிஞருக்கும், புவனேஸ்வரி தாயாருக்கும் மகனாகப் பிறந்தவர் நரேந்திர நாத் (விவேகானந்தர்) விவேகானந்தரது வாழ்க்கை வரலாற்று நூல்கள் அவரது பிரசங்கங்கள் நாளும் நாளும் வந்து கொண்டிருப்பதால் அவரது வாழ்க்கை வரலாற்றின் பக்கங்களை விரிவாக விரித்துரைக்கப் போவதில்லை.

1882 ஜனவரி *15*இல் முதல் முறையாக ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சரை விவேகானந்தர் சந்தித்தார். துறவு நிலைக்கு வந்தார். *1888 – 1889*இல் காசியாத்திரை – தென்னிந்திய யாத்திரை தொடர்ந்தது. *1892* டிசம்பர் *13* முதல் *22* வரை திருவனந்தபுரத்தில் சுற்றுப்பயணம் மேற்கெண்டார்.

விவேகானந்தர் *1892* டிசம்பர் இறுதியில் கன்னியாகுமரியில் பாறையில் அமர்ந்து தியானம் புரிந்தார்.

1893 ஜனவரியில் சென்னை சென்றார். *1893* டிசம்பரில் சிகாகோ பயணமானார். *1894* செப்டம்பரில் புகழ் பெற்ற '**சகோதரிகளே, சகோதரர்களே,**' எனத் துவங்கும் நான்கு நிமிட உரையைத் தந்தார்.

நானிலத்தில் அழியாப் புகழ் பெற்றார். *1902* சூலை *4* இல் இவ்வுலக வாழ்வைத் துறந்தார் விவேகானந்தர்.

தமிழகச் சுற்றுப்பயணத்தின்போது இராமநாதபுரம் ராஜா பாஸ்கரசேதுபதியை சந்தித்தபின் சிகாகோ பயணத்திற்கு தயாரானார். இதில் பாஸ்கர சேதுபதியின் பங்களிப்பை விரிவாகக் காணுவோம்.

வெளிநாடு செல்ல...

திருவனந்தபுரத்தில் *1892* டிசம்பர் *13* முதல் *22* வரை விவேகானந்தர் தங்கி இருந்தார் என்பதற்கு தெளிவான வரலாற்றுச் சான்றுகள் உள்ளது.

அங்கிருந்து கிளம்பும்போது மன்மதபாபு (Man Matha Babu) என்பவரும் விவேகானந்தருடன் கிளம்புகிறார். அப்போது ஓர்

பண்டிதர் வருகிறார். விவேகானந்தரிடம் பேச ஆரம்பிக்கிறார். எனக்கு கொஞ்சம் நேரம் ஒதுக்கித்தர வேண்டும் என்கிறார். தனது பயணத்தை துவக்கிய நிலையில் ஏழு அல்லது எட்டு நிமிட நேரங்கள் மட்டுமே தன்னால் ஒதுக்க முடியும் என்கிறார். பண்டிதர் விருப்பத்தை நிறைவேற்றுகிறார். சமஸ்கிருதத்தில் இலக்கணம் குறித்த விரும்பத் தகாத கேள்வியினை பண்டிதர் விவேகானந்தரிடம் கேட்கிறார். அதன் பின் பயணம் தொடங்குகிறது. விவேகானந்தர் எந்த இடத்திற்குப் பயணிக்கிறார் என்று அப்போது சொல்லவில்லை. அது பிற்காலத்தில் கருத்து வேறுபாடான நிலையை ஏற்படுத்தியது.

ஆனால் அப்போது வெளிவந்த நூலில்[1] சுவாமி விவேகானந்தர் கிழக்கு நோக்கி பயணம் செய்தார் ராமேஸ்வரத்தை நோக்கி. அப்போது இராமநாதபுரத்து இராஜாவை மதுரையில் சந்தித்தார். அப்போது இராமநாதபுரம் ராஜா விவேகானந்தருக்கு அறிமுகக் கடிதம் ஒன்றை அளித்தார். எனவே இந்த வேளையில் விவேகானந்தர் இராமநாதபுரம் இராஜாவோடு இருந்தார் என்பது தெரிகிறது.

According to The life, The Swami ``Went east wards in the direction of Rameswar and on the way met the Raja of Ramnad at Madura" being Provided with a letter of introduction to him,

இந்த கருத்து தான் 1913 ஆம் ஆண்டு வரை நீடித்தது.

This view of the Swami's itinerary to Rameshwar and thence to Kanyakumari went un Challenged from 1913.

ஆனால் பேராசிரியர் அய்யரின் (Prof. Iyer) மகன் ராமசாமி சாஸ்திரி (Mr.Ramasawmi Shastri) பிரபுதாபாரத (Prabuddha Bharata) இதழில் விவேகானந்தர் திருவனந்தபுரத்தில் இருந்து நேராக கன்னியாகுமரி சென்றார் என்று 1953இல் எழுதுகிறார்.

1897 இல் சுவாமி விவேகானந்தர் தனது வீட்டில் தங்கி இருந்தபோது சுவாமியே தன்னிடம் கூறியதாக அதில்

1. The life of the Swami Vivekananda, By His Eastern and Western Discipies, Compiled by Swami Virajananda, 4 Volumes, Mayavati.

தெரிவித்துள்ளார். இக்கருத்தை சுவாமி கம்பிரானாந்தா ஏற்றுக்கொள்கிறார். [2]

மன்மத பாபுவும் விவேகானந்தரும் கன்னியாகுமரி செல்கிறார்கள். அங்கு மன்மதபாபு பிரிகிறார். சுவாமி விவேகானந்தர் கடலில் குதித்து நீந்திச் சென்று கன்னியாகுமரி பாறையில் தவம் செய்கிறார்.

இனி பாஸ்கரசேதுபதியைச் சந்தித்த விஷயத்திற்கு வருவோம்.

விவேகானந்தர் பாஸ்கர சேதுபதியைச் சந்திக்கிறார். இராமநாதபுரம் அரசின் ஆண்டு வருமானம் 3.14 இலட்ச ரூபாய். தென்னிந்தியாவில் உள்ள அரசர்களில் படித்தவர், விவரங்களை அறிந்தவர் அதனால் பெரிதும் மதிக்கப்பட்டவர் பிரகாசமானவர். பாஸ்கர சேதுபதி. அவர் விவேகானந்தரைச் சந்தித்ததும், இவர் தான் நமது தாய் நாட்டின் புதல்வன், நீங்கள் கட்டாயமாக சிகாகோவில் நடைபெறும் சர்வமதக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்று கூறினார்.

When he met Bhaskar Setupati, the Raja of Ramnad, that Prince, Whose estate coverd half of the Present day Ramnad district and had a revenue of Rs.3.14 Lakhs, and who was reputed to be one of the most enlightened among the raling princes of southern India, at once acknowledged him as "The coming man of his mother enlight" and earnestly advised him to go to the chicago Parliament of Religions" [3]

---

2. Swami Gambhirananda, Yuganayaka Vivekananda, (3 Volumes) Volume I, Page 287.

3. Sailendranathdhar, A comprehensive Biography of Swami Vivekananda, Vivekananda Prakashan Kendra, 36, Singarachari Street, Madras - 600005, India. Partone, 1975, Page 371-372. சைலேந்திரநாத்தார் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ஹோல்கர் (Holkar) கல்லூரியில் இந்தூரில் (Indure) பணியாற்றியவர், இவர் எழுதிய விவேகானந்தர் வரலாறு முதல் தொகுதி 762 பக்கங்கள். இரண்டாவது தெகுதி 746 பக்கங்கள், 27பக்கம் முன்னுரை. மொத்தம் 1535 பக்கங்கள்.

கன்னியாகுமரியிலிருந்து விவேகானந்தர் கால்நடையாகவே இராமநாதபுரம் சென்றார். வழியில் உணவு யாசகம் பெற்று உண்டு துறவுப் பயணத்தைத் தொடர்ந்தார். பாஸ்கர சேதுபதியைச் சந்தித்தார்.

பத்தொன்பதாவது நூற்றாண்டு வழங்கிய பெருங்கொடை மன்னர் பாஸ்கர சேதுபதி. 35 ஆண்டுகள் கூட முற்றுப் பெறாத அவரது அரிய வாழ்க்கை அற்புதக் கனவு போல முடிந்துவிட்டது.

சிவ ஞானச் செல்வர்
செந்தமிழ்ப் புலவர்
சீர்மிகு இசைக் கலைஞர்
ஆங்கிலப் பேராசான்
அவலம் நீக்கும் அன்பு வள்ளல்.
இது அவரது வாழ்க்கைப் பக்கங்கள்.

வள்ளல் பாஸ்கரசேதுபதி

ராஜா முத்துராமலிங்க சேதுபதி (கிபி 1841 – 1873). இவரது இரு ஆண் பிள்ளைகள் பாஸ்கர சேதுபதி, தினகர சேதுபதி, இராணி பானுமதி என்ற பெண் மகளும் உண்டு. 32 வது வயதிலே முத்துராமலிங்க சேதுபதி மறைந்தார். யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரைக் கொண்டு சைவ சாத்திரங்களை வெளியிட்டார். பழனி மாம்பழக் கவிராயர் போன்ற புலவர்களை ஆதரித்தவர். விவரிக்க பெருகும் என்பதால் பாஸ்கரசேதுபதி விஷயத்திற்கு நேராக வருவோம்.

துரை ராஜா (எ) முத்துராமலிங்க சேதுபதி இறக்கும்போது 1873 இல், அவரது மூத்த மகன் பாஸ்கர சேதுபதி ஐந்து வயது பாலகனாக இருந்தார். (பிறப்பு 3.11.1868).

பிரிட்டிஷார் இராமநாதபுரம் ஜமீன்தாரி நிர்வாகத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டிருந்தனர்.

இராஜகுடும்பத்தைப் பராமரித்ததுடன், பாஸ்கர சேதுபதிக்கும், தினகரசேதுபதிக்கும் கல்வி புகட்டும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது பிரிட்டிஷ் அரசு.

சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவர்களுக்கு, ஆங்கில ஆசான்கள், தாதிமார்கள், பணியாட்கள் பலருண்டு.

எழும்பூரில் ஆங்கிலேயர் நிர்வகித்த தனியார் பள்ளிகளிலும், பின்னர் அரசாங்கக் கல்விச் சாலையிலும் கல்வி கற்றார் பாஸ்கர சேதுபதி.

ஓவியம் வரைதல், பியானோ இசைத்தல், டென்னிஸ் விளையாடுதல், ஆங்கில இசை ஆகியவற்றில் துவக்கத்தில் சிறந்து விளங்கினார். தமிழ் இலக்கியங்களிலும் சைவ – வைணவத் திருமுறைகளிலும் தேர்ச்சி பெற்றார்.

பத்தாண்டுகளுக்கு மேல் பள்ளி வாழ்க்கைத் தொடர்ந்தது. தனது 17வது வயதில் தஞ்சைத் தரணியில் உள்ள சில ஆலயங்களுக்கு பாஸ்கர சேதுபதி சென்று வந்தார். திருவாவடுதுறை ஆதினத்திற்கு அப்போது சென்றார். அந்த ஆதினத்திற்கும் இராமநாதபுரம் ராஜாக்களுக்கும் 17வது நூற்றாண்டு முதலே தொடர்புகள் இருந்து வந்தது.

காவிரி நீரும், சேதுபதி மன்னர் அன்னமும்

திருவாவடுதுறை ஆதினத்தில் நாள்தோறும் பகல் உணவு உட்கொள்ளும்போது, மகேசுவர பூஜையின்போது, **காவிரி நீரும், சேதுபதி மன்னர் அன்னமும்**, ஆவுடையப்பர் நிழலும் என்று உடையோம்" என்று சொல்லியே துவங்குவார்கள்.[1]

தஞ்சைத் தரணிக்குச் சென்ற பாஸ்கரசேதுபதி நாகூருக்கும், நாகப்பட்டினத்திற்கும் சென்றார். நாகப்பட்டினத்திலிருந்து சதாசிவம்பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'நீல லோசனி' பத்திரிகை அலுவலகத்திற்கும் சென்றார். அவர் மகிழ்வுடன் வரவேற்றார். அந்தப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு கணிசமான பொருள் வழங்கியும், உதவினார்[2] என்பர் எளியேனின் பாசமிகு அண்ணன் மறைந்த எஸ்.எம்.கமால்.

பின்னர் சென்னை சென்ற பாஸ்கர சேதுபதி, தினகர சேதுபதி இருவரையும் அவர்களது ஆங்கில ஆசான்கள் வட இந்திய யாத்திரைக்கு அழைத்துச் சென்றார். பின்னர் இலங்கையில் 51 நாட்கள் பயணம் மேற்கொண்டார் பாஸ்கர சேதுபதி. இந்தச் சுற்றுப்பயணங்கள் அவர் இந்தியப் பண்பாட்டை அறிய உதவிற்று.

5.1.1888 முதல் 24.2.1888 வரை இலங்கையில் சுற்றுப் பயணம் செய்தபோது பாஸ்கர சேதுபதியால் எழுதப்பட்ட பயணக் குறிப்புகள் சிறு நூலாக வெளிவந்தது. [3]

இலங்கையிலிருந்து திரும்பும்போது நூற்கள் பலவற்றை வாங்கிவந்தார். தனது இளமைக் காலத்தில் தமக்கு படிப்பதற்கு உதவிய கீரிட்டன் தம்பதியரை பாஸ்கர சேதுபதி அழைத்து தனது இராமநாதபுரம் அரண்மனையில் சிறப்புத் தர்பார் நடத்தி தனது நன்றியறிதலைத் தெரிவித்தார்.

---

1. ஸேதுஸமஸ்தானவித்வான் ரா.இராகவையங்கார், சேதுநாடுந் தமிழும், செந்தமிழ்ப் பிரகரம் 48, மதுரை தமிழ்ச் சங்கமுத்திராசாலைப் பதிப்பு, 1928, பக்கம் 34
2. டாக்டர் S.M. கமால், மன்னர் பாஸ்கர சேதுபதி, இராமநாதபுரம், 1992, பக்கம் 21.
3. My Trip to India's utmostisle, Madras, 1890.

பாஸ்கர சேதுபதி திருமண வூசல்

கி.பி. 1888 மே திங்களில் பாஸ்கர சேதுபதி சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் எப்.ஏ. தேர்வில் வெற்றி பெற்று பட்டதாரியானார். அவரது திருமணத்திற்கு பிரிட்டிஷார் அதன் பின் ஒப்புதல் தந்தனர். 13.5.1888 இல் களரி சேதுராஜாத் தேவர் திருமகளார் மங்களேசுவரி நாச்சியாருக்கும் – பாஸ்கர சேதுபதிக்கும் இலட்சம் ரூபாய் செலவில் திருமணம் விமரிசையாக நடந்தது.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் சின்னசாமிப்பிள்ளை அவர்கள் 1888 இல் **பாஸ்கர சேதுபதியவர்கள் திருமண வூசல்** என்னும் திருமண வாழ்த்து நூலை அப்போது வெளியிட்டார்.

'திருமருவுமார்பன்' எனத் துவங்கி **'ஊழிபல வாழிநீ'** என முடியும் அத் திருமண வூசல் 212 அடிகளைக் கொண்டது.

பாஸ்கர சேதுபதி திருமணக் கும்மி

முகவை கவிஞர் இராமலிங்கம் பாடியது. பாஸ்கரசேதுபதி திருமணக்கும்பி. **பூமாதிலங்கியமார்பனாம்** பாஸ்கர பூபதி எனத் துவங்கிடும் இந்தக் கும்பி 480 அடிகளைக் கொண்டதாகும்.

பாஸ்கர சேதுபதி – மங்களேசுவரி நாச்சியார் திருமணம் முடிந்த சில நிமிடங்களில் தூவல் கண்ணுச்சாமித் தேவரின் திருமகளான சிவபாக்கியம் அம்மையாரை மணந்தார் பாஸ்கரசேதுபதி.

நாட்குறிப்பு

1891 முதல் 1893 வரை தனது நாட்குறிப்புகளில் தமது அன்றாட வாழ்க்கை மற்றும் செலவுகளைப் பதிவு செய்து வைத்துள்ளார் பாஸ்கர சேதுபதி. அவரது இறைப்பணிகள் பற்றிய செய்திகளை, அவரதுநல்ல தன்மைகளையும் அறிந்து கொள்ள அந்த நாட்குறிப்பு பயன்தருகிறது. இந்த நாட்குறிப்பு சென்னையில் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பர் எஸ்.எம்.கமால்.[4]

---

4. எஸ்.எம்.கமால் முற்கூறிய நூல் பக்கம் 24

சுற்றத்தாரிடையே பகைமை உணர்வும் பூசலும் ஏற்படாமல் தடுப்பதற்காக இத்திருமணம் நடைபெற்றது.

சிவபாக்கியம் – பாஸ்கர சேதுபதி தம்பதியருக்கு 3.6.1889இல் ஆண் குழந்தை பிறந்தது. 'ராஜராஜேசுவரன் என்று அவருக்குப் பெயர் சூட்டப்பெற்றது.

மங்களேசுவரி நாச்சியாருக்கும் அடுத்து குழந்தை பிறந்து விரைவில் இறந்துவிட்டது. எனவே தமக்குப்பின் சமஸ்தான உரிமை ராஜராஜேசுவரனுக்கே (இராஜேஸ்வர முத்துராமலிங்கம்) சேரவேண்டும் என்று 11.7.1892 இல் ஆவணம் மூலம் பதிவு செய்து வைத்தார் பாஸ்கர சேதுபதி.

சிவபாக்கியம் நாச்சியாருக்கு ஆண் மகவும் (இராஜாராம் பாண்டியன்), பிறகு பெண் மகவும் பிறந்தது. பாஸ்கர சேதுபதி தனது 28 வயதில் ஊர்க்காடு ஜமீன்தார் கோட்டிலிங்க சேதுராயரது மூத்தமகளான சிவகாம சுந்தர நாச்சியாரை 1896 இல் மணந்தார். கல்லிடைக்குறிச்சி திருவாடுவடுதுறை திருமடத்தில் மன்னர் பாஸ்கர சேதுபதி 27.12.1903 இல் மறைந்தார். 30.12.1903 இல் இராமநாதபுரத்தில் மன்னரது பூத உடல் தகனம் செய்யப்பட்டது.

பதிவேடு

அன்றாட நிகழ்ச்சிகளுக்கு பாஸ்கர சேதுபதி செலவு செய்தது குறித்துத் தெரிவித்திடும் பதிவேடு ஒன்று எஸ்.எம்.கமால் அவர்களால் கள ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டு இராமநாதபுரம் ஆவணக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இனி பாஸ்கர சேதுபதி ஏற்பாட்டால் விவேகானந்தர் அமெரிக்கப் பயணம் மேற்கொண்ட விஷயத்தைத் தொடர்வோம்.

பாஸ்கரசேதுபதி விவேகானந்தரை அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்திட உதவுவதில் தயக்கம் காட்டினார் என்றும் சொல்லப்படுகிறது. அதில் உண்மை என்ன? விரிவாகவே விளக்கமாகவே வரலாற்றுப் பக்கங்களுக்கு வருவோம்.

முதலில் பாஸ்கர சேதுபதியைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அவர் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தது,

அதாவது சமஸ்தான நிர்வாகப் பொறுப்பை ஏற்றது 3.4.1889. பிரிட்டிஷ் அரசு பாஸ்கர சேதுபதிக்கு மகாராஜா என்ற விருதை வழங்கிச் சிறப்பித்தது 1891. சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் சிகாகோ நகருக்குச் சென்றது 1893.

இராமநாதபுரம் சமஸ்தான பொறுப்பிற்கு 1889 இல் வந்த பாஸ்கர சேதுபதியின் நிர்வாகத் திறத்தைப் பார்க்கவேண்டியது அவசியமாகிறது.

இளஞ்சிங்கம் பாஸ்கர சேதுபதி இராமநாதபுர சமஸ்தானத்தில் செம்மையான செயல்களில் ஈடுபட்டார். பல்லக்கில் பவனி வந்தார். பாமரர் தம் நிலையைக் கண்டார். இரண்டாயிரத்து நூற்று எழுபது கிராமங்களில் இவர் தம் ஆட்சி இருந்தது.

இராமேஸ்வரம், தனுஷ்கோடி தீர்த்தங்கரை, மதுரை மீனாட்சியம்மன் கோவில், திருப்புல்லாணி, திருஉத்தரகோசமங்கை, திருவாடானை, திருச்சுழியல் திருக்கோயில்களின் திருப்பணியை மேற்கொண்டவர் பாஸ்கர சேதுபதி.

இந்திய தேசிய காங்கிஸ் கட்சிக்கு பத்தாயிரம் நிதி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் மாணவர் விடுதி, உயர்நிலைப்பள்ளி அமைத்திட நாற்பதாயிரம் நிதி, இராமநாதபுரத்தில் ஒடுக்கப்பட்டோர் குழந்தைகளின் கல்விக்கு ரூ. 16000 நிதி, மதுரை அமெரிக்க மிஷன் மருத்துவமனைக்கு ரூ. 6000 நிதி, மதுரை யூனியன் கிளை நூலக கட்டிடத்திற்கு ரூ. 5000 நிதி, மதுரை உயர்நிலைப்பள்ளிக்கு ரூ. 3000 நிதி. பாஸ்கர சேதுபதியின் கொடைப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

ரூ. 4000000 நன்கொடை

1893 சூன் 27 ஆம் நாளிட்ட பாஸ்கர சேதுபதியின் நாட்குறிப்பின்படி கி.பி. 1890 முதல் 1893 வரை ஆகிய நான்கு ஆண்டுகளில் வழங்கிய நன்கொடைகள் தனது சக்திக்கு மீறிய அளவில் நாற்பது இலட்சத்திற்கும் மேலாக இருந்தது.[5]

12.7.1895 அன்று பாஸ்கர சேதுபதியின் நிலை 20,0000 ரூபாய் பற்றாக்குறை நிலையில் இருந்தார். அதற்காக நவரத்தினங்கள்

5. பாஸ்கர சேதுபதியின் நாட்குறிப்பு நாள். 26.8.1893

இழைத்த எட்டு நவகண்டி மாலைகள், முத்துக்களால் ஆன முத்தாரங்கள் கானாடு காத்தான் எஸ்.ஏ.அண்ணாமலைச் செட்டியாரது இரும்புப்பெட்டிக்கு மாறியது. அதன் அடிப்படையில் கடன்பெற்றது.

பின்னர் பாஸ்கர சேதுபதி மறைந்தது, 2,80,000 ரூபாய்க்கு நகைகள் விற்பனையானது. வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றம் இலண்டன் பிரிவீ கவுன்சில் வழக்குகள்; 1935 இல் சிக்கலான நிலைமை முடிவுக்கு வந்தது. (Dr.Seshadri, Setupatis of Ramnad, 1972, Unpublished Thesis)

பாஸ்கர சேதுபதியின் கொடைச் சிறப்பை அறிவித்திடும் பாடல்கள் பல உள்ளது.

தங்க மாலையை பவுனாக்கி சந்திரன் சார்கிரியை
துங்கம் பொருந்திய ரூபாயாக்கிச் சொரிந்திடினும்
திங்கள் குடை தங்கம் **பாஸ்கர** பூபன் செழுங்கமல
செங்கைக்கு பற்றுமா கண நேரச் செலவினுக்கே.
சீலத்தவ மறையோர் வருண செபம் செய்யினும்
கோலக்கருமுகில் பெய்யும் பெய்யாது குகனை எண்ணிக்க
பாலத்தில் நீறணி **பாஸ்கர** சேதுபதி கைமுகில்
தாலத்தில் எந்நேரத்திலும் பெய்யும் தன மழையே!
ஆலயம் சீராமா அரும்புலவர் வாழ்வாரா
காலமெல்லாம் தருமம் தழைக்குமா – ஞானச்
சாந்தகுணச் சேதுபதி தன் மரபிற் **பாஸ்கரனாம்**
வேந்தன் பிறக்காவிடில்

சர். டி. முத்து சுவாமி ஐயர்

திருவாரூரில் தெரு விளக்கின் வெளிச்சத்தில் படித்த ஏழைச் சிறுவனின் அறிவும் ஆற்றலும் போற்றத் தகுந்தது. அவரே கி.பி. 1862 இல் நிறுவப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய உயர்நீதிபதியாக நியமிக்கப்பட்ட சட்டமேதை சர்.டி.முத்து சுவாமி ஐயர். [6]

1895 ஜனவரி 25இல் இவர் மறைந்தபோது பாஸ்கர சேதுபதி பெரும் துயருற்றார் காசி, சிதம்பரம், இராமேசுவரம்

6. ராண்டார்கை, அன்றைய சென்னைப் பிரமுகர்கள், தொகுதி 1, சென்னை, 2002, பக்கம் – 19

ஆகிய திருத்தலங்களில் முத்துசாமி ஐயரது ஆத்ம சாந்திக்காக தமது நிர்வாகிகளைக் கொண்டு சடங்குகளைச் செய்திடச் சென்னார் பாஸ்கர சேதுபதி. அந்த நீதிபதியின் நினைவாக அமைக்கப்பட்ட வெள்ளை பளிங்குக் கல் நினைவுச் சின்னம் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இன்றும் காட்சி தருகிறது.

அந்த நினைவுச் சின்ன அமைப்புச் செலவின் பெரும் பகுதியை அன்புடன் வழங்கியவர் பாஸ்கர சேதுபதி.[7]

தார் - திருவிதாங்கூர் மன்னர்களுக்கு வரவேற்பு

வட இந்திய 'தார்' சமஸ்தான மகாராணியார், இராமேசுவரம் வந்தபோதும், திருவாங்கூர் மன்னர் சுவாதித் திருநாளின் இராமேசுவர யாத்திரையின்போதும் அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும் சிறப்பான வரவேற்புகளை அளித்தவர் பாஸ்கர சேதுபதி. [8]

சக்தி விலாசம்

தனது மெய்க்காப்பாளர் வீரபத்திரன் சேர்வைக்கு சிறந்த மாளிகை அமைத்துத் தந்தவர் பாஸ்கர சேதுபதி. அதன் புதுமனை புகுவிழாவிற்கு அரச சம்பிரதாயங்களை மீறி நேரில், சென்றவர் பாஸ்கர சேதுபதி. இந்த மாளிகை '**சக்தி விலாசம்**' என்று இன்றளவும் இருக்கிறது.

இலட்சாதிபதி ஆறுமுகம் சேர்வை

அந்தரங்கப் பணியாளர் ஆறுமுகத்திற்கு ரூ. 25000 நிதி வழங்கியதுடன், தமது சமஸ்தானத்தில் இரண்டு கிராமங்களை நீண்ட காலக் குத்தகைக்கும் தந்தவர் பாஸ்கர சேதுபதி. அன்றிலிருந்து '**இலட்சாதிபதி ஆறுமுகம் சேர்வை**' என்று அழைக்கப்பட்டார். அதே பெயரில் வீடு இன்றும் உள்ளது. அந்த வீடு உள்ள பகுதி '**இலட்சாதிபதி ஆறுமுகம் சேர்வை சந்து**' என்று அழைக்கப்படுகிறது.

---

7. 2.2.1895 Madurai Mail.
8. T.Rajarama row, Ramnad Manual 1891, Page 208

காதர் இராவுத்தர்

இராமமந்திரமாளிகை பூந்தோட்டத்தில் பாஸ்கர சேதுபதி உலவும் வேளையில் அவரிடம் பணியாற்றும் காதர் ராவுத்தர் நாகூர் தர்ஹாவிற்குச் செல்ல விருப்பம் தெரிவித்தபோது நூறு ரூபாய் செலவாகும் அப்பயணத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்கிய வள்ளல் பாஸ்கர சேதுபதி.

எம்.கே.எம்.அப்துல் காதிறு ராவுத்தர்

சேதுபதி சீமையின் சோதுகுடி ஊரைச் சேர்ந்த எம்.கே. எம். அப்துல் காதிறு இராவுத்தர் தமிழ்ப்புலவர். இவர் தாம் பாடிய 'மதுரைத் தமிழ்ச் சங்க மான்மியம்' நூலில் பாஸ்கர சேதுபதியைப் புகழ்ந்துபாடியுள்ளார்.

அறந் தழைப்பத் தமிழ் தழைப்ப,
அருள் தழைப்ப தெருள் தழைப்பச்
சிறந்த முத்துராமலிங்க சேதுபதி செயுந்தவத்தால்
கறந்த செழும்பாலையை கரங்குலவும் இளங்கதிர் போல்
பிறந்தனோர் குமரன் அவன் பெருமையெவர் பேசாரே!
ஆங்கிலமும் ஆரியமும் ஆந்திரமும் அறியினமா
ஓங்கிய செந்தமிழமுதை உட்கொண்டு வளர்வுற்றான்
வீங்கிய பூப் புயம் தாங்கி விண்ணவரும் மண்ணவரும்
பாங்குறச் செய்தான் முறையப் பாற்கரபூபதியம்மா
இரவலராய் முற்கணத்தினோர் பிற்கணத்திற்
புரவலராய் பொலியும் வகை புரிகின்ற பெருங் கொடையான்
இரவலராயினும் புகலு பொன்மொழியால் வசமாக்கும்
கரவலராம் மெய்யன் உயர் கருணை நின்ற கண்ணுடையான்

என்று சோதுகுடிபுலவர் எம்.கே.எம். அப்துல் காதிர் ராவுத்தர் பாஸ்கர சேதுபதியின் புகழ் பாடியுள்ளார். இன்னும் இவர் பாஸ்கர சேதுபதி குறித்து பாடியுள்ளார். விரிவஞ்சி நிறுத்திக் கொள்கிறேன்.

மு.ரா.அருணாசலக் கவிராயர்

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் மு.ரா.அருணாசலக் கவிராயர் பாஸ்கர சேதுபதியைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடியுள்ளார். சான்றுக்கு ஒன்று இதோ :

எங்குமாஞ் சிவத்தின் வியாபகமுயிர்பாசமெனும் இரண்டும் கூடி
தங்கும் வியாத்தியு மவைகள் சிவத்தின் வியாப்பிய
மாகுந் தன்மையுஞ்சொல்
பொங்கு பன்னு லாலுயிர்ந்து மெய்ஞ்ஞானச் சனகனைப்போல்
புவியைக்காக்கும்
துங்கள் **பாஸ்கர சேது மன்னனைப்** *போல் புவியிலெவர்*
சொல்லுங்காலே.

சிலேடைப் புலி பிச்சுவையர்

பாண்டிய நாட்டில் வேம்பத்தூரில் 1850இல் பிறந்து 1910 வரை வாழ்ந்தவர் சிலேடைப்புலி பிச்சுவையர், இவரை ஆதரித்த வள்ளல்களில் ஒருவர் முகவை அரசர் பாஸ்கர சேதுபதி.[9]

இராமநாதபுரம் ராஜா ஸ்ரீபாஸ்கர சேதுபதி அவர்களால் மிகவும் ஆதரிக்கப்பெற்றவர் பிச்சுவையர். இராமநாதபுரம் ஸ்ரீ பாஸ்கர சேதுபதியவர்களின் விருப்பத்தின்படி ஒருமணி நேரத்தில் பன்னிரண்டு சிலேடைகளைப்பாடி அம் மன்னர் வழங்கிய ஐயாயிரம் ரூபாய் ஸம்மானத்தைப் பெற்றவர். அம்மன்னரவர்கள் செய்த நன்றியை மறவாமைக்கு அடையாளமாகப் பிச்சுவையர் தம் குமாரர். ஒருவருக்குப் **பாஸ்கர அய்யரென்ற** பெயரையும், பாஸ்கர சேதுபதி வழங்கிய நிதியைக் கொண்டு வாங்கிய நிலத்திற்குப் **'பாஸ்கரன் செய்'** என்ற பெயரையும் இட்டவர் பிச்சுவையர் என்பார் தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர்.[10]

பிச்சுவையருக்குப் பொருள் உதவி செய்து ஆதரித்தவர்களில் இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதியும் ஒருவர். அடிக்கடி பாஸ்கர சேதுபதியிடமுஞ் சென்று பொருளுதவி பெற்றுவருவார். இவருடைய சிலேடைப் பாக்களின் நயத்தையும் விரைவில் பாடுந்திறத்தையும் கேட்டு இவருக்கும் சிலேடைப்புலி என்றும் சிறப்புப் பெயரை வழங்கியவரும் பாஸ்கர சேதுபதியே.

9. வெ.பழநியப்பன், உ.பழநி, தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம் தொகுதி 3, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1989, பக்கம் 355.

10. உ.வே.சாமிநாதயைர், நான் கண்டதும், கேட்டதும், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1938, பக்கங்கள் 26, 33.

அவ்வரசர் 1903 இல் மறைந்தபோது பிச்சுவையர் பாடிய இரங்கற்பாக்கள் இதோ : –

“மையினையுஞ் சிந்தாமணியினையும் **வென்ற கொடைக்**
கையினையும் வாய்ப்பிரசங்கத்தினையும் – துய்ய புகழ்
நின்றைக் காளத்தி நிகர் **பாற்கரபூபா**
என்றைக்குக் காண்போம் இனி.
பார்புலம்ப நீயாள் பதிபுலம்ப ஈசனடி
யார் புலம்ப நீவான் அடைந்தனையே – சூர்புலம்பு
மன்னுதனுக்கை மணிப் **பாற்கரபூபா**
என்ன குற்றஞ் செய்தோம் இசை. [11]

உ.வே.சா. என் சரித்திரம்

தமிழ்க்கடல் உ.வே.சாமிநாதையரின் ‘என் சரித்திரம்’ நூலில் அத்தியாயம் 99 இல் ‘மகிழ்ச்சியும் வருத்தமும் என்ற’ தலைப்பில் குறிப்பிடுகிறார்.

“நான் பூண்டி அரங்கநாத முதலியாரை பார்க்கப் போயிருந்தேன். அவர் சிந்தாமணியில் எதுவரை நிறைவேறியுள்ள தென்று வழக்கம் போல் அன்புடன் விசாரித்தார். நான் விவரத்தைச் சொன்னேன். பிறகு அவர்,

“இராமநாதபுரம் அரசராகிய **பாஸ்கர சேதுபதி அவர்களை நான் சந்தித்தேன் அவர் தமிழில் மிக்க அன்புடையவர்.** தங்கள் சிந்தாமணிப் பதிப்பைப் பற்றிய பேச்சு கவர்ந்தது. **தமக்கும் அது முன்னமே தெரியுமென்று** சொன்னதோடு, மிகவும் நல்ல நூலாகிய சிந்தாமணியைப் பதிப்பிக்கத் தங்களுக்குத் தகுதியில்லையென்று தம்மிடம் யாரோ கூறியதாகவும் சொன்னார். நல்ல காரியத்துக்கு இடையூறு விளைவிக்க எத்தனையோ விஷமிகள் காத்திருக்கிறார்கள்’ என்று சிறிது வருத்தத்தோடு சொன்னார்.

உ.வே.சா. தனது என் சரித்திரத்தில் பாஸ்கர சேதுபதியின் தமிழ்ப் பற்றைப் பாராட்டியுள்ளார். [12]

---

11. சு.அ. இராமசாமிப் புலவர், தமிழ்ப் புலவர் வரிசை பதினான்காம் புத்தகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1956, பக்கங்கள் 16, 17.

12. உ.வே.சா. என் சரித்திரம், சென்னை, 1982, பக்கம் 604.

நவராத்திரி விழா

இராமநாதபுரம் அரண்மனை வளாகத்தில் அருள்மிகு ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

கி.பி.1659 இல் ரகுநாததிருமலை சேதுபதி மதுரை திருமலை நாயக்கரது வேண்டுகோளுக்கு இணங்க மதுரையைக் கைப்பற்றவந்த மைசூர் படைகளைத் தோற்கடித்து பேருதவி புரிந்தார். அதனைப் பாராட்டி திருமலை மன்னர் சேதுபதி அரசருக்கு இராஜராஜேஸ்வரி அம்மனின் பொன்னால் ஆன சிலையை வழங்கினார்.

Tirumala Presented the sethupathi with a gold image of rajarajeswari இவரது காலத்தில் புரட்டாசி திங்களில் பத்து நாட்கள் சிறப்பான பூசைகள் நடைபெறும். இதுவே நவராத்திரி விழா என்று அழைக்கப்பட்டது.

Raghnuatha introduced the Navarathri Festival in the Maravaland.[13]

உ.வே.சா. அழைக்கப்படுதல்

கி.பி.1892 ஆம் வருஷம் நடைபெற்ற நவராத்திரி விழாவிற்கு வரவேண்டுமென்று இராமநாதபரம் ஸ்ரீ பாஸ்கர சேதுபதியிடமிருந்து உ.வே.சா. அவர்களுக்கு அழைப்புக் கடிதம் சென்றது. உ.வே.சா. எழுதுகிறார். "நான் காலேஜில் பத்து நாட்கள் ரஜா பெற்றுக்கொண்டு புறப்பட்டு மதுரையில் இறங்கி மாட்டு வண்டியில் இராமநாதபுரம் சென்றேன். வழியில் பல வண்டிகள் தாங்க முடியாத பண்டங்களை ஏற்றிக் கொண்டு சென்றன. எல்லாம் இராமநாதபுரத்தை நோக்கிச் செல்வதை அறிந்து நவராத்திரி விழாவின் சிறப்பை ஒருவாறு ஊகித்துக் கொண்டேன். **இத்தமிழ்நாட்டிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான வித்துவான்கள் வந்திருந்தார்கள். தமிழ்நாட்டுக் கனவான்களில் ஒருவர் பாக்கியில்லை யென்று தான் சொல்லவேண்டும். ஊர் தாங்காத கூட்டம் கூடியிருந்தது.**

சேதுபதி மன்னர்களின் குல தெய்வமாகிய ராஜராஜேசுவரி அம்பிகைக்கு 1008 சங்கம் வைத்து அபிஷேகம் நடைபெற்றது. மேளக் கச்சேரி, சங்கீத வினிகைகள் முதலியவற்றிற்கு

13. R.Nagasamy, N.S.Ramaswami, Ramanathapuram District, An Archaeological guide, 1979, Page 32

கணக்கேயில்லை. ஸம்ஸ்கிருத வித்வான்களின் சபையும், தமிழ்ப் பண்டிதர்களின் சபையும், நடந்தன.

சிறுவயல் ஜமீன்தாராகிய முத்துராலிங்கத் தேவருடன் பாலவநத்தம் ஜமீன்தாரும், பொன்னுச்சாமித் தேவருடைய குமாரருமாகிய பாண்டித் துரைத் தேவருடனும் நெருங்கிப் பழகிச் சல்லாபம் செய்யும் சந்தர்ப்பம் எனக்கு அப்போது கிடைத்தது. முத்துராமலிங்கத் தேவர் பாஸ்கர சேதுபதிக்குப் பாட்டனார் முறையினர். **மேலே நான் வெளியிடும் நூல்களுக்குப் பெருளுதவி செய்வதாக அவர் வாக்களித்தார்.**

அங்கே இருந்த பத்து நாட்களும் பொழுது போனதே தெரியவில்லை. பாஸ்கர சேதுபதியினுடைய உபசாரமும், சாதுரிய வசனங்களும், கொடைப் பெருமையும் எனக்கு வியப்பை உண்டாக்கின. அந்த விழாவிற்கு இரண்டு லட்சம் ரூபாய்களுக்கு மேல் செலவாயிற்று தெரிந்தது. வித்துவான்கள் பாஸ்கர சேதுபதியைப் பல படியாக வாழ்த்திப் பாடல்கள் கூறினர். நானும் சில செய்யுட்களைச் சொன்னேன்.[14]

ஆனால் உ.வே.சா. படியது அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாக்கள் 26. கட்டளைக்கலித்துறைப்பாக்கள் 4. பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் 1. வெண்பா 1 ஆக 32 பாடல்கள்.

புகழின் வைப்பே

'பயன்மிகுந்த தமிழ்வளர்க்கும் பாண்டிய பூபதியே என்று துவங்கி துவந்தேத்தல் ஒக்கும்மன்றோ' என்று அப்பாடல்கள் நிறைவுறும். 32 பாடல்களையும் விவரிக்கின் பெருகும் என்பதால் சில பாடல்கள் சில வரிகள் பாஸ்கர சேதுபதி மீது உ.வே.சா. பாடியது இதோ:

உரவலரும் எழு பரிசேர் ஒருருளை
இரத மொன்றூர்ந் துழிதந்தென்றும்
இரவலரை வருத்தி மதியொளி குறைக்கும்
வெங்கதிர் நிற்கிணையாங் கொல்லோ

14. உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், சென்னை. 1950, பக்கங்கள். 982 – 984.

புரவலர் சிகாமணியே புலவர்கள்
சிந்தாமணியே புகழின் வைப்பே
விரவலர் தம் கோளரியே பாஸ்கரசா
மிப் பெயர் கொள்விறற் செவ்வேளே
அருளினால் பெருங்கடலை ஈகையால்
பசு முகிலை அளவாக் கல்வித்
தெருளினால் பணியரசைப் புரவினால்
திருமாலைச் சிறு பழிக்கும்
வெருளினால் அறக்கடவுள் தனைவென்று
நன்று புரி மேம்பாடுற்ற
பொருளினால் விளங்கு பாஸ்கர சேது
பதி மகிழ்வு பூத்து வாழ்க.
வேண்டுவர் வேண்டுவன அளித்திடுபே
ரருளாளன் விழையத் தோன்றி
வேண்டுவார் வேண்டுவன அளித்திடு
பாஸ்கரசாமி வேந்தர் வேந்தே
ஈண்டுவார் கடலுலகம் முழுதுமதித்
திடும் பெருமை ஏந்த லேயின்
றீண்டியான் சில மொழி சற்றியம்பிடுதற்
கவகாசம் ஈவாய் மன்றோ [15]

சம்மானம்

உ.வே.சா. தனது சுயசரிதையில் தொடர்ந்து எழுதுகிறார்.

நான் பாஸ்கர சேதுபதி வேந்தரிடம் விடைபெற்றுக் கொண்டபோது அவர் எனக்கு இரண்டு உயர்ந்த சாதாராக்களைப் போர்த்தி (பொன்னாடை) தஞ்சாவூர் ஜில்லாவிற்கு வருவேன். அப்போது அவகாசமாக உங்களோடு பேசி உங்கள் தமிழ்ப் பணிக்கு வேண்டிய உதவியைச் செய்வேன்'' என்று சொன்னார். புறப்படும்போது தானாதிகாரி என் வழிச் செலவுக்கும், படிச் செலவுக்குமாக ரூபாய் நூறு அளித்தார். *நான் கும்பகோணம் வந்து என் தாய், தந்தையருக்கும் அன்பர்களுக்கும் சாதராக்களைக் காண்பித்தேன். யாவரும் மகிழ்ந்தனர். திருவாவடுதுறைக்குப் போய் அம்பலவாண தேசிகரிடம் காட்டியபோது, "மிகவும்*

15. உ.வே.சா. தமிழ்ப்பாமஞ்சரி, பதிப்பாசிரியர் கி.வா. ஜகந்நாதன், சென்னை. 1962, பக்கங்கள் 185, 187, 188.

உயர்ந்த சம்மானம், தாங்கள் தகுதியை அறிந்து செய்த சிறப்பு இது' என்று பாராட்டினார்.

சிலப்பதிகாரப் பதிப்புக்கடன் தீர்ந்திட

இந்த ஆதீன சம்பந்தம் இல்லாவிட்டால் எனக்கு என்ன மதிப்பு இருக்கப் போகிறது? என்று சொல்லிவிட்டு "இவை இரண்டும் என்ன விலை பெறும்?" என்று கேட்டேன்.

"**முந்நூறு ரூபாய்க்கு மேல்** இருக்கும்" என்றார் அம்பல வான தேசிகர்.

'இந்தத் துப்பட்டாவினால் எனக்கு என்ன பிரயோஜனம்? இவற்றை இங்கேயே கொடுத்து விடலாமென்று நினைக்கிறேன். "என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்! ஒரு பெரிய சமஸ்தானத்தில் பெற்ற மரியாதை பத்திரமாக நீங்களே பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள்'.

சிலப்பதிகாரம் அச்சிட்டதினால் ஏற்பட்ட சிரமம் இருக்கிறது. அதைத்தீர்க்க வழியில்லை... அம்பல வாணதேசிகருக்கு நான் அவற்றைக் கொடுத்து விடுவதில் மனமிராவிட்டாலும் என் குறிப்பை அறிந்து மடத்திலேயே அவற்றை எடுத்துக் கொண்டு அவற்றின் விலையாக **ரூ.300 எனக்கு அளிக்கச் செய்தார். நான் அத்தொகையைப் பெற்றுச் சிலப்பதிகாரப் பதிப்பினால். அப்போது இருந்த கடன் தொல்லையினின்றும். நீங்கினேன்.** மேலே புறநானூற்றை ஆழ்ந்து ஆராயத் தொடங்கினேன். [16]

பின்னர் உ.வே.சா. புறநானூற்றுப் பதிப்பை வெளியிட்டார். அதனைப் பெற்றுக் கொண்ட பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர் 11.11.1894 இல் உ.வே.சா. அவர்களுக்கு கடிதம் எழுதினார். அதன்பின் 17.12.1984 இல் கடிதமும் **ஐந்நூறு** ரூபாய்க்கு ஓர் உண்டியலும் (டிராப்ட்) அனுப்பினார். பாண்டித்துரைத்தேவர் இங்ஙனம் செய்த உதவியை நான் பாராட்டி எழுதியதோடு அம்பல வாணதேசிகரிடமும் தெரிவித்தேன். அவர் உடனே முந்நூறு ரூபாய் வழங்கினார். இவ் இருவரும் உதவிய பொருளைக் கொண்டு வீட்டுக்காக

16. உ.வே.சா. என் சரித்திரம், சென்னை. 1950, பக்கம் 985, 986.

நான் வாங்கின கடனை அடைத்துவிட்டேன் என்பார் உ.வே.சா. [17]

பாஸ்கர சேதுபதியும் அவரது தமயர் பாண்டித்துரைத் தேவரும் உ.வே.சா. அவர்களுக்கு வாரி வழங்கிய வள்ளல் தன்மையை எப்படி மறக்க முடியும். உ.வே.சா. பாஸ்கர சேதுபதி குறித்துப் பாடிய பாடலொன்றில்

பூமணக்கும் பொழில் முகவைப்புரி மணக்கும்
தவப்பேறாய் போந்து கற்றோர்
தாம் மணக்கும் பெருமையுடைச்சபை மணக்கும்
பிரசங்கம் சாற்றல் மேவிப்
பாமணக்கும் சுவைத் தமிழ்ப் படிமணக்கும்
படி பரிபாலனஞ் செய் தான்றோர்
நாமணக்கும் புகழ்மிகுந்த நலமுறு
பாஸ்கரசாமி நரேந்த்ர கேண்மோ"

என்று பாஸ்கர சேதுபதியார் சொல்லாற்றலையும் வர்ணித்துப் பாடியுள்ளார். [18]

சிறந்த சொற்பொழிவாளர்

பாஸ்கர சேதுபதி ஆங்கிலத்திலும் தமிழிலும் அருவிபோலச் சைவ சமய சாரங்களை அருமையாக இனிமையாக மணிக்கணக்கில் உரையாற்றுபவர்.

1.4.1893 சிதம்பரத்தில்...

சிதம்பரத்தில் 1.4.1893 இல் பாஸ்கர சேதுபதி இரண்டு உரைகள் ஆற்றினார். '**நடராச தத்துவம்**' பற்றியது முதல் உரை. அதற்கு சில கருவிகளைக் கொண்டு விளக்கம் செய்து பேசினார். பாஸ்கர சேதுபதி இரண்டாவது சொற்பொழிவு '**பக்தி யோகத்திகு சண்டேஸ்வர நாயனாரது பங்கு**' என்பது பற்றி இரண்டு மணி நேரம் பேசினார். இந்தக் கூட்டத்திற்கு 4000 பேர்கள் வந்திருந்தனர். உள்ளூர் மாவட்ட முன்சீப்பும்,

17. மேலது பக்கம் 1000, 1001, 1002.

18. உ.வே.சா. தமிழ்ப்பாமஞ்சரி, கி.வா.ஜகந்நாதன் பதிப்பு, 2ஆம் பாகம், சென்னை. 1962, பக்கம் 188.

பட்டதாரிகளும் பங்கேற்ற இந்தக் கூட்டம் பற்றி தமது தலைவனார் பாண்டித்துரைத் தேவருக்கு அந்த கால கட்டத்தில் பாஸ்கர சேதுபதி கடிதம் எழுதியுள்ளார்.

பாஸ்கர சேதுபதி மன்னரது மட்டற்ற பாண்டியத்தியத்தை ஆங்கிலத்திலும், தமிழிலும் சமஸ்கிருதத்திலும் அவருக்கு இருந்த விசாலமான நுண்மான் நுழை புலத்தைச் சுட்டுகின்ற சாதனமாக அவரது சொற்பொழிவு அமைந்து இருந்தது. இந்து சமயத் தத்துவங்களிலும் அவற்றில் பொதிந்துள்ள உண்மைகள் பற்றிய தெளிவான அறிய இந்திய நாட்டுப் பெரு நகரங்கள் அனைத்தும் இந்த அரசரை அழைத்து அவரது சொற்பொழிவைக் கேட்டல் வேண்டும் என்று சிதம்பரத்தைச் சேர்ந்த பத்திரிகை நிருபர் அக்காலத்தில் பாஸ்கர சேதுபதியின் சொல்லாற்றல் குறித்து எழுதியுள்ளார். [19]

மாம்பழக்கவிச் சிங்க நாவலர்

(1836 – 1884) பழநியைச் சேர்ந்த முத்தைய ஆச்சாரி – அம்மணி அம்மாள் புதல்வர் மாம்பழக்கவிச்சிங்கநாவலர் மூன்றாவது வயதில் அம்மை நோயால் கண் பார்வையை இழந்தார். பிறர்படிக்கக் கேட்டும் முதுகில் எழுதியும் தமிழ்ப்புலமை பெற்றவர். [20]

இவர் இராமநாதபுரத்து அரசனின் ஆதரவு பெற்றவர். [21]

ஒருமுறை மாம்பழக்கவிச் சிங்கநாவலர் பாஸ்கர சேதுபதியின் அவைக்கு வந்தார். அவரது புலமை மன்னரை வியப்பில் ஆழ்த்தியது. மகிழ்ச்சி மீக்கூர அணியும், மணியும், பொன்னும் பூவும் நிறைந்த பொன் தட்டினை புலவரிடம் நீட்டினார் பாஸ்கர சேதுபதி. விழியற்றவரான புலவர் தடுமாற்றத்துடன்

---

19. எஸ்.எம்.கமால், மன்னர் பாஸ்கர சேதுபதி, முற்கூறிய நூல் பக்கம் 44,45.

20. மது. ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ் சியம், முதல் தொகுதி, சென்னை. 1987, பக்கம் 480.

21. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, புதுதில்லி, 1980, பக்கம் 233.

அதனைப் பிடித்துக்கொண்டு, **'தட்டு இங்கேயா அல்லது அங்கேயா'** என்றார் புலவர்.

'தட்டு (பற்றாக்குறை) அங்கே தான்' சிலேடையாகவும், சாமர்த்தியமாகவும் பாஸ்கர சேதுபதி பதிலளித்தார். பொன்னால் ஆன அந்தத் தட்டினையும் புலவருக்கே அளித்தார் பாஸ்கர சேதுபதி. [22]

சிவசம்புக் கவிராயர்

யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி என்ற ஊரில் பிறந்தவர் (1852 – 1910) இவர் பாஸ்கர சேதுபதியின் பேரில் **'கல்லாடசாரக் கலித்துறை'** எனும் நூலினை இயற்றியுள்ளார். [23]

பாஸ்கரசேதுபதியைப் புகழ்ந்து அவர் பாடிய பாடல் ஒன்று இதோ :

ஒப்பிலாச் சைவமெங்கே உண்மையறங்களெங்கே
கைப்பிலாத் தூய தமிழ்க் கல்வி யெங்கே–தப்பிலாப்
பாவலரெங்கே சீமான் **பாற்கரவேள்** தேவைநகர்க்
காவலன் மேவியிடாக்கால்?

இராமேச்சுவரம் என்ற தேவை நகரை ஆளும் பாஸ்கர சேதுபதி மன்னன் இல்லையெனில் ஒப்பற்ற சைவ சமயத்தை ஆதரிப்பவர் வேறு எவரும் இல்லை. பாஸ்கர சேதுபதி இல்லையென்றால் சைவ சமயம் எங்கே நிலைத்து விளங்கும்? நிலையாக விளங்கக்கூடிய தர்மங்கள் எங்கே விளங்கப்போகின்றன. கசப்பில்லாத இனிக்கவல்ல தூய்மையமைந்த கல்வி எங்கே நிலைக்கப் போகிறது? தவறியும் தவறுதலைக் கூறுதலில்லாத புலவர் பெருமக்கள் எங்கே வாழப் போகின்றனர்? இவையனைத்தும் சிறந்து விளங்க வழியில்லை[24] என்று பாஸ்கரசேதுபதியின் வள்ளல் தன்மையைப் போற்றியுள்ளார்.

22. எஸ்.எம்.கமால் மன்னர் பாஸ்கர சேதுபதி, முற்கூறிய நூல். பக்கம், 58, 59

23. ந.சி. கந்தையாபிள்ளை, தமிழ்ப்புலவர் அகராதி, சென்னை. 1960, பக்கம் 168.

24. எஸ்.பாலசாரநாதன், தனிப்பாடல்கள், உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 1983, பக்கம் 66.

யாழ்ப்பாண சிவசம்புக் கவியராயர், 'பாஸ்கர பதிகம்' 'பாஸ்கர சேதுபதி இரட்டை மணிமாலை', சேதுபதி நான்மணிமாலை' ஆகிய சிற்றிலக்கியங்களையும் தந்து பாஸ்கர சேதுபதியின் புகழ் பாடியிருக்கிறார். நவராத்திரி விழாவில் கலந்துகொள்ள வந்த சிவ சம்புக்கவிராயருக்கு அவர் மனம் மகிழும் வண்ணம் அன்பளிப்புகளை வழங்கி அவரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தார் பாஸ்கர சேதுபதி.

வேம்பத்தூர் வேம்பு ஐயர்

இரு பொருள் படப்பேசுவதிலும், பாடல்கள் இயற்றுவதில் சிறந்து விளங்கியவர் வேம்பத்தூர் வேம்பு ஐயர் பாஸ்கர சேதுபதியின் அவைக்கு ஒருநாள் அவர் வந்தார். புலவர்கள் பலர் இருக்கைகளில் நிறைந்து அமர்ந்திருந்தனர். செய்வது அறியாது மலைத்து நின்றார் வேம்பு ஐயர். புலவர் குழாம் **'வேம்பு நிற்பது தானே இயல்பு'** என பரிகசித்தனர்.

அரசு அருகில் தான் வேம்பு இருக்கும்

பாஸ்கர சேதுபதி நிலைமையைப் புரிந்து கொண்டார். புலவரை அழைத்து தனது அருகே அமரச் செய்தார். மகிழ்ச்சியால் திளைத்த வேம்பு ஐயர், **'அரசு அருகில் தான் வேம்பு இருக்கும்'** என்றார். (அரசமரமும், வேப்ப மரமும் அருகருகே வளரச் செய்வது தமிழக மரபு) புலவரது திறமையான பதில் அனைவரையும் மகிழ்வித்தது. பாஸ்கர சேதுபதி அவருக்கு அன்பளிப்புகளை வழங்கி மகிழ்ந்தார்.

பரிதிமாற்கலைஞர்

7.7.1870 இல் மதுரை விளாச்சேரியில் கோவிந்த சிவனார் புதல்வராகப் பிறந்தவர் சூரிய நாராயண சாஸ்திரியார். திராவிட சாஸ்திரி எனப் பின்னாளில் பெயர் பெற்றவர். தனது பெயரினை பரிதிமாற்கலைஞர் என்று மாற்றிக்கொண்டவர். *2.11.1903* இல் *33*வது வயதில் மறைந்தார். 'தமிழ்ச் செம்மொழி' என்று நூல் தந்தவர். **ரூபாவதி, கலாவதி, மானவிஜயம்** என்னும் நாடக நூல்களையும் இன்னும் பல நூல்களையும் இயற்றியவர். சென்னைக் கிறிஸ்தவ கலாசாலை தலைமைத் தமிழ்ப் பண்டிதராய் பணியாற்றிவர்.

கலாவதி

செய்யுளும் பாட்டும் கலந்த வசன நாடகம் கலாவதி, அதில் தமிழ்ப்பா வகை அனைத்துமே இதில் உள்ளது. இந்நாடகத்தை பாஸ்கர சேதுபதி அவர்களுக்கே உரிமை செய்தார்.[25]

1898இல் கலாவதி நாடகம் அச்சிடப்பட்டது. தோட்டக்காடு ராமகிருஷ்ணபிள்ளை முன்னுரையோடு வெளிவந்தது. பரிதிமாற்கலைஞர் இந்நாடகத்தை அப்போது சேது சமஸ்தானாதிபதியாயிருந்த பாஸ்கரசேதுபதிக்கு உரிமையாக்க விரும்பினார்.

கல்விக் களஞ்சியமே பாஸ்கரசேதுபதி

அவ்வாறு விரும்பவே, அச்சேதுபதியார் அவைக்களத்தில் நூலை அரங்கேற்ற வேண்டுவதாயிற்று ஆகவே, கலாவதி நாடகத்தை அரங்கேற்றும்படி செய்ய பரிதிமாற்கலைஞர் இராமநாதபுரம் சென்றார். அங்கு பல புலவர்களும் நிரம்பியிருந்த அவைக் களத்தே கல்விக்களஞ்சியமான பாஸ்கர சேதுபதியவர்களின் முன்னிலையில் இந்நாடகம் அரங்கேற்றப்பட்டது.பாஸ்கர சேதுபதி அவர்களும் நாடகத்தின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்து சன்மானித்ததோடு கூட, நாடகத்தைத் தமக்கு உரிமையாக்கவும் அனுமதி அளித்தார்கள்.

அன்றியும் பாவகைகளும், சொல்லணி பொருளணிகளும் நிரம்பி நிற்கும் இந்நூல் கண்டு மிகவும் மகிழ்ச்சியும் அடைந்தார். பாஸ்கர சேதுபதிதாம் பரிதிமாற்கலைஞரின் நூலை நன்கு துருவிப் பார்த்ததை பலரும் அறியம் வண்ணம், அவைக்களத்தே, ஆசிரியரை நோக்கி, நீர் இயற்றிய இந்நாடகத்தில் பல வகைப் பாக்களும் இயற்றிச் சேர்க்கப்பட்டுள்ளமையாம் கண்டோம், அதனால் நுமது கவிபாடும் திறமையையும் கற்பனா சக்தியையும் நன்குணர்ந்தனம்.

நிரோட்டகம்

ஆயினும் நிரோட்டகம் என்னும் வகைச் செய்யுள் இந்நூலிற்காணப்படவில்லை என்றும் கருதுகின்றோம். ஆதலால்

25. வி.சூ.நடராஜ சாஸ்திரி, வி.கோ.சூரிய நாராயணசாஸ்திரியார் சரித்திரச்சுருக்கம், மதுரை, 1939, பக்கம் 18.

அவ்வகைச் செய்யுள் ஒன்றையும் பாடித் தக்கதோரிடத்தில் சேர்ப்பீராக என்று பாஸ்கரசேதுபதி கூறினார்.

பாஸ்கர சேதுபதியின் இக்கூற்றை ஏற்று அவ்வாறே செய்வதாக பரிதிமாற்கலைஞர் அக்கணமே ஒரு நிரோட்டகச் செய்யுளை எழுதி அதை அவைக் களத்தே படித்துக்காட்டிப் பொருளையும் விளக்கினார்.

நிரோட்டகம் : உதடுகளின் முயற்சியால் பிறக்கின்ற உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம, வ என்னும் எழுத்துக்கள் வராமல் பாடப்படும் செய்யுள். 'நிரோட்யம்' என்பது நிரோட்டகம் அல்லது நிரோட்டம் என்று நிற்கும் (நிர், இன்மை, ஓட்டியம், ஓட்டசம்பந்தமுடையது. ஓட்டம் – உதடு). பரிதிமாற்கலைஞர் உடனே பாடிய நிரோட்டகச் செய்யுள் இதோ.

"செய்யாயினிய நலஞ்சேரரசர் சீராளா
கையாலெனைத் தழீ இக்காதலியே யென்றழைத்
லையா தகையேந் தழகார்ந்தா யென்றைக்கே
நையா நிற்கின்றே னனி".

கலாவதி நாடக நூலை பாஸ்கரசேதுபதிக்கு உரிமையாக்கும் வேளையில் பரிதிமாற்கலைஞர் பாடிய பாடல் இதோ:

பாற்கரசேதுபதித்துரையே

உரிமையுரை

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

சீர்க்கள வங்கமெ லாமணி யார்ந்தவள் செய்ய
தமிழ்ப்பலபாடலினாள்
பார்க்க வசீகர நாடக மானினி பாவைய ரேத்து கலாவதியாம்
யார்க்கு மினிப்புறு வாசகியைக்கரமீர்த்திவண் வாசகி
யென்றழையாய்
பார்க்கர சேகுண வானெனவேமிளிர் பாற்கர சேதுபதித்துரையே

கலாவதி நாடகத்தை பரிதிமாற்கலைஞர் பாஸ்கரசேதுபதிக்கு உரிமையாக்கியதையும் நூலின் முதற்பக்கத்தையும், இந்த நூலின் இறுதியில் தந்துள்ளோம்.

பாடலைப் பரிதிமாற்கலைஞர் பாடியதும் பாஸ்கர சேதுபதி உட்பட யாவரும் பெருமகிழ்ச்சி கொண்டு அவரைப் புகழ்ந்து போற்றினர். [26]

கலாவதி நாடகத்தில் கலாவதி வேடம் ஏற்று சூரியநாராயண சாஸ்திரியார் நடித்தார். [27]

கலாவதி நாடகத்தில் நான்காம் அங்கம் முதற்களத்தில், கலாவதி சிதானந்தனைக் குறித்துப் பாடுவதாக வரும் பல பாடல்களுள் அப்பாடல் பாஸ்கரசேதுபதி ஒன்றாக சேர்க்கப்பட்டது.[28]

கலாவதி நாடகம் அரங்கேறும்போது நடைபெற்ற சம்பவம் ஒன்றை குறிப்பிட்டாக வேண்டும். இதோ அந்த நிகழ்வு....

இது இவ்வாறாக, அரங்கேற்றுபடி இடைவேளையில் கலாமண்டபத்திற்கு வந்திருந்த அந்தணர் ஒருவரைச் சார்ந்த பெண் ஒருத்தியை வீணன் ஒருவன், துர் எண்ணங்கொண்டு அவன் மனையில் சிறைப்படுத்தி வைத்திருப்பதாக ஆசிரியர் கேள்வியுற்று மனம் மிக வருந்தினார்; அம் மடந்தையை வீணனது, துர் எண்ணம் ஈடேறும் முன், விடுவிப்பது எங்ஙனம் என்று தீவிரமாய் ஆராய்ந்து கொண்டிருந்தனர். மாலைப் பொழுதில் அரங்கேற்றுபடி, முடிவுற்ற பின், புரவலரும் புலவரை விளித்து அவருக்கு வேண்டுவன வேண்டும்படி பணித்தனர்.

அபலைப்பெண்ணைக் காப்பாற்றிய அரிமா

அப்போது சாஸ்திரியார் அரசரை மிக நெருங்கி, 'அரசே! யானொரு வரம் வேண்டுவல்; அதனை இவ்வவை கலைந்த பின் இற்றென்று கூறுவல்; அப்போது அவ் வரம் ஈந்தருள

26. ந.சுப்ரமண்யம், வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியர் (பரிதிமாற்கலைஞன்), மதுரை. 1950, பக்கம் 81, 82.

27. வி.சு.கோவிந்தன், பரிதிமாற்கலைஞர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் வரலாறும், பணிகளும், மதுரை, பக்கம். –9.

28. வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார், பி.ஏ. கலாவதி, 1898, பக்கம் 87.

வேண்டுகின்றேன்' என்று கூறி நின்றனர். இதைச் செவி மடுத்த பாஸ்கரசேதுபதியவர்களும் 'இதில் யாதோ முக்கியத்துவம் இருக்கிறது என்று உணர்ந்து, அவையைக் கலைத்துவிட்டு, சாஸ்திரியாரைத் தனியே அழைத்து, 'என்?' என்று வினவினர். அப்போது தாம் கேள்வியுற்ற விஷயத்தை உள்ளபடி அரசர்க்கு அறிவித்தனர் அருங்கலைப் புலவர்; அன்றியும், தாமும் அரசரும் மாறு வேடம் பூண்டு அவ் வீணனது மனையைச் சோதித்து உண்மையறியவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

இதற்கு உடனே இணங்கினர் செங்கோலரசரும். சோதனை செய்த பின் கேள்விப்பட்டது உண்மையென்று ஏற்பட்டது. அரசர் தமதாணையால் அம் மடந்தையை விடுவித்ததோடு அவ் வீணனுக்குத் தக்க தண்டனையும் அளித்துவிட்டனர்; அன்றியும் ஆசிரியரது பெருந்தன்மை, சூழ்ச்சித் திறன் முதலிய நற்குணங்களை மிகப் பாராட்டினர்.

அரங்கேற்றம் நிறைவேறிய பிறகு, பாஸ்கர சேதுபதி செய்த சிறப்புக்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு, சூரிய நாராயண சாஸ்திரியார், இரண்டு தினங்கள் இராமநாதபுரத்தில் மன்னனின் விருந்தினராகத் தங்கியிருந்தார். அதன் பின் மதுரை சென்று, பிறகு சென்னை சேர்ந்தார். [29]

1950 இல் வெளிவந்த பரிதிமாற்கலைஞர் வரலாற்று நூலில் இது தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் 1955 இல் வெளிவந்த இன்னொரு நூலில் அதன் ஆசிரியர். [30]

'தமக்குப் பாஸ்கர சேதுபதி பெரும் பொருளை வாரி அளிப்பார் என்று அறிந்தும், அதனை விரும்பாமற் பிறர் பெண்ணை காக்க முற்பட்டது பாராட்டத்தக்கது என்று மட்டும் சொல்லிச் சென்றுள்ளார்.

---

29. சாஸ்திரியாரது பிரபல இயற்றமிழ் மாணவர் ந.பலராம ஐயர் குமாரர் வித்வான் ந.சுப்ரமண்யன், வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்) மதுரை வி.சூ.சுவாமி நாதன் வெளியீடு, 1950, பக்கம் 83, 84.

30. புலவர் அரசு, தமிழ்ப் பேரறிஞர் நால்வர், சென்னை. 1955 பக்கம் 47.

பாஸ்கர சேதுபதியின் வள்ளல் தன்மையை எவர் மறைக்க முயன்றாலும் அந்த எண்ணம் நிறைவேறாது என்பதனை அடக்கத்துடன் இங்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

ரா. ராகவஐயங்கார்

இராமாநுச ஐயங்கார் புதல்வராக புதுக்கோட்டையில் பிறந்தவர் ரா.இராகவ ஐயங்கார். பாஷாகவிசேகரர் என்று போற்றும் அளவில் தமிழ், வடமொழி ஆங்கிலம் அனைத்திலும் திறமை வாய்ந்தவர் பாஸ்கர சேதுபதியின் அவையிலும் அவரது புதல்வர் இராசராசேசுவர முத்துராமலிங்க சேதுபதி, அவர் மைந்தர் சண்முகராசேசுவர நாகநாத சேதுபதி ஆகிய மூன்று அரசர்களின் காலத்தில் சமத்தானப் புலவராக வீற்றிருந்தவர். ரா.இராகவையங்கார். [31]

வள்ளல் பாண்டித்துரைத் தேவரால் மதுரைத் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டபோது அச்சங்கத்தில் இருந்து வெளிவந்த 'செந்தமிழ்' பத்திரிகைக்கு முதலாவது ஆசிரியர் இவராவார். மகாவித்துவானாகிய இவர் பல நூல்களைத் தந்துள்ளார்.

'செந்தமிழ்' இதழ் தொகுதி XIII இல் பகுதி 2 இல் டிசம்பர் – ஜனவரி 1915 இதழில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பதின் மூன்றாம் வருஷக்கூட்டத்திற் படிக்கப் பெற்ற ஸேது ஸமஸ்தான வித்வான் ரா.இராகவையங்காரின் கட்டுரை 41 பக்கம் முதல் 71 பக்கம் வரை வெளிவந்துள்ளது. அதில் பக்கம் 70 இல் ரா.இராகவையங்கார் கூறுகிறார்.'நம்மாட்சி பொருந்திய மஹாராஜரவர் கட்குத் திருத்தந்தையாரும் பெருங்கொடை வள்ளலுமாகிய **பாஸ்கர சேதுபதி மஹாராஜர்** *இத்தமிழின் பால் வைத்த அன்பு அவர்கள்* **இச்சங்கத்துக்களித்த பெருங்கொடையானும், தமிழ்ப் புலவர்களித்த பெருங் கொடையானும்,** *யாவரும் அறிந்ததேயாதலின், பெயர்த்துங் கூற வேண்டிய தொன்றன்று என்று குறிப்பிட்டுள்ளார். பின்னாளில் அதை நூலாக வெளியிடும் போது அதனை அப்படியே எழுத்தாண்டுள்ளார்.* [32]

31. சு.அ.இராமசாமிப் புலவர், தமிழ்ப்புலவர் வரிசை, பன்னிரண்டாம் புத்தகம், சென்னை, 1955, பக்கம் 54

32. ரா.இராகவையங்கார், சேதுநாடுந் தமிழும், மதுரை, 1928 பக்கம் 41, 42.

பசலிதோறும் 635 ரூபாய்

மாண்புமிகு பாஸ்கர சேதுபதி மகாராசா அவர்கள் இராகவையங்காருடைய புலமைத் திறத்தை மெச்சித் தம் அவையில் தலைமை மகாவித்வானாக்கினார். இவருக்குப் பல்லக்கு முதலிய வரிசைகளையும் நல்கினார்.

சமத்தான தர்ம மகமை நிதியிலிருந்து பசலிதோறும் ஆயுட்கால பரியந்தம் ரூபாய் 635 சன்மானமாகத் தரவும் உரிமைப் பத்திரம் பதிவு செய்து தந்தவர் பாஸ்கர சேதுபதி. [33]

இராமநாதபுரம் சமஸ்தானம் மகாராஜா பாஸ்கர சேதுபதி அவர்கள் சமஸ்தான மகாவித்துவான் ரா.இராகவையங்கார் அவர்களுக்கு அளித்த உரிமைப் பத்திரம்

1901 வருடம் நவம்பர் 4ம் தேதி மதுரை ஜில்லா இராமநாதபுரம் சமஸ்தானம் லேட் ராஜா முத்துராமலிங்க சேதுபதி மகாராஜா அவர்கள் புத்திரர் மறவ ஜாதி சிவமதம் ராஜா அந்தஸ்துள்ள ஸ்ரீமத் ஹிரண்ய கர்ப்பயாஜி ரவி குல முத்து விஜய ரகுநாத ராஜா **பாஸ்கரசேதுபதி மகாராஜா** *அவர்கள் இராமநாதபுரத்தில் இருக்கும் லேட் ராமானுஜ அய்யங்கார் புத்திரர் பிராமண ஜாதி வைஷ்ணவ மதம் வித்வத் ஜீவனம் சேது சமஸ்தானம் தமிழ் வித்வான் ஆர். இராகவ அய்யங்காருக்கு எழுதிக் கொடுத்த செட்டில் மெண்டு தஸ்தாவேஜூ.* **ஒருவன் இவ்வுலகிற் செய்ய வேண்டிய தர்மங்கள் பலவற்றிலும் தனது தாய்ப்பாஷையின் பொருட்டுச் செய்யும் தருமம் அதிகம் சிறந்ததாகும். நமது சமஸ்தானம் தமிழையே தனக்குத் தாய் பாஷையாகவுடைத்தாதலால் எமது முந்திய ராஜாக்களெல்லாம் பரம்பரையாகத் தமிழ் வித்துவான்களுக்கு ஏராளமான உபகாரங்கள் செய்துள்ளது பிரசித்தமானது. சேர சோழ பாண்டியர்கட்குப் பின் சுத்த தமிழ் அரசர்களான சேதுபதிகளே தமிழ் பாஷாபிவிருத்தி செய்பவர்களும் தமிழ் வித்வான்களை ஆதரிப்பவர்களும் ஆகின்றார்கள். தமிழ்வித்வான்களுக்குப் பரம்பரையாகப் பெற்றுவரக்கூடிய சாசுவத தர்மங்கள் செய்து வருவது இந்த சமஸ்தானத்தில் தொன்று தொட்டு வரும் வழக்கமே.**

33. மு.சண்முகம் பிள்ளை, மகா வித்துவான். ரா.இராகவையங்கார், கட்டுரையில் ரா.இராகவையங்கார், இராசராச சேதுபதி ஒரு துறைக்கோவை, சிதம்பரம், 1984, பக்கம் X.

இக்காலத்துக்குத் தக்க தமிழ் வித்வான்கள் மிகச் சிலரானமையாலும் அச்சிலருக்கும் கவர்மெண்டார் தக்க உதவியொன்றும் செய்யாமையாலும் நமது, புராதன தமிழ் பாஷையானது விருத்தி யடையாது குறைகின்றது. இவ்வாறு நமது அருமைத் தாய்பாஷை குறைந்து கெடாதபடி பாதுகாக்குமிடத்து அப்பாஷையை நன்றாய்க் கற்றுத் தேர்ந்த வித்துவான்களே முதலில் பாதுகாக்கத் தக்கவர்களாகின்றார்கள். அவர்களாலேதான் அப்பாஷையின் உயர்வும் அருமையும் பெருமையும் இனிமையும் புலப்படுவதோடு அப்பாஷை வளர்ந்து நிலைபெறுதலும் உண்டாவது ஆதலால் நமது சமஸ்தானத்தில் பிறந்து வளர்ந்து நமது சமஸ்தானத்து அன்ன பிரபாவத்தினாலேயே தமிழ்க் கல்வியில் பூரண பாண்டித்தியமுடையவராய் ராவ்பகதூர் பி.அரங்கநாத முதலியார் முதலிய பல கல்வியில் பெரியோர்கள் மிகச் சிறப்பித்து எழுதிய மகாவித்துவானாய் அனேக வருடங்களாக நமது சேது சமஸ்தானத்துத் தலைமைத் தமிழ் வித்துவானாய் உள்ள தாங்கள் தமிழ் நூலுரைகள் முதலியன செய்கின்றதனாலும் தமிழிலுள்ள அரிய பெரிய விஷயங்களைப் பலர்க்கும் உபந்யசித்தலாலும் அனேகர்க்குப் பூர்வீகத் தமிழ் பாஷையைப் போதித்து வருதலானும் கிடைத்ததற் கருமையாயுள்ள பழைய தமிழ் நூல்களைத் தேடிச் சேர்த்தலானும் அவற்றைப் பரிசோதித்தலானும் வெளியிடுதலாலும் இன்னும் பல நன்முயற்சிகளாலும் தமிழ் பாஷையை நன்றாய் வளர்ப்பவர்களாயும் நமது சமஸ்தானத்துச் செந்தமிழ் பரீசாதிகாரத்தலைவராயும், நமது சமஸ்தானத்து வித்வத் அங்கத்தில் பரம முக்கியராயும், இருத்தலை யாலோசித்து தங்கள் போன்ற பண்டிதர்களையும் ஐவேஜி இல்லாத கோவில் சத்திரம் பாடசாலை ஏழைகள் முதலியவர்களையும் பாதுகாப்பதற்கென்று தொன்றுதொட்டு ஏற்பட்டுள்ள நமது சமஸ்தானத்துத் தர்மமகமை ஐவேஜியினின்று தக்க தமிழ் வித்வானான தங்களுக்கு காலக்ஷேபாதிகளுக்குச் சௌகரியமாகத் திரவிய சகாயம் செய்து கொடுக்க வேண்டுவது இச் சமஸ்தானத்தின் முக்கிய தர்மமும், அதுவே, நமது முந்திய சேதுபதிகள் வழக்கமுமாதலால் தங்களுக்கு மாதம் 1–க்கு ரூ.50க்குக் குறையாமல் கிராண்ட் ஏற்படுத்தி ஷ தர்மமகமை ஐவேஜியில் தங்கள் ஆயுட்காலப் பரியந்தம் மாற்றப்படாத முக்கிய ஸ்திரமான 1900 வருடம் பிப்ரவரி மாதம் 21ம் தேதியில் நம்மால் ஷ தர்மமகமைக்குப்

ப்ரொஸீடிங்ஸ் எழுதப்பெற்று தாங்களும் மாசம் 1க்கு 50 ஆக மேற்படி மகமை ஐவேஜியில் பெற்று வருகின்றீர்கள். இப்போது நாம் நமது சமஸ்தான தர்மமகமை சம்பந்தமாக ஸ்திரமான ஏற்பாடுகள் செய்து வருவதில் தாங்கள் ஷ மகமை ஐவேஜியின் தர்மத்தில் முக்கிய ஸ்திரமான ஐட்டத்தில் சேர்ந்தவர்கள் ஆதலாலும் தாங்கள் நமது சேது சமஸ்தான வித்வானாக இருத்தலைத் தவிர வேறு எந்த சமஸ்தானத்திலும் கல்விச் சாலையிலும் தங்கள் ஆயுள் கால பரியந்தம் சர்வீஸிக்குப் போகப்படாதென்று நம்முடைய உத்தரவுக்குத் தாங்கள் கட்டுப்பட்டு ஒப்புக் கொண்டிருப்பதினாலும் ஷ ப்ரொஸிடிங்ஸை அனுசரித்து மேல்கண்ட மாசமொன்றுக்கு ரூ.50 ஆக உள்ள கிராண்டினை பசலி ஒன்றுக்கு ரூ.600 ஆக வைத்து நம்முன்னோர் முறைமையை அனுசரித்து நம்மால் தங்கள் வித்தியா கௌரவத்தைப் பாராட்டித் தங்களுக்குச் சம்மானிக்கப்பட்ட பல்லக்கின் செலவுக்காக ஷ தர்ம மகமை ஐவேஜினின்றும் தங்களுக்கு கொடுத்துவர ஏற்பட்டபடி வருஷம் 1க்கு ரூ.35–ம் சேர்த்து ஆக பசலி ஒன்றுக்கு ரூ.635. அறுநூற்று முப்பத்தைந்து வீதம் 1311ம் ஆண்டு பசலி முதல் தங்கள் ஆயுள் காலம் வரை தங்களுக்குச் செல்லாக்கி வரவேண்டிய ஸ்திரமான சம்மானமாக ஷ தர்மமகமை ஐவேஜியில் இதன் மூலம் ஏற்படுத்தியிருப்பதனாலே அதை 1311ம் வருட பசலி முதல் பசலி தோறும் தங்கள் ஆயுள் காலம் வரை மதுரை டிஸ்டிரிக்ட் ராமநாதபுரம் சமஸ்தானம் ராமநாதபுரம், பரம்பக்குடி பாம்பன் இந்த டிஸ்டிரிக்ட்களுக்குச் சேர்ந்த கஸ்பா ராமநாதபுரம் தாலுகா தர்ம மகமை ஐவேஜியினின்று சமஸ்தானம் திவான் டிரஸ்டி அவர்களிடம், சமஸ்தானத்தை அனுபவிக்கிறவர்களிடமும் சமஸ்தானம் லெஸ்ஸீகளிடமும், **தாங்கள் நேரில் வசூலித்து உபயோகித்துக் கொள்ளத் தாங்களுக்குச் சர்வவித அதிகாரமும் இப்பத்திரத்தின் மூலம் நம்மால் கொடுக்கலாயிற்று.** ஷதாலுகா ஐவேஜியினின்று தங்கள் தர்மமகமை ஆயுள்காலம் வரை பசலிதோறும் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய இந்த ரூ.635ம் தாங்கள் வசூலித்துக் கொள்ளுகிற விஷயத்தில் சட்டப்படிக்குள்ள சகல நடவடிக்கைகளையும் தாங்களே நடத்திக் கொள்ள சர்வ வித அதிகாரமும் தங்களுக்கு இதன் மூலம் கொடுத்திருக்கின்றோம். ஷ பசலி முதல் பசலி தோறும் ஷ தாலுகா தர்ம மகமை

ஐவேஜியில் ரூ.635 தங்கள் ஆயுள் கால பரியந்தம் தங்களுக்கு முந்தின ஸ்திரபாத்தியமாய் இருக்க வேண்டியது. **இந்த சம்மானம் யாராலும் தங்கள் ஆயுள் காலம் வரை மாற்றப்படாது** *ஸ்திரமாக ஷை தாலுகா தர்ம மகமை ஐவேஜியில் ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. பசலிக்கு சூலை ஆகஸ்டு இந்த இரண்டு மாசங்களுக்கும் மாசம் 1க்கு ரூ.50 வீதம் நமது சமஸ்தானம் ராஜசிங்மங்கலம் தாலுகா தர்ம மகமை ஐவேஜியினின்று 1311ம் ஆண்டு பசலிக்கு ரூ.535ம் இனி வரும் பசலிகளுக்கு பசலி 1க்கு 635ம் ஆகத் தாங்கள் சமஸ்தானம் திவான், டிரஸ்டி ஆகியவர்களிடமும் சமஸ்தானத்தை அனுபவிக்கிறவர்களிடமும் சமஸ்தானம் லெஸ்ஸீகளிடமும் பெற்று வருகிறது.*

தங்கள் ஆயுள் காலம் வரை நமது சேது சமஸ்தான வித்துவானாகஇருத்தலுடன் நமது முதன்மையான சகாயத்தினால் ஏற்படுத்தப்பெற்றிருக்கிற மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தங்களுக்கு இஷ்ட காலம் வரை நம்முடைய அனுமதியின் பேரில் எடிட்டராக இருப்பதில் அவ்வேலைகளையும் தங்கள் வித்தையின் பிரகாசத்திற்கும் தமிழ் அபிவிர்த்திக்கும் ஏதுவாகிய இதர வேலைகளையும் பார்த்து அவைகளுக்குரிய பிரதிபிரயோஜனங்களையும் சம்மானங்களையும் ஷை சங்கத்திலும் பிறரிடத்திலும் தாங்கள் அடைவதில் இதனால் யாதொரு தடையுமில்லை நமது சமஸ்தானம் திவான் டிரஸ்டி அவர்கட்கும் மேற்குறித்த விவரங்களைக் கண்டு தங்களுக்குப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டதைத் தெரிவித்து ஷை யார்களை இனிமேல் நேரே ஷை பசலி முதல் பசலி தோறும் ஷை தொகையைத் தாலுகா தர்ம மகமையினின்று முதன்மையாத் தங்கள் ஆயுள் காலம் வரை தங்களுக்குச் செல்லாக்கி வரும்படிக்கு யாதாஸ்துகளும் எழுதி அனுப்பியிருக்கிறோம். இந்தப் படிக்கு நாம் நமது மனோராஜியில் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்டு தஸ்தாவேஜு.*

தனது சமஸ்தானத்து தலைமைப் புலவர் இராகவையங்காருக்கு பாஸ்கர சேதுபதி வழங்கிய சலுகைகளும், உரிமைகளும் என்றென்றும் போற்றத்தக்கதாகும்.

* பசலி – கி.பி. 591 ஆண்டைக்கணக்கில் கொண்டு முகலாயச்சக்கரவர்த்தி அக்பரால் ஏற்படுத்தப்பட்ட ஆண்டுக் கணக்கு

தாயிற் சிறந்தவன் - தமிழர்பிரான்

தாயிற்சிறந்தவன் சேதுக்கதிபன் தமிழர்பிரான், வாயிற் சிறந்த புலவன் என்று பாஸ்கர சேதுபதியைப் புகழும் ரா. இராகவ ஐயங்காரை மதுரை மாநகரில் முத்துப் பல்லக்கில் வைத்து அவரைச் சுமந்து பெருமைப்படுத்தியவர் பாஸ்கர சேதுபதி.

9.11.1901 இல் மதுரை ஆவணப் பதிவு அலுவலகத்தில் ரா. இராகவ ஐயங்காரை அழைத்துச் சென்று முன் சொல்லிய உரிமைப் பத்திரத்தையும் எழுதி வழங்கிய பாஸ்கரசேதுபதி மறைந்தபோது, இதுகாறும் எந்த அரசரும் எந்தத் தமிழ்ப் புலவருக்கும் செய்யாத இந்தச் சிறப்பைப் பெற்றமகாவித்வான் மனம் நெக்குருகிப் போனார். மன்னரது கொடையையும், தமிழ்த் தொண்டையும் எண்ணி எண்ணி பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைந்தார். இதனை.

"குவிகை தாங்கிக் குறையிரந்தார் முனம்
கொண்டல் எனப் பொழிதரு பாஸ்கரன்
சிவிகை தாங்கிட ஏறிய வீறுடைச்
சேதுகாவலர் தங்கவி யாகினேன்..."
"சிவிகை தாங்கி புரந்தனன் பாற்கரன்
செய்ய பொற்களாம் பொருள்நல்கி
இப்புவியெல்லாம் புகழ்புரிந்து ஓம்பினன்..."

– என்ற அவரது கவிதை வரிகள் மன்னரது இந்த அரிய செயலைக் காலமெல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கின்றன. [34]

சோம சுந்தர நாயகர் (1846 - 1901)

அரங்கசாமி எனும் பெயர் கொண்டவர். ஏகாம்பர சிவயோகியால் வளர்க்கப்பட்டு சோமசுந்தரம் எனும் பெயர் பெற்று சென்னை சூளையிற் வாழ்ந்தவர்; மறைமலையடிகளின் சமயக் கல்வி ஆசிரியர், 110க்கும் மேற்பட்ட நூல்களைத் தந்தவர். இவரது வாழ்க்கை வரலாற்றை சோமசுந்தர நாயகர் வரலாறு

---

34. இந்த நிகழ்ச்சியையும் பாடல்களையும் தெரிவித்தவர் மகாவித்வானது மகன் (அமரர்) பண்டித ரா.ராமானுஜம் அவர்கள்) நன்றி எஸ்.எம்.கமால் மன்னர் பாஸ்கர சேதுபதி பக்கம் 61, 62.

என்று மறைமலையடிகள் தந்துள்ளார். **இவருக்கு பாஸ்கர சேதுபதி மன்னர் தங்கத்தில் ஆன தோடாவை (கைவளை) வழங்கி, சைவ சித்தாந்த சண்ட மாருதம் என்ற விருதையும் வழங்கினார்.** [35]

மு.இராகவையங்கர்

திருவாங்கூர்ச் சருவ கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் ராவ்ஸாஹிப் மு.இராகவையங்கார்.

26.7.1878 இல் முத்துசாமி ஐயங்காரின் புதல்வராக பாண்டிய நாட்டு அரியக் குடியில் பிறந்தவர். 16 வயதில் தந்தை இறந்தபோது பாண்டித்துரைத் தேவரின் ஆதரவாலும் ஊக்குதலாலும் தமிழை நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றார். 1902 நவம்பர் முதல் வெளிவந்த செந்தமிழின் ஆசிரியர் ரா. இராகவையங்கார் 1904 முதல் 1912 வரையில் ஆசிரியராகப் பணியாற்றியவர். ரா.இராகவையங்காரின் அத்தை மகனான மு.இராகவையங்கார். இவரை தமிழ், ஆராய்ச்சியில் ஈடுபடுத்திய பாண்டித்துரைத் தேவரும் அவரின் தந்தை பொன்னுச்சாமித் தேவரும் சிறந்த கவிகளாகவும், செந்தமிழ் வளர்த்த செல்வர்களாகவும் திகழ்ந்தவர்கள். மு.இராகவையங்கார் **'செந்தமிழ் வளர்த்த தேவர்கள்'** என்ற பெயரால் தேவர்களின் சரிதையை எழுதி வெளியிட்டார். சேதுபதிகளின் செல்வாக்கும் தமிழ் வளர்த்த முறையும் எக்காலத்திலும் நிலைத்திருக்கும்படி அந்நூலை எழுதினார். [36]

1948 இல் வெளியான அந்த நூல் 112 பக்கங்களைக் கொண்டது. அதில் பக்கம் 76, 77 இல் பாஸ்கர சேதுபதி குறித்து எழுதியதாவது:

ஸ்ரீபாஸ்கர சேதுபதி

பாண்டித் துரையவர்களின் சிறிய தந்தை திருமகனராய்ப் பட்டம் பெற்ற சேதுபதியவர்கள், இக்காலத்தில் அடைந்து

---

35. மறைமலையடிகள், சோமசுந்தர நாயகர் வரலாறு, சென்னை. 1957, பதிப்புரை பக்கம் 5, 6.

36. க.கௌசல்யா வாழ்க்கை வரலாறு. சா.கிருட்டிணமூர்த்தி, ச.சிவகாமி மூதறிஞர், மு.இராகவையங்கார், சென்னை, 2004 பக்கம் 7

வந்த சீரும் சிறப்பும் குறிப்பிடத்தக்கவை. பல துறைகளில் வல்ல கலைவாணர்களின் இதயக் கமலங்களை மலர்விக்கும் பாஸ்கரோதயம் போல இவர் தோற்றம் அமைந்தது. பாவாணரும் இசைவாணரும் பல திசைகளிலிருந்தும் சேதுவேந்தர் சமூகத்தை நாடி வந்து, தத்தம் திறமைகளைக் காட்டிப் பரிசுகள் பெற்றுச் செல்வராயினர். இவரது வள்ளன்மையைச் சிறப்பித்தற்கு வலக்கை போன்றுதவினவர் நம் தேவரேயாவர். கலைவாணர்கள் சேதுமன்னரைக் காண்பதற்கு முன்பு, நம் தேவரின் சமூகத்தையடைந்து தத்தம் திறமையைக் காட்டிச் சிறப்புப்பெறுவதும், பின்பு சேதுபதியவர்கள் அவையை அடைந்து, அவர் மதிப்புக்கும் உரியவராகி வரிசைகள் (நற்சீர், வெகுமானம்) பெறுவதும் வழக்கமாயிருந்தன. ஆகவே, தமிழ் வள்ளல்களான இவ்விருவரது இரட்டைப் பரிசுகளையும் ஏற்று மகிழ்ந்து செல்வர் கலைஞர்கள். நவராத்திரி போன்ற பெருந்திருவிழாக் காலங்களில், புலவர் குழாங்களையும் இசை முதலிய கலைவாணர் கூட்டங்களையும் ஒருங்கே காணும் காட்சிக்களங்களாக இவ்விருவர் சமூகங்களும் (பாண்டித்துரைத் தேவர் பாஸ்கர சேதுபதி) திகழ்ந்தன. அந்த நூலில் பக்கம் 97, 98, 99 இல் மு.இராகவையங்கார் எழுதியது இதோ :

பாஸ்கர அஸ்தமனம்

மதுரைத் தமிழச் சங்கம் ஸ்தாபிக்கப் பெற்ற மூன்றாம் ஆண்டில் (1903 ஆம் வருடம்) பெருங்கல்விமானாகவும் தமிழ்ப் பெரு வள்ளலாகவும் விளங்கிய பாஸ்கர சேதுபதியவர்கள் தம் 36 ஆம் ஆண்டில் அகலா மரணத்திற்கு உள்ளாயினர். திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக் குறிச்சியில் இவர்கள் காலமானபோது, உடனிருந்த நம் தேவர் அடைந்த துயரத்திற்கு அளவுண்டோ? அக்காலத்தில் அரசரின் பிரிவாற்றாது இவர்கள் வருந்திப் பாடிய இரங்கற்பாக்கள் யாவர் மனங்களையும் உருக்கக் கூடியன. அவற்றுள்,

“என்னாவி யுளங்குளிர அண்ணாவென்
　　றன்பொடினி யெனையார் சொல்வார்
மன்னாமன் னாமன்னா வெனயாரை
　　யானினிமேல் மதித்துச் சொல்வேன்
பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடு

புரந்தளிக்கப் போந்த நீவே (று)
எந்நாடு சென்றனையோ எங்கள்குல
மணிவிளக்கே! இசைத்தி டாயே.”
“பண்புலவு தமிழ்ச்சங்க நிறுவல்கரு
தியஞான்று பரிவுகூர்ந்து
நண்புலவு திருவாக்கால் தளர்வொழிகென்
றெனக்கிசைத்த நலம்பொய் யாதே
மண்புலவ ரொடுநனிபொன் வழங்கியமை
யாதெனவே மதித்து வான்போய்
விண்புலவ ரோடுதம னியங்கொணர
விழைந்தனையோ வேந்த ரேறே”

என்ற இரண்டு பாடல்களும் குறிப்பிடத்தக்கவை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆக்கங் கருதிச் சேதுபதியவர்கள், நன்கொடை பல உதவியதோடு, மாதவேதனமும் அளித்து வந்தனர். சங்கத்தின் புத்தகசாலைக்கு இவரளித்த நூற்றொகுதிகள் எண்ணிறந்தன. மேலும் சங்கத்திற்கு எத்தனையோ உதவிகள் புரிய எண்ணியிருந்த தமிழ்வள்ளலைத் திடீரென இழக்க நேர்ந்ததற்கு வருந்தாத தமிழ் மக்கள் இல்லை. பொன்னுச்சாமித் தேவர்க்கு அவரிளவலான சேதுபதியரசர் எவ்வாறு துணைவலியாக நின்றனரோ, அவ்வாறே நம் தேவரவர் கட்கு, அவரது சிறிய தந்தை மகனரான பாஸ்கர சேதுபதியும் விளங்கினர். இப்பாஸ்கரரது அஸ்தமனத்தால் இராமநாதபுரம் தான் படைத்திருந்த ஒரு தனிச் சோபையை இழந்தது என்று மு.இராகவையங்கார் குறிப்பிட்டுள்ளார்.

நாகூர்குலாம் காதிறு நாவலர்

பதிதொன்பதாம் நூற்றாண்டின் படைப்பிலக்கியவாதிகளில் காலம் கடந்து நிற்கக்கூடிய ஆற்றலும் தனித்துவமும் கொண்டவர் மகா வித்துவான் குலாம் காதிறுநாவலர்.

1833 இல் ஆயர்வேத பாஸ்கர பண்டித வாப்பு ராவுத்தர் புதல்வராகப் பிறந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு பாஸ்கர சேதுபதி மன்னரும், பாண்டித்துரைத் தேவரும் நாவலரையே முதற் பெரும் உறுப்பினராக நியமித்து மகிழ்ந்தனர்.[37]

37. ஏவிஎம்.நசீமுத்தீன், குலாம் காதிறு நாவலர், புதுதில்லி, 2014, பக்கம் 27.

புலவராற்றுப்படை

தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் ஆற்றுப்படை ஒன்றாகும் பரிசுபெற்ற ஒரு புலவனோ, கூத்தனோ, பாணனோ, பொருநனோ, விறலியோ தான் விரும்பி வருகின்ற வழியில் தன்னைப் போன்ற மற்றொரு புலவனையோ, கூத்தனையோ, பாணனையோ, பொருநனணையோ விறலியையோ, கண்டு தனக்குப் பொருளீந்து உதவிய வள்ளலுடைய கொடைக்குணம், வீரம், பண்பு நலன் முதலானவற்றை எடுத்துக்கூறி, அத்தகையவனை அடைவதற்குரிய வழிகளையும் விளக்கி, **அவன் பால் சென்று பொருள் பெற்று உய்க** *என்று வழிப்படுத்துவது ஆற்றுப்படை எனப்படும். இதனை ஆசிரியப்பாவால் (அகவற்பா) பாடுவர்.*

சங்க நூலான பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படை நூல்கள் உள்ளன.

சங்க காலத்திற்குப் பிறகு பாடப்பட்ட ஒரு சில ஆற்றுப்படை நூல்களை அடுத்து குலாம் காதிறு நாவலரால் பாண்டித்துரைத் தேவரால் நிறுவப்பட்ட மதுரை தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்ட நூல் புலவராற்றுப்படை. 220 அடிகளைக் கொண்ட குலாம் காதிறு நாவலரின் புலவர் ஆற்றுப்படை நூல் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக வெளிவந்தது.

1903 இல் வெளிவந்த இந்த நூல் நான்கு அணா விலையில் வெளியிடப்பட்டது. 27 பக்கங்கள் கொண்ட நூல் அது., அதில் பாடல் வரி 155.

பொன்முடி கவித்து வென்வேலேந்திப்
பாண்டி நாடளிக்கும் பண்பினாண்டகை
யிரவர்க் கடையாவாயிற்புரவலர்
கோதுபதியொடுக்கும் பாஸ்கர சேதுபதி
யருணெடு நிலை இயர் பொருணனியுதவ [38]
பொன்முடி கவித்து வென்வே ல்ஏந்திப்
பாண்டி நாடளிக்கும் பண்பின் ஆண்டகை

---

38. நாகூர் தர்கா வித்வானும் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவருள் ஒருவருமாகிய குலாம் காதிறு நாவலர் இயற்றிய, மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப்படை மூலமும் உரையும், மதுரை, 1903, பக்கம். 6.

இரவலர்க்கு அடையா வாயிற் புரவலன்
கோதுபதி யொடுக்கும் பாஸ்கர சேதுபதி
அருளொடு நிலைகுயர் பொருள்நனி உதவ..."
... என மன்னரது உதவியை...

"பொருள் நனி" உதவிய பான்மையைக் குறித்துள்ளார். அவர் பயன்படுத்தியுள்ள ''**நனி**'' **என்ற தமிழ் வழக்கிற்கு** ''**வரம்பு இல்லாதது**'' **என்ற பொருள், போன்று, பாஸ்கர சேதுபதி மன்னரது தமிழ்ப்பணிக்கான தாளாத கொடைக்கும் எல்லை இல்லை என்பதே இப்பாடலின் புலவரது குறிப்பாகும்.**

பொன்னால் செய்யப்பெற்ற மணி முடியைத் தலையில் அணிந்து வெற்றியை உடையவேற்படையாக கையில் ஏந்தி, பாண்டி நாட்டைக் காக்கும் தொழிலை உடைய ஆண்டகையும், இரவலர் தமக்கு **அடையாத வாயிலை** *உடைய பெரிய மாளிகையில் இருந்த இரப்போரைக் காத்து ஓம்பும் புரவலனும், குற்றமுள்ள மன்னர்களை அவர்தம் வலி கெடுத்து ஒடுக்குகின்ற திறனுடையோனும், பாஸ்கர சேதுபதி என்றும் பெயரினனுமாகிய வேந்தன் நிலைபெற்ற அருள் உள்ளத்தோடு மிகு பொருளை வழங்கி உதவுவதால் அவ்வேந்தனின் பெயரோடு நிலைபெற்ற பெயரைப் பூண்டு தமிழச் சங்கத்தின்...*[39]

புலவர்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கிய வள்ளல் பாஸ்கர சேதுபதி. இனி தமிழ்ச்சங்கம் மதுரையில் தோன்றிய வரலாற்றுக்கும், அதில் பாஸ்கர சேதுபதி அவர்களின் பங்களிப்பையும் பார்ப்போம்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்

சேதுபதிகளுள் குறிப்பிடத்தக்க ஒருவர் முத்துராமலிங்கசேதுபதி. அவரது தமையனார் பொன்னுச்சாமித்தேவர் தம்பி அரசராகவும், தமையனார் அமைச்சராகவும் இருந்து சேதுநாட்டு ஆட்சியும் செந்தமிழ் ஆட்சியும் சிறப்புறச் செய்தனர். பொன்னுச்சாமி தேவரின் புதல்வராக 21.3.1867 இல் பிறந்தவர் பாண்டித்துரை தேவர். மதுரையில் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கியவர் இவரே.

---

39. முனைவர் இரா.கண்ணன், குலாம் காதிறு நாவலரின் புலவராற்றுப்படை, சென்னை. 2007, பக்கம் 76.

ஆனால் 1893 இல் எட்டு ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டு தம் நாட்குறிப்பில் பாஸ்கர சேதுபதி வரைந்தவற்றுள் ஒன்று தமிழ்ச்சங்கம் அமைக்கவேண்டும் என்பது ஆகும்.[40]

ஒருநாள் –

அரசவைக் கொலு மண்டபத்தில், புலவர்கள் சூழ்ந்திருக்க, அரியணையில் வீற்றிருந்து, தமிழாய்வில் திளைந்திருந்த பாஸ்கர சேதுபதி, திடீரென எழுந்து நின்றார். மண்டபத்தில் இருந்த அனைவரும் எழுந்தவாறே திரும்பிப் பார்த்தனர். வள்ளல் பாண்டித்துரை 'தேவர் வந்து கொண்டிருந்தார். அரசவைக்குள், வந்தவர் இருக்கையொன்றில் அமர்ந்த பின், சேதுபதி அமர, எழுந்தவர் அனைவரும் உட்கார்ந்தனர்.

"அண்ணா! சொல்லி அனுப்பியிருந்தால் சோமசுந்தர விலாசத்திற்கு நான் வந்திருப்பேனே! என்றார் மன்னர் பாஸ்கரர்.

"தம்பி! எதனை எங்கு முடிக்கவேண்டுமோ, அதனை அங்கு முடிப்பது தான் முறை. அதனால் தான் இங்கு வந்தேன்" எனச் சொன்ன பாண்டித்துரைத் தேவர், அரவைக் கொலு மண்டபத்தில் அமர்ந்திருந்த அனைவரையும் ஒருமுறை பார்த்துப் புன்னகை பூத்தார். அவரது பார்வை பட்ட ஒவ்வொருவரும் பணிந்து கரம் கூப்பினர்.

"சொல்லுங்கள், அண்ணா!" எனத் தூண்டினார் பாஸ்கரர், "வேறொன்றுமில்லை தம்பி! அண்மையில் நான் மதுரைக்குச் சென்றிருந்ததைத்தான் நீ அறிவாயே?"

"ஆமாம், அண்ணா, பதினைந்து நாள்கள் தொடர்ந்து தங்களைப் பார்க்காதது மனத்திற்குச் சங்கடமாக இருந்தது!"

வியக்கத்தக்க வேதனை

"நான் மதுரை வந்திருப்பதையறிந்த தமிழன்பர் சிலர், என்னை வந்து பார்த்து, பத்து நாள்கள் திருக்குறளைத் தொடராகப் பிரசங்கிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். நானும் உடன்பட்டேன். இங்கிருந்து மதுரை சென்றபோது, உடன்

40. இரா.இளங்குமரன், இரா.அழகுமலை, மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், மதுரை. 2006, பக்கம் 15

திரும்பும் நோக்கில் கையில் எந்த நூலும் நான் எடுத்துச் செல்லவில்லை. எனவே, அவர்கள் வேண்டுகோளுக்கு உடன்பட்ட நான், திருக்குறள், கம்பராமாயணம் எனும் இரண்டு நூல்களையும் கொண்டு வந்து தருமாறு கேட்டுக் கொண்டேன். தம்பி! வியக்கத்தக்க வேதனை, திருக்குறளும், கம்ப ராமாயணமும் வந்தவர்கள் எவரிடமும் இல்லை. இவர்கள் சென்று கேட்ட யாரிடமும் இல்லை!"

"அண்ணா, மதுரையிலா?" எனப் பதைப்பதைத்து வினவினார் பாஸ்கரர்.

"ஆம் தம்பி; மதுரையில்தான்! சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் தான்! தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டி நாட்டின் தலைப்பதியான மதுரையில்தான்! அம்மையும் அப்பனும், அறுமுகச் செவ்வேளும் அமர்ந்து தமிழாய்வு செய்த திருத்தலத்தில்தான் இந்தக் கதி!"

"கேள்விப்படுவதற்கே... நீங்கள் சொன்னதுபோல, வியப்பாகவுமிருக்கிறது; வேதனையாகவும் உள்ளது. பிறகு, வேறு என்ன செய்தீர்கள்?

"வேறு வழி? புது மண்டபத்திற்கு ஆள் அனுப்பி, புதிய நூல்கள் வாங்கி வந்து, பத்து நாள்கள் தொடர்ந்து சொல்லி, அறத்துப் பாலை முடித்து வந்தேன். இங்கே நாம் ஒரு முடிவு கொள்ளவும் எண்ணி வந்தேன்" என்றார் பாண்டித்துரைத் தேவர்.

மீண்டும் பேசினார் தேவர்:

"தம்பி! தமிழுணர்வு சிறிதுமற்று, தமிழ் நூல்கள் பெற்றிராத தமிழர்கள் மதுரையில் மட்டுமன்று, தமிழ் நாடெங்கும் வாழ்ந்துவருவதாகவே எனக்குத் தோன்றுகிறது. அந்நியர் ஆட்சி, ஆங்கில மோகம், தமிழைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றால் பாழ்பட்டுப் போயிருக்கும் தமிழர்களுக்கு உணர்வூட்டியாக வேண்டும்!"

இடைமறித்த பாஸ்கர சேதுபதி, "நாம் என்ன செய்யவேண்டும்?" என்றார்.

தமிழ் உணர்வுக்கு உயிர்ப்பூட்ட வேண்டும்

"தம்பி! நம் முன்னவர் கண்ட வழியிலேயே தமிழுக்கு உரமூட்டி தமிழ் உணர்வுக்கு உயிர்ப்பூட்ட வேண்டும். தமிழ்ச் சங்கம் ஒன்றை மதுரையில் உருவாக்க வேண்டும். வழி வழியாகத் தமிழ் வளர்ச்சிக்குத் தக்க துணையாக இருந்து வரும் சேதுபதிகளின் பெருமைக்குரிய இந்த அவைக் களத்தில் அதற்கொரு முடிவு செய்யவேண்டும். எனப் பாண்டித்துரைத் தேவர், தமது எண்ணங்களை எடுத்துரைத்தபோது, அவையில் கூடியிருந்தோர் அனைவரும் 'ஆகா, ஆகா' என ஆமோதித்து மகிழ்ந்தவாறே இருந்தனர்.

பாஸ்கர சேதுபதியோ, தமது அரசவையில் இத்தகைய முடிவெடுக்கத் தாம் பாக்கியம் செய்திருக்க வேண்டுமெனப் பரவசமாக மொழிந்து மகிழ்ந்தார்.

தமிழ்க் கல்லூரி உருவாக்குதல், சுவடிகள், நூல்கள் தேடித் தொகுத்தல், நூல்கள் வெளியிடுதல், பிறமொழி நூல்களை மொழிபெயர்த்துப் பதிப்பித்தல், முறையாகத் தமிழ்த் தேர்வுகள் நடத்துதல், தமிழாராய்தல், புது நூல்களும் புத்துரைகளும் படைத்து அரங்கேற்றுதல், இதழொன்று நடத்துதல் ஆகிய அரிய குறிக்கோள்களைக் கொண்ட தமிழ்ச் சங்கம், மதுரையில் 1901 செப்டம்பர் பதினான்காம் நாள், வள்ளல் பாண்டித்துரை தேவர் தலைமைப் பொறுப்பில் வீற்றிருக்க, தமிழறிஞர்களும், தமிழன்பர்களும் குழுமியிருக்க, **குறுநில மன்னர் பலர் வந்திருக்க, மன்னர் பாஸ்கர சேதுபதியின் முன்னிலையில் நிறுவப் பெற்றது.**

மதுரை சேதுபதி உயர்பள்ளியை அடுத்திருந்த தனிக் கட்டிடங்களில் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை', பாண்டியன் புத்தகசாலை', 'நூல் ஆராய்ச்சி சாலை' ஆகிய அமைப்புகள் சங்கத்தின் சார்பில் தொடங்கப் பெற்றன.

மூன்று நாள்கள் நிகழ்ந்த தொடக்க விழாவிற்குத் 'தமிழ்த் தாத்தா' உ.வே.சா.., இரா.இராகவ ஐயங்கார், பரிதிமாற் கலைஞர், சோழவந்தான் அரசங் சண்முகனார் முதலிய தமிழ் அறிஞர் பலர் தமிழகமெங்குமிருந்து வருகை தந்து, பாண்டித்துரைத் தேவரை 'பைந்தமிழ்க் காவலரே! என விநயமாக விளித்தும், அன்பாக அழைத்தும் சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள்

குறித்துக் கருத்துரைகள் வழங்கினர் என்று **குன்றக்குடி பெரிய பெருமாள்** வர்ணிக்கிறார். [41]

ஆ. கார்மேகக்கோனார்

14.9.1901 பகல் 1 மணிக்கு மேல் 2.45 மணிக்குள் தனுர் ஓரையில் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. அந்த நிகழ்வில் பாண்டித்துரைத் தேவருடன் பாஸ்கர சேதுபதியும் பங்கேற்றுச் சிறப்பித்தார். [42]

தமிழவேள் பி.டி.இராசன், தொகுத்த 'மதுரைத் தமிழ்ச்சங்க மலர்' நூலில் தமிழ்ச் சங்க வரலாறு எனும் கட்டுரையில் பேராசிரியர் ஆ.கார்மேகக்கோனார் பாஸ்கர சேதுபதி தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமையுடையவராய், ஒரு தமிழ்ச் செய்யுளின் நயத்தைப் பல மணி நேரம் பேரவைகளில் இனிமையாக எடுத்துரைக்கும் சொல்லாற்றல் உடையவராக இருந்தார் என்று குறிப்பிடுகிறார். [43]

இரண்டாவது முத்துராமலிங்க சேதுபதி

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் புவி அரசர்களாக மட்டுமல்லாமல் கவி அரசர்களாகவும் திகழ்ந்தார்கள். இரண்டாவது முத்துராமலிங்க சேதுபதி (1841 – 1873) வள்ளி மணமாலை, நீதிபோத வெண்பா, சரசசல்லாபமாலை, மரபாகரமலை பாலபோதம், சடாக்கர சாரப்பதிகம், முருகரனுபூதி, காயகப்பிரியா, ரஸிக ரஞ்சனம் ஆகிய 9 சிற்றிலக்கியங்களைத் தந்தார்.

வள்ளிமணமாலை, சரசசல்லாபமலை, சடாக்கரப் பதிகம் மூன்றும் முருகனைப் பற்றி பாடியதாகும். தனிப் பாடல்களாக சிலேடைப்பாடல்கள் – 36, விடுகதைப் பாடல்கள் –5, முருகன்

41. குன்றக்குடி பெரியபெருமாள், தமிழ் வளர்த்த தமிழறிஞர்கள், சென்னை. 2009, பக்கம் 176, 178.

42. எஸ்.எம்.கமால், சங்கம் கண்ட சான்றோர் பாண்டித்துரைத் தேவர், நான்காம் தமிழ்ச் சங்க நூற்றாண்டு வரலாறு, சென்னை, வை.மா.குமார் தொகுப்பாசிரியர், 2005, பக்கம் 128.

43. மதுரைத் தமிழ்ச்சங்க மலர், பக்கம் 16.

துதிப்பாடல்கள் – 250, நடுவெழுத்தலங்காரப் பாடல்கள் – 7, வினாவிடைப் பாடல்கள் –75, இராஜராஜேஸ்வரி அம்மன் பேரில் பாடிய பாடல்கள் 7, சமுத்திர வருணனைப் பாடல்கள் 11, என ஆயிரத்திற்கு குறையாத பாடல்களை இயற்றியவர்.

திருஆலவாய்பதிகம்

இவரின் புதல்வரான பாஸ்கரசேதுபதி **'பூமி நான்முகனும் புனித மாலவனும்'** எனத் துவங்கும் **'திரு ஆலவாய்பதிகம்'** பத்துபாடல்களைப் பாடியுள்ளார்.[44]

உதவியால் வெளிவந்த நூல்கள்

'காமாட்சியம்மை பதிகம்', 'ராமநாதர் பதிகம்' ஆகிய மூன்று பதிகங்களை இயற்றியவர் பாஸ்கர சேதுபதி. சேதுபதி மன்னர்களாலும் அவர் தம் மரபினராலும் வழங்கிய பொருள் உதவியினால் வெளிவந்த நூல்களை 48க்கும் மேலானவை.

'கூர்மபுராணம்', 'திருவிளையாடற்புராணம்,' 'மெய்கண்ட சாத்திரம் மூலமும் உரையும், வைத்திய சாரசங்கிரகம்' (இரண்டாம் பதிப்பு) ஆகிய நூல்கள் வெளிவர உதவியவர் பாஸ்கர சேதுபதி ஆவார். இதில் கூர்மபுராணம் பாளையங்கோட்டையில் அச்சிடப்பட்டது என்பது வரலாறு. அந்த நூலின் முகப்புப் பக்கத்தினை நூலின் கடைசியில் காணலாம்.

பாஸ்கரசேதுபதி மன்னரிடம்
பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றவர்கள்

பாஸ்கரசேதுபதியின் காலத்திற்கு முன்பு எண்ணற்ற புலவர்கள் இப்பட்டியலில் உள்ளனர். குறிப்பாக 32 புலவர்களுக்கும் மேல் உள்ளனர். பாஸ்கரசேதுபதியின் காலத்தில் உள்ள புலவர்களும் நூல்களும் மட்டும் இதோ :

ரா. இராகவையங்கார் – ஒருதுறைக் கோவை
வேம்பத்தூர் பிச்சுவையர் – தனிப்பாடல்கள்
திருநாராயணையங்கார் – திருப்புல்லாணிமாலை
நாகை சதாசிவம்பிள்ளை – தனிப்பாடல்கள்

44. க.சி.கமலையா இந்தப் பாடல்களைப் பற்றிய தகவலை அண்ணன் எஸ்.எம்.கமால் அவர்களுக்கு வழங்கினார்.

பரிதிமாற்கலைஞர் – தமிழ்ப்பாமஞ்சரி
உ.வே.சாமிநாதயர் – தமிழ்ப்பாமஞ்சரி
சேற்றூர் மு.இராமசாமிக்கவிராயர் – தனிப்பாடல்கள்
சிவகாசி கந்தசாமிக்கவிராயர் – தனிப்பாடல்கள்
யாழ்ப்பாணம் சபாபதிநாவலர் – தனிப்பாடல்கள்
சிவசம்புப்புலவர் – கல்லாடசாரக்கலித்துறை
திரிபுரம் தி. துரைசாமி செட்டியார் –
பாஸ்கர சேதுபதி மேல் அருட் பிரகாச அகவல்.
வேங்கடரமணதாசர் – தனிப்பாடல்கள்
திருச்செங்கோடு முத்துச்சாமிக்கோனார்
– தனிப்பாடல்கள்
எட்டயபுரம் கருத்தமுத்துப்பிள்ளை, –
திருமருதூர்புராணம்

ஆகிய நூல்களும் பாடல்களும் பாஸ்கர சேதுபதி அவர்கள் மீது புலவர்களால் பாடப்பெற்றது. பாடிய புலவர்களுக்கு பல வழிகளில் பொன்னும் பரிசும், பட்டமும் வழங்கிச் சிறப்பித்தவர் பாஸ்கர சேதுபதி.

இசைவாணர்களை ஆதரித்தது

'சேதுபதி மன்னர்களுக்கு, **வித்தியா வினோதன், சங்கீத சாகித்திய வித்யா வினோதன்,** வீணாபிரசங்கன், பரத நாடகப் பிரவீணன், பரத நாடக பக்திப் பிரியன்' என்று பட்டங்கள் பல அவர்களது செப்பேடுகளில் காணப்படுகிறது. செப்பேடுகள் தொண்ணூற்றை எஸ்.எம்.கமால் சேதுபதி மன்னர் செப்பேடுகள் என்று 1992 இல் தொகுத்துள்ளார். 107 செப்பேடுகளை தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் வாயிலாக செ.இராசு 1994 இல் தொகுத்துத் தந்துள்ளார்.

செம்பி நாட்டு மறவர்
கொண்டயங் கோட்டை மறவர்
ஆப்பனூர் மறவர்
ஆகாத்த மறவர்
ஓரூர் நாட்டு மறவர்
உப்புக்காட்டி மறவர்
குறிச்சிக் காட்டு மறவர்

எனும் ஏழு பிரிவினரை மெக்கன்சி கொடுத்த மறவர் சாதி விளக்கம் சொல்கிறது [45].

நீதிமன்றம் - ஆங்கிலேயர் ஆட்சிகள்

இதில் செம்பி நாட்டு மறவர் குலத்தைச் சேர்ந்த முதலாவது சடைக்கத் தேவர் என்ற உடையான் சேதுபதி அரசர் பரம்பரை கி.பி. 1605 – 1621 இல் துவங்கி, 14வது சேதுபதியாக முத்துராமலிங்க சேதுபதி (1782 – 1795) காலத்தில் நிறைவுறும்.

பின்னர் இராமநாதபுரம் ஜமீனாக மாற்றப்பட்டு, ராணி மங்களேசுவரி நாச்சியார் காலம் கிபி 1803 – 1812இல் துவங்கும் இடையில் 1820 – 1828 வரை நீதிமன்ற ஆட்சி நடைபெறும். 1871 – 1873 ஆங்கிலேயர் ஆட்சி நடைபெறும். 1873 – 1889 நீதிமன்ற ஆட்சி நடைபெறும். அது நிறைவடையும் வேளையில் ராஜா பாஸ்கர சேதுபதி 1889 இல் ஜமீன் பொறுப்பிற்கு வந்து 1903 வரை இருப்பார்கள். ஜமீன் சிரமங்களை அனுபவித்த வேளையில் பாஸ்கர சேதுபதி தமிழ்ப்புலவர்களுக்கு அள்ளி அள்ளித்தந்ததைப் பார்த்தோம். இப்போது இசை வாணர்களுக்கு பாஸ்கர சேதுபதி வழங்கிய தானங்களைப் பார்ப்போம்.

பள்ளி வாழ்க்கையின் பொழுது மேல்நாட்டு இசைக் கலையான பியானோவில் **பாஸ்கர சேதுபதி** தேர்ச்சி பெற்று இருந்தார். ஒருமுறை தனக்கு நெருக்கமான செட்டியார் வீட்டிற்குச் சென்று இருந்த பொழுது, அந்தப் பெரிய மனிதரது மகள் மிகவும் சிறப்பாக பியானோ இசைத்த பாங்கினை, இசையினை, மிக அருமையாக இருந்ததாகப் பாராட்டி தனது நாட்குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார்[46].

இங்ஙனம் இதயத்தை ஈரக்கும் இசையில், ஈடுபாடு கொண்டிருந்த இந்த மன்னரைப் பற்றிப் பல செய்திகள் சொல்லப்படுகின்றன. அப்பொழுது சிறந்த வயலின் விற்பன்னராக விளங்கிய திருக்கோடிக்காவல் கிருஷ்ண ஐயர்

45. மெக்கன்சி ஆவணம் எண் : D 2743; R 370. அரசினர் கீழ்த் திசைச் சுவடி நூலகம், சென்னை.

46. 13.4.1893 பாஸ்கர சேதுபதியின் நாட்குறிப்பு

ஒருநாள் மன்னரது தர்பாரில் அமர்ந்து அருமையாக வயலினை வாசித்துக் கொண்டிருந்தார். கச்சேரி நிறைவு பெறும் நிலையில் மன்னரது விருப்பப்படி காம்போதி ராகத்தை மிகவும் விரிவாக வாசித்துலயவியன்னியாசம் செய்து முடித்தார். பின்னர் வித்வான் அவருக்கு பிரியமான கீர்த்தனம் ஒன்றையும் இசைத்தார்.

"நடமாடித் திரிந்த உனக்கு இடதுகால் உதவாமல் முடமானதேன் என்று சொல்வீர் – ஐயா?"

என்ற கேள்வியுடன் தொடங்கும் அந்தக் கீர்த்தனம்.

மன்னரும் மற்றவர்களும் அதுவரை கேள்விப்படாத ஒன்றாக இருந்தது. வித்வான் நிரவல் செய்து வாசிப்பதற்கு ஏற்றவாறு எளிமையாகவும், ரசிகர்களது உள்ளத்தை ஈர்க்கும் வகையில் வியப்பு, ஏளனம் போன்ற உணர்வுகளை உள்ளடக்கியதாகவும் அந்தக் கீர்த்தனம் அமைந்து இருந்தது. அதனால் வித்துவானது வாசிப்பை மன்னர் மிகவும் அனுபவித்துச் சுவைத்தார். பரிசிலை வழங்கி வயலின் வித்வானைப் பாராட்டும் பொழுது, அவர் வாசித்த கீர்த்தனம் தமது பரிசிலைவிடப் பன்மடங்கு பெருமதிப்பு வாய்ந்தது என்பதை சொல்லி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். பாபநாச முதலியார் என்ற இசைப் புலவர் எழுதிய அந்தக் கீர்த்தனத்தை முழுவதுமாக அந்த வித்துவானிடம் இருந்து எழுதிவாங்கி, அச்சிடச் செய்து, தர்பாருக்கு வரும் இசைக் கலைஞர்களுக்கெல்லாம் அதனைக் கொடுத்துப் பாடுமாறு செய்து அந்தக் கீர்த்தனத்தை மிகவும் ரசித்ததுடன் பிரபலப் படுத்தினார்[47].

பதினாயிரம் வெண்பொற்காசுகள்

ஒரு முறை, மைசூர் சமஸ்தானத்தில் சிறந்து விளங்கிய வீணை வித்துவான் சேஷண்ணாவை இராமநாதபுரத்திற்கு வரவழைத்து தமது தர்பாரில், அவரது வீணைக் கச்சேரி நடப்பதற்கு ஏற்பாடு செய்தார். வித்துவானும் மன்னர் மீது "தில்லானா" ஒன்றை அமைத்து இசைத்தார். அவரது இசைப் புலமையை மன்னர் பாராட்டிச் சிறப்பித்ததுடன் அவருக்குப்

47. எஸ்.எம்.கமால், மன்னர் பாஸ்கர சேதுபதி முற்கூறிய நூல் பக்கம் 40, 41

பதினாயிரம் வெண்பொற்காசுகள் வழங்கி “கனகாபிஷேகம்” செய்து மகிழ்ந்தார். மைசூர் மன்னர்கூட வழங்காத இந்தச் சிறப்பினால், சேஷண்ணா சிந்தை மகிழ்ந்து நெகிழ்ந்து போனார்.

மகா வைத்தியநாதையர்

மகா வைத்தியநாதையருடைய சரித்திரச் சுருக்கத்தை அவரது தமையனார் ஸ்ரீ இராமஸ்வாமி ஐயர், ‘மகா வைத்தியநாத விஜயஸங்கிரகம் எனும் நூலாக வெளியிட்டுள்ளார். 1936 இல் உ.வே.சாமிநாதையர், மகா வைத்தியநாதையர் எனும் நூலினை 88 பக்கங்களில் தந்துள்ளார். தஞ்சாவூர் வையச்சேரி துரைசாமி ஐயரின் மூன்றாவது புதல்வராகப் பிறந்தவர் மகா வைத்தியநாதையர், தனது 11வது வயதில் இராமநாதபுரம் அரசராக விளங்கியவரும் சங்கீதத்திலும் தமிழிலும் சிறந்த பழக்கம் உடையவரும் ரஸிக சிரோமணியுமான முத்துராமலிங்க சேதுபதி மன்னர் அவையில் மூன்று மாதம் இருந்தார்.

வைத்தியநாதையர் அங்கு தங்கியிருந்த ஒவ்வொரு நாளும் ஒரு விழாவாகவே தோன்றியது [48].

உ.வே.சா. வார்த்தைகளில்...

பாஸ்கர சேதுபதி மன்னரவர்களுடைய திருமண வைபவத்திற்கு மகா வைத்தியநாதையர் சென்றிருந்தனர். அங்கே சில காலம் இருந்து வினிகையும், சிவகதையும் செய்து ஸம்மானங்களைப் பெற்றனர்.

பின்பும் பாஸ்கர சேதுபதி மன்னர் பட்டாபிஷேக வைபவ காலத்தில் மகா வைத்தியநாதயைரை வருவித்து வெகுமதி செய்தது மன்றி, மாதந்தோறும் சம்பளமும், வருடந்தோறும் நவராத்திரி மகோத் வைத்திற்கு வரும்படியாகச் செய்து வருஷாசனமும் நியமனம் செய்ய, அவ்வாறே சென்று வெகுமதிபெற்று வந்ததுமன்றி இடையில் எக்காலத்தில் அழைத்தாலும் அக்காலந்தோறும் பாஸ்கர சேதுபதி மகாராஜா அவர்களுக்கு கர்ணாநந்தமான கானாநந்தத்தைப் புகட்டி உத்தம ஸம்மானம் பெற்று வந்தவர் மகா வைத்தியநாதையர் என்று உ.வே.சா. எழுதியுள்ளார் [49].

48. உ.வே.சா. சங்கீதமும்மணிகள், சென்னை, 1987, பக் 184.
49. உ.வே. சாமிநாதையர், மகா வைத்தியநாதர், சென்னை – 1936, பக்கம் 67, 68.

இவ்வாறு அந்தக் காலக் கட்டத்தில், கர்நாடக இசையில் சிறப்புற்றுச் திகழ்ந்த இசைக் கலைஞர்கள் அனைவரும் இராமநாதபுரம் சஸ்தானத்தில் தங்களது திறமையைக் காட்டி "அரச முத்திரை" பெற்றுச் செல்வது வழக்கமாக இருந்தது. மகா வைத்தியநாதையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் போன்ற பெரும் மேதைகள் மன்னரிடம் மிகுந்த பெருமதிப்புக் கொண்டவர்களாக அடிக்கடி வருகை தந்து மன்னரது விருந்தினராக இருந்தனர் இங்ஙனம் பாஸ்கர சேதுபதி மன்னர் இசைக்கலையில் புரவலராக ஆர்வலராக மட்டுமல்லாமல் தாமே இசையை அனுபவிக்கும் சிறந்த இசைக் கலைஞராகவும் திகழ்ந்தார். சிறந்த வித்வான்கள் அவரைக் கண்டு தமது திறமைக்கு பரிசு பெற வரும்பொழுது அவர்களுக்கு இசைப் பாடல்களையும் ராகத்தையும் குறிப்பிட்டு, அவைகளை இசைக்குமாறு செய்து ஏற்ற பரிசில்களை வழங்கினார்.

ஒருமுறை இராமநாதபுரம் அரண்மனைக்கு, மகா வித்வான்கள் மகாவைத்யநாதஐயரும், பட்டம் சுப்பிரமணிய ஐயரும், குன்னக்குடி கிருஷ்ண ஐயரும் வந்து இருந்தனர் இந்த மூன்று வித்வான்களது இசைத் திறமையைத் தனித்தனியே பலமுறை கேட்டு, அறிந்து ரசித்தவர் மன்னர். ஆதலால் இம்மூவரையும் ஒன்றாக இணைத்து ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தால் என்ன என்று அவரது சிந்தனை ஒரு நொடி சுழன்றது. அன்று மாலையில் இராமலிங்க விலாசம் அரண்மனையில் மிகச் சிறந்த நிகழ்ச்சி நடைபெற்றது. வரலாறுகாணாத வாய்ப்பாக மன்னரும் மக்களும் ரசித்து பரவசமடைந்தனர். மகாவைத்யநாதர் ராகம் பாட, பட்டணம் சுப்ரமணிய ஐயர் தாளம்போட குன்னக்குடி கிருஷ்ண ஐயர் பல்லவி பாடினார்[50]. முக்கனிப்பந்தரில் தேன்மாரி சொரிந்தது. சோனைமாரியாக.

திருப்புல்லாணியில் பிறந்து, தென்னகத்தில் ஒப்பற்ற லட்சன வித்துவானாக விளங்கிய பூச்சி சீனிவாச ஐயங்காரை தமது தர்பாரில் கௌரவித்து நமது "சமஸ்தான வித்வான்" என்ற பெயரும் பேற்றையும் அவருக்கு அளித்தார். இந்தப் பாடகரது

50. இந்த நிகழ்ச்சி பற்றிய செய்தியை அண்ணன் S.M.கமால் அவர்களுக்கு அளித்தவர் மதுரையில் உள்ள இசைப் புலவர் சங்கீதமணி திரு. C.S. சங்கர பாகவதர் அவர்கள்.

இயற்பெயர் சீனிவாசன். எழிலான வண்டினது ரீங்காரம்போல அவரது குரல் மிகவும் இனிமையாக இருந்த காரணத்தால் மக்கள் அவரை "பூச்சி" என (வண்டு) அன்புடன் அழைத்தனர். மெட்ரிக் தேர்வுக்கான கல்வி பயில வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவருக்கு வசதி செய்ததுடன் அப்பொழுது மிகவும் பிரபலமாக இருந்த பட்டணம் சுப்பிரமணிய அய்யர் என்ற இசை மேதையிடம், திருவையாறில் தங்கி இருந்து, இசைப் பயிற்சியினை முறையாக பெறுமாறு செய்தார். வித்வான் சீனி ஐயங்கார் என மரியாதையுடன் அவரை அழைத்து வந்த மன்னர் பாஸ்கரசேதுபதி தமது நாட்குறிப்பிலும் அவரைப் பற்றிய கணிப்பினை பதிவு செய்துள்ளார். "வெள்ளி இழைபோல தெளிவான அமிர்த தொனியும், பத்தரை மாற்றுப் பசும்பொன் போன்ற இனிய பண்புகளும், இவைகளுக்கெல்லாம் மேலாக நிறைந்த உள்ளமும், இசைக்கென்றே நம்மை அர்ப்பணித்துக் கொண்ட நல்நோக்கும் உடைய அரிய மனிதர்" என அவரை புகழ்ந்து குறிப்பிட்டுள்ளார் [51].

வள்ளல் பாண்டித்துரைத் தேவர் பற்றியும் சேதுபதி மன்னர்கள் பற்றியும் இந்த இசைப் பேறிஞர் இயற்றிய ஜாவளிகளும், தில்லானாக்களும் இன்றும் இசையரங்குகளில் விருப்பமுடன் பாடப்பட்டு வருகின்றன.

'வைணிக, காயக, "மகாவித்துவான்" கலாசிகாமணி' V.S. கோமதி சங்கர ஐயர் வீணைவிரிவுரையாளராக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். கி.பி. 1870 இல் இசை உலகில் மகா வைத்தியநாத சிவன் எனும் நூலின் முதற்பாகத்தை 206 பக்கங்களில் தந்துள்ளார் அதில் 190 முதல் 201 வது பக்கங்கள் வரை எழுதியுள்ள விவரங்கள் இதோ :

இராமநாதபுரம் சேதுபதி அரசராகிய முத்து ராமலிங்கத் தேவர் 1862ல் அரசபாரத்தை ஏற்று ஆட்சி நடத்திவந்தார். அப்போது இராமசாமி சிவனையும் மகா வைத்தியாநாத சிவனையும் மறக்காமல் தம் அவைக்கு வரச்செய்தார். அவ்விருவரும் அங்குப் பல மாதங்கள் தங்கினார்கள். இராமசாமி சிவன் மகா வைத்தியநாத சிவன் ஆகிய இருவரின் அசாத்தியமான

51. பாஸ்கர சேதுபதியின் நாட்குறிப்பு 13.12.1893

தமிழ்ப் புலமையைக் கண்டு அரசரும் பொன்னுசாமித் தேவரும் பெரும் மகிழ்ச்சியுற்றனர். அன்பு மேலீட்டால் அவ்விருவரையும் அரசரவர்கள் இரட்டைப் புலவர் என்றும் அழைப்பதுண்டு. அச்சமயத்தில்தான் இராமசாமி சிவனுக்கு “மோனைச் சிங்கம் சாகித்தியப் புலி” என்ற சிறப்புப் பட்டம் கொடுத்தும் சிறப்பித்தார்.

மகா வைத்தியநாத சிவன் தமிழறிவில் சிறந்து விளங்கியமை கண்டு அரசர் முத்துராமலிங்கத் தேவர் பெருமைக்குள்ளானார். சில ஆண்டுகளில் பொன்னு சாமித் தேவர் தம் தகப்பனராகிய சிவஞானத் தேவர் வகித்து வந்த பேஷ்கார் பதவியைத் தாமும் வகித்து வந்தார். அவ்வாறு பேஷ்கார் பதவியைப் பொன்னு சாமித்தேவர் வகித்து வந்தமையால் மகா வைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் மேலும் சிறப்பை அடைந்தனர். முத்துராமலிங்கத் தேவரும் அவருக்குப் பின் பாஸ்கர சேதுபதியும் அரசாட்சி செய்த காலம் முழுவதும் அவ்விருவரும் அச்சமத்தானம் சென்று இசை நிகழ்ச்சியும் சிவகதையும் புரிந்து அரசரையும் மற்றும் யாவரையும் மகிழ்வித்து வந்தனர். அவ்விருவரையும் சமத்தானத்துக்கு வித்துவத் பரீட்சகராகவும், மாதச்சம்பளம் பெறுபவராகவும் அரசர் அவர்கள் ஏற்பாடு செய்தது அக்காலமேயாகும்.

பொன்னுச்சாமித் தேவரின் குமாரர் பாண்டித் துரைத் தேவராவார். அவர் பாலவநத்தம் சமீன்தாராக இருந்தார். உலகியலறிவு மிக்கவர். அவர் பல ஆண்டுகள் இராமநாதபுரத்திலேயே இருந்தபடியால் சிவன் சகோதரருடன் அளவளாவி மகிழ்வதுடன் தக்கபடி ஆதரித்தும் வந்தார். அவருடைய இசையிலும் தமிழ்ப் புலமையிலும் மிகவும் ஈடுபட்டிருந்தார். இராமநாதபுரம் சமத்தானத்திலே எந்த விழா நடந்தாலும் அதிலே மகா வைத்தியநாத சிவனுடைய இசை நிகழ்ச்சி கட்டாயம் இருக்கும். அரசருடைய அன்பும் நட்பும் சிவன் சகோதரர்களுக்கு நிரம்ப இருந்தபடியால் பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் குன்னக்குடி கிருஷ்ணையரையும் சமத்தானத்து வித்துவானாக்கிய பெருமையைச் சிவன் சகோதரர் இருவரும் அடைந்தனர் என்பர்.

சிவன் சகோதரர்கள் அடிக்கடி இராமநாதபுரம் சமத்தானம் சென்று வரும் காரணத்தால் அவ்விருவரிடமும் பாண்டித்துரைத் தேவர் அதி நட்பையும், அபிமானத்தையும் வைக்கலானார். எனவே பர்வதவர்த்தனி நாச்சியார், முத்துராமலிங்கத் தேவர் ஆகிய அவர்களுடைய காலம் முழுவதும் சிவன் சகோதரர்களுக்கு இராமநாதபரம் சமத்தானத்துத் தொடர்பும், பாலவநத்தம் சமத்தானத்துத் தொடர்பும், அச்சமத்தானங்களின் ஆதரவும் சங்கிலித்தொடர்போல விடாமல் இருந்து வந்தன.

இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி அவர்களுக்குச் சுமார் 1889-ல் பட்டாபிஷேகம் நடத்தினார்கள். அந்த விழாவிலே குன்னக்குடி கிருஷ்ணையர், மகா வைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் ஆகிய மூவரின் இன்னிசை வினிகைகள் (கச்சேரி) நடந்தன. பட்டாபிடேகத்திற்கு முதல் நாளன்று குன்னக்குடிக் கிருஷ்ணையர் அதி அற்புதமாகக் கானம் செய்து அனைவரையும் களிகொள்ளும்படி செய்தார். அன்னாரின் இசையமுதை அங்குள்ள புலவரும் வந்திருந்த அன்பர்களும் முக்கியமாகப் பாஸ்கர சேதுபதி அரசரவர்களும் கேட்டுப் பேரின்பம் அடைந்தனர்.

பாஸ்கர சேதுபதியின் பட்டாபிடேகம் நடந்த நாளன்று வைத்தியநாத சிவனின் இசைவினிகை நடந்தது. அன்று பட்டாபிடேக தினமாகையால் பெரிய பதவியிலுள்ள அதிகாரிகளும் இன்னும் பல பெருமக்களும் நிரம்பி இருந்தனர். மகா வைத்திநாத சிவனின் கானத்தைப் பற்றி எடுத்துக்கூற வேண்டியதில்லை. அவரது இசை போலக் கந்தர்வலோகத்தில் கூட இசைப்பவரில்லை என்று துணிந்து கூறலாம். பட்டாபிஷேகத்தன்று அவர் தம் இயற்கையான குரல் வளத்தின் சிறப்பால் அங்குள்ள யாவரையும் மயிர்க் கூச்செறியும்படி பாடினார். கேட்ட மக்களனைவரும் அவ்விசையில் மெய்மறந்தனர். பாஸ்கர சேதுபதி அரசரவர்களின் குதூகலம் சொல்லத் தரமன்று.

பட்டாபிடேகம் நடந்த மறுநாளன்று பட்டினம் சுப்பிரமணி ஐயர் இசைவினிகை நடந்தது. அவரது கம்பீரமான சாரீரத்தில் கட்டுப்படாதவர் யார்? அவர் அன்று யாவரும் கேட்டிராத புதுப்புது இராகங்களைப் பாடினார். இசைப் புலவர்கள்

யாவரும் அவருடைய அடிவயிற்றினின்று ஹூம்காரத்துடன் உருமிக் கொண்டு வரும் அந்த இசை நாதத்தையும் அப் புது இராகத்தையும் மகிழ்ச்சிபொங்கச் சுவைத்தனர். அன்று அவர் தாமே செய்த புதுப்புதுக் கீர்த்தனைகளைப் பாடி அவையோர்களைக் களிப்பித்தார். அவர் புதிது புதிதாகப் பாடும் இராகத்தையும் கீர்த்தனத்தையும் கவனித்துக்கேட்ட பாஸ்கர சேதுபதி அவர்கள் பேருவகை கொண்டார்.

பாஸ்கர சேதுபதி அரசரின் பட்டாபிடேகத்திற்கு முதல்நாள், அன்றைய நாள், மறுநாள் ஆகிய மூன்று நாட்களிலும் மூன்று இசையரசர்களாகிய குன்னக்குடி கிருஷ்ணையர், மகாவைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் ஆகிய அவர்களின் மேன்மை பொருந்திய இசைச் சிறப்பினைப் பற்றி வாயினால் கூறி விடுதல் எளிதன்று. அவ்விசையின் மேன்மையைக் கூட விருந்து கேட்டவர்களுக்கே உள்ளுணர்ச்சியின் வாயிலாக அனுபவிக்க இயலும். அது போன்றதொரு சிறப்பை இனிக் காண்டல் அரிது. அம் மூவரின் இசையும் ஆயிரக்கணக்கான மக்களைப் பரவசப்படுத்திற்று என்றால் அதனை எடுத்துக்கூற இயலாது.

பட்டாபிடேகத்தின் மறுநாள் இசைவினிகை முடிந்ததும் பாஸ்கர சேதுபதி அரசரும் அரசருடைய உறவினர்களும் வெளியிடங்களிலிருந்து வந்திருந்த தக்க பதவி வகிப்போரும் மற்றும் ஏனையோரும் சூழ்ந்திருந்த அவையிலே குன்னக்குடி கிருஷ்ணையர், மகா வைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் ஆகிய மூன்று இசை மணிகளும் அரசர்பால் வந்து அமர்ந்தார்கள். அரசர் அம்மூவருடைய இசைத்திறன் பற்றி வானளாவப் புகழ்ந்துரைத்தார்.

புகழிற் சிறந்த மூன்று இசைமணிகளையும் பாஸ்கர சேதுபதி அரசர் புகழ்ந்துரைத்த தருணத்திலே மகா வைத்தியநாத சிவன் அரசரிடம் யாவரும் கேட்டு மகிழும்படி, குன்னக்குடி கிருஷ்ணையரைச் சுட்டிக்காட்டி "அவர்களைப் போல் கற்பனை நிறைந்ததும் விசித்திர செய்கையுடையதுமான பல்லவியை எவராலும் பாட இயலாது; அவர்கள் எடுத்துத் தரும் பல்லவி எவரது புத்திக்கும் எட்டாததாகவும் நூதன தாளம் அமைந்ததாகவும் இருக்கும். அவ்வாறான புதுப் பல்லவிகளை

ஏனைய இசைப் புலவர்கள் பாடுவதற்கு அஞ்சி இருப்பார்கள். அப்பல்லவிகள் அப்புலவர்களை எல்லாம் மயக்கிவிடும் தன்மையனவாக விளங்கி அவருடைய இசைச் செயல் திறமும் முழுமையும் பெற்றுப் பரிமளிக்கும். அவர் போன்ற அத்திறன் எவருக்கும் வாய்த்தல் அரிது" என்று புகழ்ந்து கூறினார்.

தொடர்ந்து அரசரிடம் பட்டிணம் சுப்பிரமணிய ஐயரைச் சுட்டிக் காட்டி, "அவர்கள் இசைப் பாடல்கள் இயற்றுவதில் மகாபுத்திமான், தியாகராஜ சுவாமிகள் போல நூற்றுக்கணக்கான இசைப் பாடல்கள் இயற்றியுள்ளார். அக்கீர்த்தனங்கள் ஒவ்வொன்றும் மணிமணியாக இருக்கின்றன. தராசில் எடை போட்டு நிறுத்தது போல ஒவ்வொரு கீர்த்தனத்திற்கும் அதற்கு தக்கதாக சங்கதி அமைப்புக்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவருடைய அளவிடற்கரிய கற்பனைத் திறத்தை யாரிடத்தும் காண இயலாது. அவர் புதுப்புது இராகத்தையும் கற்பனை செய்திருக்கிறார். அந்த இராகங்களெல்லாம் அவருடைய சாரீரத்திலே திரட்டி உருட்டின தங்கக் கட்டிகள் போல அழகு நிறைந்து சுவையை உண்டாக்குகின்றன. அந்தப் புது இராகங்களிலும் அவர் கீர்த்தனையை அமைத்துள்ள விதம் அற்புதமாக இருக்கும். அவர் வாயிலாக அக் கீர்த்தனைகளைக் கேட்டோர் அவ்விசையில் கட்டுண்டு கிடப்பர் என்பதில் ஐயமில்லை. அபூர்வ இராகங்களையும் அதில் அமைந்த கீர்த்தனைகளையும் உருவாக்கும் சக்தி கடவுளின் துணையோடு கூடிய அவரின் இசைத் திறத்தைக் குறிப்பதாகும். அவர்களைப் போல் வெகு கம்பீரமாக ஆனந்தம் உண்டாகுமாறு இசைக்கும் ஆற்றலுள்ள வித்துவான்களே இல்லையெனலாம்; அவருடைய சாரீரத்திலிருந்து வரும் ஹூம்காரத் தொனியிலே தானம் பாடும் பம்பகம் போல எவராலும் இசைக்க இயலாது என்பதை நான் உறுதியாகக் கூற வேண்டியிருக்கிறது. ஆழ்ந்த அறிவு பெற்ற இசைப் புலவர் அவர் ஒருவரேயாகும்" என்று சிறப்பித்துக் கூறினார்.

மகா வைத்தியநாத சிவன் அரசர் முன்னிலையில் குன்னக்குடி கிருஷ்ணயரையும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் இவ்வாறு புகழ்ந்து கூறியதும், அங்குள்ள இசைப் புலவர்களில் மிகவும் வயது முதிர்ந்தவரான (அப்போது 73 வயதடைந்த) குன்னக்குடி கிருஷ்ணையரவர்கள் அரசரிடம்

மகா வைத்தியநாத சிவனைச் சுட்டிக்காட்டி "அவர்களுடைய குரல்வளம் போல் எவருக்கும் அமைந்ததில்லை. அவரது பாட்டு கந்தர்வ கானமேயாகும். அவர் குரலெடுத்துப் பாடினார் அவ்விசை நயமானது எப்பேர்ப்பட்ட திறம் வாய்ந்த இசைப் புலவரையும் மேவிச் சிறந்து விளங்குகின்றது. அவர் பாடிவிட்டால் எல்லாப் புலவர்களின் பாட்டும் பல் இழந்த சர்ப்பம் போல வலுவிழந்து விடுகின்றன. அவர் இராகம் தாளம் பல்லவி நிரவல் சுரம் பாட ஆரம்பித்தால் அதைக் கேட்டும் இசை வித்துவான்களெல்லோரும் தமக்கு அவற்றில் நல்ல திறம் உண்டென்று அறிந்திருந்தாலும் தமக்கு ஒன்றுந் தெரியாது என்ற எண்ணத்தை அடைந்து விடுகின்றனர்.

ஒவ்வொரு இசைப் புலவரும் தங்களுடைய திறம் முழுவதையும் காட்டி வெகு நேரம் இசைத்த அவ்விசையை அவர் 'சங்கரா' என்று தம்புரா சுருதியோடு ஒன்றி ஒலிக்கச் செய்த அக்கணத்திலேயே அவை இருந்த இடம் தெரியாமல் – பாடிய சுவடு தெரியாமல் மறைந்து விடுகின்றன. இக்கலியுகத்தில் அவரொரு அவதார புருடராவார். அவருடைய இசைத் திறம்போல் இனி இவ்வுலகில் ஒருவர் அடைதல் இயலாததாகும்" என்று பெருமை படக் கூறினார்.

பட்டினம் சுப்பிரமணிய ஐயர், குன்னக்குடி கிருஷ்ணையர் கூறிய அப்புகழுரைகளை, "ஆம்! உண்மை! உண்மை!" என்று ஆமோதித்தார். அம் மூவரும் ஒவ்வொருவருடைய இசைத்திறந்தையும் அதன் உண்மைகளையும் ஒருவருக்கொருவர் புகழ்ந்து கூறிய சொற்களை அரசரும் அங்குக் குழுமியிருந்த அனைவரும் கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர். **அரசர் பாஸ்கரசேதுபதி அம்மூவருக்கும் செய்த மரியாதைப் பொருள்களைக் கண்ட மக்கள் தங்களுடைய ஆரவாரத்தினால் பெருமகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.**

பாஸ்கர சேதுபதி அரசரவர்களுடைய பட்டாபிடேக விழாவிலே பாடிய குன்னக்குடி கிருஷ்ணையர் பின்பு அதிக ஆண்டுகள் வாழவில்லை; சில மாதங்களிலே இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். அவருடைய இசைப் புலமையில் நல்லமதிப்புக் கொண்ட மகா வைத்தியநாத சிவன் மிகவும் மனம் வருந்தினார். குன்னக்குடி கிருஷ்ணையரின் உயிர்

அவருடைய உடலில் இருந்து பிரியும் வரை அவர் மிகவும் திடமான சரீரத்துடனேயே இருந்தார். ஒரு நாள் கூட நோயாகப்படுத்தவரல்லர். அவருடைய ஞாபகமாக அவர் செய்துள்ள தானவர்ணங்கள், சௌக வர்ணங்கள், கீர்த்தனங்கள், தில்லானாக்கள் ஆகிய அவ்வகைகளெல்லாம் இசையுலகில் எல்லா இசைவாணர்களிடமும் நின்று நிலவுகின்றன. அவ்வுருப் படிகளை ஆதாரமாகக் கொண்டு அவருடைய இசை ஞானத்தின் சிறப்பை இக்காலத்தோர் அறிதல் வேண்டும். அவர் போன்ற திறம் வாய்ந்த ஓர் இசைப் புலவரைப் பார்ப்பது மிகவும் அரிது.

'மோனைச்சிங்கம் சாகித்திய புலி' என்ற பட்டத்தை ஏற்றுக் கொண்டதும் இராமசாமி சிவன், மகா வைத்தியநாத சிவன் ஆகிய இருவரும் தங்கள் மட்டிலே ஒரு கௌரவத்தை அடைந்தோம் என்ற பெருமை கொள்ளவில்லை; அதற்குப் பதிலாக அரசரிடம் "இந்த அவையிலே தமிழ்க் கலையைப் போற்றி அரசரவர்கள் எங்களுக்குப் (இராமசாமி சிவன் பேசும்போது தம் தம்பியாரையும் மகா வைத்தியநாத சிவன் பேசும் போது தம் தமையனாரையும் சேர்த்துப் பேசுவதே வழக்கம்.) பட்டம் அளித்தது போல ஓர் இசைப் புலவருக்கும் கொடுத்துக் கௌரவிக்கவேண்டும் அதற்குத் தக்க பாத்திரம் குன்னக்குடிக் கிருஷ்ணையரவர்களே யாவார்" என்று கூறினார்.

பாஸ்கரசேதுபதி அரசரவர்கள் அவ்விருவரும் பிறருடைய கலையில் அழுக்காறின்றி இருத்தலைக் கண்டு மகிழ்ந்தார்கள். அந்நாளிலே குன்னக்குடிக் கிருஷ்ண ஐயரக்குச் 'சங்கீத வித்தியா சாகரம்' என்ற பட்டமளித்து அவரைச் சமத்தானத்து இசை வித்துவானாகவும் ஆக்கினார்கள் அப்பொழுது குன்னக்குடிக் கிருஷ்ணையருக்கு வயது நாற்பது ஆறு (46) நடந்து கொண்டிருந்தது. பின்பு சில ஆண்டுகள் சென்றதும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் இராமநாதபுரம் சமத்தானத்து வித்துவானாகச் சிவன் சகோதரர்கள் செய்து வைத்து மகிழ்ந்தனர். அவ்வாறு ஒரு வித்துவான் பிற வித்துவான்களுக்கும் உயர்தரப் பெருமையைத் தேடி உதவுகின்ற உள்ள சிவன் சகோதரர்களிடம் இருந்தது. இந்த உயர்ந்த மனப்

பாங்கினைக் கண்டு மக்கள் யாவரும் அவரைக் கொண்டாடி வந்தனர்.

பாஸ்கரசேதுபதி அரசர் அவர்கள் குன்னக்குடிக் கிருஷ்ணையருக்கு **'சங்கீத வித்தியாதிபதி'** என்ற பட்டம் கொடுத்ததாகவும் கூறுவர். இன்னும் பல பட்டங்கள் தக்கவரால் கொடுத்து அவர் கௌரவிக்கப்பெற்றுள்ளார். அவருக்கு 'வித்தியா கம்பீரர்', தானவர்ண சிரேஷ்டர்', 'தில்லானா பாரங்கதர், பூலோகசாப சுட்டி, கனநய தேசிய சம்ராட், 'ஜிகிபிகி சம்யுக்தர்', 'இரட்டைப் பல்லவி கிருஷ்ணையர்' ஆகிய விருதுகள் எல்லாம் உண்டு. அவரை முறுக்கு மீசை 'ஜிகிபிகி கனநயதே சிக' 'இரட்டைப் பல்லவி' கிருஷ்ணையர் என்ற நீண்ட பட்டத்தால் சிறப்பித்தலுமுண்டு ஆகக் குன்னக்குடி கிருஷ்ணையர் மகா வைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணியஐயர் ஆகிய இம்மூவரும் அக்காலத்திலே இசை அரசர்களாக விளங்கி வந்தனர்.

குன்னக்குடி கிருஷ்ணையர்

பாஸ்கர சேதுபதி அரசருக்குத் திருமணம் நடைபெற்றது. அக்காலத்தில் மகா வைத்தியநாத சிவனுடைய இசைவினிகை வெகு சிறப்பாக நடந்தது. மற்றொரு நாள் கண்ணப்ப நாயனார் கதையை யாவருடைய உள்ளமும் கரையும்படிப் பிரசங்கித்தார். அதுபோல ஒருநாள் குன்னக்குடி கிருஷ்ணையர் இன்னிசையும் மற்றொரு நாள் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் இன்னிசையும் நடந்தன. அப்பொழுதுதான் குன்னக்குடி கிருஷ்ணையர் **"ஜய ஜய ரவிகுல ராஜ விஜய ரகு நாத ஸ்ரீ பாஸ்கரஸாமி"** என்ற பல்லவியைப் பயிரவி இராகத்திலே மிச்ரஜாதி ஜம்பை தாளத்திலே பாடினார். ஜம்பை தாளத்தின் வீச்சிலிருந்து முக்காலிடம் தள்ளி அதாவது அநாகத இடத்தில் இப்பல்லவியை எடுத்துப் பாடியது தனிச் சாமார்த்தியமாகும். அம்மூவருடைய இசையையும் கேட்டுச் சுவைத்த பாஸ்கர சேதுபதி மன்னவரவர்கள் குன்னக்குடி கிருஷ்ணையரையும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் நோக்கி, "தாங்களிருவரும் மகா வைத்தியாநாத சிவனோடு சேர்ந்து பாடலாமோ?" என்று கேட்டார்கள். (இவ்வாறே இன்னிசை நிகழ்ச்சி பின்னால் நடைபெற்றது.)

குன்னக்குடி கிருஷ்ணையர் பாடிய பல்லவியின் சுரக்குறிப்பு வருமாறு : -

இராகம் : - பயிரவி. தாளம் : - மிக்ராஜதி ஜம்பை,
அட்சரம் : 10 மேளம் : 20 + சது சுருதிதைவதக்குறி.
"-ரி || க்ரிச்;;தா - ச்நிக்ரி - ச்நிதப -
... ஜ யஜய ரகுல ரா.... +
பதம - பதநிச்ரி - ச்நிதப - மபதநி |
ஜ ... விஜயரகு நா.... ...த..
ச்ா; ச் நிக்ரி - ச்நிச் ரி || க் ரி ச்ா....
ஸ்ரீ. பாஸ்கர ஸா.மி ஜ யஜய

இப்பல்லவியை வெகு வித்தாராமாகப் பாடி அவையோரைக் களிப்பித்தார். மகா வைத்தியநாத சிவனும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் மிகவும் வியந்து போற்றினார்கள். அவ்விருவரினும் குன்னக்குடி கிருஷ்ணையரே வயதில் மிகவும் மூத்தவராவர். இந்நிகழ்ச்சி நடக்கும்போது அவருக்கச் சுமார் அறுபத்தைந்து (65) வயதிற்கும் மேலிருக்கும்[52].

52. V.S.கோமதி சங்கர ஐயர், மகாவைத்தியநாத சிவன் முதற்பாகம் 1970, பக்கம் 190 -201.

வள்ளல் பாஸ்கர சேதுபதி

சைவ சித்தாந்தத்தைப் பின்பற்றி ஒழுகி வந்தவர் மன்னர், பாஸ்கர சேதுபதி. அந்த நெறியிலே சிறந்து விளங்கினார். அவருக்கிருந்த இறைஞானச் செல்வத்தினால் சிறந்த பக்தராக மட்டும் அல்லாமல், பக்தி நெறி பரப்பும் தொண்டராகவும் திகழ்ந்தார். இராமேசுவரம், திருஉத்திரகோசமங்கை போன்ற இராமநாதபுரம் சமஸ்த்தான திருக்கோயில்களில் நடைபெறும் விழாக்களுக்கு நேரில் சென்று பங்கு கொண்டார். மேலும் சமயம் கிடைக்கும் பொழுது எல்லாம், சைவ நெறி, நடராஜ தத்துவம், திருவாசகம், திருஞான சம்பந்தர் போன்ற தலைப்புகளில் சொற் பெருக்காற்றி குடிமக்களுக்கு ஞானச் செல்வத்தை வழங்கி பக்தி உணர்வை வளர்த்தார்.

அத்துடன், இராமேஸ்வரத்தில் தங்கி இருக்கும் பொழுது இராமநாத சுவாமி ஆலயத்தில் அர்த்தசாமப் பூஜையில், முழுவதுமாகக் கலந்து கொண்டு, சுவாமி, அம்பாள் திருமேனிகள் பள்ளியறைக்கு எடுத்துச் செல்லப்படும் பொழுது பல்லக்கிற்கு முன்னர் மிகவும் எளியவராக தங்கத் தீவட்டி தூக்கி தொண்டு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அப்பொழுது வழங்கப்படும் நைவேந்தியங்களான அன்னம், குழம்பு, வடை ஆகியவற்றைப் பெற்று உண்பதைப் பெரும் பேறாக நினைத்தார். இதைப் போன்றே, சென்னையில் தங்கியிருக்கும் பொழுது எல்லாம், மயிலை கபாலீஸ்வரர் ஆலய அர்த்த சாம பூஜையில் கலந்துகொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அந்தக் கோயில் அர்த்தசாமப் பூஜையின் பொழுது சுவாமி ஆரோகணித்துச் செல்லும் வெள்ளிப் பல்லக்கு, மன்னர் பாஸ்கர சேதுபதியால் வழங்கப்பட்டதாகும்.

நொச்சிவயல் ஊரணி மேற்குக்கரையில் உள்ள ஸ்ரீ பிரம்மபுரீசுவரர் கோயில் கோபுரத்தின் கிடப்பக்கக்கல் வெட்டு பாஸ்கர சேதுபதியின் தானத்தை பறை சாற்றுகிறது. அதுபோலவே இராமநாதபரம் கோதண்ட ராமர் கோயில் கருவறைத் தென் சுவர்க்கல்வெட்டு பாஸ்கர சேதுபதியின் பொருளுதவிபற்றி விவரிக்கிறது[1].

---

1. எஸ்.எம்.கமால், மன்னர் பாஸ்கர சேதுபதி. பக்கம் 100, 101.

பாஸ்கர சேதுபதி திருக்கோயில்களுக்குச் செல்லும் பொழுது ஏதாவது ஒரு சிறந்த பொருளை அந்தந்தக் கோயில்களுக்குத் தானமாக வழங்கி மகிழும் பழக்கமுடையவராக இருந்தார். இராமேசுவரம் பர்வதவர்த்தினி அம்மனைத் தரிசிக்கச் சென்ற பொழுது, அந்த அம்மனுக்கு வைரக்கொலுசு ஒன்றினை அளித்து, அம்பிகையின் திருவடி அழகினைக் கண்டு களிகூர்ந்தார். இன்னொருமுறை, திருப்புல்லாணி ஆதி ஜகந்நாதரது திருக்கோயிலுக்குச் சென்ற பொழுது, தாம் அணிந்து இருந்த வைரக்கடுக்கன்களையும்[2], எழுபத்து ஆறு பவுன் எடையுள்ள தங்கப்பூணூலையும் வைரக்கிரீடம், ஹஸ்தம் ஆகியவற்றையும், சுழற்றிக் கொடுத்து பெருமாளுக்கு அணிவித்து மகிழ்ந்தார். திரு உத்தரகோசமங்கை மங்களநாதசுவாமி தரிசனத்தின் பொழுதும் அவர் அணிந்து இருந்த தங்க அரைஞாண், வைரம் அழுத்திய இடுப்புப்பட்டை, முத்துமாலை ஆகியவற்றை அளித்தார்.

பச்சைமரகதக்கிரீடம்

சிதம்பர நடராஜப் பெருமானுக்குப் பச்சைமரகதக்கிரீடம், மதுரை மீனாட்சிக்கு தங்க அங்கி ஆகியவற்றையும் அளித்து மகிழ்ந்தார். அத்துடன் மயிலைக் கபாலீசுவரருக்குப் பல்லக்கு, மதுரைச் சொக்கருக்குத் தேர், அவரது குலதெய்வமான இராமநாதபுரம் ராஜ ராஜேஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்கு தங்கத்திலான சிம்ம வாகனமொன்றையும் செய்து அளித்ததுடன், இந்தக் கோயிலின் விமானத்தை பொன் வேய்ந்தார் அந்த விமானத்தில் கி.பி. 1893 இல் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இதனைத் தெரிவிக்கின்றது.

இதோ கல்வெட்டு... இராமநாதபுரம் அரண்மனை ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் கோயில் விமானத்தில் உள்ள கல்வெட்டு.

---

2. இந்த வைரக்கடுக்கன்களின் அப்பொழுதைய மதிப்பு ஒரு லட்ச ரூபாய் (25 காரட் நிறை) இராமநாதபுரம் சமஸ்தானம் – திருப்புல்லாணி தலபுராணம் (1968) பக்கம் (1) திருப்புல்லாணித் தல வரலாறு இராமநாதபுரம் தேவஸ்தான வெளியீடு 1968, ஸ்ரீகாஞ்சி பாதுகாதாஸன் எழுதிய 155 பக்கங்களைக் கொண்ட நூலில் பிற சேதுபதிகள் வழங்கிய கொடைகள் பக்கம் 87, 88 இல் காணப்படுகிறது.

சுபமஸ்து

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1815 விஜய துலா கிருஷ்ண பக்ஷம் பஞ்சமி பானுவாரம் மிருக சீரிஷ நட்சத்திரத்தில் ராஜா பாஸ்கர சேதுபதி மகாராஜா அவர்கள் ராஜராஜேஸ்வரிக்கு ஸ்வர்ண விமான பிரதிஷ்டை.

கி.பி.1895 இல் திருஉத்திர கோசமங்கை திருக்கோயிலில் திருவாதவூர் அடிகளின் குருபூஜை விழாவை திருவாவடுதுறை ஆதினத்தின் அறிவுரைப்படியும், அவரது தொண்டர்கள் உதவியுடனும் சிறப்பாக பாஸ்கரசேதுபதி நேரில் இருந்து நடத்தினார்[3].

அந்த விழாவையொட்டி நடந்த சுவாமி புறப்பாட்டில், மன்னரும் பஜனைக் குழுவினருடன் சேர்ந்து திரு வீதிகளில் திருவாசகப் பாடல்களைப் பாடிச் சென்றது. மறக்க முடியாதது ஆகும்.

ஐநூறு வெண்பொற்காசுகள்

இத்தகைய நிகழ்ச்சிகளின் பொழுது அந்தந்தத் தெய்வத் திருமேனிகளைப் புகழ்ந்து அவரே பாடல்கள் இயற்றிப் பாடி மகிழ்வதுண்டு, மதுரைச் சோமசுந்தரரது ஆலயத்திற்கு ஒருமுறை சென்று இருந்த பொழுது, "ஆலவாய் அமரும் அந்த அரசர்" மீது தேவை அமரும் இந்த அரசர்" பதிகம் ஒன்றை உருக்கமாகப் பாடி வழிபாடு செய்தார்.

ஒரு நாள் முகவையில் ராஜராஜேஸ்வரி அம்மனை அகங்குளிர தரிசித்த பொழுது, அம்மையின் திருக்கோலத்தில் ஈடுபட்டு கீர்த்தனை யொன்றை மன்னர் இயற்றி இசைத்துப் பாடினார். திருக்கோயில்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் முறையாக அமைக்கப்பட்டிருந்தால் அவைகளில் தன்னை மறந்து ஈடுபட்டு சம்பந்தப் பட்டவர்களைப் பாராட்டி பரிசு வழங்கவும் அவர் தவறியதில்லை. ஒருமுறை காஞ்சிபுரம் ஆலயம் ஒன்றில் நடைபெற்ற இராமநவமி விழாவிற்கு மன்னர் சென்றிருந்தார்.

3. மதுரை மெயில் – 13.7.1895

அப்பொழுது நடைபெற்ற சுவாமி புறப்பாட்டின் பொழுது, அந்தணர்கள் மிகுந்த பக்தி சிரத்தையுடன் வேதங்களை முழக்கி வந்ததை அக்கரையுடன் கவனித்தார். அங்கேயே அந்த அந்தணர்களுக்கு ஐநூறு வெண்பொற்காசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியை தமது நாட் குறிப்பில், "அவர்கள் மிகவும் சிறப்பாக, வேதபாராயணம் செய்தனர். அங்கு வழிபாடு செய்ய வந்தவர்களுக்கு இந்த நிகழ்ச்சி நல்ல வளமான சிந்தனையை ஊக்குவிக்க இருக்கும்" எனக் குறிப்பிட்டுள்ளார்[4].

இராமநாதபுரம் சிவன் கோயிலில் மாணிக்கவாசகரது குருபூசையை நாள் முழுவதும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்ததுடன் அவரும் காலை முதல் இரவு வரை விரதம் பூண்டு அந்த விழா நிகழ்ச்சிகளில் தீவிரமாகப் பங்கு கொண்டார்[5].

இதைப் போன்றே என்றும் இல்லாத புதிய வழக்கமாக இராமநாதபுரம் அரண்மனை ஆலயத்தில் உள்ள ராஜ ராஜேஸ்வரியம்மனை சிறப்பாக அலங்கரித்து நகரின் முக்கிய வீதிகளில் உலா வருமாறு செய்தார். அன்று இராமநாதபுரம் நகரம் தேவலோகம் போல் அழகும் பொலிவும் பெற்றுத் திகழ்ந்தது என அவரே அகமகிழ்ந்து தமது நாட்குறிப்புகளில் பதிவு செய்துள்ளார்.

நவராத்திரி விழா

1894ம் ஆண்டு இறுதியில், இராமநாதபுரம் அரண்மனையில் நவராத்திரி விழா தொடங்கியது. ஶ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் சிறப்பான அலங்காரங்கள், பூசனைகள், காப்புக்கட்டு, அபிஷேகம், அபயவகனம், மரகதபீட பூசை, அடுத்து பீரங்கி முழக்கம், அதிர் வேட்டுக்கள் வெடிப்பு, வாண வேடிக்கைகள், நாதசுர இசை, அரண்மனை வாத்திய இசை, தேவார திருவாசக இசை, பண்டிதர்கள் வேதகோஷம், பொதுமக்கள், சமஸ்தான ஊழியர்களது வாழ்த்தொலிகள், குதிரைகள், யானைகள், வீரர்கள் அணி வகுப்பு மரியாதை, கொற்றக் குடைகள் தூக்க, கவரி, வெண் சாமரம் வீச,

4. Diary Entry dated. 26.3.1893
5. Diary Entry 5.6.1893

கட்டியம் முழங்க, வண்ண வண்ணத் தோரணங்களையும் லஸ்தர் விளக்குகளையும் அலங்காரக் கொடிகளையும் கடந்து, அரசர் இராமலிங்க விலாசம் அரண்மனை தர்பாரில் கொலு வீற்றிருத்தல், அவருக்கு முன்னால் விரிக்கப்பட்டிருக்கும் திட்டுச் சேலையில் விழுந்து அவரது உற்றார் உறவினர்கள் தெண்டனிட்டு வணக்கம் தெரிவித்தல், அடுத்து இராமாநாதபுர சஸ்தானத்தின் பல திருக்கோயில் குருக்கள்மார் அரசருக்குப் பிரசாதம் வழங்கல், சமஸ்தானப் பாடகரது இசைப் பொழிவு, வேத விற்பன்னர்கள், தமிழ்ப் புலவர்கள், வாழ்த்துக்கள், பாராட்டு, தங்கதோடாக்கள், சாதரா மாதாவி, பட்டாடைகள், பொற்கிழி ஆகியவை பரிசிலாக வழங்குதல், பத்தாவது நாள் முற்பகல் அம்பு விடும் விழாவும் பிற்பாடு பந்தயங்களும் நடைபெறுதல் வழக்கம்.

பொதுவாக, இராமநாதபுரம் அரண்மனை நவராத்திரி விழாவையொட்டி நடைபெறும் வழக்கமான நிகழ்ச்சிகள் இவை[6]. பத்து நாட்கள் சிருங்கேரி ஸ்ரீ நரசிம்மபாரதி பாஸ்கர சேதுபதி சமஸ்தானத்தில் அந்த விழாவின்போது தங்கியிருப்பார்.

ஒரு நாள் இரவு பூஜை முடிந்து மன்னர் ஓய்வு எடுத்துக் கொள்ளச் செல்கிறார். ஜகத்குரு நரசிம்ம பாரதியும் ஓய்வெடுக்கச் செல்கிறார்.

பெரும் புள்ளிகள் - குகன்

'குகன்' என்பவர் மதுரையிலிருந்து, பிரமுகர்கள் வாழ்வில் சில சுவையான சம்பங்களைத் தொகுத்து 1994 இல் பெரும் புள்ளிகள் எனும் 207 பக்கங்களைக் கொண்ட நூலினை வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 53 முதல் 56 வரை (16.10.1988 ஆனந்த விகடனில் எழுதியது) உள்ள சில செய்திகள் இதோ :

உன் சமஸ்தானம் முழுவதும் எனக்கு வேண்டும்!

அப்போது – சமஸ்தான திவானும், காரியஸ்தரும், பண்டார அலுவலரும் (நிதிப் பொறுப்பாளர்) தயங்கித் தயங்கி ஏதோ சொல்ல வருகின்றனர். இதைக் குறிப்பால் உணர்ந்த ஜகத்குரு அன்றைய சத் காரியங்கள் அனைத்தும் முடிந்த பிறகு அவர்களைத் தம் மாளிகைக்கு வரச் சொல்கிறார்.

6. எஸ்.எம்.கமால், மன்னர் பாஸ்கர சேதுபதி பக்கம் 52, 53.

சிருங்கேரி மடாதிபதிகளுக்கும், சேதுபதிகளுக்கும் நீண்ட நெடுங்காலமாக ஆன்மிகத் தொடர்பு உண்டு. திருவனந்தபுரம் மன்னர்களைப் 'பத்மநாபதாசர்கள்' என்று சொல்லுவது போல, இவர்களைச் 'சிருங்கேரிதாசர்கள்' என்று கூடச் சொல்லலாம். சேதுநாடு முழுவதற்கும் சிருங்கேரி அதிபரே ஜகத்குரு போல, அதிலும் அப்போதைய மன்னர் பாஸ்கர சேதுபதிக்குத் தம் குருவிடம் அளவு கடந்த பக்தி – ஈடுபாடு. எனவே அப்போதைய ஜகத்குரு ஸ்ரீ நரசிம்ம பாரதி அடிக்கடி அரண்மனைக்கு விஜயம் செய்வதும் அங்கேயே பல மாதங்கள் தங்கி அனைவரையும் ஆசிர்வதிப்பதும் வழக்கம். இவர் கிழித்த கோட்டை மன்னர் தாண்டமாட்டார். அப்படி ஒரு ஈடுபாடு.

இந்த நிலையில் அன்று இரவில் திவானும், காரியஸ்தரும் ஜகத்குருவைச் சந்திக்கின்றனர்.

கொடையில் கர்ணன்

மன்னர் பாஸ்கர சேதுபதியோ அறிவில் இமயமலை, அழகில் மன்மதன் – கொடையில் கர்ணன், **கையில் எது கிடைத்தாலும் கேட்டவருக்குக் கொடுத்து விடுவது அவர் வழக்கம்.** தினமும் புதுப்புது உடை தான் அவர் உடுத்துவார். மறு நாள் அதை யாராவது ஒருவருக்குக் கொடுத்து விடுவார். இப்படி ஒரு பழக்கம் அவருக்கு. அவர் மன்னரானதிலிருந்தே அரண்மனைச் செலவுகளைத் திவானால் ஈடுகட்ட முடியவில்லை. மன்னரிடம் சொல்லக்கூடிய துணிவும் அவருக்கு இல்லை. காலை எழுந்தவுடன் ஆயிரம் ரூபாய் வேணும் என்பார் மன்னர் சில மணிகளில் அந்தப் பணம் அவர் கையை விட்டுப் போய்விடும். புலவர்களும், ஏழைகளும், ஏழை வேஷம் போட்ட பணக்காரர்களும் அவர் மாளிகையில் காத்துக்கிடப்பது வழக்கமாயிற்று. ஒரு தடவை ஆறுமுகம் என்ற இவரது வேலையாள், கடையில் டீ குடிக்கப் போயிருக்கிறார். திவான் வேலையாளும் அதே நேரத்தில் அங்கே வர, ஆறுமுகத்துக்குப் போட்ட டீயைத் திவான் வேலையாள் எடுத்துக் குடித்துவிட, இதைப் பார்த்த ஆறுமுகம் கோபப்பட, வாய்ச்சண்டை முற்றி, திவான் வேலையாள் 'உனக்கென்ன முதலில் டீ கொடுப்பது – நீயென்ன பெரிய லட்சாதிபதியா?' என்று கேட்டு விட, உடனே ஆறுமுகம் 'குய்யோ முறையோ' என்று அழுது

பாஸ்கர சேதுபதியிடம் சென்று 'என்னைப் பார்த்து அவன், லட்சாதிபதியா நீ' என்று கேட்டு விட்டான் மகாராஜா என்று முறையிடுகிறான், 'உன்னை அப்படியா கேட்டான், இதோ உன்னை லட்சாதிபதியாக்குகிறேன்' என்று சொல்லி, உடனே லட்ச ரூபாயைத் தூக்கிக் கொடுத்து லட்சாதிபதியும் ஆக்கி விடுகிறார். இப்படி ஒரு மனசு சேதுபதிக்கு. இந்த நிலையில் போனால் சேதுபதியின் நிலை என்னாகுமோ என்று திவான் கலங்கினார்.

இந்தச் சூழ்நிலையில் சிருங்கேரி ஜகத்குருவை அவர்கள் சந்திக்கிறார்கள். மன்னரைப் பற்றியும், அவருடைய போக்குக் குறித்தும் அரண்மனைக் கஜானா நாளுக்கு நாள் குறைந்து வருவது பற்றியும் வேதனையோடு பேசுகிறார்கள். மன்னர் கொஞ்சம் 'செலவாளி' என்பது ஜகத் குருக்குத்தெரிந்தது தான். ஆனாலும் இப்படிக் காரியஸ்தர்களே வந்து மனச்சங்கடப்படும் அளவுக்கு நிலையை முற்றிவிடும் என்று அவர் நினைக்கவில்லை. வேறு சிலரும் வந்து ஜகத்குருவைக் கண்டு இதே விஷயம் பற்றிக் கவலை தெரிவித்தார்கள்.

சமஸ்தானம் முழுவதும் எனக்கு வேண்டும்

அன்று இரவு முழுவதும் ஜகத்குரு தூங்கவே இல்லை. இதற்கு என்ன வழி? பாஸ்கர சேதுபதியை இனித் திருத்தவும் முடியாது! சமஸ்தானத்தை எப்படிப் பாதுகாப்பது? என்றெல்லாம் இரவு முழுவதும் நினைத்து நினைத்துப் பார்த்தார். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல, அதிகாலை எழுந்து நியம நிஷ்டைகளை முடித்து விட்டு, முதல் வேலையாக மன்னர் பாஸ்கர சேதுபதிக்கு ஆள் அனுப்ப, மன்னரும் வந்து சேர்ந்தார். எடுத்த எடுப்பிலேயே ஜகத்குரு மன்னரிடம் "நான் உன்னிடம் ஒரு பொருள் கேட்பேன்! தருவாயா?' என்று கேட்க –

மன்னரோ 'உத்தரவு போடுங்கள்' எது கேட்டாலும் தருகிறேன், என்று வாக்குக் கொடுக்க,

> 'உன்னுடைய சமஸ்தானம் முழுவதும் எனக்கு வேண்டும்' என்று சிருங்கேரி கேட்க – எடுத்துக் கொள்ளுங்கள் என்று எவ்விதச் சலனமும் இல்லாமல் மன்னர் சொல்ல, 'தாரை வார்த்துக் கொடு! என்று

ஜகத்குரு கேட்க அப்போதே அந்த விநாடியே தன் நாடு முழுவதையும் தாரை வார்த்துக் கொடுக்கிறார் பாஸ்கர சேதுபதி சிருங்கேரி ஜகத்குரு நரசிம்ம பாரதிக்கு.

இந்த 'அரசியல் நாடகத்தை' யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அரண்மனைக் காரியஸ்தர்களுக்கு ஜகத்குருவின் நோக்கம் எதுவுமே புரியவில்லை. பிரமை பிடித்தது போல உட்கார்ந்திருக்கிறார்கள். ஆனால் பாஸ்கர சேதுபதியோ முகமலர்ச்சியுடன் எல்லாக் காரியங்களையும் செய்ததைப் பார்த்து அதிசயித்துப்போய் நின்றுவிட்டார்கள்.

அழைத்து வாருங்கள் இளவரசரை

பார்த்தார் ஜகத்குரு! நாடு தன் கையில் வந்து விட்டது. இனி...!

மன்னன் இல்லாமல் நாடு இருக்கலாமா?

ஒரு துறவி நாட்டை எப்படி ஆள முடியும்?

'அழைத்து வாருங்கள் இளவரசரை' ஆணை பிறந்தது ஜகத்குருவிடமிருந்து. 14 வயது முத்துராமலிங்கத்தை பாஸ்கர சேதுபதியின் மகனை - அழைத்து வந்தார்கள்.

'இனி நீ முத்துராமலிங்கம் அல்ல - முத்துராமலிங்க சேதுபதி' என்று கூறிக்கொண்டே, அப்போதே அந்த இடத்திலேயே அவருக்கு முடி சூட்டினார் ஜகத்குரு. செய்வதறியாது திகைத்துப் போன முத்துராமலிங்க சேதுபதி ஜகத்குருவின் பாதங்களில் விழ - அப்படியே அவரை எடுத்து ஆலிங்கனம் செய்து வாழ்த்தி சிம்மாசனத்தில் இருக்க வைக்கிறார்.

திகைப்பு நீங்கிய மக்களும், காரியஸ்தர்களும் - பழைய மன்னர் பாஸ்கர சேதுபதியும் வாயாலும் நெஞ்சாலும் புதியவரை வாழ்த்த - இப்படி ஒரு சமஸ்தானத்தின் வாரிசு சப்தமில்லாமல் மாறுகின்றது.

ஒரு பெரிய காரியத்தை ஆரவாரமில்லாமல் முடித்த பெருமை ஜகத்குருவின் முகத்தில் தெரிகின்றது.

பாஸ்கர சேதுபதிக்கு மாதம் ஐயாயிரம் ரூபாய் கொடுத்துவிட வேண்டும் என்பது குருவின் கட்டளை. 'அரச ஊதியமாக'

அப்பணத்தைப் பெற்ற பழைய மன்னர் தன் பரிவாரங்கள் புடை சூழ ராமேஸ்வரம் சென்று விடுகிறார்.

ஒரு நாளைக்கு ஐயாயிரம் செலவு செய்யும் பாஸ்கர சேதுபதிக்கு இந்தப் பணம் போதுமா? என்பது இப்போது பிரச்சனை அல்ல. ஆனால் **குருவின் வாக்குக்குக் கட்டுப்பட்டு ஒரு பெரிய சமஸ்தானத்தையே தாரை வார்த்துக் கொடுத்த அந்தப் பெரிய மனம் இருக்கின்றதே அது யாருக்கு வரும்?**

அதன் பின் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட பாஸ்கர சேதுபதி சிங்கம்பட்டி, ஊர்க்காடு போன்ற தம் உறவினரின் ஜமீன்களுக்கெல்லாம் சென்று இறுதியில் 1904–இல்* கல்லிடைக்குறிச்சி வருகிறார். அங்கு வடமாள்புரம் முத்தையா பாகவதரிடம் 'மோகன' ராகம் கேட்க வேண்டும் என்று விரும்புகிறார். அவர் மோகனம் பாட அப்படியே அதில் மயங்கிய சேதுபதி தன் நவரத்தின மோதிரத்தை (ரூபாய் 10 ஆயிரம் அப்போது பெறும்) அவருக்குச் சன்மானமாக அளிக்க அப்போதே அவர் ஆவியும் பிரிகின்றது.

இப்படித் தன்னுடைய ஜகத்குருவுக்குத் தன்னையும், நாட்டையும் தாரை வார்த்துக் கொடுத்த பாஸ்கர சேதுபதியின் கொடை உள்ளம் யாருக்க வரும்? குகன் அவர்கள் 1988 இல் எழுதி 1996 இல் நூலாகத் தந்துள்ளார் இதற்கு முந்தைய சான்றுகள் ஏதும் உள்ளதா என்று தேடினேன்.

நஞ்சன கோடு ஸ்ரீ கண்ட சாஸ்திரி

1925 இல் ஸ்ரீ வாணி விலாஸ முத்ராசாலாவில் ஸ்ரீரங்கத்தில் அச்சிடப்பட்ட நூல் ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதா நந்த சிவாபி நவ நரணம் ஹபார தீஸ்வாமிகள் திவ்ய சரித்திரம், 530 பக்கங்களுக்கு மேலானது.

ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸம்ஸ்தா ஏஜெண்ட் பிரம்மஸ்ரீ ஸதாசாரப் ரவர்த்தன ப்ரவீண குருஸோவாப்ரவீண நஞ் சனகோடு ஸ்ரீ கண்ட சாஸ்திரிகளால் இயற்றப்பட்டது அந்த நூல். அதில் பக்கம் 253 முதல் 263 வரை குறிப்பிட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இதோ !

'சிருங்கேரி சுவாமியவர்கள் மதுரையில் வாசம் செய்து கொண்டிருக்கும் காலத்தில் சேதுபதிகள் வசம்த்தைச் சேர்ந்த

* 1903 என்பதே சரியானதாகும்.

ராமநாதபுரத்திய ராஜரான பாஸ்கர சேதுபதி என்பவர் அவர்கள் தர்சனம் செய்து ஒரு தினம் மதுரைப்பட்டணத்திலுள்ள ஸகல ஜனங்களுக்கும் அவர்களுடைய தர்சன ஆனந்தம் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று உத்தேசித்து அவர்களை திவ்வியமான புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட சுவர்ண பல்லக்கில் ஆரோகணம் செய்வித்து இராஜவீதிகளிலும் மற்றுமநேகவிடங்களிலும் தோரணங்களால் அலங்காரம் செய்வித்து மகாவிபவத்துடன் உத்ஸவம் நடத்தி வைத்தார். அன்று தினம் அங்கு சேர்ந்திருந்த ஜனங்கள் கணக்கிடமுடியாததாயிருந்தது. ஆபாலவிருந்தரும் ஸ்ரீசுவாமிகளை தர்சனம் செய்து ஆனந்தித்தில் மூழ்கி இந்த ஆனந்தத்திற்கு காரணபூதராயிருந்த சேதுபதியை அநேகவிதமாய் சிலாகித்தார்கள். ஸ்ரீசுவாமிகள் சேதுயாத்திரை நிமித்தமாய் வந்திருக்கிற சங்கதியைத் தெரிந்துகொண்ட பாஸ்கர சேதுபதிராஜர் தனக்கு ஸ்வாதீனமாயுள்ள தேசத்திற்கு விஜயம் செய்து உத்தேசிக்கப்பட்டிருக்கும் சேதுயாத்திரையை முடித்துக்கொண்டு தன் வாசஸ்தானமாகிய ராமநாதபுரத்தில் சாதுர்மாஸ்ய சங்கல்பம் சாத் நவ ரத்திரி பூஜாதிகளான தர்மங்களை நடத்தி தனக்கும் தன்னுடைய பிரஜைகளுக்கும் சம்பூர்ணமாக அனுப்பியும் செய்து முன்னுக்கு விஜயம் செய்யவேண்டுமென்று ஸ்வாமிகளவர்கள் சன்னிதானத்தில் விக்ஞாபனம் செய்துகொண்டார்.

அந்தப்படியே ஸ்ரீசுவாமிகளவர்கள் சவாரி மதுரையிலிருந்து பிரயாணப்பட்டு மார்க்கத்தில் ராமநாதபுரம் ராஜருக்கு சேர்ந்த கிராமங்களில் ஆங்காங்கு வாசம் செய்து இராமேசுவர க்ஷேத்திரத்தில் பிரவேசித்தார்கள். இங்கேயும் முந்திய நிபந்தனைப்படி இராமநாதசுவாமி தேவாலயத்தில் 3வது பிரகாரத்தில் வஸதி செய்து கொண்டார்கள். ராமநாதபுரம் எல்லையில் சுவாமிகள் பிரவேசம் செய்தது முதல்கொண்டு அவர்களுக்கும் அவர் பரிவாரங்களுக்கும் வேண்டிய எல்லாவித அனுகூலங்களும் ராமநாதபுரம் ராஜனாலேயே கல்பிக்கப்பட்டிருந்தது. இன்னம் ஸ்வாமிகள் அந்த ராஜரின் சமஸ்தானத்தை விட்டு வெளியே போகும் வரையிலும் எந்த தினத்திய பிக்ஷை இதர சிஷியரால் நடத்தப்பட வில்லையோ அந்த தினத்தைச் சேர்ந்த **சமஸ்தானத்திய சிலவுக்காக இருநூத்தி**

ஐம்பது (250) வீதம் தன் கஜானாவிலிருந்து கொடுக்கத் தகுந்த தென்று சங்கல்பித்து பாஸ்கர சேதுபதி அந்தப்படியே நடத்தினார்.

ராமேசுவரத்திலிருந்துசேதுஸ்நானத்திற்காக தனுஷ்கோடிக்கு விஜயம் செய்து அங்கே மூன்று நாள் வாசம் செய்து விதிப்படி சேது ஸ்நானம் செய்து சமஸ்தான வழக்கப்படி அந்த க்ஷேத்திரத்தில் நடத்த வேண்டியதான தர்மங்களை நடத்தி பிற்பாடு சம்ஸ்தானத்தில் ஆசிரிதராயிருந்த வித்வான்களுக்கும் மற்றபரிஜனங்களுக்கும் அவரவர்கள் தாரதம்யத்தை அனுசரித்து சுமார் 30 அல்லது 40 ஜனங்களுக்கு 300 ரூ முதல் 1000 ரூபாய் வரையில் ஸ்திரமான ஜீவனம் ஏற்படுத்திக் கொள்வதற்காக கொடுக்கும்படி ஆக்ஞை செய்து அந்தப்படி நடந்த பிறகும் மறுபடி ராமேசுவரத்தில் ஸ்ரீராமனாத ஸ்வாமிக்கு சுவாமிகள் தாமே விசேஷமாக பூஜை செய்து அந்த க்ஷேத்திரத்தில் சில தினங்கள் வாசம் செய்து அங்குள்ள சிக்ஷிய மண்டலிக்கு அனுக்கிரஹம் செய்து சேதுபதிகளின் பிரார்த்தனைப்படி ராமநாதபுரம் வந்து சேர்ந்தார்கள். இங்கே சாதுர்மான்ய சங்கல்பமும் நவராத்திரியில் நடத்தவேண்டிய சாரதா பூஜை உத்ஸம் முதலியவைகளை இங்கேயே நடத்தினார்கள்.

சேதுபதிகளுடைய அரண்மனையில் வம்சபாரம் பர்யமாய் அவர்களால் ராஜராஜேசுவரி அம்மனுடைய ஆராதனையும் நடத்தப்பட்டுக்கொண்டு வந்தது. இது சம்பந்தமாய் நவராத்திரி காலத்தில் விசேஷமாக பூஜை உத்ஸவாதிகளெல்லாம் நடத்தப்படத் தக்கதாயிருந்தது. இந்த உத்ஸவம் ஸ்வாமிகளவர்கள் ராமனாதபுரத்தில் வாசம் செய்து கொண்டிருந்த காலத்திலும், பாஸ்கர சேதுபதிகளால் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டது. ஆனால் ராஜராஜேசுவரி அம்மன் பூஜையும் அங்கே நடத்தப்படுகிற உத்ஸவங்களும் பிராம்மணர் மூலமாய் நடத்தப்படத்தக்கதாயிருந்ததே தவிர மற்றவர் மூலமாக நடத்தப்படுவதாயிருக்கவில்லை. இப்படியிருந்தாலும் நவராத்திரியில் ஒரு தினம் ஸஹஸ்ர பூஜை என்ற பெயரால் ஆயிரம் ஜீவ ஜந்துக்களை அம்மன் தேவஸ்தானத்தில் பலியாகக் கொடுக்கக்கூடிய ஒரு வழக்கம் வெகு காலமிருந்து நடந்து வந்துகொண்டிருந்தது.

இந்த விஷயம் சுவாமிகளுக்கு தெரிந்தவுடன் இந்த குரூரமான நடத்தையை நிறுத்தவேண்டுமென்று சுவாமிகளவர்கள்

சித்தத்தில் தோன்றிற்று. எந்த சந்தர்ப்பத்திலும் தம் அபிப்பிராயத்தை திடீரென்று வெளியிடக்கூடிய சுபாவம் சுவாமிகளிடத்தில் இருக்கவில்லை. இப்படியிருக்கையில் ஒரு நாள் அவர்கள் தர்சனத்திற்காக வந்த பாஸ்கர சேதுபதிகள் தானாகவே அவர்களிடத்தில் மேற்கண்ட ஸஹஸ்ர பூஜா பிரஸ்தாபத்தை அபிப்பிராயம் தனக்கு இருந்தாலும் வெகுகாலமிருந்து வந்திருக்கும் இந்த வழக்கத்தை நிறுத்துவதற்கு தனக்கு தைரியமில்லை என்றும் சுவாமிகளவர்கள் அனுமதி கொடுத்தால் தான் தைரியமாய் அந்த குரூர காரியத்தை நிறுத்தி விடுவதாகவும் அறிவித்துக்கொண்டார்.

சுவாமிகளிடத்தில் தெரிவிக்கவே

பாஸ்கர சேதுபதிகள் தாமாகவே வந்து பிரஸ்தாபம் செய்து தம்முடைய அபிப்பிராயத்தை சுவாமிகளிடத்தில் தெரிவிக்கவே இந்த விஷயத்தில் முதலிலேயே யோசித்திருந்த சுவாமிகளுக்கு பகவத் சங்கல்பத்தினாலேயே தமக்கு முதலில் சங்கல்பம் பிறந்ததென்றும் அதை பலப்படுத்துவதற்காகவே ராஜன் மனதிலும் இம்மாதிரி சங்கல்ப முண்டாகி அவராகவே தம்மிடத்தில் தெரிவித்துக்கொள்ளும்படியான சந்தர்ப்பம் நேர்ந்ததென்றும் அறிந்து வெகுவாக சந்தோஷித்தார்கள். அப்படியிருந்தும் வெகு காலமிருந்து ஒரு காரியம் நடந்து வந்ததாக தமக்கு தெரியவந்தால் அந்த காரியம் ஆலோசனையின் மேல் நடந்திருக்கட்டும், ஆலோசனையில்லாமல் நடந்திருக்கட்டும் அந்த காரியத்தை திடீரென்று உடனே நிறுத்துவதற்கு சுவாமிகள் பிரயத்தினப்படுகிறதில்லையாகையால் ராஜரால் கேட்கப்பட்ட பிரச்னத்துக்கு மறுநாள் உத்ரம் சொல்லுவதாக சொல்லி அனுப்பினார்கள்.

அன்று ராத்திரி மடத்தில் அம்மன் பூஜை செய்து இராமநாதபுரம் ராஜரின் அரண்மனையில் வாமமார்க்கத்தை அனுசரித்து நடந்து வருகின்ற பூஜையை நிறுத்தி தக்ஷிணமார்க்கத்தில் நடக்கும்படி செய்வது ஈசுவர சம்மதமாயிருந்தால் அந்த விஷயத்தில் அன்று ராத்திரி ஸ்வப்னத்தில் சூசனை கேட்கவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். இந்த மகானுபாவன் எப்போதும் ஸ்வப்பிரயோஜனத்தை விட்டு லோகஹிதத்தை கோரக்கூடியவராயிருந்ததினால் இவர் பக்திக்கு அனுகுணமாக அன்று ராத்திர ஸ்வப்னத்தில் ஈசுவர சம்மதி ரூபமான

சூசனை இங்கே கீழே குறித்து விபரிக்கப்பட்டிருக்கிற பிரகாரம் உண்டாயிற்று.

ஆனந்தம் உண்டாகி

பிராமணரல்லாத ஒரு ஸ்திரீ தன் ஹஸ்தங்களில் ஒன்றில் ஒரு பானபாத்திரமும் மற்றொன்றில் ஸம்மார்ஜனீயும் பிடித்துக்கொண்டு மளினமான வஸ்திரங்களை தாரணம் செய்துகொண்டு சுவாமிகள் எதிரில் வந்து ‘நான் புறப்பட்டுப்போவேன் என்று சொன்னதாயும் அதே காலத்தில் கொஞ்ச காலம் கழிந்து ஸ்வாலங்கார பூக்ஷிதையான மற்றொரு சுமங்கிலி தான் வந்தேன் என்று சொன்னதாயியும் சுவாமிகளின் மனதில் கோசரமாயிற்று. இந்த ஸ்வப்னத்தை கண்ட அவர்களுக்கு வெகுவாக ஆனந்தம் உண்டாகி அப்போதே இராமநாதபுரம் ராஜா் அரண்மனையில் நடந்து வந்த ஆயிரம் ஜீவஜந்துக்களை ஹிம்சை செய்கிற குரூரமான கர்மத்தை நிறுத்தி ஸாத்வீக பூஜை முதலியவைகளை நடத்தும்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

மறுநாள் அதிக ஆதுரத்துடன் ஸ்வாமிகளுடைய ஆக்ஞையை தெரிந்துகொள்வதற்காக வந்த ராஜரிடத்தில் அவர்களுடைய ஸ்வப்ன சமாசாரத்தையும், அதற்கு முன்னதாக அவர்களுக்குண்டாயிருந்த சங்கல்பத்தையும் அதற்கு அனுகுணமாக ராஜா் வந்து தாமாகவே பிரஸ்தாபம் செய்தது முதலிய சங்கதிகளெல்லாம் விஸ்தாரமாக தெரிவித்து வாமமார்க்கத்தை அனுசரித்து தேவியை பூஜை செய்வதினால் உண்டாகக்கூடி பலனையும், தக்ஷிணமார்க்கத்திரமாய் செய்யும் பூஜையின் பலனையும், ராஜருக்கு உபதேசம் செய்து அல்ப பலத்தைக் கொடுக்கக்கூடிய வாமமார்க்கபூஜை வெகுகாலமிருந்து நடந்து வந்திருந்தாலும் அதை விட்டு அதிகமான பலனை கொடுக்கக்கூடிய ஸாத்வீக பூஜையை சந்தேகமில்லாமல் நடத்தலாமென்று உத்தரம் கொடுத்தார்கள்.

அந்த படி சம்ஸ்தானத்திய வித்வான்களை அனுப்பி ராஜராஜேசுவரி மூர்த்தியின் கலாகர்ஷணம் செய்வித்து வேதோதவிதானப்படி ஸ்ரீ சக்கிர யந்திரத்தை ஸ்தாபித்து ராஜராஜேசுவரி அம்மனுக்கு சாபிரதிஷ்டை செய்வித்து ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் தாம் விஜயம் செய்து, பூஜை செய்து

இந்த தேவாலயத்தை அரண்மனை ஆபரணத்தில் இருந்து வேறுபடுத்தி, வேறு ஆபரணம் கல்பித்து இந்த அம்மன் நித்பபூஜாதிகள் ஸ்திரீமாக நடப்பதற்காக அந்த ராஜரால் (12 ஆயிரம்) பன்னிரண்டாரயிரம் ரூபாய் வருமானமுள்ள ஒரு கிராமத்தை அம்மன் தேவாலயத்திற்காக தானமாக கொடுப்பித்து ஸ்ரீசம்சஸ்தானத்தில் இருந்து அவ்விடத்திய பூஜைக்காக 2 பிராம்மணர்கள் நியாமகம் செய்து ராஜருக்கு பிரஜைகளுக்கும் அனுக்கிரஹம் செய்ததுமல்லாமல் வைதீக மார்க்கத்தையும் ஸ்தாபனம் செய்தார்கள்.

இராநாதபுரம் பாஸ்கர சேதுபதி ராஜா வெகுமேதாவியாய் இருந்தார். இவருடைய கொடை எங்கும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, இவர் தம்முடைய திரவியங்களை எல்லாம் தர்மமார்க்கத்திலேயே முக்காலே மூணுவீசமும் சிலவு செய்தார் என்று தாராளமாய் சொல்லலாம். இந்த ராஜருக்கு ஸஹஜமாய் இருந்த உதாரதைக்கு இவருக்கு இருந்த வருமானம் போதாததையாய் இருந்தது. இந்த காரணத்தால் ஏராளமாய் கடன் செய்தவராய், பரம்பரையாய் வந்திருந்த தன் ராஜியத்தை பிந்தி வரப்போகிற தன் பிரநிதிகளுக்கு நிற்கும்படி செய்கிறார் என்ற ஸம்பவம் அந்த காலத்தில் தோன்றும்படியாய் இருக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தை அநேகர் முகத்தில் இருந்து ஸ்ரீசுவாமிகள் அறிந்து சேதுராஜ்யம் புராதானமானது அதை நிற்கும்படி செய்வது தமக்கு அவசிய காரியமென்று நிச்சயித்துக்கொண்டார்கள்.

குருதக்ஷிணையாக ராஜியத்தை

ஒரு நாள் பாஸ்கர சேதுபதிகள் தம் தர்சனத்திற்கு வந்த காலத்தில் அவர் தமக்கு செய்த சத்காரங்களினாலும் தம் விஸயத்தில் ராஜர் செய்து வருகிற பக்தியினாலும் சந்துஷ்டராக இருப்பதாயியும் ஔதார்ய விஷயத்தில் கர்ணனிடத்தில் இருந்ததாக பாரதத்தில் சொல்லியிருப்பதை காட்டிலும் எந்த பாகத்திலும் உம்மிடத்தில் உள்ள ஔதார்யம் (மிகுகொடை; மேன்மை, கொடைப்பண்பு) குறைந்திருப்பதாக தெரியவில்லை ஆகையால் இப்பேர்பட்ட உதாரசீலரான உம்மிடத்தில் எந்த வஸ்துவையும் அபேக்ஷிப்பதற்கு சங்கோசப்பட வேண்டிய அவசியமில்லை என்று தோன்றுவதால் நமக்கு குருதக்ஷிணையாக உங்கள் ராஜியத்தை கொடுக்கவேண்டும் என்று சுவாமிகள் அவர்கள் கேட்டார்கள்.

இந்தப் பிரகாரம் அவர்களிடமிருந்து வந்த ஆக்ஞையை (கட்டளை) கேட்ட அந்த ராஜனுடய சந்தோசத்திற்கும் ஆச்சர்யத்திற்கும் கரையில்லாமலாய் விட, அப்போது உடனே எழுந்து அவர்கள் ஆக்ஞையை அனுசரித்து தன் ஆதினத்தில் இருக்கும் தேசத்தை அவர்களுக்கு குருதக்ஷிணையாக சமர்பணம் செய்கிறேன் என்று சொல்லி இந்த மகாவீர புருஷனான ராஜன் நமஸ்காரம் செய்தான். மறுதினம் ராஜர் அரண்மணையில் அவர்கள் பிரஜைகளையும், அவர்கள் அதிகாரிகளையும் சேர்க்கும்படி ராஜருக்கு தெரிவித்து ஸ்ரீசுவாமிகள் அவர்கள் தம் பரிவாரங்களுடன் அரண்மனைக்கு விஜயம் செய்து அங்கு கூடியிருந்த சபையில் ராஜகுமாரரை வரவழைத்துக்கொண்டு குருதக்ஷிணையாக தம் சிஷ்யரான பாஸ்கரசேதுபதிகளால் தமக்கு ஸமர்ப்பணம் செய்யப்பட்ட இராமநாதபுரம் ராஜ்யத்தை அவர் குமாரரான ராஜராஜேஸ்வர முத்துராமலிங்க சேதுபதிகளுக்கு அனுக்கிரஹபூர்வமாக கொடுத்திருப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள். இந்த சம்விதானத்தை அறிந்த ஆபாலவிருந்தரும் அன்றைய தினம் அனுபவித்த சந்தோசத்தை லோகஹித்தை மாத்திரம் எதிர்பார்த்திருக்கும் ஸ்ரீசுவாமிகள் அவர்களையும் மற்றும் அபூர்வமான மனோநிச்சயமுள்ள ராஜனையும் ஸ்தோத்திரம் செய்த ரீதியை இங்கு விவரிப்பதற்கு சாத்தியமில்லை.

பரம அனுக்கிரஹம்

இந்தப் பிரகாரம் சேது ராஜ்யத்தை உத்தாரணம் செய்து பாஸ்கர சேதுபதி ராஜரால் செய்யப்பட்ட அதி நிர்ப்பந்தத்திற்கு உட்பட்ட அவர்கள் குடும்பக்ஷேமார்த்தமாக ஸ்ரீசாரதா சந்திரமௌளீச்வர தேவதா பூஜா ஆராதனாதிகளுக்கு உபயோகமாகும்படி ராஜனால் தானசாஸன மூலமாய் கொடுக்கப்பட்ட 5 கிராமங்களை அங்கீகரித்து பாஸ்கர சேதுபதிகளுக்கு ரத்னமயமான சிரோபூஷணத்தை ஸம்ஸ்தானத்திலிருந்து சேர்ப்பித்து அந்த ராஜருக்கும் ராஜ குடும்பத்தாருக்கும் பரம அனுக்கிரஹம் செய்து அங்கிருந்து பிரயாணமானார்கள்[7].

7. நஞ்சன்கோடு ஸ்ரீகண்ட சாஸ்திரி, ஸ்ரீஸச்சிதானந்த சுவாமி, நரசிம்ம பாரதி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம் 1925, பக்கம் 253 – 263.

தனது சமஸ்தானத்தையே சிருங்கேரி ஸ்வாமிகளிடம் தானமாகத் தந்தவர் பாஸ்கர சேதுபதி என்று எவரும் மறுத்திட முடியாத வரலாற்று உண்மை.

பொற்காலஆட்சி

இராமநாதபுரம் கோவில்களுக்கு மட்டுமின்றி, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், திருப்பரங்குன்றம், பழனி, முருன் ஆலயங்களிலும் சிதம்பரத்தில் நடராசர் ஆலயத்திலும், காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலிலும், உச்சிகாலக் கட்டளைகள் ஏற்படுத்தியவர் பாஸ்கர சேதுபதி[8].

சென்னை கபாலீஸ்வரர் கோயில் இறைவர் பவனி வருவதற்காகவும், காளையார்கோவில் கோவிலுக்கும் புதிய பல்லக்குகளைச் செய்து கொடுத்தவர் பாஸ்கர சேதுபதி இராமேஸ்வரம் இராமசுவாமி உலா வர வெள்ளித்தேர் வழங்கினார்.

இராமநாதபுரம் ராஜேஸ்வரி அம்மன் பயன்பாட்டிற்காக சிம்மவாகனம் அமைத்து அதனை முழுவதுமாக தங்கத் தட்டினால் நிறைவு செய்து அகமகிழ்ந்தவர் பாஸ்கர சேதுபதி, 1.11.1902 இல் பாஸ்கர சேதுபதி காலத்தில் தான். இராமேஸ்வரம் கோயிலின் குடமுழுக்கு முதலாவதாக நடைபெற்றது.

ஜமீன்தாரி ஆட்சிக்காலத்தில் பாஸ்கர சேதுபதியின் ஆட்சிக்காலமே பொற்காலம் என்பார் அண்ணன் எஸ்.எம். கமால்[9].

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம் திருவுத்தரகோசமங்கைத் தலபுராணம் செய்யுளும் வசனமும் நூல் 1968 இல் தேவஸ்தான வெளியீடாக 98 பக்கங்களில் வந்துள்ளது. அதில் பக்கம் 150 இல் பாஸ்கர சேதுபதி அவர்கள் திருவுத்தர கோசமங்கை கோயிலுக்கு அளித்த பெரிய பச்சை

8. எஸ்.எம்.கமால், சேதுபதி மன்னர் வரலாறு, இராமநாதபுரம், 2003, பக்கம் 101.

9. எஸ்.எம்.கமால் (15.10.1928 – 31.5.2007) முற்கூறிய நூல் பக்கம் 104

ரெத்தின முகப்பு வைரப்பூக்களும் உள்ள தங்க பெல்ட் சுமார் விலை மதிப்பு ரூ. 89625 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சமயப் பொறை

சேதுபதி அவர்கள் சமயப்பொறை கொண்டவர்களாகத் திகழ்ந்தனர் சைவமரபினை சேதுபதிகள் பின்பற்றினாலும் திருமங்கை ஆழ்வார் மங்கள சாசனம் செய்ய திருப்புல்லாணிப் பெருமாள் திருக்கோயில், இராமநாதபுரம் கோதண்டராமசாமி பெருமாள் ஆலயம், அபிராமம் வரதராஜ பெருமாள் கோவில், ராஜசிங்கமங்கலம் கரிய மாணிக்கப் பெருமாள் ஆலயம், தொண்டி உந்தி பூத்த பெருமாள திருக்கோயில்களுக்கும் சேதுபதிகள் ஆதரவு அளித்தனர்.

தேவகோட்டை நகருக்கு நேர் கிழக்கு எட்டு மைல் தொலைவில் உள்ள (5 மைல் 8 கி.மீ.) அனுமந்தக்குடி என்ற (மணிமுத்தாறு ஆற்றின் வடகரையில் உள்ளது) ஜீனேந்திரமங்கலம் என்ற ஊருக்கு சமணர்களுக்கு உதவிய செய்தி உள்ளது. (ஓலைச்சாசனத்தைக் கண்டுபிடித்தவர் நண்பர் திரு. வேதாச்சலம் கல்வெட்டு இதழ் எண். 18.)

வள்ளல் சீதக்காதி கிழவன் சேதுபதி அமைச்சரவையில் அமைச்சராக இருந்தார். திருமலை ராகுநாத சேதுபதி வழங்கிய செப்பேட்டில் **நமது** காவல் குடியினரரான துலுக்கர்? என்ற தொடரில் நமது என்ற செப்பேட்டுச் சொல் முஸ்லிம்களிடம் சேதுபதிகள் கொண்டிருந்த நேயத்தைத் தெரிந்து கொள்ள உதவுகிறது[10]. அனுமந்தக்குடி, காரேந்தல், நாராணமங்கலம், பள்ளிவாசல்களுக்கும், இராமேஸ்வரம், இராமநாதபுரம், கீழக்கரை, ஏறுபதி ஆகிய ஊர்களில் இஸ்லாமியப் புனிதர்களது அடக்கம் செய்யப்பட்ட தலங்களுக்கு வரும் பயணிகள் உணவு பெறுவதற்கும் நுந்தாவிளக்கு தர்மத்திற்கும் இறையிலியாக பல ஊர்களை வழங்கினார்கள் சேதுபதிகள்[11]. இராமேசுவரம் இபுராகிம் மரைக்காயர் பாஸ்கரசேதுபதியின் இனிய நேசராக விளங்கினார்.

---

10. இராமேசுவரம் குட முழுக்கு மலர் 1974, பக்கம் 77

11. எஸ்.எம்.கமால், சேதுபதி மன்னர் செப்பேடுகள், மதுரை. 1992, பக்கம் 15

ஜவ்வாதுப்புலவர்

எமனேசுவரம் ஆசுகவி ஜவ்வாதுப் புலவரைத் தமது அரசவைப் புலவராக அமரச் செய்தவர்கள் சேதுபதிகள்.

முத்துப்பேட்டையில் கிறிஸ்தவ தேவாயத்திற்கு முத்துராமலிங்க சேதுபதி கொடை அளித்தார்[12].

பாஸ்கரசேபதி மன்னரது சென்னை வாழ்க்கையை என்றென்றும் நினைவுபடுத்தி கொள்ளத்தக்க அறக்கொடை ஒன்றையும் தமிழ்த் தொண்டாக அமைத்தார். அவர் பயின்ற சென்னை தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் அந்த அறக்கட்டளை இன்றும் உள்ளது. தமிழகத்தில் ஆண்டுதோறும் இளநிலை பட்டப்படிப்பில் தமிழ்த் தேர்வில் – மாநில அளவில் சிறப்பாக தேர்ச்சி பெறுகின்ற கல்லூரி மாணவருக்கு பொற்பூவை (Gold medal) அந்த அறக்கட்டளை வழங்கி சிறப்பித்து வருகிறது. பாஸ்கர சேதுபதி மன்னரது "பொற்பூ பெற்றவன்" என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் பல மாணவர்கள் இன்றும் இருக்கின்றனர்.

பைபிள் பற்றிய பொழிவு

ஒரு நாள் மதுரை அடுத்த பசுமலை கிறிஸ்தவ உயர்நிலைப்பள்ளி விழா ஒன்றிற்கு மன்னர் பாஸ்கர சேதுபதி வந்தார். அப்போது அங்கு குழுமியிருந்த கிறிஸ்தவ குருமாரும் கல்லூரி, பள்ளி ஆசிரியர்களும் மன்னரது பேச்சை கேட்பதற்கு பெரிதும் விளைந்தனர். மன்னரும் விவிலியத்தில் புதிய ஏற்பாடு அல்லது பழைய ஏற்பாடு ஆகிய இரண்டிலும் எதைப்பற்றி பேசிவேண்டும் என அவர்களிடம் வினவினார். எந்தத் தலைப்பில் பேசினாலும் தங்களுக்கு மகிழ்ச்சிதான் என அங்கிருந்தவர்கள் கூறினர். மன்னர் "இரண்டு ஏற்பாடுகளுக்கும் உள்ள ஒற்றுமை – வேற்றுமை பற்றி இரண்டு மணி நேரம் ஆங்கிலத்தில் நீண்ட உரையாற்றினார். குழுமியிருந்தவர்கள் வியப்பு மேலிட்டவர்களாக சொல் புதிது. சுவை புதிது என அவரது பேச்சை மிகவும் சுவைத்து மகிழ்ந்தனர். இந்து சமய சான்றோர், ஒருவர், கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளின்

12. செ.இராசு, சேதுபதி செப்பேடுகள், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1994, பக்கம். XViii

அடிப்படைகளை வெவ்வேறு பரிமானங்களில் விளக்கம் செய்வது வியப்பளிக்கும் செயல்தானே.

பாஸ்கர சேதுபதி பிற சமயத்தாரை பேதமுடன் பார்க்காத பண்பாளர் என்பதை அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் சில புலப்படுத்துகின்றன. மிஸ்ப்ரீத் என்ற ஆங்கில கத்தோலிக்கப் பெண்மணிக்கு சென்னையில் நடைபெற்ற திருமணத்தில் கலந்து சிறப்பித்தார். இந்த மணவிழா தொடர்பாக தேவாலயத்தில் நிகழ்ந்த இரவு நேரப் பிரார்த்தனையிலும் அவர் கலந்துகொண்டார். இன்னொரு சிறப்பு செய்தி அந்த திருமணம் நிகழ்ந்த இரவு சிவராத்திரி இரவாகும். எனவே மன்னர் அன்று அந்தத் திருமணத்தில் முழு பட்டினியுடன் கலந்துகொண்டதாகும்.

அதே ஆண்டு நாட்குறிப்பில் மன்னரது பொருளுதவியினால் இங்கிலாந்தில் பார் – அட்லா படிப்பை முடித்து சென்னை திரும்பிய தானியேல் (தஞ்சை) என்ற இளைஞர் சென்னையில் மன்னரைச் சந்தித்து நன்றி தெரிவித்ததும் காணப்படுகின்றது. திருமதி எச்.ஜில்வா என்ற ஆங்கிலப் பெண்மணி இராமநாதபுரம் அரண்மனையில் கண்காணிப்பாளராக இருந்து தமது 65வது ஆண்டில் மரணம் அடைந்த பொழுது மன்னர் மிகுந்த மன வேதனை அடைந்ததுடன் அந்த பெண்மணி மீது கொண்டிருந்த பாசத்தின் அடையாளமாக அவரை அடக்கம் செய்த இராமநாதபுரம் சி.எஸ்.ஐ. தேவாலய கல்லறையில் நினைவுக்கல் ஒன்றையும் நாட்டி வைத்தார்.

அந்த தேவாலயத்திற்கு அழகிய சரவிளக்கு ஒன்றையும், ஏற்கனவே மன்னர் வழங்கியிருந்தார். இன்றும் அந்த அழகிய விளக்கு உபயோகத்தில் உள்ளது. இந்த நினைவுக்கல் சிஎஸ்ஐ வளாக கல்லறையில் தெற்குச் சுவற்றில் பதிக்கப்பட்டுள்ளது என்பார் அண்ணன் எஸ்.எம்.கமால்.

தமிழ்ப்புலவர்கள் – தமிழ் வளர்ச்சி – இந்து சமய ஆலயங்கள் – சமண – இஸ்லாமிய – கிறிஸ்தவருக்கு உதவிய செய்திகள் இன்னும் சொல்லப்போனால் விரிவாகும் என்பதால் நிறுத்திக் கொண்டு இனி விவேகானந்தர் சிகாகோ பயணத்திற்கு பாஸ்கரசேதுபதியின் பங்களிப்பு எவ்வளவு என்பதனை விரிவாக பார்ப்போம்.

சுவாமி விவேகானந்தர் சிகாகோ செல்ல...

ஏ.வடிவேலு என்பவர் 1915 – 1928 இல் சி.சி.லோகநாதம் பிரதர்ஸ் சென்னையிலிருந்து 773 பக்கங்களில் அச்சிட்டு வெளியிட்ட நூல் The Ruling Chiefs Nobles & Zamindars of India. *திருவாங்கூர் மற்றும் மைசூர் திவானாக இருந்த* V.P. *மாதவராவ் அந்நூலுக்கு முன்னுரை எழுதியிருப்பார். அந்த நூலில் பக்கம் 567 இல் ராமநாதபுரம் ராஜவம்சம் குறித்து எழுதத்துவங்கி 571 இல் நிறைவு செய்வார்*[1]. *(இடை இடையே நூலில் ஒரே பக்க எண்ணிக்கை* a, b, c *என்று வரும்)*

அதில் பக்கம் 570 – 571 இல் பாஸ்கர சேதுபதி குறித்து எழுதப்பட்டுள்ள விஷயங்கள் இதோ :

Sri Rajah Bhaskara Sethupathi was born in 1863. He acquired the first rudiments of learning under an Englishman, Mr. Vernor, and then joined the Christian College at Madras. Before he could take the degree, he came of age, and the Government of Madras called upon him to assume charge of his estate. All his teachers discerned in him a notable love of hard work for its own sake. **As became a promising young nobleman who was destined to make a mark in the annals of south India.**

He spared neither time nor troble in equipping himself for the carrying out of his high aims. He left the college with the reputation of being one of its brightest ornaments. He was an effective speaker, terse, clear, and vigorous at all times, and his public utterances were always characterised by remarkable power. Those who had the privilege of a personal acquaintance with him, never failed to derive pleasure whenever be spoke on any question of importance. **The dignity and courtesy which, as a rule, graced his manners,**

---

1. *இதே ஆசிரியர் ஏ.வடிவேலு 1907 இல் சென்னையிலிருந்து* The Aristo Cracy of Southern India *எனும் 325 பக்க நூலினையும் தந்துள்ளார். இந்திய சமஸ்தானங்களை நிராகரித்து விட்டு இந்திய வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியாது என்று நண்பர் முகில், இந்திய சமஸ்தானங்களின் வரலாறு அகம்புறம், அந்தப்புரம் எனும் நூலை 2009 இல் 1392 பக்கங்களில் தந்துள்ளார். தெற்கு சமஸ்தானங்களின் வரலாறுஅதில் குறைவாகவே இருக்கும்.*

fitted him well for the position he held as a premier nobleman of the southern Districts. Remarkable for nin varied knowledge in the different arts and sciences, he promoted the cause of Tamil literature by his liberal patronage. Notwithstanding his high accomplishments, he failed to be economical, spent for beyond his income, and maintained a court above the dignity of his situation, which brought on himself a multiplicity of embarrassments. After a brief illness he passed away on the 27th December 1903, at a comparatively young ager leaving behind him two sons, and the elder of whom, Rajah Muthurama linga Sethuupathi (Rajah Raja Rajeswara Sethupathi), who was a ward under the Collector of Madura, succeeded to the estate on the 3rd June 1910. He is now President of the Madura Tamil Sangam. Like his father be is very civil and kind to all, and has begun to take a deal of interest in the promotion of Tamil language and literature. He maintaions a High school at his headquarters. He talks English well and bids fair to be a successful and popular nobleman[2].

கி.வடிவேலு தலை நூலில் தரும் செய்திகள் இதோ :

1968 இல் பிறந்த பாஸ்கர சேதுபதி சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்றவர். கடினமான முயற்சி எடுத்து கல்வி கற்றவர் நல்ல திறமையாளர். எதிர் காலத்தில் திறமைசாலியாகவும், கெட்டிக்காராராகவும் வலம் வருவார். **தென்னிந்தியாவில் முத்திரைபதிக்கத்தக்கவராக இருந்த அவரது எண்ணங்கள்** *உயர்ந்த கொள்கை வெற்றி பெற அயராது உழைப்பவர். கல்லூரியிலிருந்து வெளிவரும் காலங்களிலே சிறந்தவர். சிறந்த பேச்சாளர், நல்ல தன்மைகளுடன் பேசுபவர்.*

பொதுமக்களிடம் பேசுகின்றபோது பிரமாதமாகப் பேசக் கூடியவர் அவருடன் நெருங்கியப் பழகியவர்கள் கூற்றின்படி எந்த கேள்வி கேட்டாலும் அதற்கு மகிழ்ச்சியுடன் பதில் தரக்கூடியவர்.

பெருந்தன்மை, பணிவான தன்மை ஆட்சியாளருக்குரிய உயர்ந்த **குணம் தென் மாவட்டங்களுக்கு முதன்மையான மனிராக இருப்பதற்கு பொருத்தமானவர் பாஸ்கரசேதுபதி.**

2. A.Vadivelu, The Ruling Chiefs nobles & Zamindars of India, Madras 1915 - 1928 Page 570 - 571.

கலை, விஞ்ஞானம் ஆகியவற்றில் பரந்த அறிவு பெற்றவர்; தமிழ் இலக்கியங்களை வளர்த்தவர் அதற்காக அதிகமாக செலவளித்தவர் அவரது ஜமீனின் வருமானத்திற்கு அதிகமாகவே செலவு செய்தவர்; அதனால் கடன் அதிகம் தகுதிக்கு மேல் செலவு செய்ததால் நிதி நெருக்கடிக்கு ஆளானவர். இளவயதிலேயே27.12.1903 இல் இயற்கை எய்தியவர் அவருக்குப் பின் வந்த அவரது புதல்வரான ராஜராஜ ராஜேஸ்வர சேதுபதியும் தனது தந்தை பாஸ்கர சேதுபதியைப் போன்றே தமிழை வளர்த்தவர்.

பாஸ்கர சேதுபதியின் பெருமைகளை எழுதிக் கொண்டே செல்லலாம். விரிவஞ்சி நிறுத்திக்கொண்டு விவேகானந்தர் அமெரிக்கா சென்ற விஷயத்திற்கு வருவோம்.

அளசிங்கப் பெருமாள்

சுவாமி விவேகானந்தரின் அருமைச் சீடர் சேவை, தியாகம், தேசபக்தி மற்றும் குருபக்தியின் ஓர் உன்னத வரலாறு என்று அளசிங்கப்பெருமாள் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் சுவாமி சுநிமர்லானந்தர் எழுதி தமிழில் ஹரிஹர கிருஷ்ணமூர்த்தி மொழி பெயர்த்து சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ணமடம் 2012 ஜனவரி 15இல் சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி நாளில் 75 ரூபாய் விலையில் 382 பக்கங்களில் வெளிவந்தது.

Alasinga Peumal An Illustrious Disciple of swami vivekananda Asaga of commitment Dedication and Devotion to His Guru Swami Sunirmalan and a, Sri Ramakrishna matha, mylapore, Chennai - 4. Price 75. என்று அந்த நூல் 2012 ஜனவரியில் ஆங்கிலத்தில் 342 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

நன்கொடை கேட்பதற்காக அளசிங்கர் ராமநாதபுரம் மன்னரிடம் போனார். பிற்காலத்தில் சுவாமிக்கு உதவி அளித்த **அதே மன்னர் இப்போது பணம் கொடுக்க மறுத்துவிட்டார்**[3]. And so, When Alasingaperumal went to him for funds, he refused[4].

3. அளசிங்கப் பெருமாள் வரலாற்று நூல் சுவாமி சுநிர்மலானந்தர், 2012 பக்கம் 94

4. Swami Sunirmalananda, Alasinga Perumal, Chennai. 2012, Page 86.

இவ்வாறு 2012இல் பாஸ்கரசேதுபதி புகழின்மீது சேற்றை வாரி இறைக்கும் நிலை ஏன்? எதனால்? உண்மை வரலாறு என்ன? துவக்கத்திலிருந்தே துவங்குவோம்.

மகாகவி பாரதியார்

1906 இல் மகாகவி பாரதியார் தாம் ஆசிரியராக இருந்த சக்கரவர்த்தினி, மாத இதழில் 'ஸ்ரீமத் விவேகாநந்த பரமஹம்ஸர்' எனும் தலைப்பில், எழுதத் தொடங்கினார். அக்கட்டுரைத் தொடர் தமிழரின் தவக்குறைவால் முற்றுப் பெறவில்லை.

சுவாமி விவேகானந்தர்

பிறப்பு 12.1.1863. மறைவு : 4.7.1902

மன்னர் பாஸ்கர சேதுபதி

பிறப்பு 3.11.1868. மறைவு 27.12.1903

39 வயதில் சுவாமிகள் மறைகிறார்

35 வயதில் பாஸ்கர சேதுபதி மறைகிறார்.

இவர்களை இருவரைப்பற்றிய செய்திகளை அறிய அந்தக் காலம் நோக்கச் செல்வது அவசியமாகிறது.

மஹேச குமாரசர்மா 1904 - 1912

சென்னை மதராஸ்ரிப்பன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்று 2வது பதிப்பாக ஒரு ரூபாய் நான்கு அணா விலையில் *1912* இல் வெளிவந்த நூல் மஹேச குமாரசர்மா இயற்றிய ஸ்ரீ விவேகானந்த விஜயம் இந்த நூல் வேதாந்தி மாஹான் ஸ்ரீ சை. ரத்ந செட்டியாரின் திருவுள்ளத்துக்கு பக்திபூர்வமாக ஸமர்ப்பிக்கப் பெற்றது.

1904 ஆம் வருஷத்தில் விவேகானந்த சுவாமிகள் மறைந்தவுடன் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸருடைய சரித்திரத்தையும் உபதேசங்களையும் **ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயமெனப்** பெயரிட்டு வெளியிட்டவர் மஹேச குமாரசர்மா அது இரண்டு பாகங்களாக வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து அவரது சிஷயரும் சிறந்தவராகிய ஸ்ரீ விவேகாநந்தசுவாமிகளின்

சரித்திரத்தையும் பிரசங்கங்களையும் வெளியிட்டவர் மஹேச குமாரசர்மா. இவர் ஸ்ரீமத்ராமகிருஷ்ணாநந்த ஸ்வாமிகளின் மாணாக்கர் ஆவார். இவரது முதல் நூலுக்கு உ.வே.சாமிநாதையரும், மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான் எஸ்.சாமிநாதையரும் பண்டித வெங்கடே ராமஜயங்காரும், தி ஹிந்து, இந்துநேசன், ஞானபோதினி, விவேக சிந்தாமணி ஆகிய இதழ்களும், அப்போதே போற்றிப் புகழ்ந்து எழுதின.

ஸ்ரீவிவேகாநந்த விஜயம்

1907 இல் மஹேச குமாரசர்மா எழுதிப் வெளியிட்ட நூல் 'ஸ்ரீ விவேகாநந்த விஜயம்' இந்த நூல் *1912* இல் மறுபதிப்பு செய்யப்பட்டது. தொடர்ந்து பல பதிப்புக்களைக்கண்டது (*1919*) *1912* இல் வெளிவந்த அந்த நூலில் மகாகவிபாரதி, வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா ஆகியோரின் நண்பரான மஹேச குமார சர்மா தெரிவிப்பதாவது :

சென்னையில் விவேகாந்தருடன் பழகும் பாக்கியம் பெற்ற கல்வி கேள்விகளில் தேர்ந்தவர் அனைவரும் அவரது விரிந்த அறிவையும், ஆழ்ந்த சாஸ்திர விசாரணையையும் கண்டு வியந்து, ஸர்வமதமஹா ஸபைக்கு ஹிந்து மதப் பிரதிநிதியாய்ச் செல்லத் தக்கவர் இவரேயெனத் தேர்ந்து, மைசூர் மஹாராஜா, இராமநாதபுரம், ராஜா நீதியதிபர் ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரவர்கள் முதலியவர்கள் செய்த தன சகாயத்தைக் கொண்டு ஸ்வாமிகளை அமெரிக்காவுக்குப் பிரயாணப் படுத்தியனுப்பினார்கள்[5].

சுப்பிரமணிய சிவா

தேசபக்தச் செம்மல் வ.உ.சிதம்பரம் பிள்ளையுடன் கரங்கோர்த்து இந்திய விடுதலைப் போரில் இணைந்து பணியாற்றி சிறை சென்ற சுதந்திரப் போரின் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா[6].

---

5. மஹேச குமாரசர்மா, ஸ்ரீவிவேகாநந்த விஜயம், இரண்டாம் பதிப்பு, சென்னை *1912*. பக்கம் *22*.

6. இவரது வரலாற்றினை அறிந்து கொள்ள செ.திவான் எழுதிய சுதந்திரப் போரில் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா சிறைவாசம். பாளையங்கோட்டையில் *2012*இல் வெளியானது.

வத்தலகுண்டு பி.ஆர்.ராஜம் அய்யர்[7] நாகம்மாள் தம்பதியரின் மகனாக 4.10.1884 இல் பிறந்தவர் சுப்பிரமணிய சிவா, 23.7.1925 இல் 41வது வயதில் காலமானார். தருமபுரி மாவட்டம் அரூர் இந்திய சோவியத் கலாசாரக்கழகம் ச. இராமநந்தன் அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு 3 ரூபாய் விலையில் சுப்பிரமணிய சிவா நூற்றாண்டு வெளியீடாக 'சிவாவின் கடிங்கள்' எனும் 56 பக்கங்களை கொண்ட நூல் வெளிவந்துள்ளது. அதில் சுப்பிரமணிய சிவா எழுதிய நூல்களைப் பற்றிய குறிப்பும் உள்ளது.

சிவா எழுதிய நூல்கள்

1) ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ வைபவம்

2) ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் திவ்விய சரித்திரம்

(சென்னை மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை 87, தம்பு செட்டி வீதி சென்னையில் 1919 இல் அச்சிட்டு ஸ்ரீ சுப்பிரமணிய சிவத்தால் இரண்டு ரூபாய் விலையில் வெளியிடப்பெற்ற 703 பக்கங்களைக் கொண்டது இந்த நூல் அடியேனிடம் உள்ளது)

3) ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் பிரஹ்மாநந்தர் சாம்பாஷணை

4) ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ண விஜயம்

(சை.நா.பாலசுந்தரம் ஸ்ரீ சாது இரத்தின் சற்குரு புத்தகசாலை நெம்பர் 2/32 நயினியப்ப நாயக்கர் வீதி, பார்க் டவுண், சென்னையிலிருந்து வெளியான ரூ.1, 4 அணா விலையுள்ள இந்த நூல் சச்சிதானந்த சிவம் நூலாசிரியராகிய சுப்பிரமணிய சிவம் அவர்களால் இயற்றப்பட்டது. 6.5.1919 இல் வெளியான இந்த நூலின் 172 பக்கங்கள் அடியேனிடம் உள்ளது.)

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் பற்றிய நூல்கள்

சுவாமி விவேகானந்தர் விரிவான சரித்திரம்; 2 ரூபாய் விலையில் சுவாமி விவேகானந்தரின் ஆத்ம ஞானரத்தினம்;

7. வேதாந்த வல்லுநர் பி.ஆர்.ராஜமய்யர் அல்ல

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் தம்முடைய சீடர்கட்கு உபதேசித்த அருள்மொழிகள்.

ஸ்வதந்திராநந்தன் என்ற சுப்பிரமணியசிவம் மொழி பெயர்த்தும், வெளியிட்டதும் ஸ்ரீபாரதாச்ரமம், இராயப்பேட்டை, சென்னை. இந்த நூல் ஸ்ரீஸ்வாமி விவேகாநந்தர் இயற்றியருளிய அருள் மொழிகள் 195 பக்கங்களைக் கொண்ட நூல் 1922 இல் வெளிவந்தது. இது அடியேனிடம் உள்ளது. நூல் அட்டையில் ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் தமிழ் நூல்கள் ஸ்ரீஜத் சுப்பிரமணிய சிவம் எழுதியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்வாமி விவேகானந்தா வேதாந்த ரகஸ்யம் 1 ரூ. 8 அணா

எதிரொலிகள் 8 அணா

கிழக்கும் மேற்கும் 8 அணா

தற்கால இந்தியா 10 அணா

விவேகானந்தர் கடிதங்கள் 1, 2, 3 பாகங்கள். தனித்தனியாக 8 அணா

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அருளிய ஆத்ம ஞான ரத்தினம் 1922, 384 பக்கங்கள், ஸ்வாமிகள் பல நண்பருடன் செய்த சம்பாஷணைகள் 2 ரூபாய் ஸ்ரீஸ்வாமி விவேகாநந்தா ஞானயோகரஹஸ்யம் விலை 2 ரூ. 4 அணா,

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் ஞாந இரத்நாவளி விலை 1 ரூ 8 அணா

இந்தியாவின் இணையில்லா மஹான் யார்?

எனது குருநாதர் (ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அவதார அற்புதம்) ஸ்ரீஸ்வாமி விவேகாநந்தர் மேல்நாட்டில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் அவதார அற்புதத்தை My Master என்று ஆங்கிலத்தில் செய்த அரிய உபந்நியாசமாம் விலை அணா எட்டு.

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் வேதாந்ததத்துவம் விலை அணா எட்டு.

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் கர்ம யோகம் விலை 1 ரூபாய்

மோட்ஷ சாதனரகஸ்யம்.

இன்னும் பல நூல்கள் உள்ளன. நூலுக்குத் தேவையான விவேகாந்தரைப் பற்றி சுப்பிரமணிய சிவா நூல்களை மட்டும் பட்டியலிட்டுள்ளோம்.

ஞான பாநு

சுப்பிரமணிய சிவா ஞானபாநு, பிரபஞ்சமித்திரன், இந்திய தேசாந்திரி எனும் மூன்று இதழ்களை நடத்தியவர் 4 ஆண்டுகள் சிவாவின் சொந்தப் பொறுப்பில் வெளிவந்த இதழ் ஞானபாநு.

1871 இல் பி.வெங்கட்ராவின் ஞானபாநு

1894 இல் கா.ஆலால சுந்தரம்பிள்ளையின் ஞான பாநு.

1913 சென்னை மயிலாப்பூரில் இருந்து வெளிவந்த சுப்பிரமணி சிவாவின் ஞானபாநு, இதழில் ‘சக்தி’ தலைவர், சாவித்திரி எனும் நமது நிருப நேயர், ‘நித்திய தீரன்,’ ஓர் உத்தம தேசாபிமானி எனும் பெயரில் மகாகவி பாரதி 1913 ஏப்ரல் முதல் 1915 ஜூலை வரை 13 கட்டுரைகள் எழுதியுள்ளார். வ.உ.சிதரம்பரம் பிள்ளையும் ஏழு கட்டுரைகள் 1913 ஏப்ரல் முதல் 1913 அக்டேபர் வரை எழுதியுள்ளார். வவேசு ஐயரும் 1914 சனவரியில் இருந்து தொடர்ந்து கட்டுரை எழுதத் துவங்கி 1914 அக்டோபர் வரை எழுதினார்[8].

ஸ்ரீ விவேகாநந்தர் விஜயம்

அமெரிக்கா தேசத்தில் சிகாகோ மாநகரில் சர்வமத மகா சபையொன்று ஏற்பாடு செய்யப்படவே காலஞ்சென்ற **ராமநாதபுரம் ராஜா அவர்கள், மைசூர் மகாராஜா அவர்கள்** இப்பொழுது உபசாரச் சம்பளம் பெற்றுச் சுக காலசேட்சபம் செய்து வரும் நீதியதிபர் ஸ்ரீ சுப்பிரமணியய்யரவர்கள் முதலிய பிரமுகர்கள் எல்லாரும் அமெரிக்காவில் சர்வமத

8. பெ.சு.மணி, வீர முரசு சுப்பிரமணிய சிவா, சென்னை. 1984 368 பக்கங்களைக் கொண்ட நூலையும், ரகமி, சுப்ரமணிய சிவம் சென்னை, 1984, 161 பக்கங்கள் கொண்ட நூலையும், ரா. ஸ்ரீநிவாஸவரதன், சுப்பிரமணியசிவம், மதுரை. 1962, 92 பக்கங்களைக் கொண்ட நூலையும் வாசிக்கலாம்.

மகா சாபையில் ஹிந்து மதத்தை யெடுத்துக் கூறுவதற்குப் பிரதிநிதியாகச் செல்லவேண்டுமென்று ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளைக் கேட்டுக் கொள்ளவே, அவரும் இசைந்தார். இது சுப்பிரமணிய சிவா 1915 இல் தந்துள்ள தகவல் ஆகும்[9]. (ஞானபாநு, டிசம்பர் 1915, பக்கம் 217–221, ஸ்ரீ விவேகாநந்தர் விஜயம் என்ற கட்டுரையில்)

உறையூர் எஸ்.வி.வரதராஜையங்கார்

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் விரிவான திவ்ய சரித்திரம் திரிசிரபுரம் தேசீயக் கலாசாலைத் தமிழாசிரியர் உறையூர் எஸ்.வி.வரதராஜையங்கார் எழுதியது, சென்னை ஆனந்த போதினி 'பத்திராதிபர் நா.முனுசாமி முதலியார் அவர்களால் வெளியிடப் பெற்றது. 1929 இல் 737 பக்கங்களில் 4 ரூபாய் விலையில் இந்த நூல் வெளியானது.

திருவனந்தபுரத்தில் சுவாமி விவேகானந்தர் குலசேகர மன்னரது பேராசிரியரான கெ.சுந்திரராமய்யரைச் சந்தித்தார். திருவனந்தபுரம் மகாராஜா கலாசாலை விஞ்ஞான நூற்புலவர் ஸ்ரீமான் அரங்காச்சாரியாரைச் சந்தித்தார். அந்நகரப் பிரபலர் எஸ்.கே.நாயரைச் சந்தித்தார். நீதிபதி கெ.எஸ்.இராமஸ்வாமி சாஸ்திரிகளைச் சந்தித்தார். அப்பால் நடந்தது பற்றி எஸ்.வி.வரதராஜையங்கார் எழுதுகிறார் இதோ:

“சுவாமி விவேகானந்தா அப்பால் அங்கிருந்து கிழக்கு நோக்கிப் பிராயாணப் பட்டு, இராமேஸ்வரம் போகும் வழியில் மதுரையிலிறங்கி, அங்கு திருவாலவாயுடையார் தரிசனத்தின் பொருட்டு விஜயம் செய்திருந்த இராமநாதபுரம் மன்னர் ஸ்ரீ பாஸ்கர சேதுபதியவர்களைத் தாம் கொண்டுவந்த கடிதத்தைக் கொடுத்துப் பார்த்தார். ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்களைப்பற்றித் தமிழ் நாட்டாருக்கு நாம் அதிகம் வரைய வேண்டுவதில்லை. அவர்கள் சகலகலா பண்டிதராய் சங்கீத விற்பன்னராய், தமிழ் மொழியில் கவிவளம் சிறந்தவராய், வடமொழியின்

9. வி.பாலாஜி, தொகுத்து சுப்பிரமணிய சிவாவின் கட்டுரைகள் சென்னையிருந்து 1928 இல் வெளிவந்துள்ளது. அதில் பக்கம் 208 ராஜேஸ்வரி தொகுத்து தியாக சீலர் சுப்பிரமணிய சிவாவின் கட்டுரைகள் 1987 இல் வெளிவந்துள்ளது. அதில் பக்கம் 128.

வகையுணர்ந்த புலவராய்த் தமிழ்த்தொண்டிலே பெரிதும் ஈடுபட்ட பெரியாரென்பதை அறியாதார் யார்? சுவாமிகளைக் கண்டமாத்திரத்தில் சேதுபதியவர்கள் அடிபணிந்தெழுந்து அன்பரானார். சுவாமிகளின் பெருமையையும் நோக்கங்களையும் எளிதிலுணர்ந்து "இதுதான் தக்கசமயம். **தாங்கள் அவசியமாக சர்வ தர்ம மகாசபைக்கு ஹிந்துமதத்தின் பிரதிநிதியாக எழுந்தருளவேண்டும்'' என்று மொழிந்து, தாம் தக்க பொருளுதவி செய்வதாக வாக்களித்தார்.** தாம் தீர்த்தாடனத்தை முடித்துக்கொண்டு அப்பால் அறிவிப்பதாகச் சொல்லிவிட்டு சுவாமிகள் விரைந்து இராமேஸ்வரத்தையடைந்தார்[10]."

சுவாமி நிகிலானந்தா

1953 இல் அமெரிக்காவில் சுவாமி நிகிலானந்தா எழுதிய விவேகானந்தர் வாழ்க்கை வரலாற்று நூல் ஆங்கிலத்தில் வெளிவந்தது. அதன் மறுபதிப்பு 1971 இல் அத்வைத ஆசிரமம் கல்கத்தா (கொல்கத்தா) விலிருந்து வெளிவந்தது. 350 பக்கங்களாக கொண்ட அந்த ஆங்கில நூலில் பக்கம் 111 இல் உள்ளது இதோ :

'The Raja of Khetri, The Raja of Ramanad, and the Maharaja of mysore, the Ministers of the native states, and the disciples who had arranged his trip to America[11]"

அமெரிக்காவிவற்கு விவேகானந்தரை அனுப்பி வைத்தவர்களில் ராமநாதபுர அரசர் பாஸ்கர சேதுபதி என்ற தகவலைத் தெளிவாகத் தந்துள்ளார்.

அறிவுக்கனலே, அருட்புனலே!

ரா.கணபதி 1963 ஆம் ஆண்டு கல்கியில் ஒன்றரை ஆண்டுகளாக எழுதிய தொடர் அறிவுக்கனலே, அருட்புனலே கலைமகள் பதிப்பகம், இதனை நூலாக வெளியிட்டது. டாக்டர் ராதாகிருஷ்ணன் அப்போது அதனை வெளியிட்டார். 1992

10. *எஸ்.வி.வரதராஜையங்கார், ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் விரிவான திவ்ய சரித்திரம், பக்கம் 271*

11. swami Nikhilananda, Vivekananda, A Biography, Advaita Ashrama, Calcutta, 1997, Page 111.

இல் சென்னை ஸ்ரீராமகிருஷ்ணமடம் அதனை மறுபதிப்புச் செய்தது. அதில் பக்கம் 576 இல் "திருவனந்தபுரத்தை விட்டு வெளியேறிய ஒளி (விவேகானந்தர்) தான் நீண்ட காலமாகக் காணத் துடித்த ராமேசுவரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தெய்வத் தமிழ்நாட்டில் வங்கத்துச் சிங்கத்தின் தங்கப் பாதங்கள் பதிந்தன. மதுரையம்பதியில் **ராமநாதபுரத்து அரசர் பாஸ்கர சேதுபதியைச் கண்டார். சுவாமிஜி நல்ல அறிஞரும் பக்தி நிரம்பியவருமான சேதுபதி மன்னர் சுவாமிஜியை மறு ஆண்டு சிகாகோவில் நடக்கவிருந்த சர்வமத மகாசபையில் கலந்துகொள்ளுமாறு தூண்டினார். இதற்கு என்னால் முடிந்த உதவியெல்லாம் செய்கிறேன் என்று முன்வந்தார் அந்தத் தமிழ்மகன்.** ரா.கணபதியின் அறிவுக்கனலே அருட்புனலே 1963 இல் வந்த தொடர் தரும் தகவல் இது.

சுவாமி விவேகானந்தர்

ரா.கணபதி எழுதி சென்னை ஸ்ரீராமகிருஷ்ணமடம் வெளியிட்ட நூல் சுவாமி விவேகானந்தர். சுவாமிகளின் நூறாண்டு விழாப்பதிப்பாக 1964 ஜனவரி பொங்கலில் 894 பக்கங்களில் 9 ரூபாய் விலையில் வெளியானது இந்த நூல். அதில் பக்கம் 402 இல்,

'அப்படி திருவனந்தபுரத்தை விட்டு வெளியேறிய ஒளி, (விவேகானந்தர்) நீண்ட காலமாகக் காணத்துடித்த ராமேசுவரத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. வழியில் நான்மாடக் கூடலாகிய மதுரையம் பதியில் **ராமநாதபுரத் தரசர் பாஸ்கரசேதுபதியைக் கண்டார் சுவாமிஜி.**

நல்ல அறிஞரும், பக்தி நிரம்பியவருமான சேதுபதி மன்னர் சுவாமிஜியிடம் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டார். மக்களின் கல்வித் தரத்தை உயர்த்துவது பற்றியும், விவசாய முறைகளை அபிவிருத்தி செய்வது பற்றியும் சுவாமிஜி ராமநாத மன்னர் பாஸ்கரசேதுபதியிடம் நிறையக் கூறினார். அத்தோடு இந்தியாவின் இன்றைய பிரச்சினைகளையும், அவற்றைத் தீர்த்துக் கொண்டு இந்தியா உன்னதம் பெறும் சாத்தியக் கூறு பற்றியும் கூறினார்.

இதையெல்லாம் கேட்டவுடன் பாஸ்கர சேதுபதி மன்னர் சுவாமியை மறு ஆண்டு சிகாகோவில் நடக்கவிருந்த சர்வமத மஹா சாலையில் கலந்துகொள்ளுமாறு தூண்டினார்.

பாரதத்தின் ஞான ஒளியை மேல் நாடுகளில் பாய்ச்சவும், இந்தியாவின் எதிர்கால நிர்மாணப் பணிக்கு அஸ்திவாரமிடவும் சர்வமத மஹாசபை அயனான வாய்ப்பாகும் என்று பாஸ்கர சேதுபதி ஆர்வத்துடன் கூறினார். **என்னால் முடிந்த உதவியெல்லாம் செய்கிறேன்** *என்று முன் வந்தார். அந்தத் தமிழ் மகன் (பாஸ்கர சேதுபதி).*

இது 1963 இறுதியில் எழுதி 1964 ஜனவரியில் வெளிவந்த ரா.கணபதியின் சுவாமி விவேகானந்தர் நூல் தரும் செய்தி 1979 இல் இந்த நூல் மறுபதிப்பானது. சென்னை ஸ்ரீராமகிருஷ்ணமடமே வெளியிட்டது. அதில் பக்கம் 315, 316 இல் மேலே சொன்ன விஷயங்கள் மாறுபாடின்றி மறு பிரகரம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்திய விவரச்சுவடி - தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம்

தமிழக அரசால், 1972இல் நண்பர் டாக்டர் அ.ராமசாமி ஆங்கிலத்தில் எழுதி இராமநாதபுர மாவட்டம் விவரச் சுவடி வெளியிடப்பட்டது. அது 2012 இலும் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதில் பக்கம் 109 இல் பாஸ்கர சேதுபதி குறித்து புகழப்பட்டுள்ளது. அடுத்து, அவரது விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளது.

'The Sethupathi was keenly intersted in religious activities. He was attracted by vivekananda's ideas and arranged for his tour of the Kingdom. His Visit to Ramanathapuram is the Starting Point of a nation. wide, Cultural revival and Social reformation of the 19th century. This visit was of Profound significance Sethupathi was very much. responsible for widening the sphere of Vivekananda's activity b arrangeing for the saint Leader's tour of America[12].

1972 ஆங்கிலத்தில் வந்த இராமநாதபும் கெஜட்டியர் 1990 இல் சோமலெ மொழி பெயர்ப்புடன் தமிழில் வெளிவந்தது.

12. Ramaswami, Tamilnadu Distrct Gazetteers, Ramanathapuram, 1972, Reprint 2012. Page 109.

அதன் தமிழாக்கம் இதோ :

பாஸ்கர சேதுபதி அரசியலுக்கு அப்பாற்பட்ட செயல்களில் கவனம் செலுத்தி, ஆன்மீகத் துறையிலும் கலைத்துறையிலும் நாட்டுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழந்தார். சுவாமி விவேகானந்தரின் கொள்கைகளால் கவரப்பட்ட பாஸ்கர சேதுபதி அவரைத் தம் நாட்டுக்கு அழைத்தார்.

19 ஆம் நூற்றாண்டில் நாடெங்கும் கலை வாழ்வில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கும், சமுதாயத் துறையில் ஏற்பட்ட புதிய சீர்திருத்தங்களுக்கும் சுவாமி விவேகானந்தரின் இராமநாதபுரப் பயணம் நல் வித்திட்டது. பொது வாகத் தென்னிந்தியாவிலும் குறிப்பாக இராமநாதபுரத்திலும் விவேகானந்தரின் வருகையால் பயன்மிக்க பல விளைவுகள் ஏற்பட்டன. **விவேகானந்தர் அமெரிக்காவுக்குச் செல்லுவதற்கும் பாஸ்கர சேதுபதி ஏற்பாடு செய்தார்[13].**

சைலேந்திரநாத்தர்

1975 இல் சைலேந்திரநாத்தர் விவேகானந்தரது வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் இரு பாகங்களில் தந்துள்ளார். (முதல் பாகம் 762 பக்கங்கள், இரண்டாம் பாகம் 735 பக்கங்கள் மொத்தம் 1497 பக்கங்கள்) அதில் முதல் பாகத்தில் 371, 372 வது பக்கங்களில் உள்ளது இதோ :

'When he met Bhaskar Setupati, the Raja of Ramnad, That Prince, Whose estate covered half of the Present day Ramnad district and had a revenue of Rs. 3.14 Lakhs, and **who was veputed to be one of the most enlightend among the ruling Princes of Southern Indian, at once ackonwledged him as, "The coming man of his motherland' and earnestly advised him to go to the chicago Parliament of Religions[14].**

---

13. அ.ராமசாமி, தமிழில் சோமலெ, தமிழ்நாடு மாவட்ட விவரச் சுவடிகள் இராமநாதபுரம், தமிழ்நாடு அரசு 1990, சென்னை. பக்கம் 135.

14. Sailendra nath Dhar, A comprehensive Biography of Swami Vivekananda Partone, Vivekananda Prakashan Kendra, Madras, 1975 Page 371, 372.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிற்கு செல்ல வேண்டுமென்று முதலில் சொன்னவர் பாஸ்கர சேதுபதி.

1997

ந.கிருஷ்ணமூர்த்தி தொகுத்து கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரம் 1997 இல் வெளியிட்ட நூல் தமிழகம் கண்ட சுவாமி விவேகானந்தர். அதில் பக்கம் 15 இல்

"பாஸ்கர் சேதுபதியாம் இம் மன்னர் ஆன்மீகத்திலும், தமிழ் பண்பாட்டிலும், சமய உணர்விலும் ஊறியவர். அவர் சுவாமிஜியின் அறிவையும், ஆன்ம ஒளியையும் கண்டு வியந்து பாரதத்தின் பிரதிநிதியாக அமெரிக்காவில் சிக்காகோவில் சென்று சமயப் பாராளுமன்றத்தில் பேசும் தகுதி அவருக்குக்கே உண்டு என்று வற்புறுத்தினார். **சுவாமிஜியின் அமெரிக்கப்பயணத்துக்கான பொருட் செலவையும் ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தார்.**

வேதாந்த சத்குரு சுவாமி விவேகானந்தர்

கிபி 1999 இல் ஜனகன் எழுதிய நூல் வேதாந்த சத்குரு சுவாமி விவேகானந்தர் இரண்டாம் பதிப்பு 2000 இல் வெளிவந்தது. அதில் பக்கம் 106 இல்

"பிறகு விவேகானந்தர் தாம் விரும்பியபடி ராமேஸ்வரத்திற்கு புறப்பட்டார். **ராமநாதபுர ராஜா பாஸ்கர சேதுபதி, சுவாமிஜியை வரவேற்று உபசரித்தார்.** சிகாகோவில் நடைபெற உள்ள சர்வ சமய மாநாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் சுவாமிஜி அவசியம் கலந்து கொள்ள வேண்டுமென்றும், **அதற்குத் தேவையானவற்றை தாம் உதவத் தயாராக இருப்பதாகவும் கூறினார்[15].**

சுவாமி ஆசுதோஷானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ணமடத்தின் துறவி சுவாமி ஆசுதோஷானந்தர் சுவாமி விவேகானந்தர் விரிவான வாழ்க்கை வரலாறு முதல் தொகுதி 754 பக்கங்கள் விலை ரூ.160, இரண்டாவது தொகுதி 691 பக்கங்கள் விலை ரூ.140. 2006 இல் வெளியானது.

---

15. ஜனகன், வேதாந்த சத்குரு சுவாமி விவேகானந்தர், சென்னை, 2000, பக்கம் 106.

முதல்தொகுதியில்பக்கம்447,448இல் **'கன்னியாகுமரியிலிருந்து மதுரை சென்ற சுவாமிஜி அங்கே ராமநாதபுரம் மன்னராகிய பாஸ்கர சேதுபதியைச் சந்தித்தார்கள். சுவாமிஜியின் தோற்றத்தில் அவரது சீடரானார். அமெரிக்காவில் நடைபெறப்போகும் சர்வமத மகா சபையில் கலந்துகொள்ளுமாறும் சுவாமிஜியை வற்புறுத்தினார்'.** *என்று ஆசுதோஷானந்தர் குறிப்பிட்டுள்ளார்.*

ந.கிருஷ்ணமூர்த்தி

விவேகானந்த கேந்திர கிராம முன்னேற்றத் திட்டம் 25 ஆண்டு சிறப்பு வெளியீடாக நற்குணநாயகர் விவேகானந்தர் எனும் நூல் ந.கிருஷ்ணமூர்த்தியால் எழுதப்பட்டு 2008 இல் வெளிவந்தது. அதில் பக்கம் 16 இல்

அங்கு சந்தித்த அளசிங்க பெருமாள் முதலான நண்பர்களின் ஒத்துழைப்பாலும், பாஸ்கர சேதுபதி முதலிய அன்பர்களின் தூண்டுதலாலும், பொருள் உதவியாலும் பம்பாயிலிருந்து *1893 மே 31 புறப்பட்டு, சுவாமி அமெரிக்காவில் சிகாகோ நகரை அடைந்தார்.*

அரவிந்த் சுவாமிநாதன்

2010 இல் சுவாமி விவேகானந்தர் எனும், நூல் அரவிந்த சுவாமிநாதன் என்பவரால் எழுதப்பட்டு வெளிவந்தது. அதில் பக்கம் 51 இல் கூறுகிறார்.

''கன்னியாகுமரி அம்மனை தரிசித்தபின் இராமநாதபுரம் சென்றார். இராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதி விவேகானந்தருக்கு *சிறப்பாக வரவேற்பு அளித்தார் சேதுபதி மன்னரும், மைசூர் மன்னர் சாம ராஜேந்திர உடையார் போன்றவர்களும்* **சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் விரைவில் நடைபெற இருக்கும் சர்வ சமய மாநாட்டுக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.**

சுவாமி பஜனானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் சென்னை 2012 இல் வெளியிட்ட நூல் தெய்வத்திரு மூவர் வாழ்க்கையும் செய்தியும், அதில் பக்கம் 33 இல் "சிகாகோவில் நடைபெறவுள்ள சர்வ மத மகா சபை பற்றி சுவாமிஜி கேள்விப்பட்டார். அது 1893

சென்னையிலுள்ள அவரது நண்பர்களும் சீடர்களும் அவர் அந்த மகாசபையில் பங்கேற்க வேண்டும் என்று விரும்பினர். *சுவாமிஜியும் அதனை ஏற்றுக்கொண்டார். அந்த நூல் பக்கம் 34இல், பின்னர் சென்னைச் சீடர்கள் வசூலித்த நன்கொடை மற்றும்* **சில மன்னர்கள்** *அளித்த பண உதவியுடன் 1893 மே 31 இல் பம்பாயிலிருந்து அமெரிக்காவுக்குப் பயணமானார்.*

சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும்

சுவாமி விவேகானந்தரின் 150 வது பிறந்த ஆண்டு விழா வெளியீடாக (1863 – 2012) பேலூர் ராமகிருஷ்ணமடம் வெளியிட்ட நூல் சுவாமி விவேகானந்தரின் வரலாறும் அறிவுரைகளும். அந்த நூலில் பக்கம் 27இல் **சுவாமிஜி ராமேஸ்வரம் செல்லும் வழியில் மதுரையில் ராமநாதபுரம் மன்னரைச் சந்தித்தார். மன்னர் நல்ல மனிதராகவும் நல்ல ஆட்சியாளராகவும் விளங்கினார். அவர் சுவாமிஜியைக் கண்டு வியந்து, அவருடைய சீடராகவும் ஆனார். மன்னர் சுவாமிஜியின் பணிகளுக்கு, உதவுவதாக உறுதி அளித்தார்.**

சுவாமி விவேகானந்தர் இளைஞர்களின் இதயவீரர்

ஆங்கில மூலமும் தமிழாக்கமும் எழுதியவர் ந.கிருஷ்ணமூர்த்தி என்று சுவாமி விவேகானந்தர் இளைஞர்களின் இதய வீரர் எனும் நூல் 2014 இல் பத்தாவது பதிப்பாக தூத்துக்குடியிலிருந்து வெளிவந்துள்ளது. அந்த நூலின் பக்கம் 51 இல்,

இராமநாதபுரத்தின் மன்னராகிய பாஸ்கர சேதுபதி ஞானம் மிகுந்தவர். சுவாமி விவேகானந்தர் அவருடன் நட்பு பூண்டார். பாஸ்கர சேதுபதி சிக்காகோவில் நடைபெற இருக்கும் சமயப் பேரவையில் பங்கெடுக்கவேண்டும் என்றெல்லாம் தூண்டினார். அதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதி அளித்தார்.

பக்கம் 53, 54 இல் மைசூர், இராமநாதபுரம், ஹைதராபாத் மன்னர்களும், பாமர மக்களும் பெரிதும் சிறிதுமாக நன்கொடை அளித்தனர். பாரதத்தாயின் அன்பு மகன் மேற்கு நோக்கிப் பயணம் செய்ய உதவினர். *இவ்வாறு சேர்த்த தொகை சுமார் ரூ.3000/–*

சென்னையில் அளசிங்கர் என்று அழைக்கப்படும் தமிழாசிரியர் அழகிய சிங்கப் பெருமாள் நன்கொடை

வசூலிக்கும் பணிக்குத் தலைமை தாங்கினார் என்று இன்று கூறப்படுகிறது. உண்மை நிலை என்ன?

சென்னை நண்பர்கள்

விவேகானந்தரது அமெரிக்கப் பயணத்திற்கு சென்னை நண்பர்கள் செயத உதவிகள் என்ன? விவேகானந்தரது சென்னை நண்பர்கள் ஒவ்வொருவராய் பார்ப்போம்.

டாக்டர் நஞ்சுண்டராவ் :

டாக்டர் நஞ்சுண்டராவ் (1862 – 1921) கர்நாடக நஞ்சன்கூடைச் சேர்ந்தவர்; சென்னை மருத்துவக்கல்லூரியில் பேராசிரியர் சுவாமி விவேகானந்தரை நேரில் சந்தித்தவர். அளசிங்கருடன் இணைந்து பிரம்மவாதின் (Brahmavadin) எனும் சுவாமிஜியுடன் இலட்சியப் பத்திரிகையை (ஆங்கிலம்) வெளியிடும் பொறுப்பை ஏற்றவர். அடுத்து பிரபுத்த பாரதம் (Prabuddha Bharata) (ஆங்கிலம்) வெளிவந்தது. சுவாமிகள் அமெரிக்காவில் இருந்து திரும்பியபோது சென்னையில் ஃப்ளேரா காட்டேஜ் இல்லத்தில் தங்க வைத்தனர். ‘கேஸில் கெர்னன்’ மாளிகையில் அடுத்து விவேகானந்தர் தங்கினார். மாளிகையின் உரிமையாளர் பிலிகிமி ஐயங்கார் சுவாமியின் சீடர். அடர் இடமளித்தார். தென்னிந்தியாவில் முதல் ராமகிருஷ்ணமடம் அமைக்கப்பட்டது. 1906 இல் இந்த இடம் ஏலம் விடப்பட்டது. சென்னை மயிலாப்பூருக்கு தற்போது இயங்கும் இடத்திற்கு ராமகிருஷ்ணமடம் மாற்றப்பட்டது. கேஸில் கெர்னன் மாளிகையில் 9 நாட்கள் தங்கியிருந்தார் சுவாமி. அதுவே விவேகானந்தர் இல்லம் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

சிங்காரவேலு முதலியார் (கிடி)

சுவாமிகள் ‘கிளி’ என்று அழைக்க விரும்பி ‘கிடி’ யாகிய சிங்காரவேலு முதலியார் 1855 இல் சென்னையில் பிறந்தவர். விவேகானந்தரை நேரில் பார்த்தவர். 1901 செப்டர்பர் 27 இல் காலமானார்.

பேராசிரியர் எம்.ரங்காச்சாரியார்

அளசிங்கப் பெருமாளின் மைத்துனர் எம்.ரங்காச்சாரியார் கர்நாடகத்தில் மேல்கோட்டில் 1861 இல் பிறந்தவர்.

திருவனந்தபுரத்தில் விவேகானந்தர் தங்கியிருந்தபோது அவரைச் சந்தித்தவர்.

கே.சி.லட்சுமி நாராயணன்

2500 வருட காலப் பாரம்பரியம், அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள் எனும் நான்கு பாகங்களைக் கொண்ட **(நூல் 3147 பக்கங்கள்)** கே.சி.லட்சுமி நாராயணனை ஆசிரியராகக் கொண்டு தாம்ப்ராஸ் ஹெரிடேஜ் புராஜக்ட் சென்னை 40 இல் இருந்து ஆகஸ்ட் 2002 இல் 1200 ரூபாய் விலையில் வெளியானது. பின்பு அந்த நூல் ஆசிரியர்குழு என்ற பெயரில் 5 தொகுதிகளாக, திருத்திய பதிப்பாக 500 ரூபாய் விலையில் 2005 இல் **2806** பக்கங்களில் வெளியானது.

அந்த நூலில் முதல் பதிப்பில் 2வது பாகத்தில் 1116 – 1120 பக்கங்களில் அழகிய சிங்கப் பெருமாள் பற்றிய குறிப்புக்கள் உள்ளது. அதில் 2வது தொகுதியில் 259 வது பக்கம் முதல் 262 வது பக்கம் வரை அழகிய சிங்கப் பெருமாள் பற்றிய வரலாற்றுக் குறிப்பு உள்ளது.

1987 ஆம் வருடம் டிசம்பர் மாதம் சென்னை சர்வதேசத் தமிழ் ஆராய்ச்சிக்கழகம் வெளியிட்ட தமிழ்நாடு – வங்காளம் கலாசார உறவுகள் என்ற நூல் திரு.ரா.அ.பத்மநாபன் எழுதிய பாரதி புதையல் பெருந்திரட்டு 1993 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் ராமகிருஷ்ண மிஷன் கலாசாரக்கழகத்தின் விவேகானந்தர் சிகாகோ உரையின் நூற்றாண்டு விழாவில் திரு.மு.ஸ்ரீநிவாஸன் நிகழ்த்திய உரை ஆகியவற்றை ஆதாரங்களைக் கொண்டு திரு.மு.ஸ்ரீநிவாஸன் எழுதிய கட்டுரையே அழகிய சிங்கப்பெருமாள்.

நரசிம்மாச்சாரியார் மகனாக, 1865 இல் சிக்மகளூரில் பிறந்தவர் அழகிய சிங்கர். சிலகாலம் கும்பகோணத்தில் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தார் 1887 இல் சிதம்பரத்தில் பச்சையப்பன் பள்ளிக்கூடத்தில் விஞ்ஞான உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

பச்சையப்பர்

1754 இல் பிறந்து 1794 இல் தனது 40 வயதில் மறைந்தவர் பச்சையப்பர் அவரது செல்வத்தால், 1842 இல் பச்சையப்பன்

நடுநிலைப்பள்ளி துவங்கப்பட்டது. 1850 இல் சிதம்பரத்தில் பள்ளிக்கூடம் துவங்கப்பட்டது. அங்கு உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர் அளசிங்கப் பெருமாள்[16].

1889 இல் சென்னை பச்சையப்பர் பள்ளிக்கூடத்திற்கு அளசிங்கர் மாற்றப்பட்டார். 2012 இல் ஸ்ரீஇராமகிருஷ்ணமடம் வெளியிட்ட அளசிங்கப் பெருமாள் நூலில் பக்கம் 55 இல் எம்.சி.அளசிங்கப் பெருமாள் பி.ஏ., 1904 பச்சையப்பா உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் பெயர்ப் பட்டியலின் ஒரு பக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அளசிங்கப் பெருமாள் பிறந்தது சிக்மகளூர், தந்தையார் பெயர் சக்கரவர்த்தி நரசிம்மாச்சாரியர். ஆனால் அந்த நூலில் அளசிங்கப் பெருமாள் இனிசியல் எம்.சி. என்று உள்ளது. எம்.சி. என்ற முன் எழுத்து சரிதானா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்) அளசிங்கர் திருவல்லிக்கேணியில் வாழ்ந்தார்.

அப்போது சிகாகோ சர்வமத மகாசபை கூட்டம் பற்றிய செய்திவந்தது. அளசிங்கரின் மாமாவான பார்த்தசாரதி ஐயங்கார் வைதீகர்கள் கடற்பயணம் செய்வதில்லை. கடற் பயணம் பாவமாக கருதப்பட்டது எனவே அவர் சர்வமத மகா சபைக்கு செல்லவில்லை. ஆனால் அவர் மகா நாட்டிற்கு கட்டுரை எழுதி அனுப்பினார். அது 1893 ஜூன் 10 தி மதுரா மெயிலில் (The Madura mail) வந்துள்ளது. சுவாமி விவேகானந்தர் பம்பாயிலிருந்து 31.5.1893 இல் மே மாதமே அமெரிக்கப் பயணத்தை துவங்கிவிட்டார் என்பதனை நினைவில் கொள்ளவும்.

பேராசிரியர் எம்.ரங்காசார்யார்

அகில உலக சமயங்கள் மகாநாடு (Parliament of Religions) சிக்காகோவில் நடக்கப் போவதுபற்றிய செய்தி **அழகிய சிங்கப் பெருமாள் ஐயங்காருக்குக் கிடைத்தவுடன் அதற்குப் பிரதிநிதியாக அனுப்புவதற்குத்தகுந்தவர் என்று அவர் ரங்காசாரியாரைத் தான் முதலில் அணுகினார். கடல் கடந்து செல்லவிருப்பமின்றி**

16. எஸ்.எஸ்.அருணகிரிநாதமுதலியார், தென்னிந்தியப் பெருமக்கள் சென்னை, 1947, பக்கம் 63.

ரங்காசார்யார் மறுத்த பிறகே, அவர் (அழகிய சிங்கப் பெருமாள்) சுவாமி விவேகானந்தரை அணுகினார்[17].

அழகிய சிங்கரின் உறவினருமான பண்டிட் யோகி பார்த்த சாரதி ஐயங்கார் மூலமாகவும் அழகியசிங்கருக்கு இச்செய்தி கிடைத்தது. உடனே அந்த மாநாட்டுக்கு இந்து சமயப் பிரதி நிதி ஒருவரை அனுப்பவேண்டும் என்ற தீவிரமான ஆர்வம் அவருள் எழுந்தது. பெரும் பண்டிதரான பேராசிரியர் எம்.ரங்கா சார்யாவை **அவர் முதலில் அணுகினார். அவர் கடல் கடந்து செல்ல விருப்பமின்றி மறுத்துவிட்டார்[18].**

“தமது மைத்துனரான பேராசிரியர் ரங்காச்சாரியரையும் கோட்டார், அளசிங்கர் ஆனால் அவரும் சமூகத் தடையின் காரணமாக மேலை நாடு செல்ல மறுத்துவிட்டார்[19]. அப்போது அவர் தம்பி மூலமாக வங்கத்திலிருந்து ஒரு இளம் துறவி வந்திருந்ததையும், அவரது வேதசாஸ்திரப் புலமையையும், ஆங்கிலச் சொல் வன்மையும் கேள்விப்பட்டு உடனேயே இரண்டு நண்பர்களுடன் சென்று அழகிய சிங்கப் பெருமாள் விவேகானந்தரைச் சந்தித்து தமது வேண்டு கோளைச் சமர்ப்பித்தார்.

இந்த கால கட்டத்தில் தான் பாஸ்கரசேதுபதியைச் சந்தித்த நிலையில் சென்னைக்கு வந்தார் விவேகானந்தர். சேதுபதி வரலாற்றை தன் வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்த அண்ணன் எஸ்.எம். கமால் தரும் செய்திகள் இதோ;

இந்த சமயத்தில் அமெரிக்க நாட்டில் அனைத்துச் சமயங்களின் பேரவை கூடவிருக்கிறது என்ற செய்தி பாஸ்கரசேதுபதி

17. ஆசிரியர்குழு, அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள் தொகுதி 5, சென்னை, செப்டம்பர் 2005, பக்கம் 328.

18. கே.சி.லட்சுமி நாராயணன், அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள் சென்னை, ஆகஸ்ட் 2002, பக்கங்கள் 1117, 1118 ஆசிரியர் குழு, அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள், சென்னை, செப்டம்பர் 2005, தொகுதி 2 பக்கங்கள் 259, 260.

19. சுவாமி சுநிர்மலானந்தர், தமிழில் ஹரிஹர கிருஷ்ணமூர்த்தி, அளசிங்கப் பெருமாள், சென்னை, 2012, பக்கம் 88.

மன்னருக்கு கிடைத்தது. தாம் மேற்கொண்டுள்ள தெய்வீகத் திருப்பணிகள் அனைத்திலும், இந்தப் பேரவையில் கலந்துகொண்டு இந்த சமயச் சிறப்பையும் இந்திய நாட்டின் பண்பாட்டுக் கலப்பையும் மேல்நாட்டார் புரிந்து கொள்ளச் செய்வது தமது கடமையெனக் கருதினார். இந்திய நாட்டின் எந்த மாடாதிபதியும், சமஸ்தான பதியும், சனாதனவாதியும் எண்ணிப் பார்க்காத செயல் இது. மதுரை ஜில்லாவில் இருந்த திரு.கரோல் என்ற வெள்ளையர் மூலமாகத் தமது பயணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்தார்[20].

இதற்கிடையில் கன்னியாகுமரிக்கு யாத்திரையாக வந்த சுவாமி விவேகானந்தரை (நரேந்திரர்) சென்னை நண்பர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர் மூலமாக கேள்வியுற்றுச் சந்தித்தார். அவருடன் ஆன்மீக சித்தாந்தச் செய்திகளை அளவளாவி, பரிமாறிக் கொண்ட பின்னர், தமது பயணத் திட்டத்தை மன்னர் பாஸ்கர சேதுபதி மாற்றிக்கொண்டார். எவ்வளவு தான் சமய சித்தாந்தங்களைக் கற்றுத் தெளிந்து, எளிதாக எடுத்துச் சொல்லும் தகுதிகள் பெற்று இருந்தாலும், இல்லறத்தில் இருக்கும் தம்மைவிட ஒரு துறவி மூலமாக அந்தக் கருத்துக்களை ஆங்கிலமொழியில் உலகப் பேரவையில் வெளியிடுவது இன்னும் பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்று எண்ணினார். அவரது எண்ணத்தை சுவாமிகளிடம் வெளியிட்ட பொழுது அவர் தயங்கினார். பத்தாயிரம் மைல் தொலைவு கடற்பயணம் முற்றும் புதிய சூழ்நிலையில், அறிமுகம் இல்லாத மக்கள் கூட்டத்தினர் இடையில் சொற்பொழிவாற்றுவது .... ஒரு கடினமான, புதிய அனுபவம்; என்றாலும் தமது தலயாத்திரை முடிந்த பிறகு அமெரிக்கப்பயணம் பற்றிய முடிவைத் தெரிவிப்பதாக சுவாமிகள் தெரிவித்தார். கொந்தளிக்கும் அலைகடலின் ஆரவாரத்திற்கிடையில், குமரிமுனையில், சிந்தையை அடக்கி, வந்தனை செய்து, நீண்ட தியானத்துடன், சுவாமிகள் தமது நாலாண்டுக்கால தல யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பினார். வழியில் சென்னையில் பாஸ்கர சேதுபதி மன்னரைச் சந்தித்து அமெரிக்கப் பயணம் மேற்கொள்ளுவதற்கான ஒப்புதலை அளித்தார். மிகவும்

20. எஸ்.கமால், மன்னர் பாஸ்கர சேதுபதி. பக்கம் 76

மகிழ்ச்சியடைந்த மன்னர் பாஸ்கர் சேதுபதி. சுவாமிகளது பயணத்திற்குப் பொன்னும் பொருளும் வழங்கி பயண ஏற்பாடுகளையும் செய்தார்[21].

அளசிங்கப் பெருமாள் நூலில் 1865 இல் பிறந்த டி.ஆர்.பாலாஜிராவ் (மறைவு 1935) பிலிகிரி ஐயங்கார் ஜி.ஜி.நரசிம்மாச்சாரியார், பி.நரசிம்மாச்சாரியார் பற்றிய குறிப்புக்கள் உள்ளது. இவர்கள் சுவாமிகள் வெளிநாடு பயணம் முடித்து வந்த காலத்தில் சென்னையில் உதவியாய் இருந்தவர்கள்.

பி.ஆர்.ராஜம் ஐயர்

சென்னை தாம்ஸன் கம்பெனியார் 1908 இலும், எஸ்.கணேசன் கம்பனியார் 1925 இலும் கல்கத்தாவிலிருந்து 1935 இலும் வெளியான நூல் Rambles in vedanta, பி.ஆர்.ராஜமய்யர் எழுதியது. 1973 இல் சி.சு.செல்லப்பாவின் 48 பக்கங்களைக் கொண்ட முன்னுரையோடு அந்த நூல் எழுத்து பிரசுரத்தால் மறுபதிப்பு செய்யப்பட்டது. பத்தலகுண்டு (வத்தலகுண்டு) ராமய்யர் ராஜம் அய்யர் 25.1.1872 இல் பிறந்தவர். கமலாம்பாள் சரித்திரம் நாவலைத் தந்தவர். 1895 களில் பிரபுத்த பாரதம் பத்திரிகைக்கு (Prabuddha Bharata) ஆசிரியர் பொறுப்பை ஏற்றவர். இவர் சென்னையில் விவேகானந்தரைச் சந்தித்தார்.

1898 மே 13 இல் தமது 26வது வயதில் மறைந்தவர் இவர் பிறந்தது மதுரை என்று அளசிங்கப் பெருமாள் நூலில் பக்கம் 28 இல் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது. வத்தலக்குண்டில் பிறந்தவர் என்பதே சரி. வரும் பதிப்புகளில் திருத்திக் கொள்வார்களாக. **விவேகானந்தர் சர்வமத மகாசபையில் பங்கேற்கவேண்டும் என்ற யோசனையைக் கூறிய முதல் மனிதர் அளசிங்கர் என்ற சொல்ல முடியாது.**

மைசூர் மன்னர், ஜூனாகட் திவான், போர்பந்தர் திவான் போன்றோர் இதுபற்றி சுவாமிஜியிடம் ஏற்கனவே கூறியிருந்தனர். ஜூனாகட்டில் சி.எச்.பாண்டியா என்பவரிடம் சுவாமிஜியே இதைத் தெரிவித்திருந்தார். **ராமநாதபுரம் மன்னரும்** (பாஸ்கரசேதுபதி) இதுபற்றி சுவாமிஜியிடம் கூறியிருந்தார்.

21. M.S. NATESAN Swami Vivekanantha. a sketch 1913 P.12

ஆனால் அளசிங்கருக்கு அந்த விஷயங்கள் தெரியாது[22]. **சிகாகோவில் நடைபெறும் மாநாட்டிற்கு மாமாவான பார்த்தசாரதி ஐயங்காரும் மைத்துனரான பேராசிரியர் ரங்காச்சாரியாரும் செல்வதற்கு முதலில் முயற்சி மேற்கொண்டவர் அளசிங்கப்பெருமாள். பின்னர் தான் சுவாமி விவேகானந்தரிடம் வருகிறார்.**

பயணச் செலவுகள்

சுவாமி விவேகானந்தர் அமெரிக்கப் பயணம் மேற்கொள்ள ஆகும் செலவுகளுக்கு எவ்வாறு பணம் வசூலிக்கப்பட்டது? திரட்டப்பட்டது? சேர்க்கப்பட்டது அதைப்பார்ப்போம்.

'விவேகானந்தரும் சிகாகோ செல்ல இசைந்தார். அந்த அமெரிக்க விஜயத்திற்கு வேண்டிய பணத்தை அழகியசிங்கரும் அவர் தம் நண்பர்களும் சென்னையில் வீடு வீடாகச் சென்று திரட்டி சுவாமிஜியை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தனர் என்கிறது. அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள் எனும் நூல். (தொகுதி 2, 2005, பக்கம் 260)

இது உண்மையா?

பாஸ்கர சேதுபதியைச் சந்தித்தபின் (1892 டிசம்பர்)1893 ஜனவரியில் சென்னை வந்து தங்கியிருந்தார் சுவாமி விவேகானந்தர். சுவாமிகளது சிறப்பை அறிந்த ஐதராபாத் வாசிகள் அவரை அங்கு அழைத்தனர்.

ஹைதராபாத் நிஜாம் மாகாண சூப்பரிண்டெண்டிங் எஞ்ஜினியர் பாபு மதுசூதன சட்டர்ச்ஜிக்கு பட்டாசாரியார் கொடுத்த தந்தியில் 10.2.1893 விவேகானந்தர் ஐதராபாத்திற்கு விஜயம் செய்வார் என்று தெரிவித்தார்.

ஹைதரபாத் ரயில் நிலையத்தில் பண்டிதர்கள், பிரபல வர்த்தகர்கள்,நியாயவாதிகள்,தனாதிகாரிகள் உத்தியோகஸ்தர்கள் கூடி நின்று சுவாமிகளை வரவேற்றனர். ராஜா ஸ்ரீநிவாசராவ் பகதூர், மகாராஜா ராம்பா ராவ்கதூர், பண்டித ரத்னலால், காப்டன் ரகுநாதர், ஷம்ஸ் – உல் – உலாமா சையத் அலி பில்கிரமி, நவாப் கிமாத்ஜங் பகதூர், நவாப் துலகான் பகதூர்,

22. அளசிங்கப்பெருமாள் முற்கூறிய நூல் பக்கம் 89, 90

நவாப் சிகுந்தர் நவாஜ் ஜங்பகதூர், ஹெச்.துரப்ஜி, எப்.எஸ். முண்டன், ராய் ஹீகம்சந்தர், செட்ஸ் சதுர் புஜர், மோதிலால் பாங்கர், பாபு கலிசரணர், அவரது தந்தை பாடு மதுசூதன சட்டர்ஜி ஆகியோர் சுவாமிகளை வரவேற்றார்கள்.

13.2.1893 இல் மகபூப கலாசாலையில் சுவாமிகள் உபந்நியாசம் செய்தார். அதன் பின் கலிசரணருடன் கோல் கொண்டா சென்றார். மீண்டும் சகந்திரபாத்தை அடைந்தார். ஐதரபாத் செங்கோல் மன்னரின் மைத்துனர் நவாப் பகதூர் சர்.குர்ஷித்ஜா, அமீரிய் – ய் – கபீர் தமது அந்தரங்கக் காரியதரிசியை அனுப்பி சுவாமியை அரண்மனைக்கு அழைத்து வந்தார். அப்போது தாம் சர்வமத மகாசபைக்கு செல்ல இருப்பதை விவேகானந்தர் அறிவித்தார்.

ஆயிரம் ரூபாய்

விவேகானந்தர் அச்செயதியைக் கூறி முடிக்கும் முன்னரே நவாப் பகதூர் சர்குர்ஷிதஜர் அமீரிய் – கபீர் – கெ.ஸி.எஸ்.ஐ. **தாம் அவ்விஷயத்தில் ஆயிரம் ரூபாய் அப்பொழுதே அளிப்பதாக வாக்களித்தார்.** சுவாமி அதை ஏற்காமால், எம் பெருமாள் உணர்த்தும்போது நான் தங்களை ஞாபக மூட்டுகிறேன் என்றார்.

ஐதராபாகம் பிரத மந்திரியான அஷ்மன்ஜா, கெ.ஸி.ஐ.இ., மகாராஜா நரேந்திர கிருஷ்ணபகதூர் (அரண்மனை பேஷ்கார்) மகாராஜா ஷியூராஜாபகதூர் ஆகிய பிரபுக்களை விவேகானந்தர் சந்தித்தார். அவர்களும் மகிழ்ச்சியோடு சுவாமிகள் சர்வமத சபைக்கேக உதவிபுரிவதாக வாக்களித்தனர்[23].

1893 மார்ச் ஏப்ரலில் சுவாமிகளின் பிரயாணச் செலவிற்கு வேண்டிய நன்கொடைப் பொருட்களை அவருடைய அன்பர்கள் வசூலிக்கத் தொடங்கினர். சிலர் மைசூர், இராமநாதபுரம் (பாஸ்கர சேதுபதி) ஹைத்ரா பாகம் முதலிய இடங்களுக்குப் பொருள் வசூலிக்கச் சென்றனர். அழகியசிங்கப் பெருமாள் இக்கைங்கரியத்தில் அதிக முயற்சி எடுத்துக் கொண்டார்.

---

23. எஸ்.வி.வரதராஜையங்கார், முற்கூறிய நூல், பக்கம் *295–297*.

நிதி திரட்டுவது எளிதான காரியம் அல்ல. துறவியின் பயணத்திற்குப் பணம் கொடுப்பது பொதுமக்களுக்குப் புரியாத விஷயமாக இருந்தது. சிலர் திட்டினர். காசு இல்லையே என்றனர். பிறகு தருவதாகச் சொன்னார்கள். சிலரே தந்தனர். **அளசிங்கமும் நண்பர்களும் வசூலித்த தொகை 500 ரூபாய்.**

21.2.1893 இல் ஹைதராபாத்திலிருந்து விவேகானந்தர் அளசிங்கருக்கு எழுதிய கடிதம், அன்பார்த்த அளசிங்கரே.

என் திட்டங்களெல்லாம் தவிடு பொடியாகிவிட்டன. இதனால் தான் நாள் விரைவில் சென்னையை விட்டுப் போய்விட விரும்பினேன். வடநாட்டு ராஜாக்களிடம் உதவி தேடிப்பிடிக்க சில மாத காலம் ஆகும். என்ன செய்வது இப்போது மிகவும் தாமதமாகி விட்டது. இந்தச் கொடிய வெப்பத்தில் என்னால் அலைய முடியாது. நான் செத்தே போவேன் ![24]

So all my plans have been dashed to the ground.... First I Can not wander about in this heat - I would die[25]

சென்னை சீடர்கள் வசூலித்தனர்.

மைசூர் மன்னர் சாமராஜேந்திரர் 1500 ரூபாய் அல்லது 1000 ரூபாய் ராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி 500 ரூபாய், மன்மதநாதர் ரூபாய் 500, சுப்பிரமணிய ஐயர் ரூ.500, இதுவே 3000 ரூபாயாயிற்று. மீதித் தொகையை அளசிங்கரும் நண்பர்களும் வசூலித்தனர். சுவாமி விவேகானந்தர் என்ற முகவரிச் சீட்டு (Visiting Card) , *பம்பாயிலிருந்து போஸ்டன் போகும் பயணச் சீட்டு 1200 ரூ. இந்தியப் பணத்தை அமெரிக்கப் பணமாக மாற்ற 395 ரூபாய், சுவாமிகள் கரங்களில் தரப்பட்டது 2805 ரூபாய் மட்டும் தான்.*

கேத்ரி மன்னர் (Raja of Khetri)

இரஜபுதனத்து கேத்ரி அரசர் இராஜா அஜித்சிங் விவேகானந்தரை ஜெய்ப்பூர் வரையில் வந்து வழியனுப்பினார்.

24. சுவாமி விவேகானந்தர், கடிதங்கள், ஸ்ரீ இராமகிருஷ்ணமடம், சென்னை. 1998, பக்கம் 15.

25. Sailendranathdhar, Swamivivekananda, Madras 1975. Page 398.

தமது அந்தரங்கக்காரிய தரிசியிடம் வழிச் செலவிற்கு வேண்டிய பொருளையளித்து பம்பாய் வரை சென்றார். கப்பல் சீட்டு, உடைகள் முதலியவற்றை வாங்கிக் கொடுத்து கப்பலேறி விவேகானந்தர் புறப்படும் வரையில் இருந்து வரும்படி கூறினார்.

கேத்ரி மகாராஜா சொல்லியபடி ஜெகன் மோகனர் விவேகானந்தருக்கு உபந்நியாசம் செய்யும் காலங்களில் உடுக்க உயர்ந்த ஆடைகளையும், குளிர் தேசத்தில் உடுக்கவும், கப்பல் யாத்திரையில் தரிக்கவும் உயர்ந்த கம்பளி அங்கிகளையும் வாங்கிக் கொடுத்தார். **சகல செலவையும்** கவரப் போதிய ஒரு பணமுடிப்பையும் அளித்தார். பெனின் கலர் ஓரியண்டல் கம்பெனிக்குச் சொந்தமான பெனின் கலர் என்ற கப்பலிற் பிரயாணமாக ஒரு முதல் வகுப்பு டிக்கெட் வாங்கப்பட்டது. விவேகானந்தரது பிரயாணத்திற்கு சகல சௌகரியங்களும் செய்யப்பெற்றன.[26]

சுவாமி கம்பிரானந்தா

Swami Gambhirananda, Yoganayaka Vivekananda 3 Volumes சுவாமி கம்பிரானந்தா எழுதிய விவேகானந்தர் யுவநாயகர் எனும் 3 பாகங்களைக் கொண்ட நூலில் சொல்லும் செய்தி,

பேலூர் மடத்து மூத்த துறவியின் கூற்றுப்படி ஜெக்மோகன்லால் விவேகானந்தரது அமெரிக்கப்பயணத்திற்கு அளசிங்கர் வாங்கிய இரண்டாம் வகுப்பு டிக்கெட்டினை முதல் வகுப்பு டிக்கட்டாக மாற்றினார்.

As regards the Swami's ticket for America, Swami Gambhirananda says that he heard long ago from some senior monks at Belur that Jagmohanlal got Converted the Second - Class ticket Which Alasinga had Purchased in to a first Class one.[27]

1893 மே 31 அமெரிக்கப் பயணமானார் விவேகானந்தர்

கிறிஸ்டோபர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த 400 ஆண்டுகள் பூர்த்தியானதையொட்டி 1893 ஆம் ஆண்டு

26. எஸ்.வி.வரதராஜையங்கார் முற்கூறிய நூல் பக்கம் 303, 304.
27. Sailendranath dhar, Swami Vivekananda, 1975 Page 400

சிகாகோவில் விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவின் ஒரு பகுதியாகவும், உலகக் கண்காட்சியின் ஓர் அங்கமாகவுமே சர்வமத மகாசபை கூட்டப்பட்டது.

1893 செப்டம்பர் 11, 10 மணிக்கு கொலம்பஸ் அரங்கிலே நாலாயிரம் மக்கள் கூடியிருந்தனர்., **அமெரிக்க சகோதரிகளே, சகோதரர்களே**' என்று தனது நான்கு நிமிட உரையை இறுதியில் ஆற்றினார். நானிலத்திலே அழியாப்புகழ் பெற்ற அவ்வுரை குறித்து ஏராளமான நூல்கள் வந்துள்ளன.

28.4.1894 மாலை 5.30 மணிக்கு சென்னையில் சனிக்கிழமை கூட்டம் நடைபெற்றது. திவான் பகதூர் S.சுப்பிரமணிய அய்யர் தலைமை தாங்கினார். ராமசாமி முதலியார், சுந்தரராம ஐயர், மன்மதநாத் பட்டாச்சார்யா கலந்துகொண்டனர். ராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி அக்கூட்டத்திற்கு வாழ்த்துத் தந்தி அனுப்பினார். கூட்டத்தில் விவேகானந்தருக்கு இந்தியப் பிரநிதியாக சென்றதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.[28]

4 ஆண்டுகள் முதற் கட்டப் பயணத்தை முடித்து விட்டு 1897 ஜனவரி 15 அன்று விவேகானந்தர் கொழும்பு நகரை அடைந்தார். அமெரிக்காவில் மற்ற நாடுகளிலும் இருந்த நான்கு ஆண்டுகளில் அமெரிக்காவிலிருந்து தம் சீடர்களுக்கு நிறைய கடிதங்களை எழுதியுள்ளார் விவேகானந்தர். அதில் சில வரிகள் மட்டும்...

45. யு.எஸ்.ஏ.
1894.

அன்பார்ந்த அளசிங்கா,

இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்காக நாம் அமெரிக்க பணத்தை நம்பியிருக்கக் கூடாது. ஏனெனில் அது வெறும் மனமயக்கம். **மைசூர் மன்னர் ராமநாதபுர மன்னர் (பாஸ்கர சேதுபதி) ஆகியோரை இந்தப் பணியில் ஈடுபடுமாறு செய்.**[29]

---

28. முற்கூறிய ஆங்கில நூல் பக்கம் 632. (The Raja of Ramnad Sent a Telegram.)
29. சுவாமி விவேகானந்தர், கடிதங்கள், ஸ்ரீ இராமகிருஷ்ண மடம், சென்னை 1998. பக்கம் 194.

மே 28, 1994
சிக்காகோ

அன்புள்ள அளசிங்கரே,

எனக்கு உங்களிடமிருந்து எவ்வித உதவியும் தேவை இல்லை.[30]

சென்னை சீடர் ஒருவருக்கு
அன்பரே

541, டியர் பார்ன் அவின்யூ,
சிக்காகோ,
ஜூன் 28, 1894,

பண விஷயத்தில் எனக்கு கவலையில்லை.

இருக்கவும் இராது.

திரு ஓல்டைப் பார்க் நான் இலண்டன் போவது பற்றி அளசிங்கர் என்ன பிதற்றுகிறார்? முட்டாள்! அந்தச் சிறுவர்களுக்குத் தாம் என்ன பேசுகிறாரென்பதே தெரியாது. மேலும் அச்சென்னைச் சிறுவர்களுக்குத் தம் விதிவசத்தலைகளில் ஒரு நன்மொழியையும் வைத்திருக்க இயலாது.

1 பகல் முழுவதும் பிதற்றுவர், சிறு காரியமொன்று நேர்ந்தால் அவர்களை எங்குமே காணோம். முட்டாள்கள்.[31]

பிற்குறிப்பு :

அளசிங்கரின் கல்லூரி மூடிவிட்டதெனத் தோன்றுகிறது. ஆனால், எனக்குத் தகவலில்லை. அவர் நம் வீட்டு முகவரியும் எனக்குத் தரவில்லை.

கிடி நம்மை விட்டு விட்டாரென்று தோன்றுகிறது.

விவேகானந்தா[32]

---

30. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், சுடர் 9, பக்கம் 251.
31. முற்கூறியது பக்கம் 278, 279.
32. முற்கூறியது பக்கம் 281

அமெரிக்க ஐக்கிய நாடுகள்,
ஆகஸ்ட் 31, 1894.

அன்புள்ள அளசிங்கரே,

கூடிய சீக்கிரத்தில் உமது கல்லூரி உத்தியோகத்தினின்றும் உம்மை நீர் விடுவித்துக் கொள்ளுமாறு உமக்கு உதவி செய்ய எண்ணியுள்ளேன். அவ்வாறு செய்தால், நீரோ உமது குடும்பத்தினரோ பசிப்பிணியால் துன்புறாமல் இருக்க, உமது ஜீவன் முழுவதையும் நீர் பணிபுரிவதற்குப் பயன்படுத்தலாம்.[33]

வாஷிங்டன்,
அக்டோபர் 27, 1894.

அன்புள்ள அளசிங்கரே,

நானோ ஒரு தியாகி; நான் விரும்புவது ஒன்றே தான். விதவையின் சோகக் கண்ணீரைத் துடைக்கவும், அனாதையின் வாய்க்கு ஒரு பிடி சோறு கொண்டு வந்து கொடுக்கவும் இயலாத ஒரு சமயத்தினிடமோ, தெய்வத்திடமோ, எனக்கு நம்பிக்கை இல்லை.[34]

நியூயார்க்கு
நவம்பர் 19, 1894.

ஸ்ரீஅளசிங்கப் பெருமாளுக்கு,
தைரியம் மிகுந்த என் இளைஞர்காள்,

எவையெல்லாம் உண்மைக்குப் புறம்பானவையோ, அவற்றையெல்லாம் அகற்றுவதில் வெகு ஜாக்கிரதையாய் இருப்பீராக சத்தியத்தை விடாது பற்றிக்கொள்ளுவீராக. அங்ஙனம் செய்தால், நாம் வெற்றி பெறுவோம். மெதுவாக, ஆனால் நிச்சயமாக, வெற்றி பெறுவோம்.[35]

விவேகானந்தரது கடித வரிகளை நிறுத்திக் கொள்வோம். அவர் தனது முதல் மேலைநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு வருகிறார். 1897 ஜனவரி 15 அங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

---

33. முற்கூறியது பக்கம் 300, 301.
34. முற்கூறியது பக்கம் 333
35. முற்கூறியது பக்கம் 351

யாழ்ப்பாணத்திலிருந்து கடல் மார்க்கமாக 1897 ஜனவரி 26 ஆம் நாள் பாம்பனுக்கு வந்து சேர்ந்தார். மேலை வெற்றிகளுக்குப் பிறகு பாரதத் திருநாட்டில் அவர் திருவடி பதித்த முதல் இடம் அது. அங்கே ராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதி விவேகானந்தரை அன்புடன் வரவேற்றார். வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டு, அலங்காரப் பந்தல் ஒன்றும் அமைக்கப்பட்டு இருந்தது. விவேகானந்தருக்கு வரவேற்புரை வாசித்து அளிக்கப்பட்டது.

இதன் பின் பாஸ்கர சேதுபதி ராஜா அவர்கள சில சொற்கள் கூறி சுவாமியவர்களை வரவேற்றார். வரவேற்புக்குப் பதிலுரை ஆற்றி விவேகானந்தர் கூறியது :

நன்றி செலுத்துவது முடியாத காரியம்

எனக்கு நீங்கள் தந்த மனம் நிறைந்த கனிவான வரவேற்பிற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை ஏற்றுக் கொள்ளுங்கள். மேன்மை தங்கிய ராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதி என்னிடம் கொண்டிருக்கும் அன்பிற்கு வார்த்தைகள் மூலம் நன்றி செலுத்துவது என்பது முடியாத காரியம். என்னாலும் என் வாயிலாகவும் ஏதாவது நற்காரியம் செய்யப்பட்டு இருக்குமேயானால், அது இந்த மனிதரால் தான். இந்தியா இந்த நல்ல மனிதருக்குக் கடமைப்பட்டு இருக்கிறது. ஏனெனில் நான் சிகாகோ சர்வசமயப் பேரவைக்குப் போகவேண்டும் என்று நினைத்தவரே இவர்தான். அந்த எண்ணத்தை என் மனத்தில் எழுப்பிய வரும், நான் அங்கு நிச்சயம் சென்றாக வேண்டும் என்று என் பக்கத்தில் நின்றுகொண்டு, முன்பு போலவே, உற்சாகத்துடன் மேலும் மேலும் நான் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அன்பான நமது தாய் நாட்டின் உயர்விற்காக ஆன்மீக வழியில் பாடுபட இவரைப்போல் இன்னும் ஐந்தாறு மன்னர்கள் இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.[36]

36. சுவாமி விவேகானந்தர், கொழும்பு முதல் அல்மோராவரை...! தமிழாக்கம் ஏ.சுப்பிரமணியம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை. பக்கம் 59, 1997. இந்தநூலை படிப்பதற்கு தந்து உதவிய நெல்லை விவேகானந்தர் மன்றச் செயலாளர் திரு. சுந்தரத்திற்கு நன்றி, அதனை அடியேனுக்கு அன்பளிப்பாகத் தந்த நெல்லை விவேகானந்தர் கேந்திர மாவட்டச் செயலாளர் திரு. முத்துசாமிக்கு நன்றி.

Accept my hearty thanks for the kind and cordial reception you have given me. It is impossible for me to express my gratitude to H.H. the Raja of Ramnad for his love towards me. If any good work has been done by me and through me, India owes much to this good man, for it was he who **conceived the idea of my going to Chicago, and it was he who put that idea into my head and persistently urged me on to accomplish it.** Standing beside me, he with all his old enthusiasm is still expecting me to do more such Rajas to take interest in our dear motherland and work for her amelioration in the spiritual Line.[37]

எண்ணம் பாஸ்கர சேதுபதிக்குத் தான் உதித்தது

விவேகானந்தர் அமெரிக்காவுக்குச் செல்வதற்கும் பாஸ்கர சேதுபதி ஏற்பாடு செய்தார். நான் சிக்காகோவுக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் பாஸ்கர சேதுபதிக்குத் தான் உதித்தது. அந்தக் கருத்தை என் சிந்தனையில் ஆழமாகப் பதிய வைத்தவரும் அந்த எண்ணத்தை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று ஓயாமல் வற்புறுத்தியவரும் பாஸ்கரசேதுபதியே என்ற சுவாமி விவேகானந்தரே கூறியுள்ளார்.[38]

சுவாமியின் வருகையைப் நினைவூட்டும் ஒரு சின்னம் பாம்பனில் அமைக்கப்பட்டது.

Sathyameva jeyatha. This Monument erected by Bhaskara Sethupathy, The Raja of Ramanad, Marks the Sacred Spot where His Holiness Swami Vivekananda's blessed Feet First trod on Indian Soil together with the English Disciples, on His Holiness's Return from western Hemi Sphere Where Glorious and Unprecedented Success attained His Holinesss's Philanthrophic Labour to spread the religion of Vedanta.[39]

37. Swami Vivekananda, Lectures from Colombo To Alomora, Advaita Ashrama, Kolakata, 2012, Page 44) *(இந்நூலைத் தந்து உதவிய நண்பர் நெல்லை காவியனுக்கு நன்றி)* A.Ramaswami, Ramanathapuram, District Gazetters, Government of Tamil Nadu. 1972, P 109.

38. அ.இராமசாமி, தமிழ்நாடு மாவட்ட விவரச் சுவடிகள், இராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு அரசு 1990, பக்கம் 135.

39. சோமலெ, ராமநாதபுரம் மாவட்டம். சென்னை. 1972 பக்கம் 279

ஸ்தம்பஸ்தாபனம்.
ஸத்யமேவ ஜயேதே.
ஸ்ரீமத் பூஜ்யபாத **விவேகாநந்த ஸ்வாமிகள்**
குடகோளார்த்தத்திலே
வேதாந்த ஸித்தாந்தத்தைப் பரவச் செய்யும் பொருட்டு
லோகோபகாரமாய் உத்தம கைங்கரியம் புரிந்து
அங்கே அத்விதீயமான காரியஸித்தியுடன் அழியாப் புகழ்
பெற்று, ஜயசீலராய் விளங்கி, அங்கிருந்து புறப்பட்டு
ஆங்கில சிஷ்யர் புடைசூழப் பாரத பூமியிலே
முதன் முதலாய் 1897ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதியன்று
திருவடி வைத்த புண்ய ஸ்தலத்தைக் காட்டும் இந்த
ஞாபக ஸ்தம்பம்.
ராமநாதபுரம் பூபாலராகிய **ஸ்ரீபாஸ்கர ஸேதுபதியால்**
நாட்டப்பெற்றது.

பாருங்கள் வெற்றி வீரன் வருகிறான்

பிறகு யாவரும் கரை வழியாய்ப் புறப்பட்டு ஒரு தர்ம சத்திரத்தில் வந்திறங்கி அங்கே போஜனம் செய்துகொண்டு திருப்புல்லாணியடைந்து அங்கிருந்து ராமநாதபுரம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே ஓர் அழகிய ஏரிக்கரையின்மேல் பாஸ்கரசேதுபதிஸ்வாமிகளைப்பரிவாரசகிதமாய்எதிர்கொண்டு உபசரித்து அந்த ஸம்ஸ்தானத்தின் பிரதான கனவான்கள் பலரை அவருக்குப் பரிசயம் செய்வித்தார். இவர்கள் கோஷ்டியாய்ச் சேர்ந்து வருவதை முன்னதாய்த் தெரிவிக்கும் பொருட்டுப் பீரங்கிவெடி தீர்க்கப்பட்டது. பிறகுபாணவேடிக்கையுடன் ஸ்வாமிகளை ஸம்ஸ்தானத்து வண்டியில் ஆரோஹணிக்கச் செய்து, அதில் அரசனது அங்காக்ஷகர்களையும் நிறுத்தி, அரசன் பாதசாரியாய் வழிகாட்டிக்கொண்டு முன்னே செல்ல யாவரும் ஊர்கோலமாய்ச் சென்றனர். வீதியின் இருபாரிசத்திலும் தீவர்த்திகள் ஜொலித்தன. நாட்டு வாத்தியமும் ஐரோப்பிய வாத்தியமும் அந்தத் திவ்யோத்ஸவத்தை இன்னும் அதிகமாய்ச் சிறப்பித்தன. "பாருங்கள் வெற்றி வீரன் வருகிறான்." என்று பொருள்படும் ``See The Conquering Hero Comes" என்கிற ஆங்கிலேய கீர்த்தனத்தை இங்கிலீஷ்வாத்தியங்கள் முழக்கின. பாதி வழியானதும் ஸ்வாமிகள் மன்னரது வேண்டுகோளின்படி திவ்யமான ஸமஸ்தானப் பல்லக்கொன்றில்

ஆரோஹணித்துக்கொள்ள, அப்படியே சங்கரவிலாசம் போய்ச் சேர்ந்தார்கள். ஸ்வாமிகள் சிறிது சிரமபரிஹாரம் செய்துகொண்டவுடன், அவரை அங்குள்ள பெரிய சபா மண்டபத்துக்கு அழைத்துச் செல்ல, அங்குக் கூடியிருந்த ஜனங்கள் சந்தோஷத்தால் கரகோஷம் செய்தனர். பாஸ்கரபூபதி ஸ்வாமிகளைப் பெரிதும் கொண்டாடிச் சபையின் காரியத்தைத் துவக்கித் தம் சகோதரராகிய ராஜா தினகர சேதுபதியை வந்தநோபசாரப் பத்திரிகையை வாசிக்கும்படி பணிக்க, அவரும் அதை முறைப்படி வாசித்து, அந்தப் பத்திரிகையைத் திவ்யமான வேலைப்பாடமைந்த வெள்ளி முலாம் (தங்க முலாம் என்போரும் உண்டு) பூசிய பெட்டியில் வைத்து ஸ்வாமிகளுக்கு ஸமர்ப்பித்தார். அவ் வந்தனோபசார பத்திரிகையின் சங்கிரஹம் வருமாறு : –

"ஸ்ரீ பரமஹம்ஸ யதிராஜ திக்விஜய கோலாஹல ஸர்வமத ஸம்ப்ரதிபன்ன பரமயோகீஸ்வர ஸ்ரீமத் பகவத் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ கரகமல ஸஞ்ஜாத ராஜாதி ராஜஸேவித ஸ்ரீவிவேகானநந்த ஸ்வாமிகளின் திவ்ய ஸந்நிதியில் செய்து கொள்ளும் விநயபூர்வகமான விஞ்ஞானபனமாவது :–

ராமநாதபுரவாசிகளின் வந்தநோசாரம்

"சேதுபந்த ராமேசுவரமென்றும் ராமநாதபுரமென்றும் சொல்லப்படும் இந்தப் புராதன ஸம்ஸ்தான வாசிகளாகிய அடியோங்கள் தேவரீரே எங்கள் தாய் நாட்டிற்கு ஹிருதய பூர்வமாய் நல்வரவு கூறி யழைக்கின்றோம். தேவரீர் இந்த நாட்டில் வந்திறங்கியதும் வீரசூடாமணியும் எங்கள் ஸ்வாமியுமாகிய ஸ்ரீராமசந்திர பகவான் தம் திருவடிச் சுவடுவைத்துப் புனிதமாக்கிய இப்புண்ணிய க்ஷேத்திரத்திலே தேவரீரை முதல் முதல் சேவிக்கும் படிக் கிடைத்தது எங்கள் அபூர்வமான பாக்யமென்றே கருதுகின்றோம்.

"எமது மேன்மைதங்கிய பிராசீனமதத்தின் திவ்ய குணங்களையும் சிறப்பியல்பையும் மேலைநாட்டு மேதாவிகளுக்கு விளக்கமாய் எடுத்துரைப்பதில் யாவரும் கொண்டாடும் படியாய்த் தேவரீர்செய்த முயற்சிகள் ஒருவரும் எதிர்பாராத வண்ணம் கைகூடிய விசேஷத்தை நாங்கள் மிகுந்த பெருமையுடனும் மனமகிழ்ச்சியுடனும் கவனித்திருக்கிறோம். ஹிந்துமதமே

ஸர்வஸம்பிரதிபன்னமான சமயத்தின் லக்ஷணங்களெல்லாம் பொருந்தப் பெற்றதென்றும், ஸர்வதேசங்களிலுமுள்ள ஸர்வஜாதி ஆடவர் பெண்டிரின் பக்குவ பேதங்களுக்கேற்ப வமைந்துள்ளதென்றும், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கல்வி கேள்விகளில் தேர்ந்த சபையோர்களுக்குத் தேவரீர் இணையற்ற வாக்கு வல்லபத்துடன் அனைவரும் அறிந்துகொள்ளக் கூடிய எளிய மொழியில் எடுத்துரைத்தீர்கள். பரோபகாரம் செய்யவேண்டுமென்னும் பரிசுத்த நினைவுடன் தேவரீர் எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளாகி ஸத்தியமும் சாந்தியும் பொருந்தி விளங்கும் திவ்ய மங்களத் திருவாக்கை வெளிப்படுத்தும் பொருட்டுக் கரையற்ற கடல்களையும் மஹா சமுத்திரங்களையும் கடந்து சென்றீர்கள். தேவரீர் உபதேசத்தாலும் அநுஷ்டானத்தாலும் ஸர்வஜன ஸஹோதரத்துவத்தின் சாத்தியத்தன்மையையும் முக்கிய வியல்பையும் மெய்ப்பித்தீர்கள். அஃதெல்லாவற்றையும் விட மேலான இன்னொரு பிரயோஜனமும் நிகழ்ந்திருக்கிறது. அதாவது இந்தியாவில் சுயமதத்தில் சிரத்தையற்றிருந்தவர் கூட தேவரீரது காரியங்களின் பெருமையைக் கேட்டது முதல் தங்கள் உறக்கத்தை உதறித் தள்ளி விழித்தெழுந்து, தம் முன்னோர்கள் அநுஷ்டித்த மதத்தின் பெருமையும் மேன்மையும், உணரத்தொடங்கி, அது முதல் தங்கள் மதிப்பில்லா அருமைச் சமயத்தை ஆராய்வதிலும் அநுஷ்டிப்பதிலும் உண்மையான சிரத்தாபக்திகள் காட்டி வருகின்றார்கள்.

"கீழ்நாடும் மேல்நாடும் உஜ்ஜீவிக்கும் பொருட்டுத் தேவரீர் செய்யும் பரோபகாரமான கருமத்தின் விஷயத்தில் எங்கள் நன்றியறிதலைத் தக்கவாறு எடுத்துரைக்க நாங்கள் சக்தியற்றவராயிருக்கிறோம். தேவரீரது சிரத்தையுள்ள சிஷ்யர்களுள் ஒருவராகிய எங்கள் ராஜாவினிடத்தில் (பாஸ்கரசேதுபதி) தேவரீர் எப்போதும் காட்டிவரும் மாறாக்கருணையைப்பற்றிப் பேசாமல் இந்த வந்தனேபசாரத்தை முடிப்பது தகுதியன்று. தேவரீர் கருணை கூர்ந்து இந்த ராஜ்யத்திலே திருவடிவைத்த கிருபையால் அவருக்கு உண்டாயிருக்கும் கௌரவத்தையும் பெருமையையும் இவ்வளவென றெடுத்துரைக்க முடியாது. முடிவில் தேவரீர் மேற்கொண்ட இந்த நற்கருமத்தை இனிது நடத்தமாறு

தேவரீருக்குத் தீர்க்காயுளும் தேகாரோக்யமும் திடகாத்திர வன்மையும் அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
தேவரீரது சரணாரவிந்தங்களில்
பக்திபூண்டொழுகும்
சிஷ்யர்களும், சேவகர்களும்.[40]

ராமநாதபுரம்,
1897ஆம் ஆண்டு, ஜனவரி 25ஆம் தேதி.

ராஜா தினகர்

திறமையின் திரு உருவமான ராஜா தினகர் பாஸ்கர சேதுபதியின் இளவலாக 26.04.1871 இல் பிறந்தவர். 11.8.1942 இல் மறைந்தவர். 25.1.1897 இல் விவேகானந்தர் இராமநாதபுரத்திற்கு வருகை தந்தபோது அவரை ஓர் அழகிய வண்டியில் வைத்து[41] பாஸ்கர சேதுபதியும் மற்றவர்களும் இழுந்து வந்தனர். அங்கு நடந்த வரவேற்பில் பாஸ்கர சேதுபதியின் சார்பில் ராஜா தினகர் வாசித்தளித்த வரவேற்பு இதழ் இதோ :

வாசித்தளித்த வரவேற்பிதழ்

His Most Holiness,

Sri Paramahamsa, Yati-Raja, Digvijaya-Kolahala, Sarvamata - Sampratipanna, Parama-Yogeeswara, Srimat Bhagavan Sree Ramakrishna Paramahamsa Karakalmala Sanjata, Rajadhiraja - **Sevita, Sree Vivekananda Swamy may It please your Holiness.**

We, the inhabitans of this ancient and historic samsthanam of sethu Bandha Rameshwar, otherwise known as Ramanathapuram or Ramnad, beg, most cordially, to welcome you to this, our motherland. We deem it very rare privilege to be the first to pay your Holiness our

40. மஹேச குமாரசர்மா, ஸ்ரீவிவேகானந்த விஜயம், சென்னை முதற் பதிப்பு 1907. மறு பதிப்பு 1912, பக்கம் 239, 242.

41. மாடுகள் பூட்டப்பட்டிருந்தது அதனை அவிழ்த்து விடப்பட்டது என்பர் எஸ்.எம்.கமால். குதிரைகள் பூட்டப்பட்டிருந்தது பின் அவை அவிழ்த்து விடப்பட்டது என்பர் ரா.கணபதி.

hearfelt homage on your landing in India, and that, on the shores sanctified by the footsteps of that great Hero and our revered Lord - Sree Bhagavan Ramachandra.

We have watched with feeling of genuine pride and pleasure the unprecedented success which has crowned your laudable efforts in bringing home to the master - minds of the West theintrinsic merits and excellence of our time - honoured and noble religion. Your have withan eloquence that is unsurpassed and in language plain and unmistakable. proclaimed to and convinnced the cultured audiences in Europe and America that Hinduism fulfils all the requirements of the indeal of a universal religion and adapts itself to the temperament and needs of men and women of all races and creeds. Animateed purely by a disinterested impuls.

influencedd by the best of motives and at considerable self sacrifice, Your Holiness has crossed boundless seas and oceans to convey the message of truth and peace, and to plant the flag if India's spiritual triumph and glory in the rich soil of Europe and America. Your Holiness has. both by precept and practice, shown thee feasibility and importance of universal brotherhood. Above all your labours in the West have indirectly and to a great extent tended to awaken the apathetic sons and daughters of India to a sense of the greatness and glory of their ancestral faith, and to create in them a genuine interest in the study and observance of their dear and priceless religion.

We feel we cannot adequately convey in words our feelings of gratitude and thankfulness to your Holiness for your phianthropic labours towards the spiritual regeneration of the East and the West. We cannot close this address without referring to the great kindness which your Holiness has always extended to our Raja, who is one of your devoted disciples and the honour and pride he feels by this gracious act of your Holiness in landing first on his territory is indescribable.

In Conclusion, we pray to the Almighty to bless your Holiness with long life, and health, and strenght to enable you to carry on the good work that has been so ably inaugurated by you.

we beg to subscribe ourselves, Your Holiness most devoted and obedient DISCIPLES and SERVANTS.

with respects and love,

Rajathinagar (sign)

RAMNAD
25th January, 1897.[42]

ராமநாதபுரம் வரவேற்பு

ஸ்ரீபரமஹம்ஸ, யதிராஜ, திக்விஜய கோலாகல, சர்வமத சம்பிரதிபன்ன பரமயோகீசுவர ஸ்ரீமத் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ கரகமல ஸஞ்ஜாத ராஜாதி ராஜ சேவித, ஸ்ரீவிவேகானந்த ஸ்வாமி புண்ணியப் பெருந்தகையின் திருவுள்ளம் உவப்பதாக.

சேதுபந்த ராமேசுவரம் என்றும் ராமநாதபுரம் என்றும் வழங்கப்படுகின்ற இந்தப் புராதன, சரித்திரப் பிரசித்தி பெற்ற சமஸ்தானத்தில் வாழ்கின்ற மக்களாகிய நாங்கள், தாய்நாடு திரும்பியுள்ள தங்களை ஆர்வமுடன் வரவேற்கிறோம். ரகுவீரனாகிய பகவான் ஸ்ரீராமச்சந்திரனின் பாததூளி படிந்ததால் புனிதமடைந்த இப்பகுதிக்கு விஜயம் செய்துள்ள தங்களை வரவேற்கிறோம். தாய்நாடு திரும்பியுள்ள தங்களை, இந்திய மண்ணில் காலடி வைத்த உடனே வரவேற்கும் முதன்மை பெற்றது குறித்து ஈடிலாப் பெரு மகிழ்வெய்துகிறோம்.

புராதனமான பெருமைமிக்க நமது மதத்தின் உண்மைகளையெல்லாம் மேற்கு நாட்டு மக்கள் அறியும் வண்ணம் சிறப்புற விளக்கி வெற்றிமேல் வெற்றி பெற்றமை கண்டு நாங்கள் அளவிலாப் பெருமிதமும், ஆனந்தமுங் கொண்டோம். எல்லா இனத்தவரும். எல்லாக் கொள்கையினரும் கடைப்பிடிக்கக்கூடியதும், சர்வ மத சமரச லட்சியங் கொண்டதும் இந்து மதம் ஒன்றே என்பதைத் தாங்கள் உலகறியச் செய்து வீட்டீர்கள்; மேற்கு நாட்டு அறிஞர் தம் உள்ளத்தில் நன்கு பதியச் செய்து விட்டீர்கள். ஒப்பற்ற சொல்வன்மையால் உலகறியப் பிரகடனம் செய்துவிட்டீர்கள்.

---

42. S.M.கமால், *திறமையின் திரு உருவம் ராஜா தினகர், 1999 இராமநாதபுரம். பக்கம் 149, 150.*

உயரிய நோக்கம் உந்தப் பெற்று, சொல்லமுடியாத மாபெருந் தியாகத்தை மேற்கொண்டு, கடல் கடந்து சென்று செல்வ பூமியாகிய ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நமது ஆன்மிகப் புகழ்க்கொடி நாட்டினீர்கள். உலக சகோதரத்தும் மிக அவசியமானது, நடைமுறை சாத்தியமானது என்பதைத் தாங்கள் செயலில் காட்டிவிட்டீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக மேற்கு நாட்டிலே மறைமுகமான பயனளித்துள்ளது. இந்தியா மக்கள் விழிப்புற்று தங்கள் முன்னோர் புகழையும் பெருமையையும் உணரத் தொடங்கிவிட்டார்கள். உயரிய நமது மதத்திலே ஆர்வம் கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

கிழக்கிலும், மேற்கிலும் ஆன்மிக மறுமலர்ச்சியின் பொருட்டுத் தாங்கள் மேற்கொண்ட தன்னலமற்ற பணிக்கு எங்கள் நன்றியை எவ்வாறு சொற்களால் தெரிவிக்க வல்லோம். தங்கள் சிஷ்யராகிய எங்கள் அரசர் (பாஸ்கரசேதுபதி) பால் தாங்கள் காட்டி வரும் அன்பு பற்றியும், இந்தப் பகுதிக்கு முதன் முதலாக வந்தது பற்றியும் அவர் எவ்வளது பெருமை கொள்கிறார். நன்றியுடனிருக்கிறார் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

தாங்கள் தொடங்கியுள்ள இத் திருப்பணி தொடர்ந்து நடைபெறுவதற்கு வேண்டிய நீண்ட ஆயுளும், வலிமையும், உடல் நலனும் அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

இங்ஙனம், தங்கள்,
ஊழியரும், சிஷ்யரும்.[43]

ராமநாதபுரம்,
ஜனவரி 25, 1897.

பாஸ்கர சேதுபதியால் ராமநாதபுரத்தில் விவேகானந்தருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்பிற்குப் பதிலளித்து சுவாமிகள் ஆற்றி உரையின் சில பகுதிகள் இதோ :

ராமநாதபுர மன்னர் அவர்களே! ராமநாதபுரத்தின் குடிமக்களே! நீங்கள் அன்போடும் கனிவோடும் எனக்கு

43. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், சுடர் 6, நூறாண்டு விழாப் பதிப்பு, ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை. பக்கம் 46, 47

அளித்த வரவேற்பிற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் அன்பையும் கனிவையும் என்னால் உணர முடிகிறது. ஏனெனில் வாய்ச் சொற்களைவிட இதயத்துடன் இதயம் பேசுவதே உயர்ந்த மொழி. உயிருடன் உயிர் கலந்து, ஆழ்ந்த அமைதியில் அவை பேசுகின்ற அந்த மொழி சிறிதும் தவறில்லாத தூய மொழி. அதை நான் என் உள்ளத்தின் ஆழத்தில் உணர்கிறேன்.

வரவேற்புரைக்குப் பதிலுரை - பெருமை தங்களையே சாரும்

மேன்மை தங்கிய ராமநாதபுர மன்னர் அவர்களே, மேலை நாடுகளில் நமது மதத்திற்காகவும் நம் தாய் நாட்டிற்காகவும் என்னால் ஏதாவது சிறிய வேலை செய்ய முடிந்தது என்றால், தங்கள் சொந்த வீடுகளிலேயே ஆழமாகப் புதைந்து கிடக்கின்ற விலைமதிப்பற்ற ரத்தினங்களை அறியாத நம் நாட்டு மக்களின் கவனத்தை அதன் மீது திரும்பி, அவர்களின் உணர்ச்சிகளை விழிக்கச் செய்ய முடிந்ததென்றால், அறியாமையாகிய குருட்டுத்தனத்தின் காரணமாக, தாகத்தால் தவித்து வாடி, உயிர்பிழைக்கும் வழிதேடி எங்கோ உள்ள சாக்கடைத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தவர்களை அழைத்து, தங்கள் சொந்த வீட்டிலேயே வற்றாமல் பொங்கிக் கொண்டிருக்கின்ற நிரந்தர ஊற்றுநீரைக் குடிக்குமாறு என்னால் செய்ய முடிந்தது என்றால், நமது மக்களை விழிப்புணர்த்தி, செயல்படத் தூண்டி, எல்லாவற்றிலும் இந்தியாவின் உயிர்த்துடிப்பு மதம், மதம் மட்டுமே என்பதைப் புரிய வைக்க முடிந்ததென்றால், அந்த உணர்வு இல்லாது போனால் எத்தனை அரசியல்கள் இருந்தாலும், இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் தலைமீதும் குபேரனின் செல்வத்தைக் கொட்டிக் குவிந்தாலும் இந்தியா அழிந்துவிடும் என்று நான் அவர்களுக்கு உணர்த்த முடிந்தது என்றால், இதற்காக இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் என்னால் ஏதாவது செய்ய முடிந்தது என்றால் அதற்கான பெருமை முக்கியமாக தங்களையே சாரும்.

ஏனெனில் நீங்கள் தான் எனக்கு முதன் முதலில் இந்த எண்ணத்தைத் தந்தீர்கள். நீங்கள் தான் இடைவிடாமல் என்னை இத்தகைய வேலையில் தூண்டி வந்தீர்கள். எதிர்காலத்தை உள்ளுணர்வால், புரிந்துகொண்டது போல் நீங்கள் தான் என் கைகளைப் பிடித்து அந்தப் பணிகளுக்க அழைத்துச் சென்றீர்கள்,

அதற்காக எல்லா வழிகளிலும் உதவினீர்கள். ஒருபோதும் தயங்காமல் இந்தப் பணியில் என்னை உற்சாகப்படுத்தினீர்கள். எனவேதான், எனது வெற்றியில் மகிழ்கின்ற முதல் மனிதராக நீங்கள் இருக்கிறீர்கள். அதைக் காணவே நான் இந்தியாவிற்குத் திரும்பும் வழியில் உங்கள் அரசில் முதன் முதலில் இறங்க நேர்ந்தது போதும்!

மேன்மை தங்கிய மன்னரே, *தாங்கள் ஏற்கனவே கூறியதுபோல் மகத்தான வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளது; வியக்கத்தக்க ஆற்றல்கள் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது; மற்ற நாடுகளுக்கு நாம் பலவற்றைப் போதிக்க வேண்டியுள்ளது. தத்துவத்தின், ஆன்மீகத்தின், பண்பின், இனிமையின், மென்மையின், அன்பின் தாயகம் இந்தப் பூமி. இந்தக் குணங்கள் இன்றும் இருக்கின்றன. பல நாடுகளுக்குச் சென்றதில் கிடைத்த என் அனுபவங்கள் எனக்கு இதையே அழுத்தமாகத் தெரிவிக்கின்றன. உலக நாடுகளிலேயே இந்தியாவில் தான் இந்தக் குணங்கள் இன்றும் மிகச்சிறந்த அளவில் இருக்கிறது என்பதை உறுதியாக, தைரியமாக என்னால் சொல்ல முடியும்.*[44]

சங்கரவிலாஸ்

இராமநாதபுரம் அரண்மனையைச் சேர்ந்த சங்கரவிலாஸ் மாளிகையில் விவேகானந்தர் தங்கியிருந்ததன் நினைவாக அவருடைய உருவப் படம் வைக்கப்பட்டிருக்கிறது.[45]

இராமநாதபுரத்தில் விவேகானந்தர் தங்கிய சங்கர விலாசம் என்றும் அரச மாளிகையில் விவேகானந்தர் மண்டபம் உள்ளது.[46]

விவேகானந்தரை சிகாகோவில் நடைபெற்ற உலகச் சமய பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தவர் பாஸ்கர சேதுபதி ஆவார், அவர் அமெரிக்காவுக்கு செல்லுமாறு யோசனை சொல்லியவரும் பாஸ்கர சேதுபதியே. அமெரிக்காவுக்கு

---

44. சுவாமி விவேகானந்தர், கொழும்பு முதல் அல்மோராவரை ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை 1997, பக். 66 – 68.

45. அ.ராமசாமி, இராமநாதபுரம் மாவட்டம். பக்கம் 135.

46. சோமலெ, இராமநாதபுரம் மாவட்டம், பக்கம் 82.

போய் வருவதற்குரிய செலவை ஏற்றவரும் பாஸ்கர சேதுபதியே அமெரிக்காவில் வாகை சூடி பிறகு இந்திய மண்ணில் விவேகானந்தர் காலடி வைத்ததும் இராமநாதபுர மாவட்டத்தில்தான் என்பர் சோமலெ [47] பாம்பனிலிருந்து ராமேசுவரம் கோயில் சென்றார். விவேகானந்தர் அங்கு கூடியிருந்தோரிடம் பேசினார். அவரது உரையை நாகலிங்கம் என்பவர் மொழி பெயர்த்தார். பின்னர் பரமக்குடி, சிவகங்கை, மானாமதுரை, மதுரை, கும்பகோணம், சென்னைக்குச் சென்றார் விவேகானந்தர்.

மறவர்களே முக்குலத்தோரில் மதுரை மாவட்டத்தில் மிகுதியாக உள்ளனர். இவர்களுக்குப் பெருமை தந்தவர்கள். பாண்டித்துரைத் தேவர் அவர்களும், பாஸ்கர சேதுபதி அவர்களும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களும் ஆவார்கள் என்பர் சோமலெ [48]

தான் அமெரிக்கா செல்வதற்கு,எண்ணத்தையும்,பொருளையும் தந்தவர். பாஸ்கரசேதுபதியே என்று விவேகானந்தர் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கும்போது தற்காலத்தில் அதுபற்றி சர்ச்சைகளை எழுப்பி குழம்புவது நிற்கட்டுமாக!

He received a touching welcome There from the Raja of Ramnad, his disciple, who had encouraged him to go to America and had helped him materially for that purpuse. At Ramnad the horses were unhitched from the carriage, bearing the Swami and the People them selves, the Raja among them, drew it. At Rames waram the Raja erected, in the Swami's honour, a victory column forty feet high with a suitable inscription. He also gave a liberal donation to the madras famine - relief fand to commemorate the home coming of the swami.[49]

இராமநாதபுரத்தில் சுவாமிகளை வரவேற்றதும் அமெரிக்கா செல்ல உதவியதையும், அவர் இறங்கிய வேளையில் அவரது

47. மேலது.

48. சோமலெ, மதுரை மாவட்டம், வேதாரண்யம், 1980, பக்கம் 65

49. Swami Nikhilananda, Vivekananda, A Biography, Advaita Ashrama, Calcutta, 1971, Page 222, 223.

வாகனத்தை மக்களும், சேதுபதிகளும் இழுந்து வந்தது, 40 அடி உயரத்தில் பிரம்மாண்டமான நினைவுச் சின்னத்தை விவேகானந்தர் வருகையையொட்டி எழுப்பியதும், சென்னை பஞ்சநிவாரண நிதிக்கான திட்டத்தை தொடங்கியதையும் பாஸ்கர சேதுபதி என்று சுவாமி நிகிலானந்தா தனது நூலில் பாஸ்கரசேதுபதியை புகழ்ந்துரைத்துள்ளார். 1953 இல் அமெரிக்காவில் வெளியான ஆங்கில நூல் இது. இந்தியாவில் 1971 இல் தான் மறுபதிப்பு செய்யப்பட்டது.

உண்மை வரலாற்றை எவரும் மறைத்திடல் இயலாது.

விவேகானந்த - பாஸ்கரம்

பாஸ்கர சேதுபதி அவர்கள் அமைத்த நினைவுத் தூண் தற்போது இல்லை. தற்போது காணப்படுகின்ற நினைவுத் தூண் சமீப காலத்தில் நிறுவப்பட்டதாகும். 1950 களில் ராமேஸ்வரத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்த ராமகிருஷ்ண மிஷன் துறவியர் எவ்வளவோ முயற்சி செய்தும் மன்னர் பாஸ்கர சேதுபதி நிறுவியதாகக் கூறப்படுகின்ற ஒரு தூணோ அதுபற்றிய செய்தியோ கிடைக்கவில்லை.

சுவாமிகள் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கவேண்டும் அது முக்கியமான செயல் என்று தனது வரவேற்புரையில் சொன்னதை ஏற்று உடனடியாக செயல்படுத்தி மறுநாளே ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார் பாஸ்கர சேதுபதி.

பாம்பன் வரவேற்பில் அருகிலிருந்த மாளிகை ஒன்றில் தங்க வைக்கப்பட்டார் விவேகானந்தர். அந்த மாளிகைக்கு **விவேகானந்த - பாஸ்கரம்** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மறுநாள் பயணத்தில் மன்னர் பாஸ்கர சேதுபதி நடந்து சென்றார். விவேகானந்தர் அரசு வண்டியில் சென்றார். பின்னர் மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்க சுவாமி விவேகானந்தர் பல்லக்கில் சென்றார். பயணம் தொடர்ந்தது.[50]

---

50. சுவாமி விவேகானந்தர் விரிவான வாழ்கை வரலாறு தொகுதி 2, சுவாமி ஆசுதோஷானந்தர் எழுதியது. ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை. 2006, பக்கம் 35 – 37.

ரா.இராகவய்யங்கார்

சுவாமி விவேகானந்தர் சிகாகோ செல்ல விரும்பிய பொழுது பல நாட்கள் இராமநாதபுரத்தில் தங்கி சேதுமன்னரின் பொருளுதவியால் அமெரிக்கா சென்றார். விவேகானந்தர் அவைக்களப்புலவர்களோடு, இந்துசமயம் பற்றிய சர்ச்சைகள் பல செய்து இன்புற்றது உண்டு[51] என்பர் ரா. இராகவய்யங்கார்.

சி. கமலையா

பாஸ்கர சேதுபதியே விவேகானந்தரை அமெரிக்காவில் நடைபெறவிருந்த உலகச் சமயங்கள் மகாநாட்டிற்குச் செல்லவேண்டுமென்ற கருத்தை வித்திட்டவர். பணக்காரர்களையும், அரசர்களையும் புகழ்ந்தறியாத விவேகானந்தர் அவருடைய சொற்பொறிவுகளில் பாஸ்கர சேதுபதியைப் பாராட்டியது ஒன்றே அவரது பெருமைக்குச் சான்று பகர வல்லது[52] என்பர் க. சி. கமலையா.

சிரஞ்சீவி

பாஸ்கர சேதுபதியின் முயற்சியால் விவேகானந்தர் சிகாகோ சென்றார். மாநாட்டில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றி இந்துமதத்தின் பெருமையை உலகெங்கும் பரவச் செய்தார். பாஸ்கர சேதுபதி விவேகானந்தரை அனுப்பி வைத்த இச்செயலுக்கு நமது நாடு என்றும் பாஸ்கர சேதுபதிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது[53] என்பர் சிரஞ்சீவி.

மு. சண்முகம் பிள்ளை

சேது சமத்தான வித்துவானாக மகாவித்துவான் ரா. இராகவையங்கார் விளங்கிய காலத்தில்தான் சுவாமி

---

51. சேது சமஸ்தான மகாவித்வான் ரா.இராகவையங்கார், தமிழக குறுநில மன்னர்கள் நூல் முன்னுரை பக்கம் VII

52. க.சி.கமலையா, மாதவி அரங்கேறினாள் நூலில் சேதுபதிகள் கட்டுரையில், சென்னை 1975, பக்கம் 209

53. சிரஞ்சீவி, சேதுபதிகள் வரலாறு, சென்னை, 1981, பக்கம் 146

விவேகானந்தர் அங்கு வந்து சேதுபதிகளின் ஆதரவில் மேல் நாடுகளுக்குச் சென்று திரும்பினார்.[54]

பெ.சு.மணி

சிறந்த நூலாசிரியரும், ஆய்வாளருமான நண்பர் பெ.சு.மணி 1973இல் இந்திய தேசத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலை 652 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அந்த நூலில் பக்கம் 205 இல் கூறுகிறார்.

காங்கிரசிற்கு இந்து நாளிதழ்க்கு நிதி

சென்னையில் காங்கிரஸிற்கும், அதன் பிரசார பேரிகையான இந்துவிற்கும் நிதி உதவி அளித்து தேசியம் வாழ்வு பெறத் துணை நின்றவர் பாஸ்கர சேதுபதி. சைவ சித்தாந்தத்தில் பற்றும் பயிற்சியும் பெற்றவர். சைவ சித்தாந்த சண்ட மாருதம் சோமசுந்தர நாயகரிடம் பாடம் கேட்டவர். தம்மைச் சந்திக்க ஓர் அறிமுகக் கடிதத்துடன் வந்த சுவாமி விவேகானந்தரின் ஆற்றலை முன்னுணர்ந்தவர்.

சுவாமி விவேகானந்தரை சிகாகோ சர்வமத சபைக்கு அனுப்பி வைத்த முத்தான பெருமையைப் பெற்றவர் சேதுபதி. சிகாகோ வீரராகத் தாயகம் திரும்பிய சுவாமிகளுக்கு மாபெரும் வீர வரவேற்பு அளித்தவர் பாஸ்கர சேதுபதி.

இராமகிருஷ்ணர் இயக்கத்திற்கு ஆதரவு

பாஸ்கர சேதுபதியின் ஆதரவு இராமகிருஷ்ணர் இயக்கத்திற்கு பாஸ்கர சேதுபதியின் ஆயுள் வரையில் கிடைத்தது.

சமயப் பற்றும், மொழிப் பற்றும், நாட்டுப்பற்றும் சேதுபதி மன்னர்களின் பரம்பரைச் சொத்து. எனவே பாஸ்கர சேதுபதி இராமகிருஷ்ணர் இயக்கத்திற்கு முன்வந்து அளித்த ஆதரவு சுவாமி விவேகானந்தரின் சக்தி வாய்ந்த தேசியக் குறிக்கோள்களுக்குப் பெரும் பயனைத் தந்தது. சுவாமி விவேகானந்தர் தமது பேச்சுக்கள், கடிதங்கள் பலவற்றில்

54. ரா.ராகவையங்கார், இராசராசசேதுபதி ஒரு துறைக்கோவை, சிதம்பரம், 1984, மு.சண்முகம் பிள்ளை, சேது சமத்தான மகாவித்துவான் ரா.இராகவையங்கார் பக்கம் XI.

பாஸ்கர சேதுபதியைப் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார் என்பர் பெ.சு.மணி.

பெ.சு.மணி எழுதிய கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம் எனும் நூல் சென்னையிலிருந்து 1986 இல் வெளிவந்தது. அதில் பெ.சு.மணி அவர்கள் அமுத சுரபி தீபாவளி மலரில் 1977 இல் தான் எழுதிய கட்டுரையை நன்றியோடு பிரசுரித்துள்ளார். அடியேனும் அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு அந்தக் கட்டுரையைத் தருகிறேன்.

பாஸ்கர சேதுபதி - பெ.சு.மணி

அறிமுகக் கடிதத்துடன் ஒரு துறவி, அரசர் ஒருவரைச் சந்தித்தார். அரசர், சீடரானார். துறவியை உலகம் அறிமுகம் செய்துகொள்ளத் துணை நின்றார். அரசர்.

அந்தத் துறவிதான், சுவாமி விவேகானந்தர். பாஸ்கர சேதுபதிதான் அந்த அரசர். பாரதப் பண்பாட்டை உருவாக்குவதிலும் காப்பதிலும் தமிழ் பண்பாட்டிற்குரிய பாரம்பரியப் பொறுப்பை இச்சந்திப்பு சித்தரித்தது.

இந்தச் சந்திப்பு சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையில் மட்டுமல்ல, இந்திய தேசிய வாழ்விலும் மாபெரும் திருப்பத்தை அளித்தது. 1893-ல் சிகாகோவில் நடைபெற்ற சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தரைக் கலந்துகொள்ளத் தூண்டியவர்களில் **பாஸ்கர சேதுபதி முதன்மையானவர். சுவாமி விவேகானந்தரே இந்த உண்மையை ஓதியுள்ளார்.**

தேசபக்த – மெய்ஞானியாக, மாபெரும் தேசிய வீரராக, சுவாமி விவேகானந்தரைப் பாரதம் வரவேற்றது. இந்த வீர வணக்க வரவேற்பிற்குத் தொடக்கமாக் கொடியேற்றம் செய்தவர் பாஸ்கரசேதுபதி.

சிகாகோ செல்ல முதலில் தூண்டியவர்

சேதுபதி அளித்த வரவேற்பில் வெற்றிக்கொள்ளும் வீரர் பவனி வருவதைப் பாருங்கள்' என்ற ஐரோப்பிய இசையும் ஒலித்தது. ராமநாதபுரம், பாம்பன், மதுரை ஆகிய இடங்களில் சுவாமிஜி தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளுக்கு நன்றி கூறிய **சமயங்களில் பாஸ்கர சேதுபதியின் புகழைச் சுட்டிக்காட்டினார்.**

சிகாகோ செல்ல முதலில் தூண்டியவர் பாஸ்கர சேதுபதி என மும்முறைக் கூறி பெருமிதம் கொண்டார் சுவாமிஜி.

அந்தப் புகழ் உரைகளில் சில, பின் வருமாறு :

''இராமநாதபுரம் அரசர் அவர்களைப் பாருங்கள். இந்த நாடு முழுவதும் தேடினாலும் இவரைவிடச் சிறந்த இந்துவைக் காண்பது அரிது. *கீழ்த் திசை அறிவாயினும், மேற்றிசை அறிவாயினும், அதனைப் பெரிதும் உணர்ந்தவர். ஒவ்வொரு நாட்டிலும் காணப்படும் நல்லவை எவையோ அவற்றை எடுத்துக்கொள்கிறார்."*

பொதுவாக இந்து மதப்பற்றும், குறிப்பாக சைவ சமயப் பற்றும் கொண்ட பாஸ்கர சேதுபதியை ஓர் உத்தம இந்துவாக சுவாமி விவேகானந்தர் கண்டதில் வியப்பில்லை. அந்தக் காலத்தில் சைவ, சமயப் பிரசார முரசாக ஒலித்த "சித்தாந்ததீபிகை"யில் பாஸ்கர சேதுபதியின் சமயச் சொற்பொழிவுகள் வெளியிடப்பட்டு வந்தன.

இந்து மதச் சிறப்பை, சிகாகோவில் புரிய வைக்கும் பேராற்றல் சுவாமி விவேகானந்தரிடம் உள்ளதை உணர்ந்து தூண்டியவர் சேதுபதி. சுவாமிஜியின் அருளுரைகளில் இதனைத் தெளிவாக அறிகிறோம்.

"அமெரிக்க நாட்டில் நடைபெறும் சர்வ சமய மாநாட்டுக்குச் செல்லும் எண்ணத்தை என்னுள் தூண்டியவர் இவரே, என் அருகே நின்று மிகுந்த மகிழ்ச்சியுடன் நான் இன்னும் அதிகம் செய்யவேண்டும் என்று விரும்புகிறார்."

முற்கூறிய இராமநாதபுரம் வரவேற்பின் நன்றியுரையைத் தொடர்ந்து, பாம்பன் வரவேற்பிற்கு பதில் அளித்துப் பேசுகையில் சுவாமிகள் கூறியதாவது;

உள்ளத்திலே முதல் முதல் விதைத்தவர்

"இந்திய நாட்டின் முதுகெலும்பான மதம் வீழ்ச்சியுறு மேல் இந்தியா அழிவுறும் என்பதை வற்புறுத்தி எடுத்தோதியிருப்பேனாகில், அதற்காக இந்தியாவும் பிற நாடுகளும் எவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது? **இராமநாதபுரம் மன்னராகிய தங்களுக்கே! ஏனெனில் இந்த**

எண்ணத்தை என் உள்ளத்திலே முதல் முதல் விதைத்தவர் தாங்கள்தான்.''

மதுரை நகரிலும் சுவாமிகள் தொடர்ந்து குறிப்பிட்டதாவது;

"சீரும் சிறப்பும் மிக்க இராமநாதபுரத்து மன்னரின் விருந்தினனாக இம் மதுரை மாநகரில் தங்கியுள்ளேன். **சிகாகோவிற்குச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் விதைத்தவர் இராமநாதபுரம் ராஜாவே; தமது மனப்பூர்வமான செல்வாக்கு முழுவதையும் இதன் பொருட்டு உபயோகித்தவரும் அவரே; ஆதரித்தவரும் அவரே. எனவே எனக்கு வழங்கப்பட்டுள்ள புகழுரையின் பெரும் பகுதி அவருக்கே உரியதாம்.''**

பாஸ்கர சேதுபதி பாம்பனில் சுவாமி விவேகானந்தரை சொந்த முறையில் வரவேற்று அற்புதமாகப் பேசினாராம். சுவாமிஜியின் வரலாற்று நூல் ஒன்றில் சேதுபதியின் இந்த சொற்பொழிவு பற்றிய சிறப்பு குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆயுள் முழுவதும் உற்றத்துணையாக

பாஸ்கர சேதுபதி, சுவாமிஜியின் சீடராக இராமநாதபுரம் வரவேற்புரையில் குறிப்பிடப்பட்டார். அதன் ஒரு பகுதி வருமாறு: –

"தங்கள் சீடராகிய எங்கள் அரசர்பால் தாங்கள் காட்டி வரும் அன்பு பற்றியும், அந்தப் பகுதிக்கு முதன் முதலாக வந்தது பற்றியும், அவர் எவ்வளது பெருமை கொள்கிறார். நன்றியுடனிருக்கிறார் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்."

பாஸ்கர சேதுபதியின் உழுவலன்பில் உள்ளம் பறிகொடுத்து, விவேகானந்தர் ஒரு கடிதத்தில் கூறுகிறார்:

"எனது வாழ்க்கை வாய்ப்பின் அதி உச்ச நிலையில் நான் இருக்கிறேன்."

தமது ஆயுள் முழுவதும் சென்னையில் இராமகிருஷ்ணர் இயக்கத்திற்கு உற்றத் துணையாக விளங்கினார் பாஸ்கர சேதுபதி.

சுவாமி விவேகானந்தரைப் போலவே பாஸ்கர சேதுபதியின் மண்ணுலக வாழ்வு, குறுகியது. 3.11.1868–ல் பிறந்து 26.12.1903–ல் அமரரான வரை பாஸ்கர சேதுபதி தமது இலட்சியங்களுக்காக உழைத்தார்.

அவருடைய இலட்சியங்கள் எவை என்பனவற்றை அவரது நாட்குறிப்பில் பிரகடனப்படுத்தியுள்ளார் பாஸ்கர சேதுபதி.

1893ம் ஆண்டில் ஆங்கில மொழியில், தெளிவான அழகிய கையெழுத்தில் அமைந்துள்ள அவரது நாட்குறிப்பு சிறந்த ஒரு வரலாற்று ஆவணமாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாரதம் கண்ட புதிய விழிப்பின் இயக்கத்தை பாஸ்கர சேதுபதியின் நாட்குறிப்பில் அறிகிறோம்.

எடுத்த எடுப்பிலேயே ஆங்கிலத்தில் (Agitate, educate, organise) என்று குறிப்பிடுகிறார். குறளுக்கு உரை செய்த பதின்மர் என்ற தலைப்பில் யாத்த ஒரு பாவிற்குக் கீழே முற்கூறியவாறு எழுதியுள்ளார்.

பாஸ்கர சேதுபதியின் இந்த கோஷம், பொது வாழ்க்கைப் பணியில் அவருக்கிருந்து ஆர்வத்தை புலப்படுத்துகிறது.

"My ambitions in this life" என்று மகுடமிட்டு ஜனவரி பதின்மூன்று வெள்ளிக்கிழமையன்று எழுதிய குறிப்பில் பாஸ்கர சேதுபதியின் இலட்சியங்கள் முப்பதுக்கு மேலும் அறியக் கிடக்கின்றன.

அரசியல், சமூக ஆன்மிகத் துறைகளைச் சார்ந்த சான்றோர்களையும், அமைப்புகளையும் பற்றிய செய்திகளும் நாட்குறிப்பில் நிறைந்துள்ளன.

பாஸ்கரசேதுபதி, தமது இலட்சியங்களாக வெளியிட்டதில் சில வருமாறு:–

1) குறைந்தளவு பன்னிரண்டு தொன்மையான சமஸ்கிருத, தமிழ் நூல்களை மறு பதிப்புகளாக வெளியிடுதல்.

2) பெனரஸ், கயை, பிரயாகை, சேது முதலான இடங்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்டு முக்கிய ஆறுகளில் நீராடல்.

3) 'எஸ்டேட்டை' கடன் சுமையில் இருந்து மீட்டுதல்.

4) இங்கிலாந்து, அமெரிக்கா போக விரும்புதல்.

5) சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராகச் சேருதல்.

6) தமிழ்ச் சங்கம் நிறுவுதல்.

7) துன்பம் இன்றி இறக்க விரும்புதல், ஒன்று விட்ட சகோதரர் பாண்டித்துரை தேவருக்கு முன் இறக்க விரும்புதல்.

8) கடவுளைப் பற்றிய தியான நிலையிலேயே இறத்தல்.

9) கோயில்கள் கட்டுதல், புதுப்பித்தல், அன்ன சத்திரங்கள் நிறுவுதல், கும்பாபிஷேகம் செய்தல்.

10) ஏதேனுமொரு சட்டமன்றத்தில் இடம் பெறுதல்.

நாட்குறிப்பு புலப்படுத்தும் பிற முக்கியச் செய்திகளை இனி பார்ப்போம்.

ஜனவரி 25, புதன்கிழமை எழுதிய குறிப்பில் சிகாகோ செல்லும் விருப்பம் பாஸ்கர சேதுபதிக்கு இருந்ததாகத் தெரிகிறது.

சுவாமி விவேகானந்தரை சிகாகோவிற்கு செல்லத் தூண்டியதோடு அமையாமல், தாமும் உடன் செல்ல முற்பட்டாரோ எனக் கருத இடமளிக்கிறது.

அன்னாளில் காசிநாத்திரியம்பிக்திலங், புகழ் பெற்ற காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர். அவர் மறைவு குறித்து பாஸ்கர சேதுபதி தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் 2 சனிக்கிழமை அன்று எழுதிய குறிப்பில் இச்செய்தி உள்ளது.

இவ்வாறே புகழ் பெற்ற தமிழ்ச் சன்றோர், பேராசிரியர் பூண்டி அரங்காநாத முதலியார் அவர்கள் மறைவு குறித்து எழுதியுள்ள நாட்குறிப்பில் பாஸ்கர சேதபதியின் எழுத்தாற்றலை காண்கிறோம்.

பாஸ்கர சேதுபதி சக்தி வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர். சக்தி தந்திரத்தை அறிந்து பயிற்சி பெறுவதை ஓர் லட்சியமாகக்

குறிப்பிட்டார். சுவாமி விவேகானந்தர், 'சக்தி வழிபாடு பற்றி தமது அரசவையில் பேச ஏற்பாடு செய்தார். ஸ்ரீராஜராஜேஸ்வரி தேவியை குல தெய்வமாக வழிபட்டவர். ஸ்ரீராஜராஜேஸ்வரி ஆலயத்தின் விமானத்திற்கு பொற்றகடு வேய்ந்து குடமுழுக்கு செய்த புனித நாளை ஆங்கிலத்தில் "Red letter day " என்று குறிப்பிட்டு சிவப்பு மையினால் நாட்குறிப்பில் எழுதினார், பாஸ்கர சேதுபதி.

இதேபோன்று "Red letter day" என்று ராமேஸ்வரம் தேவஸ்தானத்தில் நிரந்தர மானேஜராக தாம் நியமிக்கப்பட்ட நன்னாளைப்பற்றியும், சிவப்பு மையினால் எழுதினார்.

தாம்பரம் கிறிஸ்தவ கல்லூரியில் திரு.சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ் புலமைக்காக தம் பெயரால் அளிக்கப்பட்ட தங்கப் பதக்கத்தை பெற்றதை பெருமிதத்துடன் மார்ச் 28 புதன் கிழமை அன்று எழுதிய நாட்குறிப்பில் கூறிகிறார். பாஸ்கர சேதுபதி.

மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் ஆகிய சைவ சமயக் குறவர்களின் குரு பூஜைகளை பற்றி நாட்குறிப்பில் பாஸ்கர சேதுபதி பக்தி சிரத்தையுடன் கூறி உள்ளார்.

சென்னை 'இந்து' பத்திரிகையின் வளர்ச்சியில் ஊக்கம் காட்டியவர் பாஸ்கர சேதுபதி. 'இந்து' பத்திரிகை அலுவலகத்திற்கு அவர் சென்றதும், அவரை நாடி 'இந்து' பத்திரிகை திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் வந்ததையும், நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது நாட்குறிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முக்கிய பிரமுகர்கள் வருமாறு:

ஜி.சுப்பிரமணிய ஐயர், வி.பாஷ்யம் ஐயங்கார், பாரிஸ்டர் ராமசுவாமி ராஜா, பாலசுந்தரம் முதலியார், சூரிய நாராயண சாஸ்திரியார், மு.வீரராகவசாஸ்திரியார், வெங்கடரத்திரனம் நாயுடு காரு, காசிநாத்திரியம்பிக்திலங், பூண்டி அரங்கநாத முதலியார், பாண்டித்துரை தேவர், சோமசுந்தர நாயகர் மற்றும் பல சமஸ்தானாதிபதிகள், உறவினர்கள்.

பாஸ்கர சேதுபதி தொடர்பு கொண்ட, சொற்பொறிவாற்றிய அமைப்புகள் பல வருமாறு.

தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, சென்னை பல்கலைக்கழக வரலாற்றுச் சங்கம், பிரம்ம சாமாஜம் தியோசாபிகல் சொசைட்டி, 'யங்மென் இந்து அசோசியேசன்', 'நில உரிமையாளர்கள் சங்கம்', 'ப்ரொக்ரஸிவ் யூனியன்', 'சென்னபுரி அன்னதான சமாஜம்,' திராவிட பாஷாபிவிருத்தி சங்கம், 'இந்து' அலுவலகம் மற்றும் சில.

சமூக சீர்திருத்தத்தில் ஆர்வம் கொண்டவர் பாஸ்கர சேதுபதி. சாதி அமைப்பு பற்றி இரண்டரை மணி நேரம், 'ப்ரொக்ரஸிவ். யூனிய'னில் பேசியதாக நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். சென்னையில் பிற்பட்ட மாணவர்களுக்கு ஒரு விடுதி கட்டுவதை ஒரு லட்சியமாகவும் குறிப்பிட்டுள்ளார். சென்னை இந்து ஆசார சீர்திருத்த சபையாரின் வேண்டுகோளுக்கிணங்க 'தாசிகளின் சதிர் கச்சேரிகளை ஏற்பாடு செய்வதை நிறுத்தினார் பாஸ்கர சேதுபதி. இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபைக்கு நிதி உதவி அளித்ததை காங்கிரஸ் அறிக்கைகளில் காண்கிறோம்.

'தக்கார், தகவலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்பெறும் ' என்னும் குறள் நெறிக்கிணங்க பாஸ்கர சேதுபதியின் பொதுவாழ்க்கைப் பணியின் மேன்மையை அறிகிறோம்.

மதுரையில் இருந்து வெளி வந்த 'விவேகபாநு' 1904 ஜனவர இதழில் பக்கம் 33ல் பின் வருமாறு பாஸ்கர சேதுபதியின் மறைவு குறித்து எழுதியது :

சேதுசமஸ்தானதி பதியாகிய இம்மன்னர் பெருமான் உலகம் முழுவதும் புகழ் பெற்றவர். சிவநேசச் செல்வர், ஆங்கிலேய பாஷையில் எப்.ஏ. பட்டம் பெற்றவர்.தமிழ் இலக்கியம் இலக்கண சாஸ்திர வல்லுனர். ஆங்கிலத்திலும், தமிழிலும் பிரசங்கிப்பதில் மிக சிறந்தவர்.... சமயோசிதமாக கற்பனை செய்து பேசுவதில் சமர்த்தர்... தென்னாட்டு தேவாலயங்களில் இவர் பொருள் புகாதவை மிகச் சொற்பமே. ஒரு வாரமாக ஒரு சிறு சிரங்கினால் வருந்தினார். 1903ம் வருடம் டிசம்பர் மாதம் 26ம் தேதி காலையில் சிவபதம் அடைந்தார்...இவ்வரசர் செய்த சற்கருமங்களுட்டலைமை பெற்று நிற்பது நம் மதுரைத் தமிழ்ச் சங்கமே. இப்பெரும் புகழ் மன்னருக்கு இப்போது

வயது 36...இவர் பிரிவு நம் தமிழ் மொழிக்கு பெரிதும் நஷ்டந்தரத்தக்கது.

நன்றி. 'அமுதசுரபி' தீபாவளி மலர் 1977.

சேதுபதி செந்தமிழ்த் திரட்டு

எம்.முத்துசாமி 1994 இல் முருகாலயம் வெளியீடாக சென்னையிலிருந்து வெளியிட்ட நூல் சேதுபதி செந்தமிழ்த் திரட்டு. 292 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில டாக்டர் க.கந்தசாமி 'சுவாமி விவேகானந்தரும் மன்னர் பாஸ்கர சேதுபதியும்' என்ற கட்டுரை தந்துள்ளார். அதிலிருந்து சில பகுதிகள் :

சுவாமி விவேகானந்தரும் மன்னர் பாஸ்கர சேதுபதியும் – டாக்டர் க.கந்தசாமி

எழுமின்! விழிமின்! கருதிய கருமம்

கை கூடும் வரை உழைமின்! உணர்மின்!"

Arise! Awake! Stop not till the

goal is reached,

என்னும் உபநிஷத வாக்கியத்தைத் தன் வாழ்வோடு ஒன்றாக்கிக் கொண்டவர் சுவாமி விவேகானந்தர்.

அமெரிக்கப் பயணம் பலதகவல்கள்

சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவுக்கு அனுப்பியது யார் என்னும் ஒரு வினாவிற்கு விடையளிக்க வேண்டுமேயாகில் ஓர் ஆய்வாளனுக்குப் பல்லாண்டுகால உழைப்புத் தேவை. இதிலுள்ள சிக்கல்களைத் தீர்த்து உண்மையை வெளிக் கொணர்தல் என்பது சிரமமான ஒன்று. ஏனெனில் சுவாமி விவேகானந்தரின் அமெரிக்கப் பயணம் பணத்தோடு தொடர்புடையது என்பதும் புகழ் என்னும் பெருமை தங்களையே அடைய வேண்டும் என்று ஒவ்வொருவரும் எழுதி வைத்திருக்கின்ற குறிப்புகளும் தான் இச்சிரமத்திற்கான காரணம்.

பாரத நாட்டை கால்நடையாகவே பன்னிரண்டு ஆண்டுகள் பரதேசியாய்ச் சுற்றிய விவேகானந்தர் அமெரிக்காவில் கூடிய சர்வ மத மகாசபையில் வெற்றிக் கொடி நாட்டி திக்விஜயம்

செய்து இந்தியா திரும்பியபோது விவேகானந்தரது பணியைத் தமக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்ள சில அரசியல் கட்சிகள் முயன்றன என்றும் இச்செய்தி கிடைத்ததும் விவேகானந்தர் அதை வன்மையாகக் கண்டித்தார்.[55] என்பதையும் அக்கால வரலாற்றில் நம்மால் அறிய முடிகிறது.

சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்த பெருமைக்குரியோர்களாக இருப்போர்களிடையே இராசபுதனத்து க்ஷேத்திரி சமஸ்தானத்து மன்னரும் இராமநாதபுர சமஸ்தானத்து மன்னரான பாஸ்கர சேதுபதியும் குறிப்பிடத் தகுந்தவர் என்பதை சுவாமி விவேகானந்தரின் வரலாற்றில் பார்க்க முடிகிறது.

இக்கட்டுரையில் நம் தென்னகத்து மன்னரான பாஸ்கர சேதுபதிக்கும் சுவாமி விவேகானந்தருக்கும் இடையே இருந்த தொடர்பினை முதலில் நோக்குவோம்.

பாஸ்கர சேதுபதியோ மன்னர்.

விவேகானந்தரோ துறவி மகான்.

இருவருமே அவரவர்களின் தாய்மொழியின் மீது பற்றுக்கொண்டவர்கள் ஆங்கிலமும் வடமொழியும் என்னபதை அத்துபடி செய்தவர்கள் அத்தோடு... குறிப்பாக இருவருமே வேதம் படித்த சத்திரியர்கள். மன்னரான பாஸ்கரர் மறவர் குலத்து மைந்தன். துறவியான விவேகானந்தர் சத்திரியப் பிரிவின் தத்தர் குலத்து மகன்.

முன்னவர் மறத்தின் துணையோடு மக்களை ஆண்டவர். பின்னவர் மதத்தின் துணையோடு இந்நாட்டு மன்னர்களையெல்லாம் ஆண்டு தேசம் காக்க வந்த துறவி.

காட்டாற்று மண்ணிலே – முள்ளால் ஆன முருங்கையைக் கொண்டு நிறுத்து வேலும் அம்பும் எய்து பழகும் மறவர் குலத்தின் ‘வழித் தோன்றல் ஒருவர்.

அமெரிக்க நாட்டு அன்னிய மண்ணிலே ஓடும் நதியில் முட்டை ஓட்டை மிதவையாய் விட்டு துப்பாக்கியால் சுட

55. ரோமன் ரோலண்ட், விவேகானந்தர் (தமிழாக்கம் ஏ.ஜி.வெங்கடாச்சாரி) ப.143.

நினைத்துத் தோல்வி பெற்ற சூரர்கள் முன்னே, முதன் முறையாகத் துப்பாக்கி தூக்கி ஆறு முட்டை ஓடுகளை அடுத்தடுத்துச் சுட்ட துப்பாக்கி வீரர் சுவாமி விவேகானந்தர்.[56]

தில்லை வாழ் அந்தணர்களின் பாராட்டு

இருவருமே கல்லூரிப் படிப்பு என்னவென்பதை அக்காலத்திலேயே கண்டு தெளிந்தவர்கள்.

வேதம் படித்து வேதாந்தியானவர் சுவாமி விவேகானந்தர். சித்தாந்தம் படித்துச் சித்தாந்தியானவர் மன்னர் பாஸ்கர சேதுபதி.

நாட்டுப்பற்றோடு வேதாந்தம் என்னும் சமயச் சரக்கைச் சேர்த்திழைத்து விடுதலைத் தேனாக இந்த நாட்டு இளைஞர்களுக்குக் கொடுத்தவர் சுவாமி விவேகானந்தர்.

தன் ஆட்சிப் பொறுப்பின் கீழிருந்த கோயில் வழிபாட்டு நிர்வாக முறைகளை வேத முறைப்படியும் சித்தாந்த முறையிலான ஆகம அளவை நூல்களின் அடிப்படையிலும் சரிவர நடைபெறுமாறு செய்ததுடன் தில்லைவாழ் அந்தணர்கள் மத்தியில் 'நடராஜர் தாண்டவம்' பற்றி தொடர் சொற்பொழிவு நடத்திப் பாராட்டும் பெற்றவர் மன்னர் பாஸ்கர சேதுபதி. விவேகானந்தர் என்னும் வேதாந்தியைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் எல்லாரும் எப்படிப் பாராட்டுகிறார்களோ அதுபோலவே பாஸ்கர சேதுபதி என்னும் இந்த மன்னர் குலத்துச் சித்தாந்தியையும் ஆகம அறிவை நிரம்பப் பெற்ற அன்றைய தில்லைவாழ் அந்தணர்களே பாராட்டி இருக்கிறார்கள். இது வரலாறு!

பாரதநாட்டின் கிழக்கு மண்ணுக்காரரும் தென்கோடிச் சீமையின் சிற்றரசருமான இவர்கள் இருவருமே ஈகைக் குணத்திலும் ஒன்றாகவே இருந்திருக்கிறார்கள். தான் சுற்றியிருந்த ஒரே ஆடையை இளம் வயதிலேயே தெருவில் சென்ற சந்நியாசிக்குக் கழட்டிக் கொடுத்தவர் இளம் வயது நரேன் இவ்வுலக வாழ்வின் கடைசி நாட்களில் கூட தன் மாமனாரான

56. ரா.கணபதி, அறிவுக்கனலே, அருட் புனலே! ப.17

ஊர்க்காட்டு ஜமீன்தாரின் மாளிகைக்குச் சென்றவர், அங்கு போகாமல் திருவாவடுதுறை ஆதீன மடமான கல்லிடைக் குறிச்சி துறவிகள் மடத்திலே மன்னர் பாஸ்கர சேதுபதி தங்கியிருந்த போது தன்னை நாடி வந்து மோகன ராகத்திலே கீர்த்தனம் பாடியஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதவருக்குத் தன் கழுத்தில் இருந்த மன்னனுக்கேயுரிய நவகண்டி மாலையைக் கழட்டிப் போட்டவர் இந்த இராமநாதபுரத்து மன்னர்.

வடமுனை இமயத்தில் தொடங்கி குமரிமுனைக் கடலின் கருங்கற் பாறையில் பரதேசம் வந்து தனது பாத யாத்திரையை முடித்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் மகாத்மாவான சுவாமி **விவேகானந்தரைப் பாரறியச் செய்வதில் பெரும் பங்கு வகித்தவர் நம் தமிழ் மன்னர் என்னும்போது நமக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவேது?**

இந்திய நாட்டு காவியாடையைக் கடல் கடக்க வைத்ததுடன் சுவாமி விவேகானந்தரின் வேதாந்த அட்சயப் பாத்திரத்தை அமெரிக்க மண்ணில் அரங்கேற்ற **வைத்ததில் மன்னர் பாஸ்கர சேதுபதிக்குப் பெரும் பங்குண்டு என்பதைச் சுவாமி விவேகானந்தரே தென்னகத்துச் சொற்பொழிவுகளில் குறிப்பிடுகின்றார்.**

'.....இராமநாதபுரம் அரசருக்கு எனது இதயம் நிறைந்த நன்றியினைத் தெரிவிப்பது இயலாத காரியமாகும். இந்த அடியவனால் ஏதாவது தொண்டு நிறைவேறி இருக்குமானால் அதற்கு இந்த நாடு இந்த நல்ல மனிதருக்கு மிகவும் நன்றிக் கடன் பட்டுள்ளது. ஏனெனில் சிகாகோவிற்கு நான் செல்லவேண்டும் என்ற கருத்தை எனது சிந்தையில் திணித்து அதனை அடிக்கடி வலியுறுத்தி என்னை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தது அவர்தான்."

பாஸ்கரசேதுபதிக்கும் பெரும் பங்கு

''துறவிக்கு வேந்தன் துரும்பு'' என்பது இந்த நாட்டிலே எல்லாரும் அறிந்த பழமொழி. ஆம் – நரேந்திரன் என்னும் பெயர் பெற்ற துறவிக்குப் பாஸ்கரன் என்னும் பெயர் கொண்ட மன்னர்தான் துரும்பாய் – துடுப்பாய் – படகாய் – கப்பலாய் அமைந்து அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கிறார்.

கிழக்குச் சூரியனை மேற்கே அனுப்பி இந்தியக் காவியை சூரியக் காவியாகப் பிரகாசிக்க வைத்ததில் நம் தென்சீமை மன்னரான பாஸ்கர சேதுபதிக்கும் பெரும் பங்கு இருந்ததனால்தான் சேதுபதியின் மண்ணிலேயே நான் முதலில் இறங்கவேண்டும் *என்ற முடிவெடுத்து பசிபிக் கடல் கடந்து கொழும்பு யாழ்ப்பாண் வழியாக பௌத்த சந்நியாசிகளைப் போல நீண்ட காவியாடை உடுத்தி இடையில் சந்நியாச மேகலை பூண்டு தலையில் இந்துஸ்தானி பாகை பொலிய 1897 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 நாள் காலைப் பொழுதிலேயே பாம்பன் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தார். இலங்கை நீராவிப் படகில் இருந்து சேதுபதியின் படகுக்கு மாறியவுடன் "நான் அமெரிக்கா செல்ல வேண்டுமென்று முதல் முதலில் எண்ணியவர்களில் நீங்கள் ஒருவர். எனவே தாய்நாடு திரும்பும் நான் உங்களை முதன் முதலில் சந்திப்பது பொருத்தமே!' என்று நாத்தழுழுக்க இராமநாதபுரத்து அரசரிடம் கூறியிருக்கிறார் சுவாமி விவேகானந்தர். அதற்கு விடை கூறக் கூடக் கூறவொண்ணாமல் மனவெழுச்சி அடைந்திருந்தார் மன்னர் என்று ராமகிருஷ்ண மடத்து வெளியீட்டு நூல் ஒன்றும் கூறுகிறது. இது பாம்பன் துறைமுகத் தண்ணீரில் நடந்த சரித்திரம். இனி... மண்ணில் நடத்த வரலாற்றைப் பாருங்கள்.*

சேதுபதியின் படகில் இருந்து தன் காலை – பாம்பன் மண்ணில் ஆம் – பாரத மண்ணில் முதன் முதலாய் வைப்பதற்கு சுவாமி விவேகானந்தர் முற்பட்டபோது மன்னர் பாஸ்கர சேதுபதி முழங்காலிட்ட நிலையில் கீழே குனிந்து தன் தலையில் முதல் திருவடி வைத்து இந்த மண்ணை மிதிக்கவும் என்று மன்றாடியிருக்கின்றாராம்.

ஆம் –

துறவிகள் கையேந்திய இந்திய மண்ணில் துறவியின் காலையே தன் தலையில் வைக்கச் சொல்கிறார் மன்னர் பாஸ்கர சேதுபதி.

காவியுடைக்குள் ஒரு புரட்சிக் கலையைக் கையாண்டு வந்த சுவாமி விவேகானந்தரா மன்னனின் தலையில் தன் திருக்காலை வைப்பார்.

திருவடித் தீட்சை பெற மன்னர் தயாரானார் - ஆனால் திருவடி வைத்து தீட்சை கொடுக்க அந்த நன்றிமிகு துறவி முன் வரவில்லை.

நானிலம் சுற்றி வந்தவருக்கு நாற்பதடி ஸ்தூபி.

சுவாமி விவேகானந்தரின் முதல் திருவடி வைத்த இடத்தில் மற்றொருவரின் காலடி வரலாற்றில் பட்டுவிடக் கூடாது என்று எண்ணிய மன்னர் பாஸ்கர சேதுபதி அந்த இடத்திலேயே நாற்பதடி உயர பளிங்குக் கல்லாலான ஸ்தூபி ஒன்றை எழுப்புகின்றார். நானிலம் சுற்றி வந்தவருக்கு நாற்பதடி ஸ்தூபி. இல்லை சுவாமி விவேகானந்தரும் பாஸ்கர சேதுபதியும் நாற்பது வயதுக்குள் மறைந்து விடுவோம் என்னும் நிலையிலேயே நாற்பதடி உயர ஸ்தூபி அமைத்தார் போலும் என்று எண்ணுவதற்கு அவர்களின் வரலாறு இடம் கொடுக்கிறது.

இங்குக் கட்டப்பட்ட ஸ்தூபி வரலாற்றுச் சிறப்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. உலகில் வேதாந்தக் கொடிநாட்டி வந்த சுவாமி விவேகானந்தர் இந்த மண்ணை முதன் முதலாய் மிதித்துச் சரியாக 50 ஆண்டுகள் ஆனபோதுதான் அதே ஜனவரி 26 இல் தான் இந்தியா குடியரசு நாடாகிறது. நம் நாட்டுக் கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் எழுதும்போது ஸ்வஸ்தீஸ்ரீ என்றும் சுபமஸ்களம் என்றும் எழுதுகின்ற வழக்காறு இருந்தபோது 'சத்யமேவ ஜயதீ' என்று கல்லெழுத்து தொடங்கிய மரபை இங்கே பார்க்க முடிகிறது. இந்தப் பளிங்குத் தூணில் பொறிக்கப்பட்டுள்ள 'சத்ய மேவ ஜயதீ' என்னும் வாசகம்தான் இன்று பாரதப் பெருநாட்டின் பிரமாண வாசகமாக அமைந்திருக்கிறது. இந்த வாசகத்தின் மொழி பெயர்ப்பான 'வாய்மையே வெல்லும்' என்பது தான் தமிழக அரசின் இலச்சினையான கோபுரத்தின் கீழுள்ள வாசகமாகத் திகழ்கிறது என்பதையும் இங்கு நாம் நினைக்கவேண்டும்.

மன்னரே இழுத்ததேர்

மன்னனாகப் போகும் ஒருவனுக்குக் கடவுள் தேரோட்டிய கதையைக் குருச்சேத்திரத்தில் நடந்ததாக நாம் பாரத நூலில் பார்த்திருக்கின்றோம். ஆனால் இந்தத் தமிழ் மண்ணில் சந்நியாசி

ஒருவரைத் தேரில் வைத்து மன்னரே மாடாக மாறி அத்தேரை இழுத்திருக்கின்றார். ஆம் கடற்ரையில் நடந்த பாம்பன் வரவேற்பு முடிந்ததும் சுவாமி விவேகானந்தரை அலங்காரத் தேரில் ஏற்றி பூட்டியிருந்தவற்றை அவிழ்த்து விட்டு மன்னனாக இருந்த சேதுபதியே நவீன கீதா உபதேசம் செய்கின்ற இருபதாம் நூற்றாண்டுக் கண்ணனாக மாறியிருக்ன்றார்.

வண்டித் தேரிலே வீற்றிருக்கும் சுவாமி விவேகானந்தரை பாரதப் போரின் கதாநாயகனான அருச்சுனனாக மன்னர் பாஸ்கர சேதுபதி கருதியிருக்கின்றார் என்று எண்ண முடிகிறது. ஆம். வண்டித் தேரை மன்னனாகிய தானே ஓட்டினால் கீதா உபதேசம் செய்த கண்ணனின் பெருமை தன்னை சார்ந்து விடுமோ என்று அஞ்சிய நிலையிலேயே கண்ணனின் பொன்னிற குதிரைகள்போல் தான் முன்வந்து இந்திய விடுதலைக்கு ஏக்க முற்ற இவர் காவியாடை அணிந்த விவேகானந்தர் அருச்சுனரை மன்னர் இழுத்திருக்கின்றார். ஆம். இப்படித் தான் கடற்கரையில் இருந்து பாம்பனில் இருக்கும் மன்னரின் அரண்மனைக்கு சுவாமி விவேகானந்தர் வந்திருக்கிறார். சென்னையில் கொடுக்கப்பட்ட வரவேற்பும் பாம்பனின் வரவேற்பு போலவே அமைந்திருந்தது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இரட்டை வண்டி பூட்டப்பட்ட கோச்சு வண்டியில் சுவாமி அமர்ந்து கடற்கரை வழியாக சாலையில் வண்டி திரும்பியதும் குதிரைகளை அவிழ்த்து விட்டு கட்டிடம் வரை சென்னை வாசிகளும் இழுத்திருக்கின்றார்கள்.

துறவிகள் மூன்று நாட்களுக்கு மேல் ஓரிடத்தில் தங்குதல் கூடாது என்னும் நியதிக்கு ஏற்ப பாம்பனில் மன்னர் பாஸ்கர சேதுபதியுடன் மூன்று நாள் தங்கினார். பின் ராமநாதரை வழிபட இராமேசுவரத்திற்கு மன்னர் பாஸ்கரரே விவேகானந்தரை அழைத்து சென்றிருக்கிறார். இராமேசுவர ஆலயம் இராமநாதபுர மன்னர் குலத்தவர்களின் பூர்வீகச் சொத்து. ஆதலால் ஆலய முறைப்படி பூரண கும்பத்துடன் யானை, ஒட்டகம், ஆலவட்டம் புடைசூழ வீரத் துறவிக்கு வரவேற்பு கொடுத்து இராமேசுவரம் கோயிலுக்குறிய திருவாபரணங்கள் அனைத்தையும் சுவாமிகள் பார்க்கவேண்டும் என்று கோரி அனைத்தையும் விவேகானந்தர் பார்த்து மகிழ்ந்திருக்கின்றார்.

ராஜரிஷி

அரண்மனை வரவேற்பிலேயே மன்னர் பாஸ்கரசேதுபதிக்கு 'ராஜரிஷி' என்ற பட்டத்தை சுவாமி விவேகானந்தர் கொடுத்தார்.

மற்றும் இசையொலியாளனில் (போனோகிராப்) அரசர் பெருமான் வேண்டுகோளுக்கிணங்கி சக்தி பூஜையின் சிறப்பை குறித்து ஓர் சிறு பிரசங்கமும் செய்தார். இந்த ராமநாதபுர வரவேற்பிலும் மன்னர் பாஸ்கர சேதுபதியை புகழ்ந்து கூறிய சொற்களைப் போல பாரத நாட்டில் மற்றொரு அரசரை சுவாமி விவேகானந்தர் புகழ்ந்து கூறியிருப்பார் என்பதற்கான சான்றுகள் இல்லை. இந்திய நாட்டு மன்னர்களிலேயே **'ராஜரிஷி' என்ற பட்டத்தை சுவாமி விவேகானந்தரிடம் பெற்றதும் நம் பாஸ்கரசேதுபதி ஒருவர் மட்டும் என்பதையும் நினைத்து நம் நெஞ்சங்கள் புளகாங்கிதம் அடையவேண்டும்.**

இந்தியாவைச் சுதந்திரமாக்கி விடுதலை அரசுகாண வழிகோலிய வீரத்துறவி விவேகானந்தர் 1902 இல் இவ்வுலக வாழ்வை நீத்தபோது தானும் துறவியாகி தன் வாழ்வை நீக்கவேண்டும் என்ற நிலையில் இந்த மறவ நாட்டு செம்மலரும் 540 நாட்களிலேயே திருவாவடுதுறை கல்லிடைக் குறிச்சி மடத்தில் துறவியாகி தம் வாழ்வை நீத்திருக்கின்றார்.

35 ஆண்டுகளும் மாதம் ஒன்றும் 24 நாட்களுமாக மன்னர் சேதுபதியின் வாழ்வு முடிவடைந்தது. சுவாமி விவேகானந்தரின் வாழ்வே 39 ஆண்டுகளும் 5 மாதங்களும் 24 நாட்களுமாகும்.

ஆம் -

மனிதனாய்ப் பிறந்து - வேதாந்தம் பரப்பி வீரத் துறவியாய்
திருநாடு சேர்ந்தார் - சுவாமி விவேகானந்தர்
மன்னனாய் பிறந்து
துறவியின் தொடர்பால்
திருநாடு ஏகினார் - இந்த மறவர் சீமை மன்னர்.

மதத்திலே மறுமலர்ச்சி கண்ட மகான் பாஸ்கர சேதுபதி மறைந்தபோது மு.ராகவ ஐய்யங்கார் தந்த இரங்கற்கவிதை. :

சேதுபதி மன்னர் குலக்கடல் தோன்றி
அருணனையோ சேர்ந்தோ ராம்

மேதினி எங்கனும் செலுத்தி இரவொழிந்த
புகழொளியை விரித்துத் தேன்போற்
ஓது பிரசங்க மலை உவந்து உதவு
பாற்கர நீயொடுக்கும் காலம்
ஈதுகொலோ இன்னமும் நீ எய்துவையோ
இரங்கி எமக்கு இசைத்திடாயே

"என்னாவி உளங்குளிர அண்ணாவென்று
அன்போடு இனியெனை யார் சொல்வார்
மன்னா, மன்னா, மன்னா! என யாரை
யான் இனிமேல் மதித்துச் சொல்வேன்
பொன்னாடுந் தொழும் சேது நன்னாடு
புரந்தளிக்கப் போந்த நீ வேறு
என்னாடு சென்றனையோ எங்கள் குல
மணி விளக்கே! இசைத்திடாயே![57]

இனி ரா.ராகவய்யங்கார் தந்த கவிதை இதோ!

மன்னரது பெருமதிப்பிற்குரிய நண்பராக விளங்கிய மகாவித்வான் ரா.ராகவைய்யங்கார் அவர்கள், பாரி வள்ளல் மறைந்த பொழுது மனங்கலங்கிய கபிலரைப் போல மாளாத வேதனையில் ஆழ்ந்தார். அவரது வேதனை விரவிய கவிதை.,

"பாட்டும் உரையும் பயிலாப் பதடிகள்தம்
ஓட்டைச் செவியுள் உகுப்பேனோ! – நீட்டுக்கொடை
செங்கையாய்! பாற்கரனே செந்தமிழ் பாவின் சுவையை
எங்கையா சொல்வேன் இனி!"

என்று அங்கலாய்த்து அகம் உருகினார். எங்கே ஐயா! எங்க ஐயா!

கலைஞர் மு.கருணாநிதி

வங்கக்கடல், அரபிக்கடல், இந்து மகா சமுத்திரம் என்று நாம் பெயர் வைத்துக்கொள்கிறோம். உயரநின்று பார்த்தால் எல்லாம் ஒரே தண்ணீர்க்கடலாகத்தான் தெரிகிறது. அதைப்போல மதங்கள் இந்துமதம், புத்தமதம், முஸ்லிம் மதம், கிறிஸ்தவ மதம்

57. மகாவித்வான் மு.ராகவஐய்யங்கார் – தமிழ் வளர்த்த தேவர்கள் பக்கம் 162.

என்றும் பல மதங்கள் இருந்தாலும் ஒரே கடல்தான் என்று நாம் அழைப்பதைப் போல எல்லா மதமும் ஒரே உண்மையைத் தான் உலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்திலே அன்றைய தினம் மன்னராக விளங்கிய சேதுபதி அவர்களும் விவேகானந்தரைச் சந்தித்து உங்களுடைய கருத்துக்களை வெளிநாடுகளில் பரப்பவேண்டும் என்று கேட்டதற்கிணங்க விவேகானந்தர் வெளிநாடுகளுக்குச் சென்றார்.

சத்தியமேவ ஜயதே - வாய்மையே வெல்லும்

அதன் நினைவாக அவர் இறங்கிய இடத்தில் பாஸ்கர சேதுபதி மன்னர் எழுதிய வாசகம்.

சத்தியமேவ ஜயதே. ஒரு காலத்தில் சொல்லப்பட்டு, இடையில் மறைந்து விட்ட சத்தியமேவ ஜயதே – வாய்மையே வெல்லும் என்கிற இந்த வாசகத்தை முதல் முதல் மறுமுறை ஞாபகத்திற்கு கொண்டு வந்தவர் மறைந்த பாஸ்கர சேதுபதி மன்னர் என்றால் மிகையாகாது. அதற்குக் காரணமாக இருந்தவர் விவேகானந்த அடிகள் ஆவார்.

‘உத்திதஷ்டத்’, ‘ஜாக்ரத’, ‘பிராப்யவராந்நிபோ விவேகானந்தர் குறிப்பிட்டார். ‘எழுந்திடுங்கள்,’ ‘விழிப்படையுங்கள்’ ‘குருதிய கருமம் கை கூடும் வரை ஓயாது உழையுங்கள்.’ இதைத்தான் விவேகானந்தர் சொன்னார். இதைத்தான் நாமும் சொல்லுகிறோம்[58] என்பர் கலைஞர் மு. கருணாநிதி.

செந்தமிழ்க் கவிதைகளை புலவர்கள் இனி யாரிடத்து எடுத்துச் சொல்வர். செவியுணர்வு இல்லாத ஜென்மங்களிடம் புலவர்கள் செந்தமிழைச் சொல்வதற்கு வாய்ப்பு ஏது?

சேது சமஸ்தானத்தின் செவ்வானத்தில் சீரும் சிறப்புமாகத் திகழ்ந்த சுடர்மிகு பாஸ்கரன் அஸ்தமித்து விட்டான்

சேது மன்னர் செழுங்கொடியின் கொழு கொம்புவேரோடு சாய்ந்துவிட்டது.

---

58. பெ.சு.மணி, தமிழர் கண்ட விவேகானந்தர், சென்னை, 1974, பக் 112.

கலை பல பயின்று, கட்டுரை தெளிந்தது, தத்துவம் தோய்ந்த வித்தகர்.

சென்றவிடமெல்லாம் சீதளம் பரப்பிய கலைக்குரிசில்,

பண்ணும் பனுவலும் – பல தோன்றப் பெருங்கொடை வழங்கிய பாரி.

என்னும் எழுத்தும் கண்ணாகக் கொண்டு விளங்கிய ஏந்தல்.

இரவலரின் ஏழ்மை நீக்கிய புரவலர்,

ஏழிசையாய் இசைப் பயனாய், இன் தமிழாய் விளங்கும் இறைவனது பாதையில் எண்ணிறந்த பணிகளை இயற்றிய திருத்தொண்டர்,

குறை இரந்தாருக்கு கொடையின் திருவுருவாக விளங்கியவர், கால வெளியில் கலந்துவிட்டது.

இதயத்திலே இரக்கமும், ஈரமும், மாண்பான சிந்தனைகளும் செயல்திறனும், பசுமையாக படர்ந்து இருக்கும் வரை, மன்னர் பாஸ்கரர் பற்றிய எண்ண இழைகளும் அவைகளின் பின்னணியில் இதே வள்ளலது எண்ண வடிவமும் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

எட்டாத தொலைவில் உள்ள துருவ நட்சத்திரம் போல உயர்ந்து பரந்து காலமெல்லாம் சுடரொளி பரப்பிக் கொண்டு இருக்கும் என்ற அண்ணன் எஸ்.எம்.கமால் அவர்களின் பாஸ்கர சேதுபதியின் புகழுரையுடன் நிறைவு செய்வோம்!

வாழ்க பாஸ்கர சேதுபதியின் புகழ்!

வாழ்க விவேகானந்தரின் புகழ்!

இராமநாதபுரம் மகாராஜா மாக்ஷிமைதங்கிய
பாஸ்கர சேதுபதி

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

கூர்மபுராணம்,

பாண்டிநாட்டரசாட்சி செய்த
மஹா ராஜ ராஜ வித்வசிகாமணியாகிய
அதிவீரராமபாண்டியர்
அருளிச்செய்த மூலமும்
திருவாவடுதுறை ஆதீனத்துச் சீடராகிய
கல்லிடைநகர்
அ. சிதம்பரநாதகவிராஜர்
இயற்றிய உரையும்
மதுரைஜில்லா
இராமநாதபுரம் சமஸ்தானம்
மஹா ராஜ ராஜ வித்வசிகாமணியாகிய ஸ்ரீமத் இரணிய கர்ப்பயாஜி
ரவிகுல முத்துவிஜய ரெகுநாத ராஜபாஸ்கர
சேதுபதி மஹாராஜா அவர்கள்
வேண்டுகோளின்படி
பாளையங்கோட்டை சிந்தாமணி யந்திரசாலையிலும்
திருநெல்வேலி இந்துதேசாபிமானி யந்திரசாலையிலும்
ஷை உரையாசிரியரால்
அச்சியற்றப்பட்டன

1896.

மன்மத ஹூ கும்பரவி

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,

அவர்கள் இயற்றிய

நூற்றொகுதி.

முதற் பகுதி.

1. கலாவதி

TO

HIS HIGHNESS

THE RAJAH BHASKARA SETHUPATI

OF RAMNAD

PATRON OF TAMIL LITERATURE

THIS DRAMA

IS DEDICATED

WITH KIND PERMISSION

AS A SMALL TOKEN OF RESPECT AND ESTEEM

BY THE AUTHOR.

உரிமையுரை.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்க்கள வங்கமெ லாமணி யார்ந்தவள் செய்ய தமிழ்ப்பல பாடலினுள்
பார்க்க வசீகர நாடக மானினி பாவைய ரேத்து கலாவதியாம்
யார்க்கு மினிப்புறு வாசகிமைக்கர மீர்த்திவண் வாசகி யென்றமையாய்
பார்க்கர சேகுண வாமென வேமிளிர் பாற்கர சேது பதித்துரையே.

விபுலானந்தரின் விவேகானந்தர்

யாழ்ப்பாணம் சாமித் தம்பியார், கண்ணம்மையார் மகனாக 27.3.1892 இல் பிறந்தவர் மயில் வாகனன். கல்வியில் சிறந்தவர். ஈழநாட்டின் அணையாத அறிவுச்சுடரானார். 1922 இல் துறவியானார். சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்தில் சேர்ந்தார். 'பிரபோத சைதன்யர் எனும் பெயர் பெற்றார். ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் தமிழ் இதழ், 'வேதாந்தகேசரி', ஆங்கில இதழின் ஆசிரியரானார். 1924இல் சுவாமி சிவாநந்தா பிரபோதசைதன்யருக்கு 'சுவாமி விபுலானந்தர்' என்று பெயர் சூட்டினார். 19.7.1947இல் மறைந்தார்[1].

விபுலாநந்த அடிகள் வீரத்துறவி விவேகானந்தரின் உரையாடல்களை மொழிபெயர்த்து 'சுவாமி விவேகானந்தர் சம்பாஷணைகள்' எனும் நூலாக 1949இல் மூன்று ரூபாய் எட்டு அணா விலையில் 448 பக்கங்களில் வெளியிட்டார். நூலை மயிலாப்பூர், சென்னை–4, ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் வெளியிட்டது. அந்த நூலில் பக்கம் 7, 8, 9, 10இல் வந்துள்ள சம்பாஷணை இதோ;

பசுக்களைப் பரிபாலிக்கிற சபை ஒன்றினுக்குரிய ஊக்கமுள்ள பிரசாரகர் ஒருவர் சுவாமிஜியைக் காணும்பொருட்டாக வந்தார். அவர் தலையிலே காஷாயத் தலைப்பாகை அணிந்திருந்தார். தோற்றத்தில் வடநாட்டினரைப்போலக் காணப்பட்டார். அவரது உடை ஏறக்குறைய சந்நியாசிகளுடைய உடை போன்றிருந்தது. இந்தப் பசு பரிபாலன பிரசாரகர் வந்தார் என்று கேள்விபட்டதும் சுவாமிஜி சாலை அறைக்கு வந்தார். பிரசாரகர் சுவாமிஜியை நமஸ்கரித்துப் பசுத்தாயினுடைய படம் ஒன்றினை சுவாமிஜிக்கு கொடுத்தார். சுவாமிஜி படத்தைப் பெற்று அருகில் நின்ற ஒருவர் கையில் கொடுத்த பின்னர் பின்வரும் சம்பாஷணை நிகழ்ந்தது.

---

1. முனைவர் மார்காரட்பாஸ்டின், இன்னிசையாழ் விபுலானந்தரின் யாழ் நூல் ஒரு பார்வை, பாளையங்கோட்டை 2006 வாழ்க்கைக் குறிப்புகள் டி.ரி. செல்வநாயகம், விபுலாநந்த அடிகள், சென்னை, 1953, பக்கம் 18

விவேகானந்தர் : உங்களுடைய சங்கத்தின் நோக்கம் என்ன?

பிரசாரகர் : நமது நாட்டிலுள்ள பசுத்தாய்களைக் கசாப்புக்காரருடைய கைகளில் நின்று நாங்கள் பாதுகாக்கிறோம். நோயுற்ற பசுக்களும் வலியிழந்தனவும் கசாப்புக்காரர்களிடமிருந்து வாங்கப்பட்டனவும் பரிபாலிக்கப்படுவதற்காகப் பசு வைத்தியசாலைகளை ஏற்படுத்தி இருக்கிறோம்.

விவேகானந்தர் : அது மிக நல்லது. உங்கள் வருவாய்க்கு வழி என்ன?

பிரசாரகர்: தங்களைப் போன்ற பெரிய மனிதர் அன்போடு கொடுக்கின்ற கொடைகளைக் கொண்டே சபையின் வேலை நடந்து வருகின்றது.

விவேகானந்தர் : இப்பொழுது எவ்வளவு பணம் மிகுத்து வைத்திருக்கிறீர்கள்?

பிரசாரகர் : இந்த முயற்சிக்கு மார்வாடி வணிகர் கூட்டம் சிறந்த உதவிபுரிகின்றது. இந்த நன்முயற்சிக்காக அவர்கள் பெருந்தொகை கொடுத்திருக்கின்றார்கள்.

விவேகானந்தர் : மத்திய இந்தியாவிலே ஒரு கொடிய பஞ்சம் நடக்கின்றது. ஒன்பது லட்சம் ஜனங்கள் பட்டினியால் இறந்தார்கள் என்று இந்திய இராஜங்கத்தார் வெளிப்படுத்தி இருக்கின்றனர். இதற்கு உதவிபுரிவதற்கு உங்களுடைய சபை ஏதாவது செய்திருக்கின்றதா?

பிரசாரகர் : பஞ்சம் முதலிய துன்பம் வரும்பொழுது நாங்கள் உதவிபுரிவதில்லை. எங்கள் சபை பசுத்தாய்களைப் பரிபாலிக்கும் பொருட்டே ஏற்படுத்தப்பட்டது.

விவேகானந்தர் : உங்களுடைய சொந்தச் சகோதரர் சகோதரிகளாகிய லட்சக்கணக்கான ஜனங்கள் பஞ்சத்தினால் துன்பம் அடைந்து மரணத்தின் வாயில் விழும்பொழுது அவர்களுக்கு எவ்வழியாகவாவது உணவளித்துக் காப்பாற்ற வேண்டுமென்பது உங்கள் கடமை என நீங்கள் நினைக்கவில்லையா?

பிரசாரகர்:இல்லை,இந்தப் பஞ்சம் மக்களுடைய பாவகர்மத்தினாலே ஏற்பட்டது. கருமம் எப்படியோ பலனும் அப்படி.

பிரசாரகர் இந்த வார்த்தைகளைக் கூற அதனைக் கேட்டு சுவாமிஜியினுடைய கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறப்பது போன்றிருந்தது; முகம் சிவந்தது, அவர் தம் வெகுளியை அடக்கிக்கொண்டு பின்வருமாறு சொல்லுவாராயினார். "தம்முடைய சொந்தச் சகோதரர் பட்டினியினால் இறக்க அவர்களுடைய சீவனைக் காப்பாற்றும் பொருட்டு ஒரு பிடி அரிசி கொடுக்காமல், மனிதர் மேல் அநுதாபமின்றிப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் குவியல் குவியலாக உணவைக் கொடுக்கின்ற இத்தகைய சபைகளில் நான் புகுவதில்லை. ஜனசங்கம் இவற்றினால் நன்மை அடைகிறதென நான் எண்ணவில்லை. மனிதர் தம் கருமத்தினால் இறக்கின்றனரென்று நீர் வாதிப்பீராயின் இவ்வுலகத்திலே எதைக் கருதியும் முயற்சிக்க வேண்டியதில்லை என்பது தீர்மானமாகின்றது. விலங்குகளைப் பரிபாலிப்பதற்காக நீர் செய்கிற வேலையும் இவ்விதிக்குப் புறம்பாகாது. பசுத் தாய்களும், தம்முடைய கருமத்தினால் கசாப்புக்காரருடைய கையில்பட்டு இறக்கின்றனவென்று சொல்லிவிட்டுச் சும்மா இருக்கலாமே?"

பிரசாரகர் சிறிது நாணி, "ஆம், நீங்கள் சொல்லுவது உண்மை. ஆனால பசு நமது அன்னை என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவே" என்றார்.

சுவாமிஜி நகைத்துக்கொண்டு, "ஆம், பசு நமது அன்னை என்பதை நான் அறிந்துகொண்டேன்;இத்தகைய புத்திசாலிகளான பிள்ளைகளை வேறு யார்தான் பெறுதல்கூடும்" என்றார்.

வடநாட்டுப் பிரசாரகர் அந்த விஷயத்தைப் பற்றி பின்பு ஒன்றும் பேசவில்லை. சுவாமிஜி கேலிபண்ணிய கருத்தை அவர் அறிந்துகொள்ளவில்லை போலும்! தமது சபைக்காக ஏதாவது உதவ வேண்டுமென்று அவர் சுவாமிஜியை கேட்டார்.

விவேகானந்தர் : நான் ஒரு சந்நியாசி, பக்கிரி. உமக்கு உதவி செய்ய எங்குப் பணம் பெறுவேன்? பணம் பெற்றாலும் முதலிலே மனிதருடைய சேவைக்காகச் செலவழிப்பேன். முதலிலே மனிதனுக்கு உணவு, கல்வி, ஆத்மீக வாழ்க்கை என இவற்றைத்தந்து காப்பாற்றவேண்டும். அதற்குப் பின்பு ஏதாவது மிகுந்திருந்தால் உம்முடைய சபைக்குக் கொடுக்கலாம்.

இந்த வார்த்தைகளைக்கேட்டு பிரசாரகர் சுவாமிஜியை நமஸ்கரித்துவிட்டுப் போய்விட்டார். பின்பு சுவாமிஜி எங்களை நோக்கிச் சொல்லுகிறார்: **"அந்த மனிதனுடைய சொற்களைப் பாருங்கள். மனிதர் தமது கருமத்தினால் இறக்கிறார்கள் என்று சொல்லுகிறான். அவர்களுக்கு உதவுவதினால் என்ன பயன் என்கிறான். தேசம் நாசமாயப் போய்விட்டதென்பதற்கு இது ஒரு தீர்ப்பான சான்று. இந்துக்களுடைய கர்ம விசாரணை எவ்வளவு பழுதடைந்து விட்டதென்று பாருங்கள். மனிதருக்கு இரங்காத இருதயமுள்ள மனிதர் இவர்கள்; இத்தகையோரை மனிதர் என்று எண்ணலாமா?"**

இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது சுவாமியினுடைய உடலம் துன்பத்தினாலே நடுங்கியது[2].

---

2. 70 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த நூல், விபுலாநந்த அடிகள், 'சுவாமி விவேகானந்தர் சம்பாஷணைகள், ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை. 1949, பக். 7–10'

விவேகானந்தரின் பொன்மொழிகள்

பிறரைக் கடைத்தேற்றுவதற்காக
நீ மோட்சத்தையும் தியாகம் செய்வாயாக;
பிறரைக் கரையேற்றுவதற்காக
நீ நரகத்துக்கும் செல்லத் தயங்காதே!

பல்வேறு நதிகள் பல்வேறு இடங்களில்
உற்பவித்தாலும் ஒரே கடலில் ஒன்றாகக்
கலப்பது போல பலவிதமான ருசி உடையவர்கள்
பின்பற்றும் மார்க்கங்கள் நேரானவையாகவும்
குடிலமானவையாகவும் தோன்றினாலும்
ஆண்டவனே உன் ஒருவனிடம் தான்
இட்டுச் செல்கின்றன.

சிகாகோவில் இன்று காலையில் முழங்கிய மணி எல்லா மதவெறிக்கும் போர்வாளாலும், பேனாவாலும் பிறமதத்தினரை அழிக்கும் காரியங்களுக்கும், மக்களிடையே நிலவும் எல்லா அன்பற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாக இருக்கும் என நான் ஆர்வமுற நம்புகிறேன்.

பலமே தான் வாழ்வு; பலவீனமே மரணம்
பலமே தான் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை
நிரந்தரமான வாழ்வு.

" ஆனால் இந்தியா அமரத்துவம் பெற்றது ஆண்டவனைத் தேடுவதிலேயே ஈடுபட்டால் இந்திய என்றும் வாழும், ஆனால் அரசியலையும், சமூகச்சச்சரவுகளையும் தேடிப்போனால் இந்தியா செத்துவிடும்[1]

– இறுதிப் போதனையில் விவேகானந்தர்

நான் உயர்வாழ்கிற ஒரே கடவுளும், நான் நம்புகிற ஒரே கடவுளுமான சகல ஜீவராசிகளும் ஒன்று சேர்ந்து அந்தக் கடவுளை வழிபடுவதற்காக, ஆயிரம் ஆயிரம் துயரங்களை அனுபவிப்பேனாக[2]

1. *ரா. கணபதி, விவேகானந்தர், சென்னை, 1964, பக்கம் 879*
2. *மேலது பக்கம் 883*

எழுந்து நின்று போராடு; ஓர் அடியும் பின் வாங்கக்கூடாது. எது வந்து மோதினாலும் போராடி முடிப்பாயாக. தமது நிலையிலிருந்து நட்சத்திரங்கள் மாறட்டும். இந்த முழு உலகமும் நமக்கு எதிராக எழுந்து நிற்கட்டும், போராடி முடிப்பாயாக, எழுந்திரு! விழித்துக்கொள்! எழுந்து நின்று போராடு.

இங்கே இந்தியாவில் பல்வேறு அபாயங்கள் நம் கண்முன் உள்ளன. அவற்றுள் ஒன்று வடிகட்டின உலகாயதம். மற்றொன்று அதற்கு நேர் எதிரான வடிகட்டின மூடநம்பிக்கை.

இரண்டையும் நாம் தவிர்த்தாக வேண்டும்,

1897 பிப்ரவரி 9 சென்னை திருவல்லிக்கேணி,
இலக்கியச் சங்கத்தில் சுவாமி விவேகானந்தர்.[3]

குழந்தைகளின் கல்வியில் மற்றொன்றையும் நம் கருத்தில் கொள்வது இன்றியமையாதது. எதனால் அவர்கள் **சுயமாகச் சிந்திக்க கற்றுக்கொள்வார்களோ, அதில் அவர்களுக்கு ஆர்வத்தை ஊட்ட வேண்டும்.** இந்த அடிப்படைக் கருத்தை மறந்ததுதான் இந்தியாவின் இன்றைய இழிநிலைக்குக் காரணம். மாணவர்களுக்கு இத்தகைய கல்வி அளிக்கப்படுமானால் அவர்கள் மனிதர்கள் ஆவார்கள். வாழ்க்கைப் போராட்டத்தில் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்வதற்கான ஆற்றல் பெறுவார்கள்.[4]

என் மகனே, முதலில் உன் அறையின் கதவைத்திற வெளியில் வா! உன் பார்வையைச் சுற்றிலும் சுழலவிடு! உன் வீட்டைச்சுற்றி எத்தனையோ நூற்றுக்காணக்கான ஏழைகளும் ஆதரவற்றவர்களும் வருகிறார்கள். இயன்ற அளவு அவர்களுக்குச் சேவை செய்.[5] பிறருக்குத் தொண்டு செய்வதனால் எவர் உடல் அழிவடைகிறதோ அவர்கள் பாக்கியசாலிகள்.

---

3. *சுவாமி விவேகானந்தர் கொழும்பு முதல் அல்மோராவரை, சென்னை, 2018, பக்கம் 175 (ஏ. சுப்பிரமணியம் மொழிபெயர்ப்பு)*
4. *1987 நவம்பர் 17இல் கேத்ரியில் ஆற்றிய உரை மேலது பக்கம் 540.*
5. *மேலது பக்கம் 63.*

நான் வேதாந்தியும் அல்ல, தத்துவஞானியும் அல்ல. மகானும் அல்ல, நான் ஓர் ஏழை, ஏழைகளை நேசிக்கிறேன்.[6]

எந்த வேலையாவது கடினம் என்று நினைப்பதனால் இங்கு வராதே. இறையருளால் எல்லாம் எளிதாகும். ஏழைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் ஜாதிமத வேறுபாடின்றித் தொண்டு செய்வதே உன் கடமை.[7]

யாருடைய மனம் ஏழைகளுக்காகத் துயரத்தில் அழுமோ அவரையே நான் மகாத்மா என்பேன். மக்களுக்காகச் சேவை செய்பவன் இறைவனுக்குச் சேவை செய்பவன் ஆகிறான்.

நம் மக்களுக்கு முதலில் உணவு தரப்படவேண்டும். அதன்பிறகுதான் போதனை செய்யவேண்டும். பசியால் வாடிக்கொண்டிருக்கும் மக்களுக்கு எந்தப் போதனையும் அவர்களின் பசியை நீக்கிவிடாது.

இந்தியாவிலுள்ள எல்லாத் தீமைகளுக்கும் அடிப்படை வேராக அமைந்துள்ளது இந்த நாட்டு ஏழை மக்களின் இழிந்த நிலையே ஆகும்.

எதிர்காலத்தில் என்ன நேருமோ என்று கணக்குப் பார்த்துக் கொண்டே இருப்பவனால் எதையும் சாதிக்க முடியாது. முயன்று செயல்களைச் செய்வதே வாழ்க்கையின் அறிகுறி. மகத்தான செயல்கள் அனைத்தும் மெல்ல மெல்லத்தான் நடைபெறும். ஆனால் அவற்றுக்கு ஏற்படும் இடையூறுகளோ அதிகமாய் இருக்கும்.

---

6. *சுவாமி ஆசுதோஷானந்தர், சுவாமி விவேகானந்தர் விரிவான வாழ்க்கை வரலாறு தொகுதி 2 சென்னை. பக்கம் 496.*

7. *மேலது பக்கம் 516.*

விவேகானந்தர் புகழ்

– நாமக்கல் கவிஞர்

ஆண்மை உருக்கொண்ட அந்தணன் – எங்கள்
அண்ணல் விவேகானந்தனின்
மாண்மை அளக்கிட எண்ணினால் இந்த
மண்ணையும் விண்ணையும் பண்ணலாம்.

வீரத்துறவறம் நாட்டினான் – திண்ணை
வீண் வேதாந்தத்தை ஓட்டினான்
தீரச் செயல்களை நாடினான் – இந்த
தேசநிலை கண்டு வாடினான்

பெண்ணின் பெருமையைப் போற்றினான் – ஆண்கள்
பேடித்தனங்களைத் தூற்றினான்
மண்ணின் சுகங்களை விட்டவன் – ஏழை
மக்களுக்காய்க் கண்ணீர் கொட்டினான்

விவேகானந்தர் அருளியவை

உயர்ந்த எண்ணங்களினால்
உயர்ந்த லட்சியங்களினால்
மூளையை நிரப்பிக்கொள்
அறிவு அகண்டமாய் விட்டால்
அறியப்பட வேண்டியது சிறியதாய் விடுகிறது

நூறு ஜன்மங்களைத் தியாகம் செய்தாயினும்
ஒரு சிறிய பிராணிக்கு உதவிபுரிய
முடியுமானால் அப்படிச் செய்திருக்கக்கூடிய
பூர்வகாலத்து அந்தப் பெரிய பழைய
தீர்க்கதசிரிகளிலும் மகாத்மாக்களிலும்
சிலரைப் போன்று, அதிகம்
சன்மார்க்க புருஷர்களை உலகில்
நான் பார்க்க விரும்புகிறேன்

உண்மையைச் சிதைக்காதே

கலியுகத்தில் உண்மையைச் சிதைக்காதே
சிதைத்தால் அது உன் மெய்யிலிருந்து
*தான் அந்த சிதைவு ஆரம்பமாகிறது.**

உண்மையைத் தைரியமாகச் சொல்

உண்மையானது துன்புறுத்தினாலும் சரி,
இல்லாவிட்டாலும் சரி,
அதைத் தைரியமாகச் சொல்லு.
ஒருபொழுதும் பலஹீனமடையாதே.

– விவேகானந்தர்**

* என ஏட்டைக் கெடுத்தவர்களைச் சாடுகிறார் விவேகானந்தர்– விவேகானந்தரின் வீர உரைகளிலிருந்து

** சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா தொகுத்த அருள்மொழிகள் பக்கம் 147

ஸத்யமேவ ஜயதே

ஸ்ரீமத் பூஜ்யபாத விவேகாநந்த ஸ்வாமிகள்
குடகோளார்த்தத்திலே

வேதாந்த ஸித்தாந்தத்தைப் பரவச் செய்யும் பொருட்டு
லோகோபகாரமாய் உத்தம கைங்கரியம் புரிந்து
அங்கே அத்விதீயமான காரியஸித்தியுடன் அழியாப் புகழ்
பெற்று, ஜயசீலராய் விளங்கி, அங்கிருந்து புறப்பட்டு
ஆங்கில சிஷ்யர் புடைசூழப் பாரத பூமியிலே
முதன்முதலாய் 1897ம் வருடம் ஜனவரி மாதம் 26ம் தேதியன்று திருவடி
வைத்த புண்ய ஸ்தலத்தைக் காட்டும் இந்த
ஞாபக ஸ்தம்பம்

இராமநாதபுரம் பூபாலராகிய
ஸ்ரீ பாஸ்கர ஸேதுபதியால்
நாட்டப்பெற்றது.
இடம் : பாம்பன்

சான்று
மஹேசகுமார சர்மா,
ஸ்ரீ விவேகாநந்த விஜயம்
சென்னை-1907.
பக்கம் 239, இரண்டாம்பதிப்பு 1912